வெளியீடு 15-3-2004 Issued 15-3-2004

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மே 5, 2003 – தொகுதி 47 – எண் 1

**Monday the 5th May. 2003 – Volume 47 – No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

ative Assembly Secretariat. Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

5-5-2003

# உள்ளடக்கம்


*பக்கங்கள்*

ஆளுநரும் அமைச்சரவையும் v-ix
Governor and Council of Ministers xi-xiv

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் xv-xviii

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xix-xxix

1. **வினாக்கள்—விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 1-36

2. **தகவல் கோரல்—**

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் 36, 37

(ஆ) அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பயிற்சி மருத்துவர்கள் போராட்டம் 37

(இ) காவிரி நதிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க பேச்சுவார்த்தைக்கு அழைப்பு .. 37

(ஈ) பிரதமர் பங்கேற்ற சர்வதேச விமான நிலைய ஓளாகப் புதிய கட்டடத் திறப்பு விழாவில் மாண்புமிகு முதல்வர் கலந்துகொள்ளாதது 38-42

பக்கங்கள்

3. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்—

(அ) சார்ஸ் நோய் எதிர்ப்பு சக்தியை ஊக்குவிக்கும் மருந்து குறித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை — 42-44

(ஆ) காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் நடுவர் மன்றமும் உச்ச நீதிமன்றமும் மட்டுமே நியாயமான தீர்ப்பு வழங்க முடியும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை — 44-47

(இ) புதிய தலைமைச் செயலகத்தை இராணி மேரிக் கல்லூரி வளாகத்தில் கட்டத் தடைவிதிக்கும் மத்திய அரசு சுற்றுச் சூழல் துறையின் அறிவிக்கை குறித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை — 47-61

4. அறிவிப்பு—

பேரவைக் குழுக்களுக்கான தேர்தல் அட்டவணையில் மாற்றம் — 62

5. கவன ஈர்ப்பு—

(அ) அரூர் தொகுதி, அங்குத்தி சுணையின் குறுக்கே அணை — 62-64

(ஆ) சுயநிதி மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிக் கட்டடங்கள் மற்றும் கட்டணங்களை முறைப்படுத்தல் — 65-69

6. அறிக்கைகள் அளித்தல்—

மனுக்கள் குழு — 69


தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
185074
சென்னை-600 008
நூலகம்




பக்கங்கள்

7. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 13 — எரிசக்தித் துறை
(ஆ) கோரிக்கை எண் 26 — தொழில் துறை — 70-132

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் — 76, 78-79, 82, 83-84, 94, 109, 110, 112, 113, 125, 126

*திரு. ஆ. ராஜகோபால் — 76-86

திரு. பி.ஜி. இராஜேந்திரன் — 87-94

திரு. கோ. இரவிராஜ் — 94-103

*திரு. கே.எஸ். பழனிசாமி — 103-107

திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 107-123

*திரு. ஏ.எஸ். கண்ணன் — 124-132

8. அரசினர் தீர்மானம்—

விதி 32-ஐத் தளர்த்தல் — 132-133

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 133-135


D. 12 11, 3, P03 P02 : 47 · 1

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்-திரு. பெ.ஶ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | |
|---|---|
| 1. **முதலமைச்சர்** | .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன். |
| 2. **பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள். |
| 3. **நிதி அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல். |
| 4. **சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல். |

5. **இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

6. **மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன், கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப் பட்டோர்.

7. **பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.

8. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.

9. **வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.



10. **சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

11. **ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமை தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

12. **போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

13. **மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

14. **வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

வணிக வரிகள்.

15. **கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.** .. **மாண்புமிகு திரு. ப. மோகன்:**

கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

| | | |
|---|---|---|
| **16. உள்ளாட்சித் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு எம்.சி. சம்பத்:** நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |
| **17. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்** கால்நடை பராமரிப்பு. |
| **18. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:** குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம். |
| **19. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு. |
| **20. வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** வீட்டுவசதி, வீட்டுவசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம். |
| **21. பால் வளத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி. |



| | | |
|---|---|---|
| **22. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல, திரைப்படச் சட்டம் மற்றும் செய்தித்தாள் கட்டுப்பாடு. |
| **23. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** கைத்தறி மற்றும் துணித் தொழில். |
| **24. மீன்வளத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு.எம்.ராதாகிருஷ்ணன்:** மீன்வளம். |
| **25. சுற்றுலாத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. அ. மில்லர்:** சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம். |

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR - THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. Chief Minister | .. | **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. Minister for Public Works, Prohibition & Excise and Revenue | .. | **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including Minor Irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. Minister for Finance | .. | **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. Minister of Law and Information Technology | .. | **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts and Information Technology. |
| 5. Minister for Hindu Religious and Charitable Endowments | .. | **The Hon. Thiru P.C. Ramasamy:** Hindu Religious and Charitable Endowments. |

| | | |
|---|---|---|
| **6. Minister for Health and Education** | .. | **The Hon. Thiru S. Semmalai:** Health, Medical Education and Family Welfare, Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees. |
| **7. Minister for Backward Classes** | .. | **The Hon. Thiru A. Papasundaram:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities. |
| **8. Minister for Labour** | .. | **The Hon. Thiru A. Anwer Rhazza:** Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| **9. Minister for Agriculture** | .. | **The Hon. Thiru R. Jeevanantham:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| **10. Minister for Social Welfare** | .. | **The Hon. Tmt. B. Valarmathi:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration. |
| **11. Minister for Adi-Dravidar Welfare** | .. | **The Hon. Thiru C. Karuppasamy:** Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen. |



| | | |
|---|---|---|
| **12. Minister for Transport** | .. | **The Hon. Thiru R. Viswanathan:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports. |
| **13. Minister for Electricity and Industries** | .. | **The Hon. Thiru Nainar Nagenthran:** Electricity, Non-conventional Energy Development, Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics. |
| **14. Minister for Commercial Taxes** | .. | **The Hon. Thiru Se.Ma. Velusamy:** Commercial Taxes. |
| **15. Minister for Co-operation, Food & Civil Supplies & Consumer Protection** | .. | **The Hon. Thiru P. Mohan:** Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics, Consumer Protection. |
| **16. Minister for Local Administration** | .. | **The Hon. Thiru M[illegible] Sampath:** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply. |
| **17. Minister for Animal Husbandry** | .. | **The Hon. Thiru P.V. Damodaran:** Animal Husbandry. |
| **18. Minister for Rural Industries** | .. | **The Hon. Thiru R. Vadivel:** Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board. |

| | | |
|---|---|---|
| **19. Minister for Forests and Environment** | .. | **The Hon. Thiru R. Vaithilingam:**<br>Forests & Environment and Pollution Control. |
| **20. Minister for Housing and Urban Development** | .. | **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**<br>Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A. |
| **21. Minister for Dairy Development** | .. | **The Hon. Thiru S. Ramachandran:**<br>Milk and Dairy Development. |
| **22. Minister for Information and Publicity** | .. | **The Hon. Thiru K.K. Balasubramanian:**<br>Information and Publicity, Film Technology, Cinematograph Act and Newsprint Control. |
| **23. Minister for Handlooms and Textiles** | .. | **The Hon. Thiru V. Somasundaram:**<br>Handlooms and Textiles. |
| **24 Minister for Fisheries** | .. | **The Hon. Thiru M. Radhakrishnan:**<br>Fisheries. |
| **25. Minister for Tourism** | .. | **The Hon. Thiru A. Miller:**<br>Tourism and Tourism Development Corporation. |



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

### மாற்றுத் தலைவர்கள் *

திரு. கே. பாண்டுரங்கன்

டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. லா. சந்தானம்

திருமதி சி.எம். சூரியகலா

திரு. சி. சிவசாமி

திரு. வி. ஜெயராமன்

### செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

---

* 28-1-2003 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. எம் ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) (விடுப்பு) |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல. | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |



| | |
|---|---|
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. ரவிச்சந்திர ராஜ், பி.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. பு. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல் | .. தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ச. இரா. சுகுணா, பி.ஏ. | .. தலைமை நிருபர் |

| | | |
|---|---|---|
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சை. உ. சலீம் உன்னிசா, பி.ஏ | .. | சார்புச் செயலாளர். |
| திரு. ந. ருத்ராமணி, எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர், பேரவைத் தலைவரின் தனிச் செயலர் (பொறுப்பு) |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. | தலைமை நிருபர் (விடுப்பு) |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. | தலைமை நிருபர் (பொறுப்பு) |



## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. அண்ணாதுரை, திரு. செ. | .. | ஜெயங்கொண்டம் |
| 3. அண்ணாமலை, திரு. கு. | .. | தென்காசி |
| 4. அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம் |
| 5. அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 6. அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 7. அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 8. அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 9. அருள், திரு. பி.எஸ். | .. | புவனகிரி |
| 10. அழகம்மாள், திருமதி வி. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 11. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. அன்பழகன், திரு. ஆகு.சீ. | .. | பெரணமல்லூர் |
| 13. அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 15. அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் |
| 16. அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 17. அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. அன்வர் ராஜா, திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 19. ஆண்டிவேல், திரு. ப. | .. | வேடசந்தூர் |
| 20. ஆறுமுகம், திரு. கே. | .. | செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரா.விராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
31. இராமு, திரு. ந. - உளுந்தூர்பேட்டை
32. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. - பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். - மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. - அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆ.வா)
41. இன்பத் தமிழன், திரு. இரா.தா. - ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. - திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. - செஞ்சி
48. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
50. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
51. கண்ணன், திரு. ஏ.எஸ். - பொன்னேரி (செ.வ.)
52. கந்தசாமி, திரு. க.ரா. - சத்தியமங்கலம்
53. கந்தசாமி, திரு. கா. - குன்னூர் (செ.வ.)
54. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
55. கருணாநிதி, திரு. மு. - சேப்பாக்கம்
56. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
57. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
58. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. - குளத்தூர் (செ.வ.)
59. கலாவதி, திருமதி கு. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
60. கனகதாரா, செல்வி. சி. - பேரணாம்பட்டு (செ.வ.)
61. கனிதா சம்பத், திருமதி எஸ். - திருப்போரூர் (செ.வ.)
62. காசாம்பு பூமாலை, திருமதி - சங்கராபுரம்
63. காமராஜ், திரு. மே.ப. - தாரமங்கலம்

64. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2
65. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
66. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
67. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
68. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
69. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
70. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
71. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
72. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
73. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
74. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
75. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
76. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
77. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
78. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
79. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
80. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
81. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
82. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
83. சந்திரசேகரன், திரு. எம். எஸ். .. இராணிப்பேட்டை
84. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
85. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
86. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்



87. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்
88. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
89. சாமி, திரு. ஆர். .. மேலூர்
90. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
91. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
92. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
93. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
94. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
95. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
96. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
97. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
98. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
99. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
100. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
101. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
102. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
103. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
104. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
105. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
106. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
107. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
108. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்

109. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
110. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
111. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்
112. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
113. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்
114. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
115. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்
116. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்
118. தமிழரசன், திரு. செ.கு. .. நன்னிலம் (செ.வ.)
119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்
120. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
121. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்
122. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
123. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)
124. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்
125. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
126. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
128. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். .. காஞ்சிபுரம்
129. திருமாவளவன், திரு. இரா. .. மங்களூர் (செ.வ.)
130. துரைமுருகன், திரு. .. காட்பாடி
131. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி



132. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு
133. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்
134. நடராஜன், திரு. எஸ். .. நாட்ராம்பள்ளி
135. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்
136. நடராசன், திரு. வ.து. .. இளையான்குடி
137. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
138. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிபபட்டு
139. நளினி மனோகரன், திருமதி .. போளூர்
140. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
141. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
142. நீலமேகவர்ணம், திரு. லெ. .. சாத்தான்குளம்
143. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. .. குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராபபள்ளி-I
147. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி

153. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு
155. பாப்பாசுந்தரம், திரு. அ. .. குளித்தலை
156. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)
157. பாரிமோகன், திரு. கி. .. தருமபுரி
158. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி
159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். .. தொண்டாமுத்தூர்
160. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்
161. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்
162. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
164. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
165. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
166. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
167. பூவராகமூர்த்தி, திரு. ஏ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
168. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திகுளம்
169. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
170. பொன்னம்பலம், திரு. ப. .. சமயநல்லூர் (செ.வ.)
171. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
172. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
173. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)
174. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)



175. மகேஸ்வரி, திருமதி எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
176. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
177. மணி, திரு. டி. .. விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
179. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
180. மல்லிகா சின்னசாமி, திருமதி .. முசிறி
181. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி
182. மில்லர், திரு. அ. .. கடலூர்
183. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
184. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
185. முருகேசன், திரு. ஆ.கு. .. ஆத்தூர்
186. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
188. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
189. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
190. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
191. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப் பாளையம்
193. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
194. ராதாரவி, திரு. .. சைதாப்பேட்டை
195. ராமசாமி, திரு. பி.சி. .. மொடக்குறிச்சி
196. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
197. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்

198. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி

199. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி

200. ராஜா, திரு. எச். .. காரைக்குடி

201. ராஜலிங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்

202. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்

203. ரெங்கநாதன், திரு. என. .. பூம்புகார்

204. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. பேரூர்

205. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு

206. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. .. அரவக்குறிச்சி

207. வடிவேல், திரு. ஆர். .. வாணியம்பாடி

208. வளர்மதி, திருமதி பா. .. ஆலந்தூர்

209. வளர்மதி ஜெபராஜ், திருமதி .. மதுரை மேற்கு

210. வள்ளல் பெருமான், டாக்டர் பி. .. காட்டுமன்னார் கோவில் (செ.வ.)

211. வாசுதேவன், திரு. பெ. .. மதுராந்தகம்

212. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்

213. வில்வநாதன், திரு. இரா. .. சோளிங்கர்

214. விநாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. .. பூங்கா நகர்

215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. புதுக்கோட்டை

216. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. .. பனமரத்துப்பட்டி

217. வீரபாண்டியன், திரு. ஜெக. .. மயிலாடுதுறை

218. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி



219. வெங்கடாஜலம், திரு. செ. .. சேலம்-1

220. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்

221. வேலுசாமி, திரு. செ.ம. .. பல்லடம்

222. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு

223. வேல் முருகன், திரு. தி. .. பண்ருட்டி

224. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்

225. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு

226. ஜீவானந்தம், திரு. இரா. .. நாகப்பட்டினம்

227. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. .. ஆரணி

228. ஜெயக்குமார், திரு. கு. .. நாமக்கல் (செ.வ.)

229. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்

230. ஜெயராமன், திரு. வி. .. பொள்ளாச்சி

231. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஆண்டிப்பட்டி

232. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு

233. ஹக்கீம், திரு. எம்.ஏ. .. மதுரை மத்தி

234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. திருவட்டாறு

235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி .. (நியமனம்)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் .. தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 22, சுபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034

## 2003 மே 5, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. அ. அருணாசலம்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை."

வருவாய் வரக்கூடிய வழிகளை விரிவாக்கி, வளங்களையும் பெருக்கி, இடையூறுகளையும் ஆராய்ந்து நீக்கிட வல்லவரே செயலாற்றும் திறனுடையவர்.

## 1. வினாக்கள் - விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள் - விடைகள், வினா எண் 381, திரு. த. ஆறுமுகம், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**381—**

**பாலம் கட்டுதல்**

**•18079— திரு. த. ஆறுமுகம்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எண்ணூர் பகுதியிலிருந்து வடசென்னை அனல் மின் நிலையத்தை இணைக்கும் பாலம் கட்டித்தர அரசு முன்வருமா?

[2003 மே 5

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் தொகுதியில் அமைந்துள்ள எண்ணூர், கத்திவாக்கம் நகராட்சிப் பகுதிக்கு உட்பட்ட இடத்தில் வடசென்னை அனல்மின் நிலையம் உள்ளது. எண்ணூர் துறைமுகத்திற்கு ஏற்றுமதி, இறக்குமதி பொருள்களை கனரக வாகனங்கள் மூலமாக சென்னையிலிருந்து, திருவொற்றியூர் வழியாக, பொன்னேரி நெடுஞ்சாலை வழியாக துறைமுகத்தினையும், அனல்மின் நிலையத்தையும் அடைவதற்கு குறைந்தது இரண்டு மணி நேரம் ஆகின்றது. இதனால் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு ஏற்படும் செலவினங்கள் பல கோடி ரூபாய்களாக ஆகின்ற நிலைமையைத் தவிர்ப்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஒத்துழைப்போடு எண்ணூரில் உள்ள பக்கிங்காம் கால்வாயின் மேல் இணைப்புப் பாலம் ஒன்றை அமைத்துத் தருவதன் மூலமாக வடசென்னை அனல் மின் நிலையம் மற்றும் துறைமுகத்தை அடைவதற்கு—எண்ணூர் பகுதியிலிருந்து வடசென்னை துறைமுகம் அடைவதற்கு—நேரம் சுமார் 10 நிமிடங்கள் ஆகும்; பயண நேரம் குறைவதுடன் அரசுக்கு ஏற்படும் அதிகப்படியான செலவினங்களும், எரிபொருள் சிக்கனமும் வெகுவாகக் குறையும். இந்தச் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, இத்திட்டத்தினை மாண்புமிகு எங்கள் முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் ஒப்புதலோடு தாயன்புமிக்க அம்மாவின் ஆசியோடு மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எண்ணூர் பகுதியில் இருந்து



2003 மே 5]

வடசென்னை அனல் மின் நிலையத்தை இணைக்கும் பாலம் அமைத்தால் சுமார் 16 கிலோ மீட்டர் தூரம் சுற்றி வந்து அனல் மின் நிலையத்தை அடைய வேண்டிய சூழ்நிலை தவிர்க்கப்படும். மேலும், அமைய உள்ள பாலத்தின் நீளம் 420 மீட்டர் மற்றும் அதன் அணுகு சாலையின் நீளம் 120 மீட்டர் இரு பக்கமும். இப்பாலம் கட்டத் தோராயமாக ரூபாய் 60 கோடி செலவாகும். இப்பணி அரசு அங்கீகாரம் பெற்ற எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. அரசின் நிதி நிலைப் பற்றாக்குறை காரணமாக இப்பணியினை அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசினுடைய சீரிய முயற்சியால் சாலைகளை மேம்படுத்துவதற்காக 2000 கோடி ரூபாய் உலக வங்கி தருவதற்கு அனுமதித்து இருக்கிறது என்கின்ற செய்தியை நாங்கள் செய்தித் தாள்களிலே பார்த்தோம். எனவே, அப்படி நிதி கிடைக்கின்றபோது இப்படிப்பட்ட பாலங்களையும், தமிழகத்திலே பல்வேறு இடங்களிலே இருக்கின்ற முக்கிய பாலங்களையும் எடுத்துக்கொள்வதோடு, சாலைகளையும் சீரமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன உலக வங்கியின் நிதி—தமிழகத்தினுடைய சாலைகளை மேம்பாடு செய்வதற்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தீவிர முயற்சியின் காரணமாக தற்சமயம் அந்த நிதி — பெறப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. அந்த நிதியினைக்கொண்டு ஏற்கெனவே திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஆற்காட்டிலிருந்து கன்னியாகுமரி வரைக்கும் 732 கிலோ மீட்டர் சாலைகளும் அதன் உட்புறம் இருக்கின்ற 13 புறவழிச் சாலைகளும் மற்றும் தமிழகத்தின் பலவேறு பகுதிகளில் இருக்கின்ற 2600 கிலோ மீட்டர் சாலைகளை தரம் உயர்த்தி மேம்படுத்துவதற்காக ஏற்கெனவே திட்டங்கள் தீட்டப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அந்தப் பணிகள்தான்

[2003 மே 5

எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன என்பதனைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 382, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**382—**

**திருமண மண்டபம்**

***35853— திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், கொமரலிங்கம் பேரூராட்சியின் மையப் பகுதியில் பழனி தண்டாயுதபாணிசாமி தேவஸ்தானத்திற்குரிய நிலத்தில் ரூபாய் 30 லட்சம் மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கொமரலிங்கம் பேரூராட்சி பகுதியில், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமாக 2925 சதுர அடி மனை உள்ளது. இதில் திருமண மண்டபம் கட்ட போதுமான இடவசதி இருக்குமா? முதலீடு செய்யப்படும் தொகைக்கு உரிய வருவாய் கிடைக்குமா என்பதைப் பரிசீலித்து திருமண மண்டபம் கட்டுவது குறித்து முடிவு எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள், என்னுடைய உடுமலைப்பேட்டை தொகுதியிலுள்ள கொமரலிங்கம் பேரூராட்சி என்பது 20 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட ஒரு



2003 மே 5]

பேரூராட்சியாகும். அந்தப் பேரூராட்சி முக்கியமான மெயின் ரோட்டில் உள்ளது. இங்கு சுற்று வட்டாரத்திலுள்ள, அருகிலுள்ள 32 கிராமங்களை உள்ளடக்கிய பகுதியிலே திருமண மண்டபங்கள் போதுமான அளவிலே இல்லை என்பதால் மேற்படி கிராம மக்கள் தங்களது இல்லத்தில் நடைபெறும் விசேஷங்களுக்கு மிகுந்த பொருட் செலவில் உடுமலைப்பேட்டை அல்லது பழனி நகருக்குச் செல்ல வேண்டியுள்ளது. எனவே மேற்படி கிராம மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றக்கூடிய வகையிலேயும், அதுபோல அந்தத் திருக்கோயிலுக்கு வருவாய் அதிகமாகக் கிடைக்கக்கூடிய வகையிலேயும் அந்தத் திருக்கோயிலுக்கு வசூல் வருவதற்கு ஓர் இடம் தேவைப்படுகிறது. அந்த அடிப்படையில்--மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த கொமரலிங்கம் பேரூராட்சிப் பகுதியிலே, மையப் பகுதியிலே உள்ள இடத்திலே 2925 சதுர அடி உள்ளதாகக் கூறினார்கள்--அந்த இடம் போதுமான இடம், மெயின் ரோட்டிலே உள்ளது அதிலே, மேலே ஒரு தளம் கட்டக்கூடிய வகையிலே ஒரு திருமண மண்டபம் நடப்பு ஆண்டிலே கட்டித்தர முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொமரலிங்கம் பேரூராட்சி பழனியிலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இந்நகரில் அருள்மிகு தண்டாயுதபாணிசாமி திருக்கோயிலுக்குச் சொந்தமாக உள்ள 2925 சதுர அடி இடம் திருமண மண்டபம் கட்டுவதற்குப் போதுமானதாக இல்லை என்று பொறியாளர்கள் சொல்லியிருக்கிறார்கள், இந்த இடத்தில் திருமண மண்டபம் கட்டுவதற்குப் போதுமான இடவசதி இருக்குமேயானால், அதுமட்டுமின்றி அந்தப் பகுதியிலே அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடம் வேறு இருக்குமேயானால் அந்த இடத்தை நீங்கள் தேர்வு செய்து கொடுப்பதற்கு முன்வருவீர்களேயானால் சம்பந்தப்பட்ட பொறியாளர்களிடத்திலே சொல்லி அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து அதன் பின்னர் திருமண மண்டபம் கட்டுவது குறித்துப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே நஞ்சை பூமிகள் அதிகமாக உள்ளன.

[2003 மே 5

புஞ்சை பூமிகள் உள்ளன. நடப்பு ஆண்டிலே அங்குள்ள பூமிகளிலுள்ள பசலி வருமானம் எவ்வளவு என்பதையும், அதுபோல அங்கு உபயோகத்தில் எத்தனை ஏக்கர் நஞ்சை பூமி உள்ளது, எத்தனை ஏக்கர் புஞ்சை பூமி உள்ளது என்பதையும் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்திருக்கோயிலின் பசலி 1412-க்கான வரி விதிப்பு வருமானம் ரூபாய் 29 கோடியே 13 இலட்சத்து 46 ஆயிரத்து 389 ஆகும். மொத்த வருமானம் 56 கோடியே 63 இலட்சத்து 98 ஆயிரத்து 572 ரூபாய் 32 பைசா ஆகும். இத்திருக்கோயிலுடன் இணைந்த உபகோயில்கள் 41 இருக்கின்றன. இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக 341 ஏக்கர் 14 செண்ட் நஞ்சை நிலமும், 1113.83 ஏக்கர் புஞ்சை நிலமும், அது தவிர 92 கடைகளும், 59 காலி மனைகளும் இருக்கின்றன. இருந்தாலும் சில பகுதிகளில் அந்த நிலத்தை உழுது கொண்டிருப்பவர்கள், சரியாக இன்னும் குத்தகை கொடுக்காத காரணத்தாலே வருவாய் மிகவும் குறைவாக இருக்கிறது. இருந்தாலும் அங்கே உங்களுடைய பகுதியிலே இருக்கின்ற நிலத்தினுடைய குத்தகைதாரர்களிடத்திலேயும் வருவாய் பெற்று வருகின்ற ஆண்டில் திருமண மண்டபம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 383, திருமதி வளர்மதி ஜெபராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**383—**

### சித்த மருத்துவச் சிகிச்சை

***37765—திருமதி வளர்மதி ஜெபராஜ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்ட ஆட்சியர் வளாகச் சித்த மருத்துவப் பிரிவில் குறிப்பிட்ட நாட்கள் மட்டும் சிகிச்சையளிப்பதை மாற்றி தினமும் சிகிச்சை அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2003 மே 5]

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மதுரை மாவட்ட ஆட்சியர் வளாகச் சித்த மருத்துவப் பிரிவில் தற்போது 3 நாட்கள் மட்டுமே சிகிச்சை அளித்து வருகின்ற நிலைமையை மாற்றி தினமும் சிகிச்சை அளிக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

*முற்பகல் 10-10*

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் நடைபெற்று வருகின்ற சித்த மருத்துவப் பிரிவில் தினமும் சிகிச்சை அளிப்பதற்கு அரசு எல்லா பணிகளையும் செய்து கொண்டு வருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுடைய பதில் மக்களுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய பதிலாக அமைந்திருக்கிறது. அதற்காக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு மதுரை மக்களினுடைய சார்பாக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மதுரை கலெக்டர் அலுவலகத்தில் செயல்பட்டுக்கொண்டு வருகின்ற அந்த சித்த மருத்துவமனைக்கு வருகின்ற நோயாளிகளுக்கு ஆடாதோடா கஷாயம் என்கிற ஒரு கஷாயத்தைக் கொடுக்கிறார்கள். துளசி, ஆடாதோடா கஷாயம், கண்டங்கத்திரி, சிற்றரத்தை, போன்ற கலவைகள் சேர்ந்தது அந்த ஆடாதோடா கஷாயம். இது உடலுக்கு எதிர்ப்புச் சக்தியைக் கொடுப்பதோடு சளித் தொல்லைக்கும் சிறந்த மருந்து என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள். நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சார்ஸ் நோயைப் பற்றிய பயம் இந்த அவையிலே எழுந்தபோது, நீங்கள் யாரும் பயப்படாதீர்கள், அப்படி பயப்படுகிறவர்கள் சிறிதளவு துளசியை தினமும் சாப்பிடுங்கள் என்று சொன்னார்கள். ஆடாதோடா கஷாயத்தில் அதிக அளவு துளசி சேர்க்கப்படுகின்ற காரணத்தினாலும், இது உடம்புக்கு அதிக அளவு எதிர்ப்பு சக்தியைக் கொடுக்கக்கூடிய கஷாயம் என்பதாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விமான நிலையத்திலே பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கும், விமானத்தில் வந்து இறங்குகின்ற, பயணிகளுக்கும் இந்தக் கஷாயத்தைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வாரா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன். கேன்சர், வெண்படை, சார்ஸ் போன்ற நோய்களுக்கு ஆங்கில மருத்துவத்தைவிட சித்த மருத்துவத்திலேதான் சிறந்த சிகிச்சை

கொடுக்க முடியும் என்பதை இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். தென் மாவட்டங்களிலே உள்ள மக்களெல்லாம், மிகப்பெரிய நோய்களுக்கு ஆளாகின்றபோது சித்த மருத்துவத்தை எதிர்பார்க்கின்ற மக்கள் சென்னைக்கு வரவேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே, தென் மாவட்ட மக்களுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய ஒரு செய்தியை--இப்போது தினமும் சிகிச்சை அளிக்கப்படும் என்கின்ற ஒரு மகிழ்ச்சியான ஒரு செய்தியை-- அறிவித்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தென் மாவட்ட மக்களுடைய குறையைப் போக்கும் விதமாக அங்கே ஒரு சித்த மருத்துவ ஆராய்ச்சி மையத்தைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதைப் பணிவன்போடு கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும், நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும்தான் இந்திய மருத்துவச் சிகிச்சை முறைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து--அந்த இரண்டு ஆட்சிக் காலத்தில்தான்--அதிகமாக சித்த மருத்துவப் பிரிவுகள் தமிழகத்திலே தொடங்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டுகூட, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 89 இடங்களில் இந்திய மருத்துவ சிகிச்சைக்கான பிரிவுகளைத் தொடங்கி, அதிலே 80 இடங்களிலே சித்த மருத்துவப் பிரிவு, 6 இடங்களிலே யுனானி மருத்துவப் பிரிவு, 3 இடங்களிலே ஆயுர்வேத மருத்துவப் பிரிவு தொடங்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த வகையிலே நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கே, உலகையே பயமுறுத்திக்கொண்டிருக்கிற சார்ஸ் நோய்க்கு புதிதாக ஒரு மருந்தைச் சொல்லியிருக்கிறார்கள். உள்ளபடியே ஆடாதோடா கஷாயம் சளிக்கு நல்லது என்றுதான் நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், இது சார்ஸ் நோய்க்கும் நல்ல மருந்து என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். இது ஆராய்ச்சிக்குரியது. எனவே, இதை ஆராய்ந்து பார்த்து, அப்படித் தேவைப்படின் இந்த மருந்தைப் பயன்படுத்துவதற்கு மருத்துவர்களுக்கு ஆலோசனை வழங்கப்படும். எனவே, நம்முடைய மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலே இருக்கிற அந்த சித்த மருத்துவப் பிரிவிற்கு இப்போது வாரத்திற்கு 3 நாட்கள் மட்டும் மாற்றுப் பணியிலே ஒரு டாக்டர்



வந்துகொண்டிருக்கிறார். தமிழகத்தினுடைய முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலியாகவுள்ள சித்த மருத்துவர் பணியிடங்களை நிரப்புவதற்கு தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலமாக நடவடிக்கை எடுத்து இப்போது அந்தத் தேர்வு முடிகிற தறுவாயிலே இருக்கிறது. எனவே, அந்தத் தேர்வு முடிந்தவுடன் அந்தப் பிரிவிற்கு நிரந்தரமாக ஒரு மருத்துவர் நியமிக்கப்பட்டு அங்கே தினந்தோறும் சிகிச்சை அளிக்கிற அளவிற்கு நிலைமையை நிச்சயமாக இந்த அரசு உருவாக்கும். மேலும், நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சித்த மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று மதுரையிலே தொடங்கப்படுமா என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பரிசீலனை அரசில் எதுவும் இல்லை. அந்தக் கோரிக்கையை தேவைப்படுகிற நேரத்திலே அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. கே. மணி.

*முற்பகல் 10-15*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சித்த வைத்தியம் என்பது மிக பிரசித்திபெற்றது. தொன்றுதொட்டு தமிழர்கள் பயன்படுத்தி வந்த மருத்துவ முறை. இந்த சித்த மருத்துவத்திலே மருந்து சாப்பிட்ட பிறகு நிரந்தரமாக நோய் குணமாகும்; பக்க நோய்கள் ஏதும் உருவாக்காத ஒரு நல்ல வைத்தியம். ஆனால், நாளடைவிலே இந்த சித்த வைத்தியத்திற்கு சோதனை ஏற்பட்டு, குறைந்து இப்போது புத்துயிர் பெற்ற ஒரு நிலை; இந்தத் தறுவாயிலே தொன்றுதொட்டு தமிழர்களால் பயன்படுத்தப்பட்டு வந்த, நிரந்தர தீர்வுக்கு வழி வகுக்கிற, இந்த சித்த மருத்துவத்தை மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்ச்சியை மக்கள் மத்தியிலே அரசு ஏற்படுத்துமா? அதேநேரத்திலே மூலிகைப் பண்ணைகள் எல்லாம் புதிதாகத் தொடங்கி மருத்துவ ஆராய்ச்சிப் பணிகள் மற்றவை எல்லாம் தொடங்கி அரசு இதற்கு முக்கியத்துவம் கொடுத்து இதை விரிவாக்கம் செய்வதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் சொன்னதைப் போல, பக்க விளைவே இல்லாத இந்த

[2003 மே 5

சித்த வைத்திய சிகிச்சை முறைடை.ப மக்கள் இப்போது பெரிதும் விரும்பி ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அந்த வகையிலேதான் இப்போது நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இந்த மருத்துவ முறைக்கு அதிக ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது. அதிகமான மூலிகைப் பண்ணைகள் அமைப்பதற்கும் இந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழே விவசாயிகளை நாங்கள் ஊக்குவித்து வருகிறோம். அப்படி விவசாயிகளிடமிருந்து பெறப்படுகிற அந்த மருத்துவச் செடிகளை, மூலிகை இலைகளை எல்லாம் ஏற்றுமதி செய்வதற்குண்டான ஏற்பாட்டையும் அரசு செய்வதாக இருக்கிறது. அந்த வகையிலே சித்த மருத்துவத்தை மக்களிடம் அதிகமாக பிரபலியப்படுத்த வேண்டும் என்பதற்காக மத்திய அரசினுடைய உதவியோடு சித்த மருத்துவ ஆராய்ச்சி ஒன்றுக்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம். அது நம்முடைய அயனாவரத்திலே இருக்கிற அண்ணா சித்த மருத்துவ வளாகத்திலே இப்போது தொடங்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணி முடிந்தவுடன் அங்கே ஆராய்ச்சி மையம் சிறப்பாகச் செயல்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 384, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**384—**

**ராஜா தொழிற்பயிற்சி நிலையம்**

**•6752—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி பேரூராட்சியில், ராஜா தொழிற்பயிற்சி பயிலகத்தில் பயின்ற மாணவர்களுக்கு படித்த சான்று, மதிப்பெண்களின் பட்டியல் கடந்த பல ஆண்டுகளாக வழங்கப்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றினை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,



2003 மே 5]

(அ) செஞ்சி பேரூராட்சியில் உள்ள கேஎஸ். ராஜா தொழிற்பயிற்சி மையத்தில் பயின்ற பயிற்சியாளர்கள் அனைவருக்கும் 2001 ஜூலையில் நடைபெற்ற தொழிற் தேர்வு வரை தற்காலிக தொழிற்சான்றிதழ்கள் வழங்கப்பட்டு உள்ளன. அசல் தேசிய தொழிற்சான்றுகள் 1996 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டுவிட்டன.

(ஆ) 1997 ஆம் ஆண்டுக்கான தொழிற் தேர்வில் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ராஜா தொழிற்பயிற்சி நிலையத்தில் படிக்கின்ற மாணவர்கள் கிராமப்புறத்தைச் சேர்ந்த ஏழை எளிய மாணவர்கள். 1997 ஆம் ஆண்டு படித்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கின்றார்கள். 1997 ஆம் ஆண்டிலிருந்து 2003 வரை 6 ஆண்டுகள் ஆகின்றன. அந்த ஆண்டில் படித்த மாணவர்கள் தொழிற் பழகுநர் பயிற்சியும் பெற முடியவில்லை, சுய தொழில் செய்ய வங்கிகளில் கடனும் பெற முடியவில்லை. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இந்தக் கல்வி நிறுவனத்தின் மொத்த நடவடிக்கைகளையும் ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட ஏழை எளிய மாணவர்களுக்கு நிவாரணம் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தொழிற் பிரிவை தொடங்கி, அதற்கு பயிற்சி அளிக்கிறபோது Director General of Employment and Training அவர்களுடைய அனுமதியைப் பெற வேண்டும். இந்தக் குறிப்பிட்ட செஞ்சி பேரூராட்சியிலுள்ள கேஎஸ். ராஜா தொழிற்பயிற்சி மையத்தில் 1995 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு அங்கீகாரம் பெறப்படவில்லை. எனவே, அங்கீகாரம் பெறப்படாததன் விளைவாக 1995-ல் அனுமதிக்கப்பட்டு 1997-ல் பயிற்சி முடித்த அந்த மாணவர்களுக்குரிய சான்றிதழ் வழங்கப்படவில்லை. எனவே, அந்த மாணவர்களுடைய எதிர்காலத்தைக் கவனத்தில் கொண்டு முன் தேதியிட்டாவது அவர்களுக்கு அந்த அனுமதியை வழங்கி, சான்றிதழ் வழங்க வேண்டும் என்று Director General of Employment and Training, Delhi-க்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அது கிடைத்தவுடன் அந்தச் சான்றிதழ் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 மே 5

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ராஜா தொழிற்பயிற்சி நிலையத்தில் ஓட்டுநர் பயிற்சி, மேல்நிலைப் பள்ளி, முதியோர் இல்லம், ஆசிரியர் பயிற்சி என்று பல பயிற்சிகள் அளிக்கப்படுவதாக விளம்பரங்கள் வரப்பெற்றிருக்கின்றன. அதில் பயில்கின்றவர்களுக்கு உரிய முறையில் சான்றிதழ் வழங்கப்படுகின்றதா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசினுடைய அங்கீகாரம் பெற்று, பயிற்சி அளிக்கப்படுமானால், நிச்சயமாக அதற்குரிய சான்றிதழ்கள் அரசின் சார்பில், துறையின் சார்பில் வழங்கப்படும். அப்படி அங்கீகாரம் இல்லாத பயிற்சிகளுக்கு, அரசு அனுமதிக்காத பயிற்சிகளுக்கு சான்றிதழ்கள் நிச்சயமாக வழங்கப்பட மாட்டாது. அந்தப் பயிற்சி நிலையத்தில் அப்படி ஏதாவது தவறு இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குரிய மனுவை அளித்தால், அரசு அதற்குரிய மேல் நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 385, திரு. கே. கே. சிவசாமி, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**385—**

### குடும்ப அட்டை வழங்குதல்

***27786—திரு. கே.கே. சிவசாமி:**

*மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், மேலப்பாறைக்குளம் பகுதி மக்களுக்குக் குடும்ப அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?



2003 மே 5]

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அருப்புக்கோட்டை தொகுதி, மேலப்பாறைக்குளம் கிராமத்தில் 135 குடும்பத்தினர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு உள்ளன. மற்ற குடும்பங்களிலிருந்து குடும்ப அட்டைகள் வழங்கும்படி எந்த விதமான கோரிக்கையும் வரப்பெறவில்லை என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், கே. செட்டிகுளம் ஊராட்சியைச் சேர்ந்த மேலப்பாறைக்குளம் கிராமத்தில் சுமார் 50 குடும்பங்களுக்கு மேல் வெளி மாவட்டங்களுக்கு, வெளி மாநிலங்களுக்கு பிழைப்பு தேடிச் சென்று விட்டு, திரும்பவும் தங்கள் சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பி உள்ளனர். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், இப்பகுதி மக்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், மேலப்பாறைக்குளம் பகுதி கிராமத்திலுள்ள 170 குடும்பங்களில் 8-11-2002 வரை 135 குடும்பங்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. மற்ற குடும்பங்களிலே இருக்கிறவர்கள் இதுநாள் வரை வேண்டுகோளை வைக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வெளியிலே சென்றவர்கள் வந்திருப்பதாகச் சொல்லி இருப்பதன்பேரில், அந்த 35 குடும்பங்களும் முறையாக விண்ணப்பம் செய்வார்களேயானால், அந்தக் குடும்பங்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்குவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சுழியிலே குடும்ப அட்டைகள் வழங்குவது சம்பந்தமாக மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு

[2003 மே 5

தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய மாநிலத்தினுடைய பல்வேறு பகுதிகளில் புதிதாகக் குடும்ப அட்டைக்கு மனு செய்கின்றபோது, அரிசி வேண்டாம் என்று எழுதிக் கொடுங்கள் என்று அதிகாரிகள் ஒரு நிபந்தனை வைக்கின்றார்கள். மாநில அரசு அப்படி ஏதாவது ஒரு வழிகாட்டுதல் சொல்லி இருக்கிறதா? அப்படி இருந்தால், அதைத் திரும்ப பெற்று அரிசி கிடைப்பதற்கு வழிவகை செய்யக்கூடிய அளவிலே அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எந்தவிதமான நிபந்தனையும் விதிக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அரிசி வேண்டாம் என்று கூறினால்தான் குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என்ற நிலையில்லை. யாருக்கு வேண்டுமானாலும், குடும்ப அட்டைகள் தேவைப்படுகிறவர்களுக்கு இப்போது இந்த அரசு குடும்ப அட்டைகள் தந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 386, திரு. எம். சக்திவேல் முருகன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**386—**

### பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல்

***9095—திரு. எம். சக்திவேல் முருகன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் பேரூராட்சி 21 வார்டுகளில் 14 வார்டுகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்காமல் நேரடி நீர் வழங்குவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஊர்க்காடு குடிநீர்த் திட்டம் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் உள்ளதா?



2003 மே 5]

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அம்பாசமுத்திரம் பேரூராட்சிக்கு ஊர்க்காடு, கோடரங்குளம் திட்டம் மூலமாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள எந்நாளும் வற்றாத ஜீவநதியான தாமிரபரணி உற்பத்தியாகின்ற இடத்தில் எனது தொகுதியான அம்பாசமுத்திரம் இருக்கிறது. அந்த அம்பாசமுத்திரம் பகுதியிலுள்ள பேரூராட்சியிலிருந்துதான் இன்று பல்வேறு பகுதிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர், பெரிய பெரிய குழாய்கள் போட்டு, அம்பாசமுத்திரம் பேரூராட்சிப் பகுதியிலுள்ள சாலைகள் வழியாகச் சென்று கொண்டு இருக்கின்றது. ஆனால் இங்கே அமைச்சர் அவர்கள் ஊர்க்காடு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தின் மூலமாகவும், கோடரங்குளத்தின் மூலமாகவும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிக்கொண்டிருப்பதாகக் கூறினார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்வது, ஊர்க்காடு பகுதியிலிருந்து அம்பாசமுத்திரம் பேரூராட்சியிலுள்ள 7 வார்டுகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுக் கொண்டிருப்பது உண்மை. ஆனால் அம்பாசமுத்திரம் பேரூராட்சியிலுள்ள மீதியுள்ள 14 வார்டுகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படவில்லை என்பதுதான் யதார்த்தமான உண்மை. நான் அந்த ஊரில் பிறந்தவன். எனவே, பாபநாசம் நதியுண்ணி அணையிலிருந்து, கோடரங்குளம் நதியுண்ணி அணையிலிருந்து நேரடியாக நீரை உறிஞ்சி அதற்குப் பிறகு, அம்பாசமுத்திரத்திலுள்ள 14 வார்டுகளுக்குத்தான் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, ஒரு பேரூராட்சியிலுள்ள 21 வார்டுகளில் 7 வார்டுகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிக்கொண்டிருக்கிறது. மீதி 14 வார்டுகளுக்கு நதியுண்ணி அணையிலிருந்து நேரடியாக மோட்டார் மூலம்தான் அந்தக் குடிநீரை வழங்கிக்கொண்டிருக்கிறது. காரணம், எனது ஊருக்கு அருகில் ஒரு கிலோமீட்டரில் நான் பிறந்த ஊருக்குப் பக்கத்தில்தான் அந்த மோட்டார் நீரேற்றும் நிலையமே இருக்கின்றது. இன்று வரை அங்கே உறை கிணறு அமைத்துக் குடிநீர் வழங்கப்படவில்லை. எனவே, எங்களுடைய பேரூராட்சிப் பகுதியிலுள்ள மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று சொன்னால், அந்த வழியாக

உள்ள குடிநீர் பெரிய பெரிய குழாய்கள் அமைத்து செங்கோட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டம், தென்காசி கூட்டுக் குடிநீர்த் திட்டம், இன்னும் விருதுநகர், சங்கரன்கோயில், சேந்தமங்கலம் எல்லா பகுதிகளுக்குமே நமது தொகுதியிலிருந்துதான், அம்பாசமுத்திரம் பேரூராட்சியிலிருந்துதான் குடிநீர் செல்கின்ற வேளையில், நமக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் இன்று வரை கிடைக்கவில்லையே என்று அந்த 14 வார்டு மக்கள் ஏங்குகிறார்கள். அந்த 14 வார்டு மக்களுக்குக் கோடைக்காலங்களில் தாமிரபரணி ஆற்றில் தண்ணீர் வராத நேரத்தில், சகதியான தண்ணீர்தான் கிடைத்துக் கொண்டிருக்கிறது. எனவே அருள்கூர்ந்து என்னுடைய இந்தக் கேள்வியிலுள்ள உண்மை நிலையைப் புரிந்து, அந்த 14 வார்டுகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சக்திவேல் முருகன் அவர்கள் அம்பாசமுத்திரம் பேரூராட்சியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், 14 வார்டுகளுக்குத் தேவை என்பதை இங்கே வலியுறுத்தினார்கள். அம்பாசமுத்திரம் பேரூராட்சியில் மொத்தமாக 21 வார்டுகள் இருக்கின்றன. இதில் 14 வார்டுகளுக்குத் அவர் குறிப்பிட்டதைப் போல கோடரங்குளம் குடிநீர்த் திட்டத்தின் மூலம் தாமிரபரணி நதியில் இயல்பு நீரேற்றும் நிலையம் மூலமாக அங்கே 16 இலட்சம் லிட்டர் நீர் எடுக்கப்பட்டு, chlorination போன்ற சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்து, சுத்திகரிக்கப்பட்டு முழுமையாக அந்த 14 வார்டுகளுக்கும் தொடர்ந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் தமிழக அரசு, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் அரசு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சக்திவேல் முருகன்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊர்க்காட்டிலே உறை கிணறு அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது,



நீங்களே சொன்னீர்கள், நதியுண்ணி அணையிலிருந்து நேரடியாகத்தான் நீரை எடுத்துக்கொண்டு வருகிறீர்கள் என்று. ஆனால் கோடைக் காலங்களில் அணையில் தண்ணீர் இல்லாத நேரத்தில் அங்கே நீர் உறிஞ்சுவதற்குக்கூட அந்த அணையிலே தண்ணீர் இல்லாத நேரங்களில் நேரடியாக நீர் உறியும்போது எப்படிப்பட்ட நீர் வரும் என்பது உங்களுக்கு நன்கு தெரியும். சுத்திகரிப்பு நிலையம் இருக்கின்றது, நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அது முழு நேரமும் இயங்க முடியாத ஒரு சூழ்நிலையில் இருக்கின்றது. அது பேரூராட்சி மக்களுடைய ஒரு யதார்த்தமான கோரிக்கை; எனவேதான் (மணியடிக்கப்பெற்றது) தாங்கள் மறுபரிசிலனை செய்து பாதுகாக்கப்பட்ட குடிநீரை, ஊர்க்காட்டிலேயோ அல்லது அதே இடத்திலேயோ உறை கிணறு அமைத்து, உறை கிணறு மூலமாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் எங்களுடைய அம்பாசமுத்திரம் பேரூராட்சியிலுள்ள 14 வார்டுகளுக்கும் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா, மறுபரிசிலனை செய்வார்களா, என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் பேரூராட்சியில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நீர் குறைவான சமயத்தில், வற்றிய நேரத்தில் நீர் உறிஞ்சப்படும்போது, அந்த நீர் சகதி கலந்த நீராக வர வாய்ப்பு உள்ளது என்பதைத் தெரிவித்தார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு filtration, சுத்திகரிக்கப்பட்டு முழுமையாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தொடர்ந்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்து, தற்போது மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேலும் 2 உறை கிணறுகள் ஊர்க்காடு குடிநீர்த் திட்டத்தில் கூடுதலாக அமைக்கும் திட்டம் பூர்வாங்க ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 387, திரு. ராதாரவி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**387—**

**குடிநீர்க் குழாய்கள்**

***31126—திரு. ராதாரவி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சைதாப்பேட்டை சுப்பிரமணிய முதலி தெரு மற்றும் வீனஸ் தெருக்களில் குடிநீர்க் குழாய்கள் பழுதடைந்திருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது சீரமைக்கப்படும்?*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சைதாப்பேட்டை சுப்பிரமணிய முதலி தெருவில் அமைந்துள்ள 100 மில்லி மீட்டர் விட்டமுள்ள பழைய வார்ப்பிரும்புக் குடிநீர்க் குழாயினை 250 மீட்டர் நீளத்திற்கு கசிவுநீரைக் கண்டறிந்து, அவற்றினைச் சரிசெய்து, மாற்றியமைத்து புதிய குடிநீர் வார்ப்பிரும்புக் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. வி.எஸ்.முதலி தெருவில் அமைந்துள்ள 100 மில்லி மீட்டர் விட்டமுள்ள குடிநீர்க் குழாயினை ஆய்வு செய்ததில் அக்குழாய் நல்ல நிலையில் இருப்பது கண்டறியப்பட்டது. தற்போது இத்தெருக்களில் தடையின்றி அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ராதாரவி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுப்பிரமணிய முதலி தெருவில் குடிநீர்க் குழாய்களைச் சரிசெய்து, குடிநீர் சீராக விநியோகம் செய்யப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுக்கு சைதை தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சைதை தொகுதியில் மொத்தம் 891 தெருக்கள் இருக்கின்றன. இதில் 230 தெருக்களில் ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறையும், சில தெருக்களில் 3 மணி நேரத்திற்கு ஒரு முறையும் சீராகத் தண்ணீர் விடப்படுகிறது. இருந்தாலும், மீதமுள்ள தெருக்களில் சரியாகத் தண்ணீர் வராததற்குக் காரணம்—நான் கடந்த ஆட்சியைப் பற்றிக் குற்றம் சொல்லவில்லை. அவர்கள் குழாய்களைப்





போட்டிருக்கிறார்கள். இருந்தாலும்—இந்த மெயின் குழாயைக் ஆழத்திலும், சர்வீஸ் குழாயைக் மேல் மட்டத்திலும் பதித்திருப்பதால், போதிய அழுத்தமின்மை காரணமாகக் குடிநீர் சரியாக வருவதில்லை. அதனால் மெயின் குழாயை மேல்மட்டத்திலும், சர்வீஸ் குழாயைக் கீழ்மட்டத்திலும் அமைக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ராதாரவி அவர்கள் மெயின் குழாயை மேல்புறமாகவும், சப்ளை செய்கின்ற குழாயைக் கீழ்ப்புறமாகவும் அமைத்து, அது சரி செய்யப்படுமா என்ற அந்தக் கேள்வியை இங்கே முன்வைத்தார்கள். அந்த அடிப்படையில் உடனடியாக அதற்குத் தீர்வு காணமுடியாது. அந்தக் காரணத்தைக்கொண்டு, தற்சமயம் லாரிகள் மூலமாக சர்வீஸ் செய்யப்படாத தெருக்களுக்கு, குடிநீர் சப்ளை செய்யப்படாத தெருக்களுக்கு, உடனடியாக மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, எதிர்வரும் கோடையைக் கணக்கிட்டு மே மாதத்தில் 2000 லாரி நடைகள் மூலமாகத் தொடர்ந்து தண்ணீர் தர வேண்டும், ஜூனிலிருந்து அக்டோபர் வரை 3000 லாரி நடைகள் மூலமாகத் தொடர்ந்து சென்னை நகர் வாழ் மக்களுக்கு முழுமையாகக் குடிநீர் தரப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளார்கள். அந்த அடிப்படையிலே தற்போது மக்களின் தேவையைக் கருதி, அந்த சைதை பகுதியில் 3-5-2003 முதல் மேற்கண்ட 2 தெருக்களுக்கும் கூடுதலாக லாரி நடைகள் மூலமாகத் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்து, அமர்கின்றேன்.

**திரு. ராதாரவி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆற்காடு சாலையை மெட்ரோ-2 திட்டத்தில் இணைத்ததற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அம்மா அவர்கள் 2000 லாரிகளை அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள் என்று. 60 லாரிகளை சைதை தொகுதிக்கு ஒதுக்கினால் நிச்சயமாக இந்தத் தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள நிலையில் மக்களுக்கு ஒரு சந்தோஷமான

[2003 மே 5

செய்தியாக இருக்கும். அதைப்போல 50 பகுதிகளில் இந்திய மார்க்-2 அடிபம்புகள் தேவைப்படுகின்றன. அதையும் அமைத்துக் கொடுத்து, தொகுதி மக்களின் தண்ணீர்த் தேவையை நிறைவு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், சென்னை மாநகர மக்களுக்கு முழுமையாகக் குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்று பல்வேறு திட்டங்களைத் தீட்டி, ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள். அந்த அடிப்படையில் தற்போது நகரில் 5808 இந்திய மார்க்-2 குழாய்கள் உள்ளன. ஜூலை 2003-க்குள் மேலும் சுமார் 500 புதிய இந்திய மார்க்-2 குழாய்கள் அமைக்க ரூ. 2 கோடியே 20 இலட்சம் ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, அது சைதை பகுதி மக்களுடைய தேவைக்கு அத்தியாவசியத் தேவை என்றால் இந்த அரசு அதைப்பற்றி சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், சென்னை மாநகர வாழ் மக்களுக்குத் தற்சமயம் குடிநீர் செல்லாத பகுதிகளுக்கு, குடிநீர்க் குழாய்கள் இணைப்பு இல்லாத பகுதிகளுக்கு தொட்டிகள் மூலமாக, லாரி நடைகள் மூலமாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்சமயம் 3400 குடிநீர்த் தொட்டிகள் அங்கு அமைந்துள்ளன. குடிநீர்க் குழாய் இணைப்பு இல்லாத பகுதிகளுக்கு மேலும் இந்த ஆண்டு 600 குடிநீர்த் தொட்டிகள் வாங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு, உத்தரவிட்டுள்ளது என்பதைத் தெரிவித்து, அமைகிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 388, திரு. வி.ஆர். ராஜாங்கம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**388—**

**கால்நடை மருந்தகங்கள்**

***23554—திரு. வி.ஆர். ராஜாங்கம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 மே 5]

சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், கொண்டையம்பட்டி, மாணிக்கம்பட்டி ஆகிய கிராமங்களில் கால்நடை மருந்தகங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், கொண்டையம்பட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் செயல்படுவதாலும், மாணிக்கம்பட்டி கிராமத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் பாலமேடு கால்நடை மருந்தகம் செயல்படுவதாலும் அக்கிராமங்களில் கால்நடை மருந்தகம் அமைக்கத் தற்போது சாத்தியக் கூறுகள் ஏதுமில்லை என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், கொண்டையம்பட்டி, மாணிக்கம்பட்டி ஆகிய ஊர்கள் பின்தங்கிய கிராமப் பகுதிகளைச் சேர்ந்தவை. ஆகவே வருகிற ஆண்டிலாவது விதிகளைத் தளர்த்தி, மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் அரசு கால்நடை மருத்துவமனையைக் கட்டித் தர நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியத்தில் உள்ள கொண்டையம்பட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் தற்போது செயல்பட்டு வருகிறது. மேலும் இக்கிராமத்திலிருந்து 8 கிலோமீட்டர் தொலைவில் அலங்காநல்லூர் கால்நடை மருந்தகம் செயல்படுகிறது. மாணிக்கம்பட்டி கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் பாலமேடு கால்நடை மருந்தகமும், 5 கிலோ மீட்டர் தூரத்தில் எர்றாம்பட்டி மற்றும் கோடங்கிப்பட்டி கால்நடைக் கிளை நிலையங்களும், 7 கிலோ மீட்டர் தொலைவில் சத்திர வெள்ளாளப்பட்டி கால்நடைக் கிளை நிலையமும் செயல்படுகின்றன. இக்கிராமங்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 12,413 ஆகும். பொதுவாகக் கிராமங்களிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைக்

கருத்தில்கொண்டும், அந்த ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே, செயல்பட்டுவரும் மற்ற கால்நடை நிலையங்களைக் கருத்தில்கொண்டும், கால்நடை மருந்தகம் தொடங்கப்படவுள்ள கிராமத்திற்கும், ஒன்றியத்தில் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்ற கால்நடை நிலையங்களுக்கும் இடையே உள்ள தூரத்தைக் கருத்தில்கொண்டும் தொடங்கப்படுகின்றன.

கால்நடை மருந்தகம் ஓர் இடத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டுமானால் அதற்கான தீர்மானங்களைச் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் நிறைவேற்றித் தர வேண்டும். எனவே, துறை விதித்துள்ள நிபந்தனைகளை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் நிறைவேற்றித் தரும் பட்சத்திலும், கொண்டையம்பட்டி கிராமத்தில் ஒரு கால்நடைக் கிளை நிலையம் தற்போது செயல்பட்டுவரும் நிலையிலும், 8 கிலோ மீட்டர் தொலைவில் அலங்காநல்லூர் கால்நடை மருந்தகம் செயல்படுவதாலும், மாணிக்கம்பட்டி கிராமத்திலிருந்து 3 கிலோமீட்டர் தூரத்தில் பாலமேடு கால்நடை மருந்தகம் செயல்படுவதாலும், 5 கிலோமீட்டர் தொலைவில் எர்றாம்பட்டி, கோடங்கிபட்டி மற்றும் 7 கிலோ மீட்டர் தொலைவில் சத்திர வெள்ளாளப்பட்டியில் கால்நடைக் கிளை நிலையங்கள் செயல்படுவதினாலும் கொண்டையம்பட்டி மற்றும் மாணிக்கம்பட்டி கிராமங்களில் புதிதாகக் கால்நடை மருந்தகம் அமைப்பதற்குச் சாத்தியக் கூறுகள் தற்போது இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலங்காநல்லூர் என்பது மிகவும் பிரபலமான ஜல்லிக்கட்டு நடக்கின்ற ஊர். அந்த ஊரில் கண்டிப்பாக ஒரு கால்நடை மருத்துவமனையை அமைத்துத்தர அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கால்நடை மருந்தகம் அமைக்க அரசினுடைய விதிமுறைகள் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க முதலில் சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத்தில் 1 ஏக்கர் நிலம் இலவசமாக அளிக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.



புதிய கால்நடை மருந்தகத்திற்குரிய புதிய கட்டடம் கட்ட நிதி அளிக்க மற்றும் அக்கட்டடம் கட்டப்படும் வரை மருந்தகம் செயல்பட இலவசக் கட்டடம் வழங்கப்பட ஊராட்சி ஒன்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். அருகில் உள்ள மருந்தகமோ, கிளை நிலையமோ 8 கிலோ மீட்டர் தொலைவிற்குக் குறைவாக இருக்கக் கூடாது. அக்கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை 10 ஆயிரத்திற்கு அதிகமாக இருக்க வேண்டும். மேலும் அந்தக் கால்நடைக் கிளை நிலையத்திற்குத் தினமும் 30 கால்நடைகளாவது வந்து சிகிச்சை பெற வேண்டும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்களின் வாயிலாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 389, திரு. க. முருகவேல் ராஜன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

முற்பகல் 10-40

**389—**

**கைமுறைக் காகித அலகுகள்**

***6940—திரு. க. முருகவேல் ராஜன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1999-ல் மூடப்பட்ட 15 கதர் கிராமக் கைமுறைக் காகித அலகுகளை மீண்டும் திறக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேற்காணும் பொருள் குறித்த திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், பொதுவாக மிகவும் பின்தங்கிய மாவட்டம். அதிலும் குறிப்பாக என்னுடைய வந்தவாசி தொகுதி பின்தங்கிய நிலையில் மட்டும் இல்லை; வறட்சியின் கோரப் பிடியிலே இருக்கிறது. அங்குள்ள மக்களின் வாழ்க்கை ஜீவாதாரம் என்னவென்று சொன்னால், 80 சதவீத மக்கள் மானாவாரி விவசாயத்தை நம்பி வாழக்கூடிய மக்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள்.

[2003 மே 5

ஆனால், அங்கே கைத்தொழிலை ஊக்குவிக்கிற வகையிலே, 15 கைமுறைக் காகித அலகுகள், இயங்கி வந்தன. அதைபோலவே, கீழ்க்கொடுங்காலூர் பனைப் பொருள் உற்பத்தி மையம் ஒன்று இயங்கி, அதுவும் நட்டத்திலே மூடக்கூடிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. மூன்றாவதாக, கோரைப்பாய் உற்பத்தித் தொழிலிலே அங்கு இருக்கக்கூடிய பெருவாரியான மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அதுவும், ஏற்பட்டு இருக்கிற வறட்சியாலே மூலப் பொருளான கோரை கிடைக்காமல், அந்தப் பாய்த் தொழிலும் நசிந்து போய், எந்த வகையிலும் அன்றாட வாழ்க்கைக்கு வேலை கிடைக்காத ஒரு நிலையிலே, அந்த மக்கள் அவதிப்படுகின்ற நிலையில் இருக்கின்றார்கள். இந்நிலையில், இயங்கி வந்த 15 கதர்— கிராம கைமுறைக் காகித அலகுகளை 1999 ஆம் ஆண்டு கடந்த கால அரசு மூடியிருக்கிறது. இதன் மூலம் நூற்றுக்கு மேற்பட்ட கைத்தொழில் தொழிலாளர்கள் தொழிலை இழந்து, பின்னடைந்த நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை இப்போது கேள்விக்குறி ஆக்கப்பட்டிருக்கிறது. எனவே, சுயதொழிலை ஊக்குவிக்கிற கொள்கையைக் கொண்டிருக்கிற நம்முடைய அரசு, அங்கே மூடப்பட்டுக் கிடக்கிற கைமுறைக் காகித அலகுகளை (hand-made paper units) மூடப்பட்டிருக்கின்ற 15 அலகுகளை மீண்டும் திறந்து, அந்தத் தொழிலாளர்களுடைய வாழ்க்கையிலே ஒளி ஏற்றுவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரியத்தின்கீழ் இயங்கி வந்த அனைத்துக் கைமுறைக் காகித அலகுகளும் மிகுந்த நட்டத்தில் இயங்கி வந்ததாலும், தற்போது அரசால் ஆணையிடப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியத்தால், கைமுறைக் காகித அலகுத் தொழிலாளர்களுக்கு அதிகபட்சமான ஊதியம் வழங்க வேண்டிய கட்டாய சூழ்நிலையாலும், தொடர்ந்து அரசுத் துறைகளிடமிருந்து தேவையான நமுனாக்கள் பெறப்படாததாலும், வாரியத்தில் உற்பத்தி செய்யப்படும் கைமுறைக் காகித விலை, வெளிச்சந்தையில் விற்கப்படும் விலையைவிடக் கூடுதலாக இருப்பதாலும், விற்பனை செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாக இருப்பதாலும், அரசாணை நிலை எண் 217, கைத்தறி, கைவினைப்பொருட்கள், துணி நூல் மற்றும் கதர்த் (டி–2) துறை, நாள் 12-11-1999-ன்படி, 15 கைமுறைக் காகித அலகுகள் நிரந்தரமாக மூடப்பட்டுவிட்டன.



2003 மே 5]

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வேறு எங்காவது கைமுறைக் காகித அலகுகள் இப்போது இயங்கி வருகின்றனவா என்பதை அறிய விரும்புவதோடு, அப்படி மூடப்பட்ட இந்த கிராம கைமுறைக் காகித அலகுகளைத் திறக்க முடியவில்லை என்று சொன்னாலும், அதிலே பாதிக்கப்பட்டிருக்கிற தொழிலாளர்களுக்கு, வேறு தொழில் பயிற்சிகள் ஏதாவது கொடுத்து, வேறு தொழிலை அவர்கள் செய்து, தங்கள் வாழ்க்கையை மேற்கொள்வதற்கு இந்த அரசு வேறு மாற்றுத் திட்டங்களை வழங்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சங்கம் மூலம் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, இந்த வழக்கு முடியும்வரை இதைச் செய்ய இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 390, திரு. டி.கே. இராஜா, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**390—**

**சாலையைச் சீர் செய்தல்**

**•19389—திரு. டி.கே. இராஜா:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜவ்வாது மலையிலுள்ள வனத் துறை சாலைகளில் வாகனங்கள் செல்ல முடியாமல் உள்ளதால், அச்சாலைகள் சீர் செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் கோட்டம், ஜவ்வாது மலையில் உள்ள வனச் சாலைகளின் மொத்த நீளம் 147.75 கிலோமீட்டர் ஆகும்.

இதில் 108 கிலோமீட்டர் நீளத்திற்குச் சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் மீதம் உள்ள 39.75 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் பிரதம மந்திரி கிராம சதக் யோஜனா திட்டத்தில் சேர்க்கப்பட்டு, ஊரக வளர்ச்சித் துறை நிதியுதவியுடன் இந்த நடப்பு ஆண்டில் சீர் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே, இன்னும் 39.75 கிலோமீட்டர் சாலைகள் போடப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஜவ்வாது மலை என்பது இந்தியாவிலே பிரசித்தி பெற்ற மலையாகும். இந்தியாவிலேயே மிகச் சிறந்த சந்தனங்களை விளைவிக்கக்கூடிய மலையாகவும், ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய வானிலை ஆராய்ச்சி நிலையத்தைக்கொண்ட மலையாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்ற அந்த ஜவ்வாது மலையிலே ஒன்றேகால் இலட்சம் மலைவாழ் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். மலைவாழ் மக்கள் நலனில் அக்கறைகொண்டிருக்கின்றது இந்த அரசு. என்னுடைய தொகுதியான ஆலங்காயம் ஒன்றியத்திலேயிருக்கின்ற மூன்று பஞ்சாயத்துகள், ஒன்று புதூர்நாடு, புங்கம்பட்டுநாடு, நெல்லிவாசல்நாடு என்கின்ற மூன்று பஞ்சாயத்துகளிலே, புதூர்நாட்டிலேயிருந்து, புங்கம்பட்டுநாடு வரையும், புதூர்நாட்டிலேயிருந்து நெல்லிவாசல் . சிங்காரப்பேட்டை வரையிலான சாலைகள், 1932 ஆம் ஆண்டு வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் போடப்பட்டு, இன்றளவில் முற்றிலுமாகத் துண்டிக்கப்பட்டு, அந்தச் சாலையிலே பஸ்கள் செல்ல முடியாமல், பள்ளிகள் இயங்காமல், அங்கே ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இயங்காமல், அந்த பக்களுக்குத் தேவையான அத்தியாவசியமான அந்தச் சாலைகள் துண்டிக்கப்பட்டு, 407 இரக லாரியில் மட்டுமே செல்லமுடிகின்ற அவல நிலை உள்ளது. எனவே, 25 கிராம மக்கள் அங்கே பாதிக்கப்பட்டு, அவர்களின் உடல்நிலை சரியில்லையென்று சொன்னால் 14 கிலோமீட்டர் டோலி கட்டி, தூக்கிவருகின்ற அவல நிலை; அங்கே விளைகின்ற விளைபொருட்களைக்கூட தலைச்சுமையாகத்தான் கீழே கொண்டு வருகின்ற அவல நிலை. எனவே, இதனைக் கருத்தில்கொண்டு பிரதம மந்திரியினுடைய கிராமச் சாலைத் திட்டத்திலே புதூர்நாடு முதல் சிங்காரப்பேட்டை சாலை வரை, இந்த ஆண்டிலே சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எஞ்சியுள்ள 39.75 கி.மீ. நீளம் உள்ள, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன சிங்காரப்பேட்டை-புதூர்நாடு மற்றும் புதூர்நாடு—காவனூர் ஆகிய இரு சாலைகளும், முன்னுரிமை அடிப்படையில் 2003-2004 ஆம் ஆண்டிற்கான பிரதம மந்திரி கிராம சதக் யோஜனா திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, ஊரக வளர்ச்சித் துறையின் நிதி உதவியுடன் மேற்குறிப்பிட்ட சாலைகளின் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொண்டு, எங்களுடைய புங்கம்பட்டுநாடு முதல் கீழே இருக்கின்ற சிங்கப்பாளையம் வரையிலான மலைச் சாலையை அந்த மலைவாழ் மக்களே அமைத்து இருக்கிறார்கள். ஆனால், அது--reserve forest வனத் துறைக்குச் சொந்தமான இடம். அந்த reserve forest இடத்தை, வனத் துறை, வருவாய்த் துறைக்கு ஒப்படைக்க வேண்டும். வருவாய்த் துறைக்கு ஒப்படைக்க வேண்டுமென்று சொன்னால், வருவாய்த் துறை மூன்று பங்கு நிலங்களை வனத் துறைக்கு ஒப்படைக்க வேண்டும். வருவாய்த் துறையானது மூன்று பங்கு நிலங்களை வனத் துறைக்கு ஒப்படைப்பதற்குத் தயாராக இருக்கிறது. எனவே, சின்னவட்டானூரிலிருந்து சிங்கப்பாளையம் வரையிலான 4 கி.மீ. மலைச் சாலையை வனத் துறை, வருவாய்த் துறைக்கு ஒப்படைத்து, அந்தச் சாலையையும் தார்ச் சாலையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, reserve forest–லே சாலை அமைப்பதற்கு Government of India-விடமிருந்து permission வாங்க வேண்டும். அந்தச் சாலையினுடைய தேவைக்கு ஏற்ப permission வாங்குவதற்கு Government of India-க்கு எழுதி, இந்தச் சாலையை அமைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 391, திரு. ப. அரசன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

[2003 மே 5

**391—**

**மாசுக் கட்டுப்பாடு**

***20797—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி அருகிலுள்ள தனியார் ஈ.ஐ.டி. பாரி சர்க்கரை ஆலையால் அப்பகுதி மக்களின் சுகாதாரம் பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், குறும்பூரில் இயங்கிவரும் ஈ.ஐ.டி. பாரி லிமிடெட் நிறுவனத்தின் சர்க்கரை ஆலை 22-7-2002 அன்று தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் ஆய்வு செய்யப்பட்டது. குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, 23-8-2002 அன்று தொழிற்சாலைக்கு முகாந்திர நோட்டீஸ் வாரியத்தால் அனுப்பப்பட்டது. குறைபாடுகளை நிவர்த்தி செய்யாததால், ஆலையை மூடுவதற்கும், மின் இணைப்பைத் துண்டிப்பதற்கும் 14-11-2002 அன்று வாரியம் ஆணை பிறப்பித்தது. 18-11-2002 அன்று மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. குறைபாடுகளை நிவர்த்தி செய்ய காலவரையறையுடன்கூடிய திட்டத்தைச் சர்க்கரை ஆலை தெரிவித்ததால் மூடுதல் உத்தரவை 25-11-2002 அன்று தற்காலிகமாக வாரியம் நிறுத்தி வைத்து, மின் இணைப்பு மீண்டும் வழங்கப்பட்டது. வாரியம் அறிவுறுத்தியபடி சர்க்கரை ஆலை, அதனுடைய குறைகளை நிவர்த்தி செய்ததால், இப்பொழுது சர்க்கரை ஆலை நல்ல முறையில் இயங்கிக்கொண்டிருக்கிறது. எந்தவித சுற்றுச் சூழலும் அங்கே பாதிக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2003 மே 5]

*முற்பகல் 10-50*

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் போட்டதற்குப் பின்னாலே, இந்த ஆலையின் நிர்வாகத்தினர் என்னை வந்து பார்த்தார்கள்; சந்தித்தார்கள். அந்த பாரி சர்க்கரை ஆலையின் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பதைத் தடுப்பதற்காக என்னென்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறோம் என்பதை விளக்கிச் சொன்னார்கள். அதற்குப் பிறகு, சுற்றுச்சூழல் துறையினுடைய அதிகாரிகளும் என்னை வந்து பார்த்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்றாலும், ஒவ்வொரு தடவையும் கேள்வி போட்டு, சுற்றுச்சூழல் பாதிப்பைத் தடுக்க முடியாது. ஆகவே, மாதம் ஒரு முறை கட்டாயமாக சுற்றுச்சூழல் துறையினர்— ஏனென்றால், உயரமான புகைப்போக்கியின் மூலமாகப் புகையை வெளியே அனுப்புகிறார்கள். அது 10 அல்லது 15 கிலோ மீட்டர்கூட அந்தப் புகையிலே இருக்கிற துகள்கள் செல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, மாதம் ஒருமுறை கட்டாயமாக சுற்றுச் சூழல் துறையினர் அந்த ஆலையினுடைய—அந்த ஆலையினாலே மக்கள் பாதிக்கப்படாமல் இருக்கிறார்களா என்பதை அறிவதற்கு ஆய்வு செய்வார்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேயிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்று மாசுபடுவதையும், நீர் மாசுபடுவதையும், மாசுக் கட்டுப்பாடு வாரியம் அடிக்கடி கண்காணித்துக்கொண்டிருக்கிறது. எந்தெந்த இடத்தில் தொழிற்சாலைகள் மாசு ஏற்படுத்துகின்றனவோ, தகவல் தெரிந்தவுடன் அவற்றின்மீது நடவடிக்கை எடுக்கிறோம். இப்போது இந்தியாவிலேயே சிறப்பாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்தான், அம்மா அரசினுடைய மாசுக் கட்டுப்பாடு வாரியம்தான் சிறப்பாகச் செயல்படுகிறது என்று எல்லோரும் கூறிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற கருத்தை, அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 392, திரு. அ. சிவபெருமாள், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

[2003 மே 5

392—

குடியிருப்புகள்

***15142— திரு. அ. சிவபெருமாள்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக, தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் வாடகை அல்லது தவணை முறையில் பணம் செலுத்தும் குடியிருப்புகள் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம், தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில், வாடகை அல்லது தவணை முறையில் பணம் செலுத்தும் குடியிருப்புகள் கட்டும் திட்டம் ஏதும் அரசினுடைய பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. அ. சிவபெருமாள், இருக்கையில் இல்லை. வினா எண் 393, திரு. சி. சிவசாமி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

393—

திருப்பூரில் குடியிருப்புகள்

***20705— திரு. சி. சிவசாமி:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் குடிசை மாற்று வாரியம் மூலம் புதிய குடியிருப்புகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?



2003 மே 5]

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இல்லை.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரம், பின்னலாடைத் தொழிலுக்குப் பெயர் பெற்ற ஒரு தொழில் நகரமாகும். அந்தத் தொழில் நகரத்தில் தொழில் புரிவதற்காக, தமிழகத்திலிருந்தும், பல பகுதிகளிலேயிருந்தும் மக்கள், அந்த திருப்பூர் நகரத்தை நோக்கி வந்த வண்ணம் இருக்கின்றனர். அவர்களுக்கெல்லாம், வாடகை வீடு கிடைப்பதற்குக்கூட, கடுமையான வாடகை இருக்கின்ற காரணத்தால், குடிசைகளை அமைத்துக் குடியிருந்து வருகின்றனர். அவர்கள் குடிசைகளை அமைத்துக் குடியிருந்து வருகின்ற காரணத்தினால் போக்குவரத்து நெரிசல் மற்றும் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே, இந்தப் பின்னலாடைத் தொழிலினுடைய முன்னேற்றத்திற்காக, மாண்புமிகு அம்மா அவர்கள் தொழிற்சாலைகளுக்கும், பொது மக்களுக்குமாக மூன்றாவது குடிநீர்த் திட்டத்தையும், புதிய தொழில் பூங்காவையும் அமைத்து, இந்தப் பின்னலாடைத் தொழிலை ஊக்குவிக்கின்ற இந்தக் காலகட்டத்தில், அந்தத் தொழிற்சாலைகளில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுடைய வசதிக்காக, அவர்களுடைய குடியிருப்புகளுக்காக புதிய குடியிருப்புகளை குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகக் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதன் அடிப்படையிலே, கடந்த 2002-2003 ஆம் ஆண்டில் மத்திய, மாநில அரசுகள் பங்குகொள்கின்ற வால்மீகி அம்பேத்கர் திட்டத்திலே அந்தப் பகுதியிலே 150 வீடுகள் கட்டுவதற்கான பரிந்துரைகளைப் பெற்று அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அந்தப் பகுதியிலே இருக்கின்ற பயன்பெறுவோர் ஏறக்குறைய 15 பேர்கள் தான், அந்தப் பயன் பெறுவதற்குரிய 10 சதவிகித பணத்தைக் கட்டியிருக்கிறார்கள். அந்தவகையிலே, அது கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. தற்போது 7 பயன்பெறுவோர் பணம் கட்டியிருக்கிறார்கள். அந்த வகையிலே, அதையும் கட்டுவதற்கான நடவடிக்கை எடுத்து, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மற்றபடி குடிசை மாற்று வாரியத்தின் மூலம் தற்போதைய

[2003 மே 5

நிதிநிலைமைக்கேற்றாற்போல், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துகள் பரிசீலிக்கப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-55*

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரிலே உள்ள முதலிபாளையம் என்கின்ற கிராமத்தில் வீட்டு வசதித் துறையின் சார்பாக இடங்கள் எடுக்கப்பட்டு, வீட்டு மனைகள் பிரிக்கப்பட்டு, அந்த வீட்டு மனைகள் தற்போது இன்னும் விற்கப்படாத நிலையில் இருக்கின்றன. அவை விற்கப்படாததற்கு, அந்த வீடுகளினுடைய விலைமதிப்பு மிகவும் அதிகமாகிவிட்ட காரணத்தினால், தனியாருடைய வீட்டு மனை விலைகளைக் காட்டிலும், இவற்றின் விலை மிகவும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அந்த வீட்டு மனைகள் விற்கப்படுவதில்லை. மேலும் உடனடியாக முழுப் பணத்தையும் கட்டி வீட்டு மனைகளைக் கொள்முதல் செய்ய வருகின்றபோது அரசு அதற்குரிய பத்திரத்தைக் கொடுக்க முன்வந்தால், நேரடியாகவே பணம் கட்டி கொள்முதல் செய்வதற்குக்கூட சிலர் தயாராக இருக்கின்றார்கள். எனவே, திருப்பூர், முதலிபாளையத்தில் விற்கப்படாமல் கிடக்கின்ற அந்த வீட்டு மனைகளை மார்கெட் நிலவரத்தை அனுசரித்து, விலைகளைக் குறைத்து விற்க வீட்டு வசதித் துறையின் மூலமாக அந்த வீட்டு மனைகள் விற்கப்படுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர், முதலிபாளையத்திலே வீட்டு வசதி வாரியத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கின்ற மனைகளின் விலை உயர்வாக இருக்கின்ற காரணத்தினால் விற்கவில்லை என்ற கருத்துகள் அரசினுடைய பரிசீலனைக்கு வந்துள்ளன. ஆகவே, அந்தப் பகுதியினுடைய விலை மதிப்புக்கு ஏற்றாற்போல அதைச் சரி செய்வதற்காக இன்றைக்கு வீட்டு வசதி வாரியத்தினுடைய இந்த நிலைகளைச் சீர் செய்வதற்காக ஒரு உயர் மட்டக் கமிட்டி அமைக்கப்பட்டு இருக்கிறது. அந்த கமிட்டியில் இந்தப் பகுதியினுடைய நிலையும் பரிசீலனையில் உள்ளது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற கருத்தை ஏற்று, அதைச் செய்வதற்கு அரசு ஆவன செய்யும் என்று உறுதி கூறுகின்றேன்.



2003 மே 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *394*, திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**394—**

**பால் விற்பனை**

***3327—திரு. கா.பூ. முனுசாமி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பால் கொள்முதலில் வாரம் ஒரு நாள் விடுமுறையாக உள்ளதை ரத்து செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பால் கொள்முதல் செய்வதற்கு விடுமுறை நாட்களே இல்லை. வாரத்தில் 7 நாட்களும் தொடர்ச்சியாக பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருவ மழை முடிந்த பின்பு, அக்டோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் அதிகமான பால் வருகின்ற காரணத்தினால், வாரம் ஒரு முறை விடுப்பு இருந்தது. இப்போது வறட்சியின் காரணமாக அந்தச் சங்கங்கள் பாலை வாங்கிக் கொண்டிருக்கின்றன. இப்படி பருவ மழைக்குப் பின்பாக வருகின்ற அந்த 4 மாத காலத்தில் தனியார் கொள்முதல் நிலையங்களும் அதேபோல நம்முடைய அரசுத் துறை சங்கங்களும் அந்த பாலை வாங்குவதில்லை. எனவே, ஆண்டு முழுவதும், அதாவது மழைக்காலத்திற்கு பின்பாக வருகின்ற அந்த அதிகப்படியான பாலையும் தொடர்ந்து வாங்குவதற்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பால் வாங்க விடுமுறை விடுவதாக இதுவரை அரசுக்கு எந்தத் தகவலும் வரவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பகுதி என்று வருங்காலத்தில்கூட குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், அதற்குரிய தகவலைக் கேட்டறிந்து விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் இருக்கின்ற பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் மழைக் காலத்திற்கு பின்பாக 20 நாட்களுக்கு, 15 நாட்களுக்கு, 7 நாட்களுக்கு சுற்றுச் சுழற்சி முறையில் ஒவ்வொரு பகுதியாக லாரிகளே அனுப்பப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இதற்கு என்ன காரணம் என்று சொன்னால், 1½ இலட்சம் லிட்டர் பால் வருகின்ற இடத்தில் 2 இலட்சம் லிட்டர் பால் வருகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பாலைப் பதப்படுத்துவதற்கோ, அதை மேலும் பவுடராக ஆக்குவதற்கோ உரிய சூழ்நிலை இல்லாத காரணத்தால், அந்தப் பாலை நீக்கி வைத்திருக்கிறார்கள். எனவே அந்தக் காலக்கட்டங்களில்--ஏனென்று சொன்னால், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துகின்ற அரசு. பால் நிச்சயமாக கிராமப் புறத்திலே ஒரு மிகப் பெரிய பொருளாதாரத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. எனவே,--ஆண்டு முழுவதும் அந்தப் பாலை கொள்முதல் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரை பால் எந்த அளவுக்கு அதிகமாக வந்தாலும்கூட, சென்னை நகரத்தினுடைய பால் தேவையைப் பொறுத்து, அங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற பாலின் அளவுக்கு ஏற்ப கூடுதலாகவும் எடுத்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதனால் அங்கே பால் அதிகமாக வந்தால் அதை வாங்க மறுக்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே, உரிய நேரத்தில் இப்படிப்பட்ட தகவல்களை எங்களுக்கு எடுத்துச் சொன்னால், அது எந்தப் பகுதி, என்ன காரணத்தினால், வாகனப் பழுது காரணமாகவா அல்லது என்ன காரணத்தினால் அது மறுக்கப் படுகிறது என்பதை எங்களுக்குச் சொன்னால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதோடு சில பகுதிகளில் அவர் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, மழைக் காலங்களில் தனியாருக்குப் பால் வழங்கிக் கொண்டு இருப்பவர்கள் எல்லாம் திடீரென்று அந்தத்





தனியார்கள் பால் வாங்குவதை நிறுத்துகிற காரணத்தினால் அவர்களிடம் இருக்கிற அந்த உபரி பாலை சங்கங்களுக்குக் கொடுப்பதற்கு குறுக்கு வழியிலே..

*முற்பகல் 11—00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சருடைய பதில் முடிகிற வரை வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** அந்தச் சங்கத்தைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்ற காரணத்தால் அந்த நேரத்திலே அதைக் கட்டுப்படுத்துவதற்காக தனியார் சங்கங்களுக்குப் பாலை வழங்கிக்கொண்டு இருந்தோரிடத்தில் பாலை எடுப்பதற்கு சில கட்டுப்பாடு, விதிமுறை விதிக்கப்பட்டு இருக்கிறது. அதற்கு உட்பட்டு தகவல்களை உரிய நேரத்தில் எங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவார்களேயானால் அதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் கொள்முதலைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். பாலை அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் தமிழகத்தில் oxytocin என்ற ஊசியைத் தவறாகப் பயன்படுத்துவதாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. மாடு கறவையாகிறபோது அதிக பால் கொடுக்க வேண்டும் என்பதற்காக அந்த ஊசியைப் பயன்படுத்துவதாகச் பத்திரிகைகளின் வாயிலாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றனவே, அப்படிப் பால் சுரப்பதற்காகவே அந்த ஊசியைப் பயன்படுத்துவதாகவும், அப்படிச் சுரக்கச் செய்கிறபோது அந்தக் கால்நடைகளுடைய இரத்தம் உறிஞ்சப்பட்டு அது பாலாக மாறுகிறபோது அந்தப் பாலை அருந்துகிற மக்களுக்குப் பல்வேறு நோய்கள் வருவதற்கான அபாயங்கள் இருப்பதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. எனவே நம்முடைய பால் வளத் துறை இப்படிப்பட்ட காரியங்களைத் தடுப்பதற்கான முயற்சியை எடுத்திருக்கிறதா, எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல எந்தப் பகுதியிலும் பால் அதிகம் கறக்க வேண்டும் என்பதற்காக நம்முடைய துறையின் சார்பிலே இருக்கிற

[2003 மே 5

மருத்துவர்கள் யாரும் அப்படிப்பட்ட யோசனையைச் சொல்லவில்லை. மாடுகளைச் சரியாகப் பராமரிப்பதற்குத்தான் நம்முடைய மருத்துவப் பிரிவு பயன்படுத்தப்படுகிறதே தவிர இதுபோன்ற தகவல் இதுவரை அரசுக்கு எந்தப் பகுதியிலிருந்தும் வரவில்லை. குறிப்பிட்டு எந்தப் பகுதியிலிருந்து, எந்தச் சங்கத்திலிருந்து இதுபோன்ற அறிவுரைகள் வழங்கப்படுகின்றன என்று சொல்வார்களேயானால் அதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம். (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர்.பி. என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மயூரணி கொலை சம்பந்தமாக அறிவிப்புக் கொடுத்திருந்தோம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், அரச்சலூர் பேரூராட்சிப் பகுதியில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. எஸ்.ஆர்.பி. அவர்கள், காலையிலே என்னிடத்திலே கொடுத்திருக்கிறீர்கள். நாளை அதுபற்றி விவரம் வந்தால் எடுத்துக்கொள்ளச் சொல்கிறேன். (குறுக்கீடு) எல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கிறது. திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) நான் பார்த்துவிட்டுச் சொல்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மயிலாடுதுறை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையும் எஸ்.ஆர்.பி. அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.



2003 மே 5]

### (ஆ) அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பயிற்சி மருத்துவர்கள் போராட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி மாணவர்கள்...(குறுக்கீடு)

**திரு. தி. வேல் முருகன்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் தலைவர் பேசிக் கொண்டிருக்கிறார், உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மருத்துவக் கல்லூரி மாணவர்கள், பயிற்சி மருத்துவர்களுடைய போராட்டம் நீடித்துக் கொண்டிருக்கிறது. மருத்துவமனையிலே நோயாளிகள் எல்லாம் பாதிக்கப்பட்டு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நாளை எடுத்துக் கொள்ளலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) நாளை எடுத்துக்கொள்ளலாம்.

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தூத்துக்குடி மாவட்டம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே இரண்டு முறை சொல்லிவிட்டீர்கள். என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அதையெல்லாம் எப்போது எடுத்துக்கொள்ள முடியும் என்று சொல்கிறேன், அறைக்கு வாருங்கள் பேசலாம்.

### (இ) காவிரி நதிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க பேச்சுவார்த்தைக்கு அழைப்பு

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் திரு. எஸ்.எம். கிருஷ்ணா அவர்கள் காவிரி நதிநீர்ப் பிரச்சினையிலே தமிழக அரசு பேசினால், நான் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தயாராக இருக்கிறேன் என்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிக்கை வருகிறது, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

### (ஈ) பிரதமர் பங்கேற்ற சர்வதேச விமான நிலைய வளாகப் புதிய கட்டடத் திறப்பு விழாவில் மாண்புமிகு முதல்வர் கலந்துகொள்ளாதது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மீனம்பாக்கம் பேரறிஞர் அண்ணா சர்வதேச விமான நிலையத்திலே சுமார் 150 கோடி ரூபாய் செலவிலே கட்டடங்கள் கட்டப்பட்டு, அதை நேற்று அதாவது, 4-5-2003 ஆம் நாள் மாலை நமது பாரதப் பிரதமர் மாண்புமிகு திரு. வாஜ்பாய் அவர்கள் திறந்து வைத்திருக்கிறார்கள். அந்தத் திறப்பு விழாவிலே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர்கள் க்லந்துகொள்ளவில்லை என்று இன்றைக்கு-பல்வேறு காரணங்களைப் பல பத்திரிகைகள்--பல்வேறு விதமாக செய்திகளை வெளியிட்டிருக்கின்றன. அதனுடைய உண்மையான தகவலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தெரிவிப்பார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11-05*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம், சர்வதேச விமான நிலையத்தில் கட்டப்பட்ட புதிய கட்டடங்களை மாண்புமிகு பாரதப் பிரதமர் திறந்து வைத்த விழாவில் நானும் கலந்துகொள்வதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் நான் கலந்துகொள்ளவில்லை. இதைப்பற்றி பல பத்திரிகைகளில் பலவாறாகச் செய்திகள் வந்துள்ளன. இந்த விழாவில் நான் ஏன் கலந்துகொள்ளவில்லை என்பதற்கான உண்மையான காரணங்களை விளக்குவது அனைவருக்கும் நல்லது என்று கருதுகிறேன். ஆகவே, விளக்கம் தர நான் இப்போது முற்படுகிறேன். நேற்றைய விழாவில் மாநில முதலமைச்சருக்குத் தரவேண்டிய இடம் தரப்படவில்லை. மாநில முதலமைச்சருக்குத் தரப்படவேண்டிய மரியாதை மறுக்கப்பட்டது. அதனால்தான் அந்த விழாவில் நான் கலந்துகொள்ளவில்லை.





முதலில் இந்தப் புதிய கட்டடங்கள் திறப்பு விழா, தமிழ்ப் புத்தாண்டு தினமான ஏப்ரல் 14 ஆம் தேதி அன்று நடைபெறும் என்று தெரிவித்தார்கள். அதில் மாண்புமிகு பாரதத்தின் துணைப் பிரதமர், உள் துறை அமைச்சர் திரு. எல்.கே. அத்வானி அவர்கள் கலந்துகொள்வார்கள் என்றும் தெரிவித்தார்கள். இந்தப் புதிய கட்டடத்திற்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயர் சூட்டப்படுகிறது என்று மத்திய அரசே தெரிவித்தது. என்னையும் இந்த விழாவில் கலந்துகொள்ளவேண்டும் என்று அழைத்தார்கள். நான் சரி என்றேன். ஆனால் அதன் பின்னர், சில நாட்கள் கழித்து இந்த விழா இப்போது நடைபெறவில்லை, ஒத்திவைக்கப்படுகிறது என்றார்கள். அதற்கும் சரி என்றேன். திடீரென்று சில நாட்களுக்கு முன்பு, ஒரு வாரம் அவகாசம்கூட இல்லாமல், இந்த விழா நடைபெறுகிறது என்றும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களே, இந்தக் கட்டடங்களைத் திறந்து வைக்க வருகிறார் என்றும் தெரிவித்தார்கள். இதுகுறித்து நம்முடைய தமிழக அரசின் Public Department-ல் இருந்து எனக்கு ஒரு குறிப்பு வந்தது. 4 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை இந்தத் திறப்பு விழாவிற்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் வருகிறார். முதலமைச்சர் விமான நிலையத்திற்கு வந்து பிரதமரை வரவேற்க வேண்டும். பின்னர், பிரதமரை வழி அனுப்ப வேண்டும். விழாவை முடித்துக்கொண்டு, பிரதமர் உடனடியாக டெல்லிக்குப் புறப்பட்டுச் செல்கிறார். ஆகவே விமான நிலையத்தில் பிரதமரை வரவேற்கவும் வழி அனுப்பவும் முதலமைச்சர் வரவேண்டும் என்று Public Department-ல் இருந்து எனக்குக் குறிப்பு வந்தது. நான் தெளிவுபடுத்திக்கொள்வதற்காகக் கேட்டேன். அப்படியானால் விழாவில் கலந்துகொள்ள என்னை அழைக்கவில்லையா என்று கேட்டேன். அதற்குப் பதில் இல்லை என்றுதான் வந்தது. முதலமைச்சருக்கு அழைப்பு இல்லை. பிரதமர் 4 ஆம் தேதி அன்று சென்னை வருகிறார். இந்த விழாவில் கலந்துகொள்கிறார் என்ற தகவல் மட்டும்தான் தமிழக அரசிற்கு வந்துள்ளது. ஆகவே, முதலமைச்சர் பிரதமரை வரவேற்கவும், வழி அனுப்பவும் விமான நிலையத்திற்குச் செல்ல வேண்டும் என்றார்கள். அதற்கும் நான் சரி என்றேன். அதன் பின்னர் என்ன நடந்ததோ தெரியவில்லை.

விழா நடைபெறுவதற்கு 3 நாட்களுக்கு முன்னதாக திடீரென்று ஒரு Fax message வந்தது. மத்திய Civil Aviation அமைச்சரிடமிருந்து ஒரு Fax கடிதம் வந்தது. அந்த விழாவில் நானும் கலந்துகொள்ள வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் கோரப்பட்டு இருந்தது. வேறு விவரங்கள் அந்தக் கடிதத்தில் இல்லை. அதற்கும் நான் சரி என்றேன். இந்த விழா

4 ஆம் தேதி, அதாவது நேற்று நடைபெறுவதாக இருந்தது. ஆனால் எனக்கு அழைப்பிதழ் 2 ஆம் தேதி அன்றுதான்—2 ஆம் தேதி மாலைதான்—வழங்கப்பட்டது. அப்போது பார்க்கும்போது தெரிந்தது புரட்சித் தலைவர் பெயர் அந்தக் கட்டடங்களுக்கு சூட்டப்படுவதாக முன்பு தெரிவித்திருந்தார்கள். அது மாற்றப்பட்டு இருந்தது. இப்போது Anna International Terminal Phase-II என்று பெயர் வைத்திருந்தார்கள். மேலும் இந்த விமான நிலையம் குறிப்பாக இந்த புதிய 'டெர்மினல்' ஆலந்தூர் சட்டமன்ற தொகுதியில் வருகிறது. ஆனால் ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினரான அமைச்சர் திருமதி வளர்மதி அவர்களின் பெயர் அந்த அழைப்பிதழில் இடம் பெறவில்லை. மாறாக இந்த விழாவிற்குச் சம்பந்தமே இல்லாத தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரின் பெயர் குறிப்பிடப்பட்டு இருந்தது. காரணம் அவர் தி.மு.க.-வைச் சேர்ந்த உறுப்பினர் என்பதால். இது நியாயமா என்பதை மாண்புமிகு உறுப்பினர்களையே சிந்திக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இதையும் நான் பெரிதுபடுத்தவில்லை.

*முற்பகல் 11-10*

பிரதமர் வருகிறார், நாம் விழாவில் கலந்துகொள்வோம் என்றுதான் இருந்தேன். ஆனால் இந்த விழா நடைபெறுகின்ற 4 ஆம் தேதிக்கு முதல் நாள், அதாவது 3 ஆம் தேதி இரவு திடீரென்று பிரதமரின் அலுவலகத்திலிருந்து ஒரு Fax message வந்தது. அதில், விழா மேடையில் seating arrangements பற்றிய விவரங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. அதாவது விழா மேடையில் இருக்கைகள் எவ்வாறு போடப்பட்டிருக்கும், யார் யார் எங்கே அமர வேண்டும் என்ற விவரங்கள் எல்லாம் 3 ஆம் தேதி இரவு பிரதமர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதில் தெளிவாக, மாநில முதலமைச்சராகிய நான் மேடையின் ஓர் ஓரத்தில்தான் அமர வேண்டும் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது. பிரதமரின் பக்கத்தில் நான் அமர முடியாது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த விழாவிற்குச் சம்பந்தமே இல்லாத மத்திய அமைச்சர் டி.ஆர். பாலுதான் பிரதமரின் பக்கத்தில் அமருவார் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதாவது, பிரதமரின் இடதுபுறத்தில் மேதகு ஆளுநர் அவர்களும், பிரதமரின் வலது புறத்தில் டி.ஆர். பாலு அவர்களும் அமருவார்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. முதலமைச்சர் ஓர் ஓரத்தில் அமர வேண்டுமென்றுதான் குறிப்பிடப்பட்டு இருந்தது. இதெல்லாம் தி.மு.க.வின் தலையீட்டினால்தான் நிகழ்ந்தது என்பதுதான் உண்மை. தி.மு.க., மத்திய அரசுக்கு ஆதரவு கொடுத்து வருவதால், அவர்கள் பிரதமருக்கு நெருக்கடி கொடுத்திருக்கிறார்கள். இதுவரை



இப்படி ஒரு நிகழ்வினை நாம் கேள்விப்பட்டதே இல்லை. ஒரு மாநில முதலமைச்சருக்குத் தரப்பட வேண்டிய மரியாதை தந்தாக வேண்டும். திரு. கருணாநிதியின் தூண்டுதலின் பேரில், டி.ஆர். பாலுவின் தலையீட்டினால், முதலில் இந்த International Terminal-க்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.—இன் பெயர் சூட்டப்பட இருந்தது, அது அகற்றப்பட்டது, மாற்றப்பட்டது. அடுத்தபடியாக, நான் பிரதமர் அருகில் அமர முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

திரைமறைவில் டி.ஆர். பாலு இத்தனை வேலைகளையும் செய்துவிட்டு, அதன் பிறகு நேற்று பத்திரிகையாளர்களிடம், முதலமைச்சர் இந்த விழாவில் கலந்து கொள்ளாதது துரதிருஷ்டவசமானது, கண்டனத்திற்குரியது என்றெல்லாம் பேசியிருக்கிறார் என்றால், இதை என்னவென்று சொல்வது?

நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன், ஜெயலலிதா என்ற தனிப்பட்ட பெண்மணிக்கு மரியாதை கொடுக்க வேண்டுமென்று அவசியமில்லை. அதை நான் எதிர்பார்க்கவும் இல்லை. ஆனால் மாநிலத்தின் முதலமைச்சர் என்ற பொறுப்புக்கும், பதவிக்கும் உரிய மரியாதை கொடுத்தாக வேண்டும். ஜெயலலிதா என்ற தனிப்பட்ட பெண்மணியை எங்கே வேண்டுமானாலும் அமர வைக்கலாம். ஆனால் மாநிலத்தின் முதலமைச்சர், பிரதமரின் பக்கத்தில்தான் அமர வேண்டும், அமர வைக்கப்பட வேண்டும். எந்த மாநிலத்திலுமே, ஓர் அரசு விழா நடைபெறுகின்றபோது, குறிப்பாக மத்திய அரசு நடத்துகின்ற ஒரு விழா நடைபெறுகின்றபோது, அந்த விழாவில் மாண்புமிகு பாரதப் பிரதமர் கலந்து கொள்கிறார் என்று சொன்னால், அந்த மாநிலத்தின் முதலமைச்சர் யாராக இருந்தாலும், முதலமைச்சர் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும், பிரதமருக்குப் பக்கத்தில் முதலமைச்சரை அமர வைப்பதுதான் நடைமுறை. அதுதான் மரபு. இதுவரை இந்த நடைமுறைதான், இந்த மரபுதான் தவறாமல் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆகவே, முதலமைச்சரே பிரதமரின் பக்கத்தில் அமர முடியாது, ஓர் ஓரத்தில்தான் அமர வேண்டும் என்று கூறுவது, இதுவரை நாம் கேள்விப்படாத ஒன்றாக இருக்கிறது. ஆகவே, அந்த விழாவில், அந்த விழா மேடையில் முதலமைச்சராக இருக்கின்ற எனக்குத் தரப்பட வேண்டிய இடமும், தரப்பட வேண்டிய மரியாதையும் மறுக்கப்பட்டதால், இந்த விழாவில் நான் கலந்து கொள்வதில்லை என்று முடிவு எடுத்தேன். அதேநேரத்தில், பிரதமர் அவர்கள் இந்த மாநிலத்திற்கு வரும்போது, வருகை தரும்போது,

மாநிலத்தின் முதலமைச்சர் என்கின்ற முறையில் விமான நிலையத்திற்குச் சென்று, பிரதமரை வரவேற்க வேண்டியது என்னுடைய கடமையாகும்; மாநில முதலமைச்சரின் கடமையாகும். அந்தக் கடமையை நான் செவ்வனே செய்தேன்.

*முற்பகல் 11-15*

தி.மு.க.வுக்கு மத்திய அரசிடம், குறிப்பாக பிரதமரிடம் இவ்வளவு செல்வாக்கு இருக்கிறபோது, அந்தச் செல்வாக்கைத் தவறான வழிகளில் என்னை அவமானப்படுத்துவதற்காகவும், இந்த அரசுக்குத் தொல்லைகள் தருவதற்காகவும் மட்டுமே பயன்படுத்துகிறார்கள் என்பது வேதனைக்குரிய விஷயமாகும். இந்தச் செல்வாக்கை தி.மு.க. ஆக்கபூர்வமான வழிகளில் ஏன் பயன்படுத்தக்கூடாது? இந்த மாநிலத்திற்கு இன்னும் அதிகமான வறட்சி நிவாரண நிதியை மத்திய அரசு வழங்க வேண்டும், இந்த மாநிலத்திற்கு இன்னும் அதிகமான அரிசியை வழங்க வேண்டும், காவிரித் தண்ணீரை மத்திய அரசு பெற்றுத் தரவேண்டும் என்றெல்லாம் தி.மு.க. தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, ஏன் மத்திய அரசிடம் வற்புறுத்தக்கூடாது? ஏன் பிரதமர் அவர்களை வற்புறுத்தக்கூடாது? (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அதைச் செய்யமாட்டார்கள். ஏனென்றால், இந்த மாநிலத்தின் நலனில், இந்த மாநில மக்களின் நலனில், இந்த மாநிலத்தின் வளர்ச்சியில் தி.மு.க.-வினருக்கு அக்கறை இல்லை. அவர்களுடைய நோக்கமெல்லாம் குறுகிய அரசியல் கண்ணோட்டத்தோடு காழ்ப்புணர்ச்சியோடு, என்னைப் பழி வாங்கவேண்டும்; இந்த அரசுக்குத் தொல்லை தரவேண்டும்; என்னை அவமானப்படுத்த வேண்டும் என்பதாகத்தான் இருக்கிறதே தவிர, அவர்களுக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் அக்கறை இல்லை. ஆகவே, மாநில முதலமைச்சருக்குத் தரப்பட வேண்டிய இடமும், மரியாதையும் மறுக்கப்பட்டதால்தான் நேற்றைய விழாவில் நான் கலந்துகொள்ளவில்லை என்பதைத் தெளிவுபடுத்தி அமைகிறேன்.

## 3. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்

### (அ) சார்ஸ் நோய் எதிர்ப்பு சக்தியை ஊக்குவிக்கும் மருந்து குறித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 110-ன்கீழ் 3 அறிக்கைகளை வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி





கேட்டிருக்கிறார்கள். அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சார்ஸ்' என்னும் கடுமையான மூச்சுத் திணறல் நோய் தற்போது உலகை மிரட்டி வருகிறது. இந்நோய் பரவுவதால் பல நாடுகள் கவலையில் ஆழ்ந்துள்ளன. உலகச் சுகாதார ஆய்வு நிறுவனமும் இந்நோயைத் தடுக்க அனைத்து சோதனைகளையும் முடுக்கி விட்டுள்ளது. இன்னும் சில மாதங்களில் இதற்கு மருந்தைக் கண்டுபிடித்துவிடலாம் என்று அந்த அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது. அதேசமயம் இந்தியாவிலும் சார்ஸ் நோயைத் தடுக்கவும், அந்த வைரஸ் நுண்கிருமிகளைக் கண்டுபிடித்து அழிக்கவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது பரவி வரும் சார்ஸ் நோய்க்கு இயற்கை மருத்துவ முறைகளை சிங்கப்பூரில் பயன்படுத்துகிறார்கள்.

இந்த சார்ஸ் நோய்க்கு துளசி, மஞ்சள், மிளகு ஆகியவற்றை அருந்துவது நல்ல பலனைத் தருவதாகக் கூறுகிறார்கள். இரண்டு டம்ளர் தண்ணீரை ஒரு பாத்திரத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். துளசிச் செடியை வேருடன் பிடுங்கி, முழு சமூலத்தையும் நன்றாக நசுக்க வேண்டும். அதனை அந்தத் தண்ணீரோடு கலக்கவேண்டும். இத்துடன் ஒரு முழு டீஸ்பூன் அளவுக்கு சுத்தமான மஞ்சள் தூளைக் கலக்கவேண்டும். ஒரு முழு டீஸ்பூன் அளவு மிளகு எடுத்து பவுடராகப் பொடி செய்து, அதனை அந்தத் தண்ணீரோடு சேர்க்கவேண்டும். இரண்டு டம்ளர் தண்ணீருடன் சேர்ந்த அந்தக் கலவையை அரை டம்ளர் அளவுக்கு இளம் தணலில் சுண்ட வைக்கவேண்டும். பிறகு அந்தக் கஷாயத்தை காலை, மாலை இரு நேரங்களிலும் உணவுக்கு முன் அருந்தினால் சார்ஸ் நோய்க் கிருமிகளைக் கட்டுப்படுத்துகிறது. இதைத் தொடர்ந்து அருந்தும்போது, சார்ஸ் நோயாளிகளுடைய காய்ச்சல் குறைகிறது, மூச்சுத் திணறலும் குறைகிறது என்று சிங்கப்பூரில் இதனைப் பயன்படுத்தும் மருத்துவர்கள் கண்டு அறிந்துள்ளார்கள். சிங்கப்பூரைச் சார்ந்த சிலர் மஞ்சளையும், துளசியையும் சார்ஸ் நோயாளிகளுக்குப் பயன்படுத்துவதற்காகத் தமிழகத்திலிருந்து பெறுகிறார்கள். நம் நாட்டின் சித்தா மற்றும் ஆயுர்வேத மருத்துவ முறைகளில் துளசி, மஞ்சள், மிளகு ஆகியவற்றில் வைரஸ் நுண்கிருமிகளை அழிக்கக்கூடிய மூலப் பொருட்கள் உள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

According to the Siddha and Ayurvedha system of Indian Medicine, Thulasi, Turmeric and Pepper contain anti-viral active ingredients.

அதைப்போலவே, பப்பாளியையும் சார்ஸ் நோய்க்கு மருந்தாகப் பயன்படுத்தலாம். பப்பாளியில் ஏராளமான anti-oxidants எனப்படும் பொருள் உள்ளது. இது உயிரணுக்களுக்குப் புத்துணர்வைத் தந்து எதிர்ப்பாற்றலை ஊக்குவிக்குகிறது. சார்ஸ் நோயினால் ஏற்படும் பாதிப்பு, எதிர்ப்பு சக்தி இழப்பே ஆகும். எனவே பப்பாளியை உண்டு வந்தால், அது எதிர்ப்பு சக்தி ஊக்குவிப்பானாகச் செயல்பட்டு உடலில் எதிர்ப்பாற்றலை அதிகப்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### (ஆ) காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் நடுவர் மன்றமும், உச்ச நீதிமன்றமும் மட்டுமே நியாயமான தீர்ப்பு வழங்க முடியும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** இரண்டாவது அறிக்கை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக முதலமைச்சர் *1-5-2003* அன்று திருப்பதியில் பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேசும்போது காவிரி நடுவர் மன்றத்திற்கு வெளியே காவிரி நதிநீர் தாவாவைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ளவும், அண்டை மாநிலங்களுடன் நல்லுறவு வைத்துக்கொள்ளவும் ஆயத்தமாக இருப்பதாகத் தெரிவித்துள்ளார். இந்த அறிக்கை பெரும்பாலான பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது.

முற்பகல் *11-20*

இந்தச் சந்தர்ப்பத்தில், நடுவர் மன்றத்தை நிறுவுவது குறித்த *4-5-1990* தேதியிட்ட தனது ஆணையில் உச்ச நீதிமன்றம் கூறியுள்ள சில கருத்துகளை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். "நான்கு முதல் ஐந்தாண்டு காலத்திற்குள் 26 முறை மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மற்றும் இந்த நீதிமன்றம் செய்திருக்கும் பல தள்ளிவைப்புகள் ஆகியவை இந்த இரு மாநிலங்களும் மத்திய அரசின் விருப்பத்தின்பேரில் அல்லது வேறுவகையில் பேச்சுவார்த்தையின் மூலம் முடிவுக்கு வர அளிக்கப்பட்ட போதுமான சந்தர்ப்பமும், போதுமான கால அவகாசமும் ஆகும். இந்த முயற்சிகள் எல்லாம் தோல்வியடைந்துவிட்ட காரணத்தால், பேச்சுவார்த்தையின் மூலம் இந்தத் தாவாவைத் தீர்க்க இயலாது என்று ஐயத்திற்கிடமின்றி முடிவு செய்வது பொருத்தமாக இருக்கும். இத்தகைய சூழ்நிலையில் பேச்சுவார்த்தை





மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க இயலாது என்ற தெளிவான நிலைதான் உருவாகியுள்ளது என்று நாம் முடிவு செய்வதைத் தவிர வேறு வழியில்லை. அதிர்ஷ்டவசமாக நாடாளுமன்றம் ஒரு சட்டத்தின் வாயிலாக மத்திய அரசுக்கு ஓர் அதிகாரத்தை அளித்தது. அதன்படி பாரபட்சம் இல்லாத ஒரு தீர்ப்பாயத்திடம் இத்தகைய தாவாக்களைத் தீர்க்கும் பொறுப்பை மத்திய அரசு விடமுடியும். எனவே, இந்தத் தாவா இத்தனை காலம் இழுத்தடிக்கப்பட வேண்டிய அவசியமே இல்லை. சட்டபூர்வமாக கட்டாயமாக்கப்பட்ட ஒரு நடவடிக்கையை எடுப்பதில் மேற்கொண்டு ஏற்படும் எந்தத் தாமதமும் உணர்வுகளை மேலும் புண்படுத்தி இன்னும் அதிகமான கசப்புணர்வை வளர்க்கவே செய்யும். எனவே இந்தத் தாவா இன்னும் அதிகமாவதற்கு முன்பு சட்டப்படி எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையைச் செயல்படுத்துவது அவசியமாகும்.

உரிய காலத்தில் எடுக்கப்படும் நடவடிக்கை பெரிய பிரச்சினைகள் உருவாவதைத் தடுக்கும். பேச்சுவார்த்தை மூலம் இனியும் இந்த நதிநீர்த் தாவாவைத் தீர்க்க இயலாது என்ற முடிவுக்கு மத்திய அரசு வரவேண்டிய ஒரு நிலை இப்போது வந்தாயிற்று என்ற முடிவுக்கு நாங்கள் வந்திருக்கிறோம்."

இவ்வாறு *1990* ஆம் ஆண்டு வாக்கிலேயே உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ள கருத்துகள் இப்போதும் இந்த நாளிலும் பொருந்துவதாகவே உள்ளன. காவிரி நடுவர் மன்றத்தின் முன்பு நடைபெற்றுவரும் செயல்முறைகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள இந்த வேளையில், அவை நிறைவடைய உள்ள இந்தச் சூழ்நிலையில் கர்நாடக முதலமைச்சரின் அறிக்கை நடுவர் மன்றத்தின் நடவடிக்கைகள் ஒரு முடிவுக்கு வருவதைத் தாமதப்படுத்துகின்ற முயற்சி மற்றும் அதன்மூலம் தமிழ்நாடு தனக்குரிய பங்கைப் பெறுவதை தொடர்ந்து மறுக்கும் முயற்சிதானே தவிர வேறில்லை. கர்நாடக முதலமைச்சரின் பேச்சு தமிழ்நாடு தனக்கு உரிமையுள்ள தண்ணீரைப் பெறுவதற்கான ஒட்டுமொத்த நடவடிக்கைகளையும் தள்ளிப்போடும் இன்னொரு முயற்சியேயாகும்.

*1990* ஆம் ஆண்டில் ஜூன் மாதத்திலேயே அப்போது கர்நாடக முதலமைச்சராக இருந்த திரு. வீரேந்திர பாட்டீல் நடுவர் மன்றத்தை அமைப்பதை கர்நாடக அரசு இருபது ஆண்டுகள் வெற்றிகரமாகத் தள்ளிப்போட்டு விட்டதாகவும், அது ஒன்றும் சாதாரணமான சாதனை அல்ல என்றும் பெருமைப்பட்டுக்கொண்டார். *1996-97*-ல்

மறுபடியும் இந்திய உச்ச நீதிமன்றத்தின் ஆணைப்படி, தமிழ்நாடு மற்றும் கர்நாடக அரசுகளுக்கிடையே இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் ஐந்து முறைகள் நடைபெற்றன. அதன் விளைவாக எந்தப் பயனும் ஏற்படாதபோது, இருதரப்புப் பேச்சுவார்த்தைகளை இன்னும் நீடிக்க வேண்டிய தேவைதான் என்ன?

அடுத்த சாகுபடி காலம் தொடங்க இருக்கிறது. மேட்டூர் அணையில் நீர் இல்லாத சூழ்நிலையில் துயர்கால நீர்ப் பங்கீடு விகிதாச்சாரம் சம்பந்தமாக ஒரு உறுதியான முடிவெடுக்க காவிரி கண்காணிப்புக் குழுவின் கூட்டத்தை விரைவில் கூட்ட வேண்டும் என்று நாங்கள் மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். ஒருவேளை கர்நாடக முதலமைச்சர் காவிரி நீரைப் பகிர்ந்துகொள்ள அப்படி ஒரு முன்னேற்ற நடவடிக்கையை விரும்பாமல் காலத்தாழ்வை ஏற்படுத்தும் தன்னுடைய இழுத்தடிப்பு முயற்சிகளில் ஒன்றாகவே திருப்பதியில் இவ்வாறு கூறியிருக்கிறார் போலும்!

எப்போது காவிரி நடுவர் மன்றம் தீர்ப்பு அளித்ததோ, அப்போதிருந்தே அதனுடைய இடைக்கால ஆணையை மதிக்க மறுத்த கர்நாடகத்தின் தொடர்ந்த அலட்சியப் போக்கால் இன்னும் மிகவும் மோசமாக்கப்பட்டு, மாநிலங்களுக்கிடையே உள்ள பிரச்சினையாகவே இந்தப் பிரச்சினை இருந்து வருகிறது. நடுவர் மன்றத்தின் இந்தத் தீர்ப்புகள் செயல்படுத்தப்படாமல் மறுக்கப்பட்டுவிட்டதால், பிரச்சினையின் கடுமையான பாதிப்பை தமிழ்நாடு தாங்கிக்கொள்ள வேண்டியதாகிவிட்டது. நடுவர் மன்றத்தின் ஆணைகளுக்குக் கீழ்ப்படிய மறுத்து உச்ச நீதிமன்றத்தின் அவமதிப்புக்குக் காரணமாகி, தமிழ்நாட்டுக்கு அளவற்ற பாதிப்பை ஏற்படுத்திவிட்ட பின்பு, இந்த நிலையிலும் இன்னும் இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் நடத்தலாம் என்று சொல்வது, வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதாகும்.

*முற்பகல் 11-25*

நடுவர் மன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் ஆணைகளில் அடங்கி இருக்கும் சட்டப்படியான கட்டளைகளை கர்நாடகம் அச்சம் எதுவுமின்றி அலட்சியப்படுத்திவிட முடியும் என்றால், இந்த நிலையில் இருதரப்புப் பேச்சுவார்த்தைகளில் இனிமேலும் நம்பிக்கை வைப்பது அறிவுடைமை ஆகுமா? உச்ச நீதிமன்றத்தின் ஆணைப்படி காவிரி நதிநீர் ஆணையமும் அதற்கு உதவிபுரியும் வகையில் கண்காணிப்புக் குழுவும் சட்ட ரீதியாக அமைக்கப்பட்டிருப்பதால் நடுவர் மன்றத்தின்



இடைக்கால ஆணையையும் பின்னர் அதனுடைய இறுதித் தீர்ப்பையும் சட்டப்படி செயல்படுத்த நாங்கள் அவற்றைத் தொடர்ந்து வற்புறுத்தி வருவோம். தற்போது காவிரி நடுவர் மன்றத்தின் தீர்ப்பு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் அதே வலுவை அதே அளவில் பெற்றிருக்கிறது. தமிழ்நாடு அரசு சட்டத்தின் செயல்பாட்டில் உறுதியான நம்பிக்கை வைத்துள்ளது. நடுவர் மன்றமும், உச்ச நீதிமன்றமும் மட்டுமே நியாயமான தீர்ப்பை வழங்க முடியும் என்று தமிழ்நாடு அரசு அசைக்க முடியாத நம்பிக்கையோடு இருக்கிறது.

**(இ) புதிய தலைமைச் செயலகத்தை இராணி மேரிக் கல்லூரி வளாகத்தில் கட்டத் தடைவிதிக்கும் மத்திய அரசு சுற்றுச்சூழல் துறையின் அறிவிக்கை குறித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை**

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மூன்றாவது அறிக்கை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் இதற்கு முன்னால் நான் தமிழக அரசின் புதிய தலைமைச் செயலகம் கட்டுவது குறித்தும் அது சம்பந்தமான தமிழக அரசின் அணுகுமுறை மற்றும் விரிவான ஆலோசனை செய்து எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றியும் கடந்த 4-4-2003, 10-4-2003 மற்றும் 24-4-2003 ஆகிய தேதிகளில் மிக விரிவாகப் பேசியுள்ளேன். எவ்வகையில் புதிய தலைமைச் செயலகம் உடனடியாகக் கட்டப்பட வேண்டியுள்ளது, தலைமையில் அது மிகவும் அவசியமானது என்பது குறித்து எவ்வகையில் நான் ஏற்கெனவே எடுத்துச் சொல்லியுள்ளேன். மிகத்தெளிவாக நான் மறுபடியும் இப்போது திரும்பவும் சொல்ல எனவே அவற்றை நான் மறுபடியும் இப்போது திரும்பவும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. தமிழகத்திலுள்ள 6½ கோடி மக்கள் நலனை முன்னிறுத்திச் செயல்படும் தலையான கேந்திரம் தலைமைச் செயலகம். இந்தியாவிலேயே சாதாரண அடிப்படை வசதிகள்கூட இல்லாமல் மிகக் குறுகிய இடத்தில் செயல்படும் ஒரே தலைமைச் செயலகமாகத் தமிழக தலைமைச் செயலகம்தான் இருந்து வருகிறது. இட நெருக்கடியால் எவ்வகை இன்னல்களையும், இடர்ப்பாடுகளையும் பல்வேறு தரப்பு மக்கள் உணர்கின்றார்கள் என்பதைக் கவனத்தில் கொண்டுதான் அமையவிருக்கும் தலைமைச் செயலகக் கட்டடம் தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கும் அளவிற்கு மிகச் சிறப்பான ஒரு கட்டடமாக அமைய வேண்டும் என்று நான் முடிவு செய்தேன். நான் எடுத்த அந்த முடிவானது தமிழகத்தின் நலன் கருதியும் 6½ கோடி மக்களின் பயன் கருதியும் எடுத்த முடிவாகும். ஆனால்

சொற்ப எண்ணிக்கையிலுள்ள வெகு சிலர் மட்டுமே அரசியல் காரணத்திற்காக, காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இந்தத் திட்டத்தை எதிர்த்துக் கொண்டும், அப்பாவி மாணவிகளைத் தூண்டிவிட்டும் செயல்பட்டு வந்தனர். ஒருசிலர் நீதிமன்றத்திற்குச் சென்றனர். நாட்டு நடப்புகளில் எந்தச் சந்தர்ப்பத்திலும் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளாத மேல்தர வர்க்கத்தைச் சார்ந்த பிரதிநிதிகள் பொது நல வழக்கு என்ற போர்வையில் தங்களை மிகப் பெரிய சுற்றுச்சூழல் ஆர்வலர்களாகக் காட்டிக் கொண்டிருக்கும் அவர்கள், இதுநாள் வரை ஒரு சிறு துரும்பைக்கூட மக்கள் நலனுக்காகக் கிள்ளிப்போடாத அந்தப் பெரிய மனிதர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். எவ்வகையில் இந்தப் பிரச்சினையைத் தமிழக அரசு முறையாக அணுகியுள்ளது என்பதற்கு மிகச் சரியான விளக்கம் தருவதென்றால் எனது தலைமையிலுள்ள இந்தத் தமிழக அரசானது நன்கு ஆராய்ந்து தெள்ளத் தெளிவாக மிகத் துல்லியமான முறையில் பொதுமக்களுக்கு விளக்கமாகத் தெரிவித்துவிட்டுத்தான் செயல்படுகிறது என்பதற்கு இதற்கு முன்பு நான் இதுகுறித்து அளித்த விளக்கங்களே சான்றாகும்.

மாணவிகள் தேர்வு முடிந்து விடுமுறைக் காலத்தில் இந்த அரசு நிர்வாக ரீதியில் முடிவெடுத்து எதனையும் செய்திருக்கலாம். ஆனால் இவற்றை மூடிமறைத்துச் செயல்பட வேண்டும் என்ற அவசியம் இந்த அரசுக்கு இல்லை என்பது மட்டுமல்லாமல், தமிழக மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றுள்ள இந்த அரசு ஒரு சிலர் காட்டும் பூச்சாண்டிகளுக்குக் கவலைப்பட வேண்டிய அவசியத்தில் இல்லை என்பதையும் கருத்தில் கொண்டும் (மேசையைத்' தட்டும் ஒலி) வெளிப்படையாகவே--transparent-ஆகவே--செயல்பட்டு வருகிறது என்பதற்கு முன்பே நான் இந்த அவையில் தெரிவித்த கருத்துகளே போதுமான சான்றுகள் ஆகும். இராணி மேரிக் கல்லூரி இடம் குறித்து நீதிமன்றத்தில் மொத்தம் 9 ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அந்த மனுதாரர்கள் தங்களைப் பொது நலவாதிகள் என்று பிரகடனப்படுத்திக் கொண்டுள்ளார்கள். அவர்கள் மிகச் சௌகரியமாக மறந்துவிட்ட, மறைத்துவிட்ட ஒரு அப்பட்டமான உண்மையை நான் இங்கே தெளிவாக்க வேண்டியுள்ளது.

*முற்பகல் 11-30*

அது என்னவென்றால், இன்றைக்கு சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பாக, இன்னும் சரியாக சொல்லப்போனால்—*8-4-1991* அன்று காலை—ஜனாதிபதி ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில்,



*8-4-1991* அன்று காலை சுமார் *11* மணியளவில், இராணி மேரிக் கல்லூரியில் எம்.ஏ. ஆங்கில இலக்கியம் இறுதியாண்டு படித்து வந்த எம். ஷீலா என்ற மாணவி தேர்வு எழுதுவதற்கான தனது hall ticket-ஐப் பெறுவதற்காக முதல் மாடியில் உள்ள ஆங்கிலத் துறைக்குச் சென்றிருக்கிறார். hall ticket-ஐப் பெற்றுக்கொண்ட பிறகு பாட சம்பந்தமான சில அம்சங்களைத் தனது சக மாணவியாகிய சரஸ்வதி என்பவருடன் ஆங்கிலத் துறையின் hall-க்கு வெளியே உள்ள வராண்டாவில் நின்றுகொண்டு பேசிக்கொண்டிருந்துள்ளார். அப்போது, எந்த நில நடுக்கமும் ஏற்படவில்லை, பெரிய சூறாவளிக் காற்று ஏதும் அடிக்கவில்லை. ஆனால், சாதாரணமாக மாடியில் நின்று பேசிக்கொண்டிருக்கும்போதே இரண்டு மாணவிகளின் பளுவைக்கூட தாங்காமல் அந்த வராண்டா திடீரென்று உடைந்து தரைத் தளத்தில் அந்த இரண்டு மாணவிகளுடன் விழுந்தது. முதல் மாடியிலிருந்து தரைத் தளத்திலே விழுந்ததினால் ஷீலா என்ற மாணவிக்கு, தலை, கைகள், கால்கள் மற்றும் இடுப்பு ஆகியவற்றில் பெருத்த காயம் ஏற்பட்டு எலும்புகள் முறிந்துவிட்டன. உடனடியாக இராயப்பேட்டை மருத்துவமனைக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டு, உள் நோயாளியாக *8-4-1991* அன்றிலிருந்து 15-6-1991 வரை, ஆக ஏறக்குறைய 2½ மாதம் அவர் மருத்துவமனையில் இருந்திருக்கிறார். அந்தச் சமயத்தில், அவருக்கு அறுவைச் சிகிச்சையும் நடத்தப்பட்டுள்ளது. பிறகு, நிரந்தர ஊனமாக, நடக்க முடியாமல், ஊன்றுகோல்களின் துணையுடன் மட்டும் நடக்கின்ற நிலையில் உள்ளார்.

மிகப் பெரிய இழப்பை வாழ்க்கையில் ஏற்படுத்தியுள்ள இந்த நிகழ்ச்சியால் தனது எதிர்காலமே பாழடைந்துவிட்ட நிலையில், முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்று மிகப் பிரகாசமாக இருக்குமென்று எதிர்பார்த்திருந்த தன் வாழ்வு இருண்டு, சுருண்டு போய்விட்டது என்றும், அதன் விளைவாகத் திருமணம் செய்துகொள்ள முடியாமல் போன அவல நிலையில், உணவைக்கூட சாப்பிட முடியாமல் உடல் நலம் குன்றி வாழ்க்கையே கேள்விக்குறியாகிவிட்ட காரணத்தினால் கல்லூரி நிர்வாகமும், தமிழக அரசின் பொதுப் பணித் துறையும் தனக்கு *5* இலட்சம் ரூபாய் நஷ்ட ஈடு தர வேண்டுமென்றும் சென்னை உயர் நீதிமன்றத்தில் Pauper O.P. வழக்கை *7-4-1992* அன்று ஷீலா தொடுத்தார். அது தற்சமயம் சென்னைப் பெருநகர சிட்டி சிவில் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டடம் என்று சொல்லிக்கொண்டு வழக்கு தொடுத்த பெரிய மனிதர்கள், தங்களுக்கு அக்கறை இருப்பதாகப்

டோலியாகக் காட்டிக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) நீதிமன்றப் படிக்கட்டுகளில் ஏறிய அந்தப் பெரிய மனிதர்கள், அந்தக் கட்டடத்தின் வராண்டா இடிந்து விழுந்து தனது எதிர்காலத்தையே தொலைத்துவிட்டு நிற்கின்ற ஷீலா என்ற அந்த மாணவிக்கு இன்று வரை என்ன செய்தார்கள்? அந்தக் கல்லூரியில் படிக்கின்ற மற்ற மாணவிகளுக்கு இனி அப்படியொரு நிலை ஏற்பட்டால் அதை இவர்கள் எப்படி எதிர்கொள்வார்கள்? 12 ஆண்டுகளுக்கு முன்பே இரண்டு மாணவிகளின் பளுவைக்கூட தாங்க முடியாமல் இடிந்து விழுகின்ற நிலையில் வராண்டா இருந்தது என்றால், அந்தக் கட்டடத்தின் உறுதித் தன்மையை நீங்களே புரிந்துகொள்ளலாம். 89 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட அந்தக் கட்டடம் சுண்ணாம்பு மற்றும் செங்கற்களால் கட்டப்பட்டதாகும். சுண்ணாம்பின் இறுகும் தன்மை மெல்ல மெல்ல வீரியம் இழந்து, தொட்டால் 'பொல, பொல' என மாவுபோல் கொட்டும் நிலையில் உள்ளது என்று பொறியியல் வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். கட்டடங்கள் பழமை எய்திட்ட காரணத்தினால் வலுவிழந்துபோய் அபாய கட்டத்தில் உள்ளன என்றும் அவர்கள் சொல்கிறார்கள். கல்லூரிக்குரிய புதிய கட்டடத்தின் திட்டம் பற்றியும், இடைப்பட்ட காலத்தில் செய்யப்பட உள்ள மாற்று ஏற்பாடுகள் பற்றியும், நான் ஏற்கெனவே தெளிவுபடத் தெரிவித்துள்ளேன்.

இந்த அவையின் வாயிலாக நான் சொல்வது என்னவென்றால், ஒருசிலர் இதனை வெறும் அரசியல் ரீதியாக எடுத்துக்கொண்டு, எனக்கு நல்ல பெயர் வந்துவிடுமே என்ற காரணத்தினால், காழ்ப்புணர்ச்சியுடன் இல்லாததையும், பொல்லாததையும் சொல்லி, நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். கல்லூரி பற்றியும், மாணவிகளைப் பற்றியும் உண்மையிலேயே அக்கறை அவர்களுக்கு இருந்திருந்தால் ஷீலா என்ற அந்த மாணவிக்கு சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்ட அந்தத் துயரம் இனி யாருக்கும் ஏற்படக் கூடாது என்றுதான் அவர்கள் நினைத்திருக்க வேண்டுமே தவிர, இந்த நல்ல திட்டத்தை அவர்கள் எதிர்க்க வேண்டிய அவசியம் என்ன? எந்த அளவிற்கு இதில் அரசியல் புகுந்து இருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தால் வேதனையாக உள்ளது. ஆக்கபூர்வமாகச் செயல்பட வேண்டிய எதிர்க்கட்சிகள் எவ்வகையில் எதிரிக் கட்சிகளாகச் செயல்பட்டு வருகிறார்கள் என்பதற்கு இனி நான் சொல்லப் போகும் செய்திகள் உங்களுக்கும், தமிழக மக்களுக்கும் இன்னும் அதிக வேதனையையும் அதிர்ச்சியையும் தரக்கூடும்.





இந்த நாட்டு மக்களுக்கு உண்மையைத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காக நான் இதனை விரிவாகச் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன். *(குறுக்கீடு)*

*முற்பகல் 11-35*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..........

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** I am not yielding. This is an 110 Statement. You cannot.......

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,......................

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், உட்காருங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** No. You cannot raise a point of order in an 110 Statement.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 110-வது அறிக்கை படிக்கிறபோது விவாதம் கிடையாது. உட்காருங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** No.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** You can raise it later on, not now. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்றத்தில் எதையும் வைக்கலாம். உட்காருங்கள். திரு. ஹேமச்சந்திரன், உட்காருங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** நீங்கள் அதை, பின்னால் raise பண்ணுங்கள். இப்போது முடியாது. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அவர் முடிக்கட்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கையை முடிக்கட்டும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** நான் முடிக்கிறேன். அப்புறம் வேண்டுமானால் raise பண்ணுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கையை இன்னும் வாசித்து முடிக்கவில்லை. அறிக்கையை நிறைவு செய்ய அனுமதியுங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** You cannot interrupt an 110 Statement.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன். இது நல்லதல்ல, உட்காருங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** தவறான முன்மாதிரியை ஏற்படுத்தாதீர்கள். அப்புறம் எழுப்பலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி உட்காருங்கள். அறிக்கையை இன்னும் படித்து முடிக்கவில்லை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** இது குற்றச்சாட்டு அல்ல. அமர்ந்து பொறுமையாகக் கேளுங்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதி எம்.பி.-ஆக உள்ள டி.ஆர். பாலு மத்திய அமைச்சரவையில் சுற்றுப்புறச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சராக உள்ளார். பெரிய முக்கியத்துவம் இல்லாத இலாகாவைத் தனக்குத் தந்துவிட்டார்கள் என்று அப்போது அவருடைய கட்சித் தலைவரையும், மாறனையும் பார்த்துப் புலம்பிக் கொண்டிருக்கிறார் என்று பத்திரிகைகளில் செய்திகள் வந்துகொண்டு இருந்தன. அப்படி ஒரு துறைக்கு அமைச்சராக உள்ள டி.ஆர். பாலு செய்திருக்கின்ற அடாத செயல் என்ன என்பதை உங்களுக்கு விரிவாக இப்போது விளக்க விரும்புகிறேன். நீதிமன்றத்தில் அவர்களால் தொடரப்பட்ட வழக்குகள் பற்றி வாதம் முடிந்தபின் அவ்வழக்கு பற்றி என்ன நினைத்தார்களோ தெரியவில்லை. தமிழக அரசின் ஆணித்தரமான வாதங்களை நீதிமன்றத்தில் எதிர்கொள்ள வேண்டிய நிலையில் பயந்துபோய், நீதிமன்ற நடவடிக்கைகளில் குறுக்கீடு செய்து நீதிமன்ற அவமதிப்புப் பற்றி கொஞ்சமும் கவலைப்படாமல் மத்திய அமைச்சர் டி.ஆர். பாலு எப்படிச் செயல்பட்டிருக்கிறார் என்பதைப் பற்றி நான்



இங்கே தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். 1986 ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்றத்தில் Environment Protection Act, 1986, Act 29 of 1986 என்று ஒரு சட்டமானது உருவாக்கப்பட்டு அது 23-5-1986 அன்று அமலாக்கத்திற்கு வந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு முக்கியமான விஷயத்தை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அது என்னவென்றால் ஒரு சட்டம் இயற்றும் அதிகாரம் என்பது இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி ஷெட்யூல் 7-ல் உள்ள லிஸ்ட்ஸ் இனம் 1, இனம் 2 மற்றும் இனம் 3 என்ற பிரிவுகளின்கீழ் இனம் 1-ன்கீழ் வரும் தலைப்புகள் உள்ள சப்ஜெக்டுகள் பற்றி மத்திய அரசும், இனம் 2-ன்கீழ் உள்ள சப்ஜெக்டுகள் பற்றி மாநில அரசுகளும், இனம் 3 சம்பந்தப்பட்ட சப்ஜெக்டுகள் பற்றி இரு அரசுகளும் அதாவது மத்திய, மாநில அரசுகளும் சட்டம் இயற்றும் அதிகாரம் கொண்டுள்ளவையாகும். சுற்றுச்சூழல் என்ற தலைப்பானது, இந்த ஷெட்யூல் 7-ல் குறிப்பிடப்பட்டுள்ள எந்த இனங்களிலும் கொண்டுவரப்படவில்லை. அதாவது இந்திய அரசமைப்புச் சட்டத்தின்கீழ் சட்டம் இயற்றக்கூடிய சப்ஜெக்டுகளின்கீழ் சுற்றுச்சூழல் என்பது ஓர் அம்சமாகக் குறிப்பிடப்படவில்லை என்பதுதான் நிதர்சன உண்மை. ஆனாலும்கூட, இரு நாடுகளுக்கிடையே அல்லது பல நாடுகளுக்கிடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் கருதி, அதாவது Treaty, Agreement or Convention and International Conference என்று சொல்லப்படும் கூட்டமைப்பு நாடுகளின் மாநாட்டுத் தீர்மானங்களின்படியும் இந்திய நாடாளுமன்றமானது Article 253-ன்படி தக்க சட்டம் இயற்ற இயலும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு மிக முக்கியமான அரசியல் அமைப்புச் சட்டப் பிரச்சினையை உங்கள்முன் வைக்க நான் விரும்புகிறேன். ஏற்கெனவே நான் குறிப்பிட்டதுபோல் 7-வது ஷெட்யூலில் இனம் 1 மற்றும் Concurrent List-ல் உள்ள சப்ஜெக்டுகள் பற்றி மத்திய அரசு சட்டம் இயற்ற இயலும். இனம் 3 ஆகிய Concurrent List-ல் மத்திய அரசும், மாநில அரசும் தனித்தனியே சட்டம் இயற்றி இருந்தால், மத்திய அரசின் சட்டம்தான் மாநில அரசின் சட்டத்தைத் தனக்குள் உள்ளடக்கி சில சந்தர்ப்பங்களில் ஆளுகை செய்வதற்கு அரசியல் சட்டம் வழிவகை செய்கின்றது. ஆனால், ஷெட்யூல் 7-ன்கீழ் எந்த ஓர் இனத்தின்கீழும் விவரிக்கப்படாத ஒரு சப்ஜெக்ட் சம்பந்தமாக மத்திய அரசு சட்டம் இயற்றினால் அது மாநில அரசுகளின் மீது எவ்வகைப் பிடிமானத்தை ஏற்படுத்தும் என்பது பற்றி அரசமைப்புச்

சட்டத்தில் விரிவான ஒரு விளக்கம் இல்லை என்பதுதான் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் உள்ள ஒரு மிக முக்கியமான தெளிவுபடாத குறைபாடு ஆகும். அதாவது 7-வது ஷெட்யூலில் காட்டப்படாத ஒரு சப்ஜெக்ட் குறித்து Article 253-ன்படி உள்ள அதிகாரத்தை மட்டும் பயன்படுத்தி மத்திய அரசு சட்டம் இயற்றினால் அது எந்தவகையில் மாநில அரசைக் கட்டுப்படுத்தும் என்பது குறித்து அரசமைப்புச் சட்டத்தின் விளக்கம் என்ன என்பதுதான் இன்றைய கேள்வி. இது குறித்து நாடு தழுவிய அளவில் விரிவான விவாதம் நடத்த வேண்டும் என்று நான் எதிர்பார்க்கின்றேன். இந்த ஓர் அரசமைப்புச் சட்டக் குறைபாட்டினை விவாதத்திற்காக நான் இந்நாட்டின்முன் வைக்கிறேன்.

*முற்பகல் 11-40*

நான் ஏற்கெனவே சொன்னபடி, கூட்டு நாடுகளின் மாநாட்டு நடவடிக்கைகளின் விளைவாக, அதாவது ஐக்கிய நாடுகளின் சபை கூட்டிய மனிதச் சூழ்நிலை குறித்த ஒரு மாநாடு, United Nations Conference on Human Environment, 1972 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஸ்டாக்ஹோம் என்ற நகரத்தில் நடைபெற்றது. அதன் பின்தொடர்ச்சியாகத்தான் நான் மேலே குறிப்பிட்ட Environment Protection Act, 1986 ஆனது Article 253-ன்கீழ் உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டது. அதில் பிரிவு 6-ல், மேற்படிச் சட்டத்தின் செயலாக்கம் குறித்து Rules, அதாவது விதிகள் வகுப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்தநேரத்தில் நான் ஒரு முக்கியமான சட்ட நிலைமையினைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஒரு சட்டம் என்பது, நாடாளுமன்றத்திலோ அல்லது ஒரு மாநிலத்தின் சட்டசபையிலோ விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இயற்றப்படும் ஒன்றாகும். ஆனால், விதிகள்—Rules—என்பது அதிகாரிகளின் மட்டத்தில் subordinate legislation என்கின்ற முறையின்படி அதிகாரிகளால் வகுக்கப்படும் ஒன்றாகும்.

மேற்படி Environment Protection Act, 1986 நாடாளுமன்றத்தில் உருவாக்கிய பிறகு Environment Protection Rules, 1986 ஆனது subordinate legislation என்கின்ற முறையில் அதிகாரிகளால் வகுக்கப்பட்டு, அது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதில் எவ்வாறு கடற்கரை மற்றும்



கடற்கரை சார்ந்துள்ள பகுதிகளில் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்; எவ்வாறு சில நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது; அவற்றை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது குறித்துச் சொல்லப்பட்டுள்ளது. இதில் கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான அம்சம் என்னவென்றால், விதி எண் 5-ன்படி சுற்றுச்சூழல் கெடக்கூடிய அளவில் industries எனப்படும் தொழிற்கூடங்களைக் கட்டுப்படுத்துவதற்கு மட்டும்தான் விதி 5 உள்ளது. இதற்குக் காரணம் தொழிற்கூடங்களிலிருந்து வெளிப்படும் புகை, இரைச்சல், அது வெளியிடும் கழிவு, அது பயன்படுத்திக்கொள்ளும் மிகுந்த அளவிலான நீர் ஆகியவை எந்த அளவிற்குச் சுற்றுச்சூழலைப் பாதிக்கக்கூடாது என்பது குறித்துப் பல்வேறு கோணங்களில் மேற்படிப் பிரிவானது அறிவுரைகளைச் சொல்கிறது. இதை நிறைவேற்றும் அளவில், சுற்றுப்புறச் சூழல் குறித்த ஒரு முக்கியமான அறிவிக்கை 19-2-1991 அன்று வெளியிடப்பட்டது. அதன்படி ரூபாய் 5 கோடிக்கு மேல் முதலீடு செய்து கட்டப்படும் கட்டுமானப் பணிகள் குறித்து மத்திய அரசிடம் முன் அனுமதி பெற வேண்டும் என்று இருந்தது. இவற்றைப் பல்வேறு மாநில அரசுகளும் பெரிதும் ஆட்சேபித்ததால், மேற்படி ஆட்சேபங்களைக் கருத்திற் கொண்டு 9-9-1997 அன்று ஒரு மாற்று அறிவிக்கை வெளியிடப்பட்டது. அதன்படி மாநில அரசுகள் செயல்படுத்தும் கட்டுமானப் பணிகள் ரூபாய் 5 கோடிக்கு மேல் இருந்தாலும் மத்திய அரசின் அனுமதி தேவையில்லை என்பதுதான் இதுவரை நடைமுறையில் இருந்தது.

இன்னும் சொல்லப்போனால், விதி 5 மற்றும் அதனுடைய நோக்கம் மற்றும் விளைவுகள் குறித்து ஒரு வழக்கில் தீர்ப்புச் சொல்லும்போது, சென்னை உயர் நீதிமன்றத்தின் இரு நீதிபதிகளைக் கொண்ட டிவிஷன் பெஞ்ச் மேற்படி விதி 5 என்பது தொழிற்கூடங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்றும், மற்ற இன வேலைகளுக்கு மேற்படி விதி 5 பொருந்தாது என்றும் மிகத் தெளிவாக Writ Appeal எண் 1287/1995 என்ற வழக்கில் 14-12-1995 தேதியிட்ட தீர்ப்பில் தெளிவுபடுத்தியுள்ளது. இவற்றையும் கருத்தில் கொண்டுதான் மேற்படி 9-9-1997 தேதியிட்ட அறிவிக்கை, மாநில அரசுகளின் செயல்பாட்டினை மத்திய அரசின் சுற்றுச்சூழல் அறிவிக்கை கட்டுப்படுத்தாது என்ற அளவில்தான் இதுவரை நிலைமை இருந்து வந்துள்ளது. மாநில அரசுகளுக்கு எவ்வித பிரச்சினையும் இதுவரை இல்லாமல் இருந்தது.

மேலும், மேற்படி விதி 5-ல் சொல்லப்பட்டுள்ளவை தொழிற்கூடங்களுக்கு மட்டுமே பொருந்தக்கூடியவை. மற்ற அம்சங்களுக்கு இதைப் பொருத்திப் பார்ப்பது இயலாது; மற்றும்

கூடாது என்பதுதான் சட்ட நிலைமை. மாநில அரசுகளின் பணிகளுக்கு இதுவரை எவ்வித இடர்பாடுகளும்—இதுநாள்வரை— ஏற்படாத காரணத்தால் விதி 5-ன் தாக்கம் பற்றி அதிக அளவில் பிரச்சினை ஏற்படவில்லை.

முற்பகல் 11-45

1997 ஆம் ஆண்டு அறிவிக்கைபடி மாநில அரசுகளின் செயல்பாடுகளுக்கு விதிவிலக்கு இருந்து வந்த காரணத்தினால், மாநில அரசுகளும் எவ்வித சிரமமும் படாமல் இருந்து வந்தன. ஆனால், புதிய தலைமைச் செயலகம் கட்டுமானப் பிரச்சினையைத் தனது கௌரவப் பிரச்சினையாகவும், விரோதப் பிரச்சினையாகவும் தி.மு.க. எடுத்துக்கொண்டதாலும், தங்களைத் தாங்களே தன்னார்வத் தொண்டர்களாகப் பிரகடனப்படுத்திக் கொண்டவர்களுடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாகவும், மத்திய அரசில் சுற்றுப்புறச் சூழல் அமைச்சராக உள்ள டி.ஆர். பாலு 19-4-2003 அன்று சென்னையில் தி.மு.க. சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் 'இராணி மேரிக் கல்லூரியை நான் இடிக்க விடமாட்டேன், அப்படி நீங்கள் இடித்து விட்டால் நான் ராஜினாமா செய்வேன், உங்களால் முடிந்தால் இடித்துப் பாருங்கள்' என்று சவாலும், சூளுரையும் செய்து பேசியுள்ளார். அவ்வாறு அவர் பேசியது திரு. கருணாநிதியின் குடும்பப் பத்திரிகையான முரசொலியில் 21-4-2003 அன்றும், தி.மு.க. சார்புப் பத்திரிகையான தினகரனில் 20-4-2003 அன்றும் வெளிவந்துள்ளது. இதனைத் தொடர்ந்து யாரோ காட்டிய வழிகாட்டுதலின்படி மாநில அரசுகளுக்கு இடர்ப்பாடு இல்லாமல் இதுவரை இருந்து வந்த 9-9-1997 ஆம் நாளிட்ட அறிவிக்கையினைத் திருத்திக் அதனைக் கடுமைப்படுத்தி 22-4-2003 அன்று ஓர் அறிவிக்கையினை டி.ஆர். பாலு வெளியிட்டிருக்கிறார். அதன்படி மாநில அரசுகளின் நடவடிக்கைகள் அது எத்தனை கோடி ரூபாய் மதிப்பாக இருந்தாலும் நடைபெறலாம் என்று இருந்த நிலைமையினைக் கருத்தில்கொள்ளாமல் மத்திய அரசின் சுற்றுச்சூழல் துறையினை ஒரு Super Plan Sanctioning Authority ஆக மாற்றி மாநில அரசுகளின் உரிமைகளைப் பறித்துவிட்டு மேற்படி 1997 ஆம் ஆண்டு அறிவிக்கையைத் திருத்தி மாநில அரசின் கட்டுமானப் பணிகள்கூட ரூபாய் 5 கோடிக்குமேல் நடைபெற்றால் அதுகுறித்த ஒப்புதல் மத்திய சுற்றுச்சூழல் துறையிடம் பெற வேண்டும் என்ற ஒரு திருத்த அறிவிக்கையினை 22-4-2003 அன்று வெளியிட்டுள்ளார். இந்தத் திருத்தத்தினுடைய தாக்கம் எவ்வகையில் இருக்கும் என்று ஆராய்வதற்கு முன்னால் மேற்படித் திருத்தம் எதனால்





வெளியிடப்பட்டுள்ளது என்பதை முதலில் பார்ப்பது நல்லது. சென்னையில் நடைபெற்ற தி.மு.க. பொதுக் கூட்டத்தில் சவாலாகவும், சவடாலாகவும் 'நான் உயிர் உள்ள வரை இதைச் செய்ய விடமாட்டேன், அதைச் செய்ய விடமாட்டேன்' என்று சொன்ன டி.ஆர். பாலு, அதிகாரம் தன்னிடம் இருக்கின்ற ஒரே காரணத்தால் பின் விளைவுகள் பற்றியும், பக்க விளைவுகள் பற்றியும் இந்திய இறையாண்மைக்கு எவ்வித பங்கம் ஏற்படும் என்பதைப் பற்றியும் எண்ணிப் பார்க்காமல் 22-4-2003 தேதியிட்ட அறிவிக்கையினை வெளியிட்டுள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தச் சட்டப்பேரவையின் வாயிலாக நான் மக்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால் 15-8-1947-ல் இந்தியா விடுதலை பெற்ற பிறகு, தமது செயல்பாடு மற்றும் வழிகாட்டுதலுக்கு ஓர் அரசமைப்புச் சட்டம் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு சுமார் 3 ஆண்டு காலம் நமது முன்னோர்கள் விவாதம் செய்து இந்திய அரசமைப்புச் சட்டத்தை 1950 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தினார்கள். அதில் இந்தியா எப்படி ஒரு குடியரசு அமைப்பாக Federal தன்மை கொண்ட அமைப்பாக இருக்க வேண்டும் என்றும், மாநில அரசுகள் எந்த முறையில் செயல்பட வேண்டும், மத்திய அரசு எந்தெந்த முறைகளில் செயல்பட்டு சட்டங்களை இயற்ற வேண்டும், மாநில அரசுகள் எந்த முறையில் சட்டங்களை இயற்ற வேண்டும் என்று விரிவாகவும், தெளிவாகவும் கூறப்பட்டுள்ளது. ஓர் ஆரோக்கியமான உறவுப் பாலத்தை அமைக்கும்வகையில் மத்திய அரசும், மாநில அரசுகளும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது குறித்தும் இந்திய அரசமைப்புச் சட்டம் மிகத் தெளிவாகக் கூறியுள்ளது. இந்திய இறையாண்மை என்பது அதன் மாநில அரசுகளின் நலனைக் கருத்தில்கொண்டுதான் உருவாக்கப்பட்ட ஒன்றாகும். அனைத்து மாநிலங்களிலும் உள்ள மக்களின் நலனுக்காகத்தான் மத்திய அரசும் அதன் துறைகளும் செயல்பட வேண்டும். அனைத்து மாநிலங்களிலும் வியாபித்துள்ள குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தையும், வாழும் முறையையும் அவர்களின் நலன்களையும் மத்திய அரசு நேரடியாகத் தன் பொறுப்பில் கவனிக்க இயலாத காரணத்தினால்தான் அந்தப் பொறுப்பை மாநில அரசுகள் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் இந்திய இறையாண்மை அமைக்கப்பட்டுள்ளது. மாநில அரசுகளின் உரிமைகள், Federal நிலை உரிமைகள் ஆகும். மத்திய அரசு எவ்வாறு மாநில அரசுகளுடன் நல்லுறவு கொண்டு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றி எல்லாம் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் மிகத் தெளிவாக, விரிவாக, ஆணித்தரமாகச் சொல்லப்பட்டுள்ளது.

இவற்றைப் பற்றி எதுவுமே தெரியாத, தெரிந்துகொள்ளக்கூடிய நிலையில் இல்லாத--இவற்றைப் பற்றி எதுவுமே தெரியாத, தெரிந்துகொள்ளக்கூடிய நிலையில் இல்லாத--ஒரு மத்திய அமைச்சர் இப்படி ஓர் அடாவடியான, இதுவரை மாநில அரசுகளுடைய கையில் இருந்த உரிமையை அவர்களைக் கேட்காமலேயே அடித்துப் பிடுங்கும் விதத்தில் இராணி மேரிக் கல்லூரியை மட்டுமே மனதில் வைத்துக்கொண்டு இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முக்கியத்துவத்தைத் தூக்கி எறிந்துவிட்டு மாநில அரசுகளின் உரிமைகளைக் கருத்தில்கொள்ளாமல் தான் எடுத்துக் கொண்ட பதவிப் பிரமாணத்திற்கும், இரகசியக் காப்புப் பிரமாணத்திற்கும் மாறாகச் செயல்பட்டு இருக்கிறார் என்பதுதான் மிகத் தெளிவான உண்மை.

*முற்பகல் 11-50*

மேற்படி *22-4-2003* அறிவிக்கையானது எவ்வகையில் இந்திய இறையாண்மையைப் பாதிக்கும் என்பது பற்றி நான் மிகவும் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இந்திய அரசமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள கூட்டாட்சித் தத்துவத்தையொட்டி எவ்வாறு மத்திய அரசு, மாநில அரசுகளுக்கிடையே உள்ள அதிகாரப் பங்கீடுகள் இருக்க வேண்டும், எவ்வாறு ஒன்றுக்கொன்று அரவணைத்துக்கொண்டு மக்கள் நலனுக்காகச் செயல்பட வேண்டிய தன்மை உடையது என்பதைப் பற்றி எல்லாம் மிகத் தெளிவாக உச்ச நீதிமன்றம், *9* நீதிபதிகள் கொண்ட Constitution Bench தீர்ப்பில் S.R. Bommai Vs. Union of India என்ற வழக்கில் *11-3-1994* அன்று மிகத் தெளிவாகக் கூறியுள்ளது. இந்தத் தீர்ப்பின் தன்மைக்கு முற்றிலும் மாறாக Federal Structure-ன் அடித்தளத்தைத் தகர்க்கும் வகையில் ஏற்கெனவே செயல்பாட்டில் இருந்து வந்த *9-9-1997* தேதியிட்ட அறிவிக்கையிலுள்ள மாநில அரசின் உரிமைகளைப் பறிக்கும்விதமாக மேற்படி *22-4-2003* ஆம் நாளிட்ட அறிவிக்கை வெளிவந்து, அது பத்திரிகைகளிலும் ஏதோ பிரமாதமாக ஒரு சாதனையினை நிறைவேற்றிவிட்ட தொனியில் வெளிவந்துள்ளது. அந்த அறிவிக்கை தன்னை ஒரு Plan Sanctioning அதிகாரியாக நியமித்துக்கொண்டு டி.ஆர். பாலு பிறப்பித்த உத்தரவாகும். அதனுடைய பின்விளைவுகளைப் பற்றி அவர் சிறிதும் கவலைப்பட்டதாகவோ சிந்தித்ததாகவோ தெரியவில்லை. மாநில அரசுகளின் கருத்துகளை ஏற்றுக்கொண்டுதான், மாநில அரசுகளின் செயல்பாட்டில் மத்திய அரசு குறுக்கிடாத வகையில் *9-9-1997* நாளிட்ட அறிவிக்கை இதுகாறும் நடைமுறையில் இருந்து வந்தது. பொதுமக்களின் நலனுக்காகப்



பாடுபடும் மாநில அரசுகளின் நடவடிக்கைகளில் மத்திய அரசு தலையிடுவதில்லை என்ற நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தது. ஆனால் *22-4-2003* நாளிட்ட அறிவிக்கை அந்த நிலைப்பாட்டை முற்றிலுமாக மாற்றியுள்ளது. மேற்படி அறிவிக்கையின்படி கடல் சார்ந்த இடங்கள், முகத்துவாரம் மற்றும் நதிநீர் வழிகளில், கடலில் உயர் அலைகளின் வீச்சின் தாக்கம் உள்ள பகுதி மற்றும் அதனை ஒட்டியுள்ள கரையோரம் வரை இனி கட்டடம் ஏதும் கட்ட வேண்டுமென்றால் மத்திய அரசின் சுற்றுப்புறச் சூழல் துறையின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். இதனால் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள மாநில அரசுகள் மேற்கு வங்காளம், ஒரிசா, ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு ஆகிய வங்காள விரிகுடாவின் கிழக்குப் பகுதியில் உள்ள கடலோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசமான அந்தமான்-நிக்கோபார் தீவுகள் ஆகும். அதேபோல இந்தியாவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள, அரபிக் கடல் ஓரம் உள்ள மாநிலங்களான கேரளம், கர்நாடகம், கோவா, மகாராஷ்ட்ரா, குஜராத் மற்றும் யூனியன் பிரதேசங்களான டாத்ரா நாகர்கவேலி, லட்சத்தீவுகள் மற்றும் மினிக்காய் தீவுகளும் ஆகும். இதுவரை இந்த மாநிலங்களுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும் இருந்து வந்த இடர்ப்பாடுகள் இல்லாத இயல்பு சூழ்நிலை மேற்படி ஒரு தனி நபரால், என் மீதுள்ள காழ்ப்புணர்ச்சி என்ற ஒரே ஒரு காரணம் கொண்டு பறிக்கப்பட்டுள்ளது. இதனுடைய பின்விளைவுகள் என்ன என்பது பற்றி அவர் கிஞ்சித்தும் ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. அதைப்பற்றிக் கவலைப்பட்டதாகவோ முன்யோசனையுடன் செயல்பட்டதாகவோ அல்லது தொலைநோக்குப் பார்வையோடு பிரச்சினையை அணுகியதாகவோ தெரியவில்லை.

கோவா மாநிலத்தை எடுத்துக்கொண்டால் அந்த மாநிலம் முழுவதுமே பாதிக்கப்படும். ஏனென்றால் அந்த மாநிலத்தின் இயற்கைத் தன்மை அப்படி. சேது சமுத்திரம் திட்டம்கூட இனி ஒரு பகல் கனவுதான். டி.ஆர். பாலுவினுடைய கவனத்தில் இருந்ததெல்லாம் நானும் இராணி மேரிக் கல்லூரியும் மட்டும்தான். அவருக்காக உண்மையிலேயே நான் பரிதாபப்படுகிறேன். காரணம் ஏற்கெனவே அனுபவித்து வந்த ஓர் உரிமையைப் பறிப்பதற்கு முன்னால் ஒரு வாய்ப்பளித்து சம்பந்தப்பட்ட மாநிலங்களுடன் விவாதம் செய்திருக்க வேண்டும் என்ற அடிப்படைச் சட்ட தத்துவம்கூட அவருக்குப் புரியவில்லை. Subordinate Legislation எப்படி உருவாக்கப்பட வேண்டும் என்பது பற்றியெல்லாம் அவருக்கு எதுவும் தெரியவில்லை. Observance of natural justice என்றால் என்ன, Subordinate Legislation எந்த

அளவுக்குச் செல்லுபடி ஆகும் என்பதைத் தெரிந்துகொள்ள அவர் தயாராக இல்லை. டி.ஆர். பாலு இந்த விஷயத்தில் தன்னிச்சையாக, Constitution-க்கு விரோதமாகச் செயல்பட்டிருக்கிறார். இதன் பின்விளைவுகளை அவர் சந்தித்தே ஆகவேண்டும். அது எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பது பற்றி அவர் அறிந்துகொள்ள வேண்டும். கடலோர மாநிலங்களுடைய செயல்பாட்டினை முடக்கக்கூடிய வகையில் ஓர் அறிவிக்கை வெளியிடுவதற்கு அவருக்கு எந்தவித அதிகாரமும் இல்லை. அவ்வாறு செயல்படுவதற்கு அவர் ஒன்றும் இந்த நாட்டின் சர்வாதிகாரி இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய அரசமைப்புச் சட்டத்தின் ஷரத்துகளுக்குக் கட்டுப்பட்டுத்தான் யாரும் பணியாற்ற முடியும்; யாரும் பணியாற்ற வேண்டும்.

*முற்பகல் 11-55*

அதனை மீறி யார் செயல்பட்டாலும் அதன் விளைவுகளை அவர்கள் அனுபவித்தே தீரவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு சிறிய விஷயத்திற்காக அரசியல் காழ்ப்புணர்ச்சி மட்டுமே மேலோங்க இப்பேர்ப்பட்ட ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ள டி.ஆர். பாலு மத்திய அமைச்சரவையில் தொடர்ந்து பணியாற்றும் தார்மீக உரிமையை அறவே இழந்துவிட்டார் என்பதுதான் எனது கருத்தாகும். (மேசையைத் தட்டும் ஒலி) மேற்படி 22-4-2003 நாளிட்ட அறிவிக்கையை வெளியிடுவதற்கு முன்னால் சம்பந்தப்பட்ட மாநில அரசுகளை அவர் கலந்தாலோசிக்கவில்லை என்பது மட்டுமல்ல, மத்திய அமைச்சரவைக் கூட்டத்திலும் அதை அவர் விவாதிக்கவில்லை. இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலையும் பெறவில்லை. தன்னிச்சையாக டி.ஆர். பாலு இந்த அறிவிக்கையை வெளியிட்டிருக்கிறார். மேலும், 22-4-2003 அன்றே பத்திரிகைகளுக்கு தனது அறிவிக்கையை வெளியிட்ட டி.ஆர். பாலு, சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுக்கு அந்த அறிவிக்கையை அனுப்பவில்லை. இப்படி ஓர் ஏதேச்சாதிகாரமான செயல்பாட்டுடன்கூடிய அவருடைய அடாத செயல் குறித்து அவரின், மக்கள் விரோத, மாநில அரசுகளுக்கு எதிரான போக்கு குறித்து மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர், மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மாண்புமிகு உள் துறை அமைச்சர் ஆகியோரின் கவனத்திற்கு நான் கொண்டுசெல்ல விரும்புகிறேன். மேற்படி 22-4-2003 அறிவிக்கை எதிர்க்கப்படுவதற்கு என்னென்ன வழிவகைகள் உள்ளனவோ அவற்றை இந்த அரசு





உறுதியுடன் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இதனால் பாதிப்பு அடைந்துள்ள அத்தனை கடலோர மாநிலங்களின் முதல் அமைச்சர்களுடனும் இதுகுறித்துத் தொடர்புகொண்டு செயல்பட முடிவு செய்துள்ளேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தனி மனிதர் ஒருவர்மீது கொண்டுள்ள காழ்ப்புணர்ச்சி ஒரு மாநிலத்தின் நலனை மட்டுமல்ல, பல மாநிலங்களின் நலனைப் பாதிக்கும் அளவிற்கு எவ்வளவு தூரம் போகமுடியும் என்பதற்கு உச்ச பட்ச உதாரணம்தான் டி.ஆர். பாலு. ஆட்சியில் இருக்கிறோம் என்ற ஒரே காரணத்தால் மக்கள் தந்த அதிகாரத்தைத் தவறான முறையில், ஒரு மாநில அரசுக்கும், அதன் மக்களுக்கும் விரோதமாகப் பயன்படுத்த எந்த ஓர் அமைச்சருக்கும் உரிமையில்லை. அவ்வாறு செயல்படுவதற்கு அவருக்குச் சட்டரீதியாக எந்தப் பாதுகாப்பும் இல்லை. அப்படிப்பட்ட நபர்கள் மக்கள்முன் பதில் சொல்லியாக வேண்டும். அந்தக் காலம் வெகு தொலைவில் இல்லை என்பதை இந்த மாமன்றத்தின் மூலம் தமிழக மக்களுக்கு மட்டுமல்லாமல், இந்திய மக்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. எஸ்.ஆர்.பி. (குறுக்கீடு) இல்லை, எஸ்.ஆர்.பி. நான் 110-வது விதியைப் படிக்கிறேன். (குறுக்கீடு) 110-வது விதியை நான் படிக்கிறேன். 110-வது விதி என்பது 'பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைப்பற்றி ஓர் அமைச்சர் பேரவைத் தலைவரின் இசைவுடன் அறிக்கை ஒன்றை அளிக்கலாம். அவ்வறிக்கையின்மீது அப்போது எவ்வித விவாதமும் இருத்தல் கூடாது. உள் விதி 1-ன்கீழ் அறிக்கை அளிக்க விரும்பும் ஓர் அமைச்சர் எந்நாளில் அந்த அறிக்கையை அளிக்க விரும்புகிறார் என்பதையும் பேரவைத் தலைவரின் பார்வைக்கு வைக்க அதன் பிரதி ஒன்றையும் முன்கூட்டியே செயலாளருக்கு அனுப்ப வேண்டும்.' இதிலே இவ்வளவுதான். இதிலே, விவாதம் கூடாது என்பது விதி. விவாதத்திற்கு நான் அனுமதிக்கவில்லை. ஆகவே உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைகிணங்க அகற்றப்பெற்றது.

## 4. அறிவிப்பு

### பேரவைக் குழுக்களுக்கான தேர்தல் அட்டவணையில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கான தேர்தல். 2003-2004 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, அவை உரிமைக் குழு ஆகியவற்றிற்கான தேர்தல் அட்டவணையில் பின்வரும் மாற்றங்கள் செய்யப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட விரும்பும் வேட்பாளர்கள் தங்களது வேட்புத் தாள்களை..... (குறுக்கீடுகள்)

110-வது விதியின்கீழ் விவாதம் கூடாது என்பது விதி. விவாதிக்க நான் அனுமதிக்கவில்லை. விதிப்படி விவாதிக்க நான் அனுமதிக்கவில்லை. ஆகவே, தாங்கள் பேசியது அனைத்தும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

தேர்ந்தெடுக்கப்பட விரும்பும் வேட்பாளர்கள் தங்களது வேட்புத்தாள்களை 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாள், திங்கட்கிழமை முற்பகல் 11-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

நண்பகல் 12-00

வேட்புத்தாள்கள் 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாள், திங்கட்கிழமை மாலை 5-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 13 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை முற்பகல் 11-00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம். வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 14 ஆம் நாள், புதன்கிழமை குழுக்களுக்கான தேர்தல் நடைபெறும். (குறுக்கீடுகள்)

## 5. கவன ஈர்ப்பு

### (அ) அரூர் தொகுதி, அங்குத்தி சுனையின் குறுக்கே அணை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. கிருஷ்ணமூர்த்தி



அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கிருஷ்ணமூர்த்தி. (குறுக்கீடுகள்) திரு. கிருஷ்ணமூர்த்தி. (குறுக்கீடுகள்) 110-வது விதியின் கீழ் விவாதம் கிடையாது. விவாதம் கிடையாது. நான் அனுமதிக்கவில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்ப்டுகிறது. (குறுக்கீடுகள்) விதியைப் படித்து விட்டேன். இதிலே விவாதம் கிடையாது. (குறுக்கீடுகள்) நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) விதி 110-ன்கீழ் விவாதம் கிடையாது. அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) 110-வது விதியின்கீழ் விவாதம் கிடையாது. ஆகவே, நான் அனுமதிக்கவில்லை. ஆகவே, அதுபற்றி நீங்கள் பேசிய அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. திரு. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருக்ஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், அங்குத்தி சுனையின் குறுக்கே அணை கட்டுவதற்காக அறிவிப்பு செய்தும் இதுவரை பணி துவங்கப்படாதது குறித்த" அவசர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அறிக்கை

(1) தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், அங்குத்தி சுனையின் குறுக்கே அணை கட்டும் திட்டம் 2001-2002-ம் ஆண்டு

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்ட திட்டங்களுள் ஒன்றாகும். இத்திட்டத்தில் சிங்காரப்பேட்டை பகுதி—ஜவ்வாது மலையில் அங்குத்தி சுனையிலிருந்து உற்பத்தியாகும் தண்ணீர் வரும் ஓடை பராமரிப்பின்றி நிலங்களின் ஊடே பரவிச் சென்று வீணாவதை மலை அடிவாரத்தில் தடுப்பு அணை கட்டி ஏற்கெனவே உள்ள இடதுபுறக் கால்வாய் மற்றும் வலதுபுறக் கால்வாய் புனரமைப்பு செய்து அதன் வழியாக ஊத்தங்கரை வட்டத்திலுள்ள கிணத்துக்குட்டை குமரன் ஏரி, ரெட்டி வலசை ஏரி, கிட்டம்பட்டி ஏரி, பெருமாள் கோயில் ஏரி, கூடப்பட்டான் ஏரி, வெள்ளக் கவுண்டன் ஏரி, மிட்டப் பள்ளி புது ஏரி போன்ற ஏரிகளுக்கு நீர் அளிப்பதன் மூலம் ஏரிகள் மூலமாக 500 ஏக்கர் நிலம் பயனடையும் வண்ணம் ரூ.60.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது.

(2) அரசின் நிதிநிலை நெருக்கடி காரணமாக மேற்படித் திட்டம் நபார்டு வங்கியின் உதவி பெற்று பணி மேற்கொள்வதற்காக, நபார்டு வங்கியின் வழிகாட்டுதலுக்கிணங்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு சென்னை, பொதுப் பணித் துறை நீர்வள ஆதார அமைப்பு, திட்ட உருவாக்கம் தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. தற்போது இம்மதிப்பீட்டில் திட்ட உருவாக்கம் தலைமைப் பொறியாளர் அவர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள சில தொழில்நுட்பக் குறிப்புகள் நிவர்த்தி செய்ய தருமபுரி பொதுப் பணித் துறை, நீர்வள ஆதார அமைப்பு, மேல்பெண்ணையாறு வடிநில கோட்ட செயற் பொறியாளரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் 2003-2004-ம் நிதியாண்டில் நபார்டு வங்கியின் நிதி உதவி பெற வேண்டிய பட்டியலில் சேர்க்கப்பட்டு, நிதி உதவி பெறப்பட்டவுடன் பணி செயல்முறைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிருஷ்ணமூர்த்தி, கேள்வியைக் கேட்பதாக இருந்தால் கேளுங்கள். இல்லையென்றால் அடுத்த கவன ஈர்ப்பை எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருக்ஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...(குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





## (ஆ) சுயநிதி மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிக் கட்டடங்கள் மற்றும் கட்டணங்களை முறைப்படுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்தது. திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. பி.கே. சேகர்பாபு. (குறுக்கீடுகள்) திரு. பி.கே. சேகர்பாபு.

***திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் உள்ள சுயநிதி மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் கட்டண விகிதத்தை முறைப்படுத்துவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 110-ன்கீழ் விவாதம் கிடையாது. (குறுக்கீடுகள்) ஆகவே, அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

மாநில அரசின் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் துறை தயாரித்துள்ள அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் பட்டியலின்படி தமிழ்நாட்டில் மொத்தம் 3,450 சுயநிதி மெட்ரிகுலேஷன் பள்ளிகள்/மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. இப்பள்ளிகள் தொடர்பாக கீழ்க்காணும் நேர்வுகள் குறித்த ஆய்வு செய்து அரசுக்குப் பரிந்துரைகள் செய்ய அரசாணை நிலை (2டி) எண் 15 பள்ளிக் கல்வித் துறை, நாள் 6-3-2002இல் டாக்டர் சை.வே. சிட்டிபாபு தலைமையில் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*(1) மெட்ரிகுலேஷன் பள்ளிகள் மற்றும் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிகளில் கட்டண விகிதங்கள் நிர்ணயம் குறித்து.*

*(2) மெட்ரிகுலேஷன் பள்ளிகள் மற்றும் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான குறைந்த அளவு உள்கட்டமைப்பு வசதிகள் செய்தல் குறித்து.*

*(3) மெட்ரிகுலேஷன் பள்ளிகள் மற்றும் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம் குறித்து.*

டாக்டர் சை.வே. சிட்டிபாபு, முன்னாள் துணைவேந்தர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட இக்குழு தனது இறுதி அறிக்கையை தயார் செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் 23-4-2003 அன்று அளித்து உள்ளது. இக்குழுவின் அறிக்கையையும் தனியார் சுயநிதி கல்வி நிறுவனங்கள் கல்விக் கட்டணம் வசூலிப்பது தொடர்பாக உச்ச நீதிமன்றம் 31-10-2002 அன்று பிறப்பித்துள்ள ஆணையையும் ஆராய்ந்து சுயநிதி/மெட்ரிக்/மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகளில் கல்விக் கட்டணங்கள் முறைப்படுத்துவது தொடர்பாக அரசு உரிய நடவடிக்கை எடுத்து தக்க ஆணைகள் பிறப்பிக்கும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையினைப் படித்தேன். தமிழ்நாட்டில் மொத்தம் 3,450 சுயநிதி மெட்ரிகுலேஷன் பள்ளிகள், மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிகள் உள்ளதாக அறிக்கையில் உள்ளது. (குறுக்கீடுகள்) புற்றீசல்கள் போல இன்றையதினம்—இந்தப் பள்ளிகள் அனைத்தும், அங்கீகாரம் அளிக்க கூறப்பட்ட விதிமுறைகளை தற்போது கடைபிடிக்கின்றனவா?

*(இந்திய தேசிய காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

சுமார் 682 பள்ளிகள் அரசு அனுமதி பெறாமல், அங்கீகாரம் பெறாமல் செயல்படுவதாக அரசு அமைத்த மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் ஆய்வு, உயர்மட்டக் கமிட்டி தலைவர் எஸ்.வி. சிட்டிபாபு அவர்கள் 5-6-2002 அன்று கூறியுள்ளார்கள். ஆகவே, அங்கீகாரம்





பெறப்படாத இந்தப் பள்ளிகள்மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றதா? அல்லது வருங்காலங்களில் இந்தப் பள்ளிகளின் அங்கீகாரத்தை இரத்து செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதேனும் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு மொத்தம் 33 மெட்ரிகுலேஷன் பள்ளிகள் என்று இருந்த நிலை மாறி, இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, 3,450 மெட்ரிகுலேஷன் பள்ளிகள் தமிழகத்திலே நடைபெற்று வருகின்றன. இந்தப் பள்ளிகள் எல்லாம், 1978 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்தினுடைய கட்டுப்பாட்டிலே இருந்தன. அதற்குப் பின்னாலே, பள்ளிக் கல்வி இயக்குநருடைய கட்டுப்பாட்டில் இவை வந்தன. ஆனால் நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் மெட்ரிகுலேஷன் பள்ளிகளை முறைப்படுத்துவதற்கென்று தனி இயக்குநரகமே ஆரம்பிக்கப்பட்டது. அந்தப் பெருமை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசையே சாரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல புற்றீசல்கள் போல் வளர்ந்துள்ள இந்த மெட்ரிகுலேஷன் பள்ளிகள், அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று சொன்னால், அதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் இல்லாமல்—நிலம் தேவையான அளவுக்கு இல்லாத நிலையில்-இன்னும் சொல்லப்போனால், கட்டடங்கள் தேவையான அளவுக்கு இல்லாத நிலையிலே பல பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. அவற்றையெல்லாம் முறைப்படுத்துவதற்காகத்தான் நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு டாக்டர் சிட்டிபாபு அவர்களுடைய தலைமையிலே ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழு தன்னுடைய இறுதி அறிக்கையை 23-4-2003 ஆம் நாளன்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவிடம் அளித்திருக்கிறது. அந்தக் குழுவினுடைய பரிந்துரைகளை அரசு இப்போது பரிசீலித்து வருகிறது. ஏற்றுக்கொள்ளப்படுகிற அந்தப்

பரிந்துரைகள்மீது அரசு ஆணை பிறப்பிக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படித் தகுதியில்லாத அந்த மெட்ரிகுலேஷன் பள்ளிகள்—தங்களைத் தகுதியாக்கிக்கொள்வதற்கு 3 ஆண்டு காலம் அவர்களுக்கு இப்போது அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அந்த 3 வருட அவகாசத்தில் அவர்கள் தேவையான கட்டடங்களைக் கட்டிக்கொள்ள வேண்டும். தேவையான நிலங்களை அரசுக்குக் காட்ட வேண்டும் என்ற அந்த நிபந்தனையோடு அவர்களுக்கு இப்பொழுது அனுமதி மட்டும் அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த 3 ஆண்டு காலத்திற்குள் அங்கீகாரம் பெற வேண்டுமென்று சொன்னால், இந்தத் தேவைகளை அவர்கள் நிச்சயமாகப் பூர்த்தி செய்ய வேண்டும்.

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிக்காத ஏழைத் தாய்மார்கள்கூடத் தங்கள் பிள்ளைகள் படித்து, வருங்காலத்தில் நல்ல நிலைக்கு வரவேண்டுமென்று தங்களுடைய கஷ்டங்களுக்கிடையேயும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் சேர்க்க விரும்புகிறார்கள். குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்க்க தாய், தந்தையர்கள் படித்தவர்களாக இருக்க வேண்டுமென்ற கட்டுப்பாட்டினை மெட்ரிகுலேஷன் பள்ளிகள் விதிக்கின்றன. மேலும் ஒருசில பள்ளிகளில் பெற்றோர்களுக்குகூட நேர்முகத் தேர்வு நடத்த வேண்டுமென்று கூறுகிறார்கள். ஒருசில பள்ளிகளில், தற்போது பள்ளிகளில் தொடங்கி கல்லூரிகள் வரை தன்னாட்சி என்று பெயர் வைத்துக்கொண்டு அவர்கள் விருப்பம்போல நன்கொடையைக் கேட்கிறார்கள். கோடை விடுமுறைக்குப் பிறகு ஜூன் மாதம் பள்ளிகள் திறக்க இருக்கின்ற நிலையில், இதுபோன்ற செயல்களைக் கட்டுப்படுத்த மாவட்ட கல்வி அலுவலர் தலைமையில் கண்காணிப்புக் குழுக்களை அமைத்து விழிப்புடன் கண்காணித்து, தவறு செய்கின்ற மெட்ரிகுலேஷன் பள்ளிகளைப் பற்றி அரசுக்குப் பரிந்துரைத்து கிரிமினல் நடவடிக்கை போன்ற நடவடிக்கைகளை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் சொன்னதைப்போல, எந்த மெட்ரிகுலேஷன் பள்ளியிலாவது மாணவ, மாணவிகளைச் சேர்க்கிற பொழுது, அவர்களுடைய பெற்றோர்கள் பட்டம் பெற்றவர்களாக இருக்க வேண்டும், அப்படிப்பட்ட குடும்பத்தில் இருக்கிற மாணவ, மாணவிகளைத்தான் எங்களுடைய பள்ளியிலே சேர்க்க வேண்டுமென்ற நிபந்தனைகளை விதித்தால், அது நிச்சயமாக சட்டப்படி தவறு. அப்படிப்பட்ட எந்த நிபந்தனையையும் மாணவ, மாணவிகளைச் சேர்க்கிறபோது எந்த மெட்ரிகுலேஷன் பள்ளியும் விதிக்கக்கூடாது. அதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு நிச்சயமாக அனுமதிக்காது. இந்த நிபந்தனையை விதிப்பது 6 முதல் 14 வயது வரையிலான இலவச பள்ளிக் கல்விக் கொள்கைக்கு எதிரான செயலாகக் கருதப்படும். இப்படி ஏதாவது நடைபெற்றால் அரசினுடைய கவனத்திற்குக் குழந்தைகளினுடைய பெற்றோர்கள் தவறாமல்--இன்னும் சொல்லப்போனால்—பயமின்றித் தெரிவிக்கலாம். அப்படிப்பட்ட பள்ளிகள் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னதைப்போல, சில மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் அதிகப்படியான கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்ற புகாரும் வந்திருக்கிறது. அதையெல்லாம் முறைப்படுத்தவதற்காகத்தான் நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, டாக்டர் சிட்டிபாபு அவர்களுடைய தலைமையிலே ஒரு குழுவை அமைத்து அவர்களுடைய அறிக்கையினை நாங்கள் பெற்றிருக்கிறோம். அந்தப் பரிந்துரைகளிலே இதுவும் ஒரு பரிந்துரைதான். எனவே, நிச்சயமாக மெட்ரிகுலேஷன் பள்ளியில் கட்டண விகிதம் முறைப்படுத்தப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. அறிக்கைகள் அளித்தல்

### மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2001-2003 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 31 மற்றும் 32 ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 7. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 13 - எரிசக்தித் துறை
### (ஆ) கோரிக்கை எண் 26 - தொழில் துறை

### (அ) கோரிக்கை எண் 13 - எரிசக்தித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2003-2004* ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் *13* - எரிசக்தித் துறை, மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரிசக்தித் துறை மானியக் கோரிக்கை....

*(மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் தனது இருக்கைக்கு வந்து அமர்ந்துவிட்டு, உடன் எழுந்து சென்றார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், இப்படியெல்லாம் வந்துவிட்டு ஓடக்கூடாது. உட்காருங்கள். உங்கள் கட்சி உறுப்பினர்களை வரச்சொல்வோம். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.274,47,18,000/- மூலதனக் கணக்கில் ரூ.25,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.212,25,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் *6796*, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

***திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி விவாதிக்க", நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,18,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.212,25,00,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *263*, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகள் அனைவரும் தொடர்ந்து இலவச மின்சாரம் பெற்று விளைபொருள் உற்பத்தியில் ஈடுபட துறை நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க", நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,18,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.212,25,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *428*, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகளுக்குத் தொடர்ந்து அரசு இலவச மின்சாரம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க", நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,18,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.212,25,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *6872*, திரு. ஆ. ராஜகோபால்.

***திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்த இலவச மின்சாரத்தைத் தொடர்ந்து வழங்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க", நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,18,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.212,25,00,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4685, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மின் உற்பத்தியை அதிகரிக்க புதிய மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க", நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,18,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.212,25,00,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6274, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மரபு சாரா (Non-Conventional) எரிசக்தியை விவசாய பம்புசெட்டுகளுக்குப் பயன்படுத்துவது குறித்து ஒரு திட்டம் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க", நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.274,47,18,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.212,25,00,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6319, திரு. கே.வி. முரளிதரன்.

***THIRU K.V. MURALIDHARAN:** Hon. Speaker Sir, "to discuss the need to continue the free electricity supply scheme to all the agricultural pumpsets and huts in Tamil Nadu", I move—



"That the sum of Rs.274,47,18,000/- allocated under Revenue account, Rs.25,00,00,000/- allocated under Capital account and Rs.212,25,00,000/-allocated under Loan account, under Demand No.13 - Energy Department, be reduced by Rs.100/-".

## (ஆ) கோரிக்கை எண் 26 - தொழில் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 26- தொழில் துறை, மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.41,32,73,000/-மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.4,00,02,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 7520, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,32,73,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,00,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6273, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 41,32,73,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,00,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1228, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறையில் தொழிற்சாலை ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 41,32,73,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,00,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4697, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பின்தங்கிய மக்கள் அதிகம் வாழும் அறந்தாங்கி தொகுதியில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும்முகத்தான் புதிய தொழிற்சாலைகள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 41,32,73,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,00,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6880, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி தொகுதி, ஆலங்குளம் அரசு சிமெண்ட் தொழிற்சாலையினை நவீனமயமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 41,32,73,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,00,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4771, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரியலூர், ஆலங்குளம் அரசு சிமெண்ட் தொழிற்சாலைகளை நவீனமயமாக்க போதிய நிதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,32,73,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,00,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. (குறுக்கீடு)

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்தேன். என் பெயரைக் கூப்பிடவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியா? சரி; வெட்டுத் தீர்மானம் எண் 6321, திரு. கே.வி. முரளிதரன்.

***THIRU K.V. MURALIDHARAN:** Hon. Speaker Sir, "to discuss the need to start Electronic Industries at Dankanikota and Hosur", I move—

"That the sum of Rs. 41,32,73,000/- allocated under Revenue account and Rs. 4,00,02,000/- allocated under Capital account under Demand No.26 - Industries Department, be reduced by Rs.100/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரிசக்தித் துறை, தொழில் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்து கொள்ளவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்துகளைத் தெரிவித்தபின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால்.

***திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை, எரிசக்தித் துறை ஆகிய இரண்டு மானியக் கோரிக்கைகளின்மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசுவதற்கு அனுமதி அளித்த தங்களுக்கும், எங்கள் சட்டசபை கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும் முதற்கண் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டின் வளர்ச்சியில், முன்னேற்றத்தில் பெரும் பங்கு வகிப்பதில் தொழில் துறை முக்கியமாக இருக்கிறது. எந்த ஒரு நாட்டின் தொழில் துறை வளமானதும், நலமானதுமாக இருக்கிறதோ அந்த நாடுதான் வளர்ச்சியடைந்த நாடு என்கின்றோம். An industrially advanced State is a developed State.

தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தியில் முதன்மை துறை பங்களிப்பு--Primary Sector பங்களிப்பு சுமார்--18%. இரண்டாம் நிலை, Secondary Sector சுமார் 34% பங்களிக்கின்றது. மூன்றாம் துறையான பணித் துறையில் 48% பங்களிப்பு உள்ளது. தமிழகத்தில் மொத்த உற்பத்தியில் 18 சதவிகிதமே உள்ள முதன்மைத் துறையான Primary Sector துறையை நம்பி 65% மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

@ 137 முதல் 165 வரையிலான பக்கங்களில் இணைப்பு I-ஆகவும் 166 முதல் 201 வரையிலான பக்கங்களில் இணைப்பு II-ஆகவும் அச்சிடப் பெற்றுள்ளன.



தமிழ்நாட்டின் தொழில் முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு, மொத்த உற்பத்தியில் 34 சதவிகிதமே உள்ள இந்தத் துறையின் பங்கு அதிகரிக்கப்பட வேண்டும்.

கடந்த சில தினங்களுக்கு முன்பாக இந்தச் சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், 'இந்தியாவிலேயே தமிழகம்தான் உற்பத்தித் துறை முதலீட்டில் முதன்மையாக இருக்கிறது' என்று C.M.I.E. பாராட்டியிருப்பதாக ஒரு மகிழ்ச்சியான செய்தியினைத் தெரிவித்தார்கள்; மகிழ்ச்சியடைகின்றேன், மனமுவந்து பாராட்டுகின்றேன். ஆனால், அதேநேரத்தில் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் மேலான கவனத்தை ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

கடந்த 2002-2003 ஆம் ஆண்டு தொழில் துறைக்கு ரூ. 87.64 கோடி அளவில் முதலில் ஒதுக்கப்பட்டு, பின்பு திருத்தப்பட்ட ஒதுக்கீடாக ரூ.157.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த ஆண்டு இந்தத் துறைக்கு சுமார் ரூ.45.32 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது; இது குறைவான தொகை. இதனை அதிகப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதுமட்டுமல்ல; கடந்த ஆண்டு 2002-2003-ல், TIIC-க்கு முதலில் ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டு, பின்னர் திருத்தப்பட்ட மதிப்பீட்டில் 8 கோடி ரூபாயாக அது குறைந்திருக்கிறது.

பிற்பகல் 12-15

அதேசமயத்தில் கடந்த ஆண்டு 'டிட்கோவிற்கு' முதலில் 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு பின்பு திருத்தப்பட்ட மதிப்பீட்டில் 10 கோடி ரூபாயாகக் குறைந்துள்ளது. இவ்வாறு அதிகமான தொகை முதலில் ஒதுக்கப்பட்டும், அந்த இரண்டு நிறுவனங்களும் ஒதுக்கப்பட்ட தொகையினை முழுமையாகப் பயன்படுத்த முடியாத காரண, காரியங்களை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து அதற்குரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமாய் இந்தத் தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இந்த ஆண்டு 'டிக்' மற்றும் 'டிட்கோ' விற்கு முறையே ஒதுக்கப்பட்ட தொகைகளான 17 கோடி ரூபாய் மற்றும் 10 கோடி ரூபாய் என்பது குறைவாக உள்ளதை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு, அதற்கு மேலும் அதிகமான

தொகையினை ஒதுக்கீடு செய்ய வேண்டுமாய் இந்தத் தருணத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொழில் துவங்கும் போது அப்போதிருந்த தொழில்நுட்பத்தின் அடிப்படையில் துவங்கப்பட்ட அந்த ஆலை மாறி வருகின்ற தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக பின்வரும் காலகட்டத்தில் அது நவீனமயமாக்கப்படுதல் அவசியமாகின்றது. அவ்வாறு நவீனமயமாக்கப்படவில்லை என்று சொன்னால், உற்பத்திச் செலவு அதிகமாகி, வெளிச் சந்தையிலே மற்ற நிறுவனங்களோடு போட்டியிட முடியாத ஒரு சூழ்நிலை அந்தத் தொழிலுக்கு ஏற்படுகின்றது. இதற்குச் சான்றாக எங்கள் சிவகாசி தொகுதியில் ஆலங்குளத்தில் 'டான்செம்' நிறுவனத்தின் சிமெண்ட் உற்பத்தி ஆலை கடந்த 32 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. வறட்சியான கரிசல் மண்ணில் அந்த ஆலை வெம்பக்கோட்டை ஒன்றியத்தில் சுமார் 1500 தொழிலாளர்களுக்கு நேரடியாகவும், வெம்பக்கோட்டை ஒன்றியத்தின் மேற்குப் பகுதியில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் சொந்த ஊரான ராமுத்தேவன்பட்டி உட்பட சுமார் ஐம்பது கிராம மக்களுக்கு--ஆயிரக்கணக்கான மக்களுக்கு--நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு அளித்து வருகின்றது. இந்த ஆலை துவக்கப்பட்ட காலத்தில் ஈரப்பத முறையில் அமைக்கப்பட்டது. தற்போது உள்ள நிலைமையில் இந்த ஆலை உலர்பத முறைக்கு—Dry Process-க்கு—நவீனப்படுத்த...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, திரு. ராஜகோபால்தான் என்னுடைய தொகுதி எம்.எல்.ஏ. என்னுடைய தொகுதியினுடைய கோரிக்கையை அமைச்சர் அவர்கள் கொஞ்சம் கனிவோடு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1970 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இந்த சிமெண்ட் தொழிற்சாலை மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜகோபால் அவர்கள். சொன்னதுபோல அந்தப் பகுதி மக்கள் மத்தியில் பெரிய வரவேற்பைப் பெற்றிருந்தாலும்கூட கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கிட்டத்தட்ட 110 கோடி ரூபாய்க்கு மேலாக நட்டம் ஏற்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சிமெண்ட் விற்பனையில், TWAD Board, MA & WS



மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்குத் தராமல் turn-key system முறையை அறிமுகப்படுத்தியதன் விளைவாக அதில் நட்டத்தைச் சந்திக்க வேண்டியிருந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த ஆலையை நவீனப்படுத்துவதற்கு கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய்க்கு மேலாகத் தேவைப்படுகிறது. 100 கோடி ரூபாய் ஏற்கெனவே நட்டத்தில் இருக்கிறது. இருந்தாலும்கூட--பேரவைத் தலைவர் அவர்களுடைய தொகுதி என்று சொல்கிறார்கள். பணம் வேண்டும். இருந்தாலும்—அது பற்றி அரசு சிந்தித்து முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் மட்டுமல்ல; தாங்கள் ஊருக்கு வருகின்ற போதெல்லாம் தங்களிடம் அந்தப் பகுதி மக்கள், அனைத்துப் பெருமக்களும் தங்களிடம் விடுக்கும் நீண்ட நாள் கோரிக்கை இதுதான். தங்களிடம் இதுபற்றி நான் அதிகமாகக் கூறுவது அவசியம் இல்லாத ஒன்றாக இருந்தாலும்கூட, அங்கே உள்ள இந்த ஆலை நவீனப்படுத்தப்பட வேண்டியதனுடைய அவசியத்தினையும், முக்கியத்துவத்தையும் தாங்கள் நன்கு அறிந்தவர்கள். நிதிநிலை ஒரு பக்கம் இருந்தாலும்கூட, அந்த வறட்சியான கரிசல் பூமியில் அங்கே இருக்கின்ற ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்புத் தருகின்ற ஒரே தொழிற்சாலை இதுதான். மேலும் அவ்வாறு நவீனப்படுத்துவதன் மூலமாக அங்கே இன்று உற்பத்திக்குத் தேவைப்படுகின்ற நிலக்கரி 45 சதவீதத்தில்—அது 15 சதவீதமாகக் குறைகிறது. அதேபோன்று உற்பத்திக்குச் செலவாகின்ற மின்சாரத்தில் சுமார் மூன்றில் ஒரு பங்கு குறைகிறது. Dry Process-ஆக செய்வதன் மூலம் தண்ணீர் அங்கே குறைவாக-தண்ணீர் ஏறத்தாழ தண்ணீருடைய அவசியமே தேவையில்லாத நிலைமை ஏற்படுகிறது. இவ்வாறு அந்த உற்பத்திச் செலவுகள் குறைகின்றபோது நிச்சயமாக ஏனைய நிறுவனங்களோடு அந்த நிறுவனமும் போட்டி போடுகின்ற, வெளிமார்க்கெட்டிலே போட்டிப் போடுகின்ற ஒரு நிலைமைக்குத் தன்னை நிச்சயமாக முன்னிலைப்படுத்திக்கொள்ளும். நவீனமயமாக்காததினால் அந்த ஆலையினுடைய அனைத்துத் தரப்புத் தொழிலாளர்களுமே தங்கள் சொந்த ஆலையாக எவ்வித பாகுபாடும் இல்லாமல் உழைத்தும்கூட அங்கு நிலைமை திருப்திகரமாக இல்லை.

இவை அனைத்தும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் நன்கு அறிவீர்கள். அதனால்தான் நான் மீண்டும் வலியுறுத்துகின்றேன். நிச்சயமாக தாங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், துறை அமைச்சர் அவர்களுக்கும் வற்புறுத்தி, இந்த ஆலையை நவீனமயம் ஆக்குவதன் மூலமாக, அந்தப் பகுதியிலுள்ள மக்களுடைய வயிற்றில் நீங்கள் பாலை வார்த்ததாக இருக்கும் என்று, இந்தத் தருணத்திலே நான் பணிவன்போடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்தபடியாக...

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களிலே அரசுத் துறையிலே இயங்குகின்ற ஒரே ஆலை அதுதான். மற்ற பஞ்சாலைகளோ, மற்ற எந்தவிதமான தொழில்களோ தென்பகுதியிலே இல்லை. ஆகவே, அந்தத் தென்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்புத் தருவதோடுகூட அரசுத் துறையிலே இயங்குகின்ற அத்தனை வேலைகளுக்கும், தென் பகுதியிலே இருக்கின்ற மாவட்டங்களுக்கு அந்த சிமெண்ட் ஆலையின் மூலமாகத்தான் சிமெண்ட் சப்ளை செய்யப்படுகிறது. இப்போது அவர்கள்தான் *130* ரூபாய்க்கு சிமெண்ட்டைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசுக்கு ஒரு நல்ல பெயரை ஈட்டித் தருகின்ற ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்த ஆலையைப் புனரமைப்பதற்கு, ஏதாவது நிதியை ஒதுக்கிச் சீர்செய்து தர வேண்டுமென்று அன்போடு உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் எனக்குத் தோள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர், நண்பர் சந்தானம் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தொழில் துறையில் ஒரு நிரந்தரமான வளர்ச்சி என்பது, புதிய தொழில்களைத் தொடங்குவது மட்டுமல்ல; அந்தத் தொழில்கள் தொடர்ந்து நடைபெறுவதற்கும், ஏற்கெனவே இயங்குகின்ற ஆலைகள்



தொடர்ந்து இயங்குவதற்குமான சூழ்நிலையை அமைத்துத் தருவதும் இன்றியமையாதது. அந்த வகையிலே பார்க்கின்றபோது, மூலப்பொருள் பற்றாக்குறை, நிதி நெருக்கடி, விற்பனைச் சந்தை மற்றும் தொழிலாளர் பிரச்சினை என்று பல்வேறு காரணங்களால், பல தொழிற்சாலைகள் இன்று மூடப்பட்டுள்ள சூழ்நிலை இருக்கின்றது. இந்த நிலைமைகளைச் சீர்செய்ய மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஓர் ஆய்வினை மேற்கொண்டு, தக்க நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமாய் இந்தத் தருணத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உதாரணமாக, தமிழ்நாட்டிலே நூற்பாலைகள் பரவலாக பல்வேறு பகுதிகளில் மூடப்பட்டுள்ள சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதனை ஆய்வு செய்கின்றபோது, முதன்மையான ஒரு காரணம், மூலப்பொருளான பஞ்சு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ஒருசில நிறுவனங்கள் மட்டும் அவற்றுக்குள்ள நிதி ஆதாரங்களைக் கொண்டு, அயல் நாடுகளிலிருந்தும், வட மாநிலங்களிலிருந்தும் பஞ்சினைப் பெற்று, ஆலைகளை இயக்கி வருகின்றன. பெரும்பாலான நிறுவனங்கள் அவ்வாறு செய்ய இயலாததால், சில நூற்பாலைகள் மூடப்பட்டுள்ள சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்தப் பற்றாக்குறை நிலைமையிலும்கூட, விவசாயிகள் பருத்திக்கு விலை கட்டுப்படியாகாததால், பருத்தி சாகுபடி செய்கின்ற விஸ்தீரணமும் ஆண்டுக்காண்டு குறைந்து வருகின்றது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், தன்னுடைய நிதிநிலை அறிக்கையில் பத்தி 64-ல் துணித் தொழிலுக்கென தனியான ஓர் இயக்கத்தினை பற்றிக் குறிப்பிடுகின்றபோது, தரமான பருத்தி உற்பத்தியினைப் பெருக்குவதையும் ஓர் அம்சமாகக் குறிப்பிட்டுள்ளார். மத்திய அரசினை வற்புறுத்தி, பருத்தி உற்பத்திச் செலவிற்கு ஏற்ற கட்டுப்படியான விலையை நிர்ணயம் செய்வதன் மூலம், பருத்தி சாகுபடி செய்கின்ற பரப்பளவினை அதிகப்படுத்துவதன் மூலம், நூற்பாலையின் மூலப்பொருளான பருத்தி உற்பத்தியைப் பெருக்குவதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தத் தருணத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோன்று, நூற்பாலைகளைப் பொறுத்த அளவிலே, அதனுடைய மொத்த உற்பத்திச் செலவில் மூலப்பொருளான பஞ்சுதான் *75* விழுக்காடான உற்பத்திச் செலவினை உள்ளடக்கியது என்கின்ற ஒரு காரணத்தினால், நூற்பாலைக்கு இந்தப் பஞ்சுப் பற்றாக்குறை என்பது

மிகவும் ஒரு நெருக்கடியான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. அதுவும் குறிப்பாக, தென் மாவட்டங்களிலே பல நூற்பாலைகள் இயங்காமல் மூடப்படுகின்ற ஒரு சூழ்நிலைக்கு இந்த மூலப் பொருள்தான் காரணம் என்பதனையும் இந்தத் தருணத்திலே மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டுள்ளேன்.

*பிற்பகல் 12-25*

அடுத்தபடியாக, கிராமப்புற ஊராட்சிகள், கிராமப்புறப் பேரூராட்சிகள் போன்றவையெல்லாம், சில சமயங்களில் போதுமான நிதிநிலைமை பெற்றிராதச் சூழ்நிலையில் அவர்கள் மின்சாரத்திற்குச் செலுத்த வேண்டிய மின் கட்டணத்தை உரிய காலத்தில் செலுத்த முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. வருடந்தோறும் recurring expenditure-ஆக இருக்கின்ற இந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்கு, உள்ளாட்சி அமைப்புகளில் சூரிய சக்தியைப் பயன்படுத்தித் தெருவிளக்குகள் அமைப்பதற்கான—ஒரு குறிப்பிட்ட கால இலக்கை நிர்ணயித்து—ஒரு திட்டத்தினை உருவாக்கி, ஊராட்சிகளிலும், கிராமப்புறப் பேரூராட்சிகளிலும், அத்தகைய தெருவிளக்குகளை, சூரிய சக்தியின் மூலமாக இயங்குகின்ற தெருவிளக்குகளை நிறுவுவதற்கான ஒரு திட்டத்தினையும், அதேபோன்று குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்குக் காற்றாலை மூலமாக நீரை இறைப்பதற்கான சாத்தியக்கூறுகளையும் ஆராய வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று அரசு அலுவலகங்களிலும், மருத்துவமனைகளிலும் அவற்றுக்குத் தேவையான மின்சக்தியினை சூரிய சக்தியின் மூலமாகப் பெறுவதற்கான திட்டத்தினைச் செயல்படுத்துவது எந்த அளவிற்கு சாத்தியம் என்பதனை இந்த அரசு ஆராய வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல மருத்துவமனைகளிலும், அரசு அலுவலகங்களிலும் தற்போது சூரிய சக்தியின் மூலமாக மின்சக்தி பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. ராஜகோபால்:** அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, அது ஒரு குறிப்பிட்ட காலத் திட்டமாகவும் செயல்படுத்துவதற்குரியச் சாத்தியக்கூறுகளை ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக, விவசாயி என்றாலே நிரந்தரமாகக் கடன்பட்டவர் என்றுதான் பொருள்கொள்ள வேண்டிய ஒரு கஷ்டமான சூழ்நிலைக்கு இன்று விவசாயிகள் ஆளாகியுள்ளார்கள். சிறு, குறு விவசாயிகள் என்ற அந்த வரையறைகளில், அதிகபட்சமாக, 5 ஏக்கர் உள்ள விவசாயிகள்தான் அடங்குவர். ஆனால், கிராமப்புறங்களில் சாதாரணமாக, பெரும்பாலும் 10 ஏக்கர், 15 ஏக்கர், 20 ஏக்கர் என்று வைத்திருக்கின்ற விவசாயிகள்தான் அதிகமாக உள்ளனர். இந்தச் சூழ்நிலையில் நிலம் எந்த அளவிற்கு அதிகமாக இருக்கின்றதோ, அந்த அளவிற்குக் கடன் தொல்லை, கடன் சுமை அதிகமாக இருக்கின்ற ஒரு சூழல் இன்றையதினம் விவசாயப் பெருங்குடி மக்களிடையே நிலவி வருகிறது. வறட்சி, விளைபொருட்களுக்கு கட்டுப்படியாகின்ற விலையில்லாத ஒரு சூழ்நிலை, கடன் சுமை ஆகிய இந்த நிலைமைகளில் மாண்புமிகு முதல்வர் கருணைகூர்ந்து, அனைத்துத் தரப்பு மக்களுக்கும், இலவச மின்சாரத்தை வழங்க வேண்டுமாய் விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாக, நானும் ஒரு விவசாயி என்ற முறையிலே, இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதும் மின்சாரம் இலவசமாகத்தான், கிட்டத்தட்ட 9 இலட்சத்து, 41 ஆயிரம் பேருக்கு இலவச மின்சாரம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொடர்ந்து, வழங்கப்பட்டு வருகிறது. மொத்தம் 16½ இலட்சம் பம்புசெட்டுகளில், 1½ இலட்சம் பேர் ஏற்கெனவே Self Financing Scheme-ல் பணம் கட்டி, அவர்கள் அந்தத் திட்டத்தை அனுபவித்து வருகிறார்கள். 9 இலட்சத்து 41 ஆயிரம் பேருக்கும் ஆயிரம் ரூபாய் வழங்குவதாக மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த மாமன்றத்திலே அறிவித்திருக்கின்றார்கள். அது மட்டுமல்ல. இலவச மின்சாரத்தைப்பற்றி, கடந்த நிதிநிலை அறிக்கையின்போதே—அது மின்சாரம் என்றாலே எல்லோரும் பயப்படுவார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர்களைப் பார்த்து மின்சாரம் பயப்படுகின்ற அளவிற்கு இந்தச் சட்டமன்றத்திலே விவாதிக்கப்பட்டது--நமது முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒரு எல்.கே.ஜி., யு.கே.ஜி. பிள்ளைகளுக்கு எப்படிப் பாடம் எடுக்க வேண்டுமோ, அந்த அளவிற்கு மின்சாரத்தைப்பற்றி மிகவும் தெளிவாகவும், விளக்கமாகவும் (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு முறைகளில், பல தினங்கள், நாள் ஒன்றிற்கு 20 தடவை, 30 தடவை இங்கே எழுந்து நின்று பதில் சொல்லி இருக்கின்றார்கள். மீண்டும் இலவச

மின்சாரம் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் கருதிவிடக்கூடாது. தொடர்ந்து இலவச மின்சாரம், தொடர்ந்து விவசாய மக்களுக்குத் தரப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கோரிக்கைகள் என்பது 9 இலட்சத்து 41 ஆயிரம் பேர் என்று தனியாக ஓர் இனம், 1½ இலட்சம் என்று தனியாக ஓர் இனம், 6 இலட்சம் என்று தனியாக ஓர் இனம் என்று மூன்று இனங்களாக வேண்டாம். விவசாயிகள் அத்தனை பேருக்கும் இதுகாறும் அனுபவித்து வருகின்ற இலவச மின்சாரம் தொடர வேண்டும்; அதேபோல குடிசைவாழ் மக்களுக்கும் அவர்கள் இதுகாறும் அனுபவித்து வந்த அந்த விளக்கிற்கான இலவச மின்சாரம் தொடர வேண்டும் என்பதைத்தான் நாங்கள் கோரிக்கையாக வைக்கிறோம். அந்தக் கோரிக்கைகளைத் தமிழக அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது தெளிவுபடுத்தினார்கள். இந்த ஒன்றரை இலட்சம் பேர், எந்தக் காலத்திலும் இலவச மின்சாரத்தைப் பெறவில்லை; அவர்கள், Self-Financing Scheme-இன்கீழ், தொடர்ந்து மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தி வருகிறார்கள் என்பதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது தெளிவுபடுத்தினார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இலவச மின்சாரத்தை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள், 16 இலட்சம் பேர் இருக்கிறார்கள். அந்த 16 இலட்சம் பேருக்கும் இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டுமென்று நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜகோபால், 2 மணித் துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி என்றால், அகில இந்திய அளவில், ஏன், உலக அளவில், தீப்பெட்டி, பட்டாசு மற்றும் அச்சுத் தொழிலுக்குப் பெயர் பெற்று விளங்குகிறது. அந்தப் பகுதி, கிராமப்புற வேலைவாய்ப்பில்



பெரும்பங்கு ஆற்றுகிறது. இருப்பினும்கூட, சிவகாசி நகரம், திருத்தங்கல் பேரூராட்சி மற்றும் சிவகாசி புறநகர்ப் பகுதிகளை உள்ளடக்கிய பகுதிகளுக்கு அங்கு ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சிக்கேற்ப, அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் போதுமானதாக இல்லை என்பது அப்பகுதி மக்களுடைய நீண்டகாலக் குறைபாடு. ஆகவே, திருப்பூர் நகர்ப்பகுதி மேம்பாட்டிற்கு அரசு வகுத்துள்ள வளர்ச்சித் திட்டத்தினைப் போன்று, சிவகாசி, திருத்தங்கல் மற்றும் சிவகாசி புறநகர்ப் பகுதிகளை உள்ளடக்கிய பகுதியில், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றினை மாண்புமிகு முதல்வர் வகுத்து நிறைவேற்றிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இத்திட்டம் அந்த மாவட்டத்தில் கிராமப்புற மக்களின் வேலைவாய்ப்பினை மேலும் பெருக்குகின்ற ஒரு தொலைநோக்குத் திட்டமாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

வெம்பக்கோட்டை நீர்த்தேக்கத்தின் கொள்ளளவை அதிகப்படுத்தி, அந்த நீர்த்தேக்கத்தின் பகுதியினை அகலப்படுத்த வேண்டியுள்ளது. அவ்வாறு அகலப்படுத்துவதன் மூலமாக, கோடை காலங்களில், சிவகாசி நகரத்தினுடைய குடிநீர்த் தட்டுப்பாட்டினைப் பெருமளவு குறைப்பதற்கு அது உதவியாக இருக்கும் என்பதனை இந்தத் தருணத்திலேச் சுட்டிகாட்டி, அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும் தெரியும் இந்தப் பிரச்சினை. விருதுநகர் மாவட்டம், மேற்குப் பகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கை, அழகர் அணை, பேயனாறு அணைத் திட்டமாகும். அந்த அணைத் திட்டம் நிறைவேறும்பட்சத்தில், ஸ்ரீவில்லிப்புத்தூர், இராஜபாளையம் மற்றும் சிவகாசி ஆகிய 3 வருவாய் வட்டங்களில் சுமார் 69 பெரிய, சிறிய பாசனக் கண்மாய்களுக்குப் பாசன வசதி ஏற்படுவதோடு, அப்பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து, கிராமப்புறங்களில் குடிநீர் வசதியினை மேம்பாடு செய்வதற்கும் அது ஏதுவாக இருக்கும். ஆகவே, அழகர் அணை, பேயனாறு அணைத் திட்டத்தினை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சிவகாசி தொகுதியில், ஆலங்குளம்-வெம்பக்கோட்டை சாலை, ஆலங்குளம்-மேலான்மறைநாடு சாலை, குகன்பாறை-ஏழாயிரம் பண்ணை சாலை, சிவகாசி-நரிக்குடி சாலை, சுக்ரவாரப்பட்டி-விருதுநகர் சாலை சந்திப்பு வரையிலான சாலை, நெடுஞ்சாலைத் துறையின் முக்கியமான

சாலைகள், கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாகச் சீரமைக்கப்படாமல் இருப்பதனால், அப்பகுதி மக்கள், போக்குவரத்திற்கு மிகவும் இடையூறுகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற ஒரு வருத்தமான சூழ்நிலை, இருப்பதால், அந்தச் சாலைகளை மேம்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு முதல்வர், கடந்த தடவை, முதல்வராக இருந்தபோது, விருதுநகர் மாவட்ட நீதிமன்றத்தினை ஸ்ரீவில்லிப்புத்தூரில் அமைத்துத் தந்தார்கள். அவ்வாறு அமைக்கப்பட்டும்கூட—அந்த மாவட்ட நீதிமன்றம் மற்றும் ஏனைய நீதிமன்றங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடம் கட்டப்பட வேண்டியது அந்தப் பகுதி மக்களினுடைய நீண்டகாலக் கோரிக்கை. அந்த ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்ற வளாகத்தினை—நிறைவேற்றித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். சிவகாசியில், சார்பு நீதிமன்றமும், மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும் மற்றும் குற்றவியல் நீதிமன்றமும் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. அதற்குரிய சொந்தக் கட்டடத்தினை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்தத் தருணத்திலே கேட்டுக்கொண்டு, அங்கே மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும், குற்றவியல் நீதிமன்றமும், District Munsif-cum-Judicial Magistrate என்று ஒரே நீதிமன்றமாகச் செயல்பட்டு வருகிறது. வருடத்திற்கு உரிமையியல் வழக்குகள் (மணியடிக்கப்பெற்றது) சுமார் 400 வரை தாக்கலாகின்றன. குற்றவியல் வழக்குகள், பல்வேறு குற்றவியல் சட்டங்களின்கீழ், ஆறு ஆயிரம் வரை தாக்கலாகின்றன. பல துறை வழக்குகளுக்கும், ஒரே நீதிமன்றமாக இருப்பதனால், உரிமையியல் வழக்குகளிலும், குற்றவியல் வழக்குகளிலும் கணிசமான அளவுக்குத் தேக்கம் ஏற்படுவதால், அது ஒரே நீதிமன்றமாக இருப்பதை, District Munsif-க்கு என்று ஒரு நீதிமன்றத்தையும், Judicial Magistrate-க்கு ஒரு நீதிமன்றத்தினையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்தத் தருணத்திலேக் கேட்டுக்கொண்டு, இதுகாறும் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய பணிவான வணக்கத்தினைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஜி. இராஜேந்திரன்.



**திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரியனும் சந்திரனும் நேருக்கு நேர் சந்திக்கும் மாசிப் பவுர்ணமியில் அன்னை சந்தியா தாய் அவர்களின் அருள் செல்வமாக உதித்து, கண்ணை இமை காப்பதுபோல், தமிழக மக்களைக் காத்துவரும் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு இதய தெய்வம் கழகப் பொதுச் செயலாளர் அம்மா அவர்கள் பேரவைக் கிளைக் கழகச் செயலாளரான என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கி இப்பேரவையில் மின்சாரம் மற்றும் தொழில் துறை மானியக் கோரிக்கை மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு என் நன்றியை மீண்டும் ஒரு முறை காணிக்கை ஆக்குகின்றேன்.

முத்தமிழ், ஏதோ தன்னுடைய
முப்பாட்டன் வீட்டுச் சொத்தென
முறை கொண்டாடியவர்கள் இன்று சங்கத் தமிழை
சந்தைப் பொருளாக விற்கையிலே
கன்னித் தமிழை, அறிவியல் தமிழாக்கி
பள்ளியில் கட்டாயப் பாடமாக்கி
சங்கம் வளர்த்த தமிழ் மங்காத
எங்கள் தமிழன்னையே!

தமிழ்நாடு மின்சாரத் துறை வரலாற்றிலே முதல் முறையாக தூத்துக்குடி, மேட்டூர் மற்றும் வடசென்னை அனல் மின் நிலையங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் அதாவது 2001-2002, 2002-2003 ஆகிய ஆண்டுகளில் மிக நன்றாகச் செயல்பட்டு ஒரே சமயத்தில் இந்திய அரசின் தங்கப் பதக்கம் மற்றும் ரொக்கப் பரிசு பெறுவதற்கு தகுதி பெற்றுள்ளன. இது மின்சாரத் துறையில் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மகத்தான சாதனையாகும். அதுமட்டுமின்றி, மின்சாரத் துறையில் தமிழ்நாடு தன்னிறைவு பெற்று இந்தியாவிலே முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து, மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை.

கடந்த கால தி.மு.க. ஆட்சியின்போது குளறுபடிகளுக்கு மத்தியில் சிக்கித் தவித்த மின்சாரத் துறையை ஆட்சிப் பொறுப்பேற்ற குறுகிய காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தம் மதிக்கூர்மையால் செவ்வனே செயல்படுத்தி, சீர்படுத்தி வருகிறார்கள். இந்தச் சாதனையைக் கண்டு பொறுக்காத தி.மு.க. உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள், 1999 ஆம் ஆண்டு இலவச மின்சாரத்தை இரத்துச் செய்து, மீட்டரைப் பொருத்துகிறோம் என்று சொல்லிவிட்டு, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது அவருடைய கட்சியின் தலைவர் எழுதித் தந்த கதை வசனத்திற்கு ஏற்ப இங்கு வந்து, ஏழை மக்களுக்காக நீலிக் கண்ணீர் வடிப்பதுபோல் நடித்துக்காட்டினார்கள். இந்த நடிப்பைப் பார்க்க நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இன்று இருந்திருந்தால் திரு. துரைமுருகன் நடிப்பைப் பார்த்து, அதிர்ச்சியிலேயே இறந்திருப்பார். ஆனால், அவர்கள் நடிப்பைத் தமிழக மக்கள் என்றுமே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் திட்டவட்டமாக உங்கள்முன் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின்படி மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டாலும், தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள்—சிறு மற்றும் குறு விவசாயிகளைப் பாதுகாக்க 3 எச்.பி. பம்பு-செட் வைத்திருப்பவர்களுக்கு ரூ.1,000/- என்றும், 5 எச்.பி. பம்பு-செட் வைத்திருப்பவர்களுக்கு ரூ.1,250/- என்றும் உதவித் தொகையாக வழங்கி விவசாயப் பெருமக்களைக் காப்பாற்றிய அரசு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அரசு என விவசாயப் பெருமக்கள் அனைவரும் பாராட்டுகின்றனர்.

அதேபோல் குடிசையில் வாழும் ஏழைக் குடிமக்களுக்கு மின்சாரத்திற்கு ரூ.100/-உதவித் தொகை வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் குடிசைவாழ் மக்கள் நன்றியுடன் பாராட்டுகிறார்கள்.

அடுத்து தொழில் து[illegible] வளர்ச்சி. தகவல் தொழில்நுட்பம், உயிரியல் தொழில்நுட்பம் ஆகிய இரண்டும் ஒரு நாட்டிற்கு மிக முக்கியம். ரூ.450 கோடி செலவில் சிங்கப்பூர் நிறுவனமான அசென்டாஸ் இந்தியா (பி.) லிமிடெட்-உடன் இணைந்து கூட்டு முயற்சியில், புதிய தகவல்



தொழில்நுட்பப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. டைசல் உயிரியல் தொழில் நுட்பப் பூங்கா தொழில் முனைவோர்க்கு வாடகை அடிப்படையில் தரமான இட வசதிகள், சோதனைக்கூட ஆய்வுப் பணிகளை நல்கி உயிரியல் தொழில் நுட்பத் துறையில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஒசூர் அருகே அமையவிருக்கும் டான்ஃபுளோரா; ஆசியாவிலே இது மிகப் பெரிய பூங்காவாகும். நேற்று முன்தினம் சென்னைக்கு வந்த உலக வங்கியின் இயக்குநர் தலைமையிலான குழு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஏழை, எளிய மக்களைப் பாதிக்காத வகையில் மேற்கொண்டுள்ள நிதிச் சீர்திருத்தங்களைப் பாராட்டி, தமிழக வளர்ச்சிப் பணிக்கு நிதி வழங்க முன்வந்துள்ளதை தமிழக மக்கள் அனைவரும் இன்று பாராட்டுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளில்தான் தொழில் உற்பத்தித் துறையில் இந்தியாவிலே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள நான் பெருமைப்பட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

கடந்த 4 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் கடும் வறட்சி நிலவி வருகிறது. இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களை அழைத்து எந்தவொரு குக்கிராமத்திலும் குடிநீர்ப் பிரச்சினை வரவே கூடாது என்று ஆணையிட்டு உடனடியாக நிதி ஒதுக்கீடும் செய்து சிறு மின்விசை பம்புகள், ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுத்தார்கள். முதலமைச்சர் அம்மா அவர்கள், இப்படி நிதி ஒதுக்கீடு செய்கையில் எனது தொகுதிக்கு உட்பட்ட மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.79 கோடியும், கீழப்பாவூர் பேரூராட்சிக்குக் குடிநீருக்காக ரூ.5 கோடியும் நிதி ஒதுக்கி, அம்மா அவர்களின் திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இதனால் அப்பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினை நிரந்தரமாகத் தீர்த்து வைக்கப்பட்டது. அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு என் சார்பிலும், தொகுதி மக்கள் சார்பிலும் மீண்டும் ஒருமுறை என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உணவிற்கு வழிகாட்டி, உழைப்பதற்கு வழிகாட்டும் வேலைக்கு உணவுத் திட்டம், வேறொருவர் சிந்தைக்குத் தோன்றிடாத வேதனை தீர்க்கும் திட்டம். இது சாதனை பல படைக்கும் திட்டம்.

விவசாயிகளின் குறைகளைத் தீர்ப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் வேளாண் தொழிலை மேம்படுத்த விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்ற தேனியில் ரூ.25 கோடியில் மாம்பழ ஏற்றுமதி மையமும், திருச்சியில் ரூ.10 கோடியில் வாழைப்பழ ஏற்றுமதி மையமும் அமைப்பதற்கு உத்தரவிட்டுள்ளார்கள். இதனால் தமிழ்நாட்டின் ஏற்றுமதித் திறன் கூடி இந்தியாவிற்கு அந்நியச் செலாவணி அதிகம் கிடைக்கும். இதுவரை எந்த முதல்வரும் தமிழகத்தில் விவசாயிகளுக்கு இதுபோன்ற மாபெரும் திட்டங்களைக் கொண்டு வரவில்லை. இது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வைக்குக் கிடைத்த வெற்றியாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் பயிரிடும் நிலத்தின் தன்மை இன்று கெட்டுவிட்டது. அதுவே விவசாயிகளுக்கு விளைச்சல் குறைவதற்குக் காரணமாகிவிட்டது. இரசாயன உரங்களைப் போடுவதே இதற்கு ஒரு காரணம். விவசாயிகளின் வாழ்வில் ஒளி ஏற்றுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள்—இந்தக் குளத்தில் உள்ள வண்டல் மண்ணை எல்லாம் எடுத்து இந்த இரசாயன உரத்தால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்குப் போடுவதால் அந்த இடத்தின் நிலத்தன்மை நல்லபடியாக வந்து மீண்டும் விவசாயிகளின் வாழ்வில் பயிர்கள் செழித்து விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்கும். ஆகவே, முதலமைச்சர் அம்மா அவர்கள்--இந்த வண்டல் மண்ணை விவசாயிகள் அள்ளுவதற்கு அனுமதி அளிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் பல வருடங்கள் தூர்வாராமல் உள்ள குளங்களில் 10 அடி உயரத்திற்கு வண்டல் மண் உள்ளது. இம்மண்ணைத் தூர் வாருவதால் மழைக் காலத்தில் குளங்களில் நீர் சேமிப்பு அதிகமாகிறது. இதனால் நீர்வள ஆதாரமும் பெருகுகிறது. அதுமட்டுமல்லாமல் அருகில் உள்ள கிராமங்களில் குடிநீர்ப் பிரச்சினையும் தீருகிறது அதேபோல் தூர் வாரப்பட்ட வண்டல் மண்ணை மண்பாண்ட செய்பவர்கள், கூரை ஓடுகள் செய்பவர்கள், செங்கல் சூளை செய்பவர்கள் எடுப்பதற்கு அனுமதி அளித்தால் பல்லாயிரம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்; நசிந்துவரும் சிறு தொழிலும் காக்கப்படும். மாண்புமிகு இதய



தெய்வம் அம்மா அவர்களால் அடையாளம் காட்டப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களும் மண்பாண்டம், செங்கல் சூளை வைத்து சிறுதொழில் செய்து சுயதொழில் முனைவோர்களாக வெற்றி கண்டு வருகிறார்கள் என்பதனையும் மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் என்றும் பாராமல் இதே பேரவையில் பெண்ணினத் தலைவிக்குப் பேரழிவு செய்தவர்க்கு மாறாக பெற்றவளின் பெயரையும், தன் பெயர் முன்னே போட்டுக்கொள்ள பெருமை தேடித் தந்த பெண்ணினத் தலைவியே, வரலாறு பல படைக்கும் தமிழகம் வணங்கும் அன்னையே! (மேசையைத் தட்டும் ஒலி) திருநெல்வேலி மாவட்டத்தில் பீடி சுற்றும் தொழிலாளர்கள் அதிகம். அதிலும் பீடி சுற்றுபவர்கள் பெண்கள்தான். பீடி சுற்றுபவர்களுக்கு பீடி கம்பெனிக்காரர்கள் இன்று பி.எப்., கிராஜுவிட்டி போன்ற பணத்தை வழங்காமல் ஏமாற்றி வருகிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதன் மீது நடவடிக்கை எடுத்து அந்தப் பெண்களின் வாழ்வில் ஒளி ஏற்ற வேண்டுமாய்ப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கடந்த கால தி.மு.க. ஆட்சிக் காலத்தில்....

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு பி.எப்., இ.எஸ்.ஐ. போன்றவற்றைப் பிடிக்காமல் இருக்கிறார்கள்; ஏமாற்றுகிறார்கள் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். எந்தக் கம்பெனியில் இப்படி நடக்கிறது என்று அவர்கள் புகாராகக் கொடுப்பார்களேயானால் உடனடியாக அதன்மீது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** அதை நான் எழுதித் தருகிறேன். நன்றியோடு ஏற்றுக்கொள்கிறேன். கடந்தகால தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தொழில் துறையில் எந்த முன்னேற்றமும் எட்டவில்லை. ஏனென்றால் அந்நிய நாட்டு முதலீடு எதுவுமே தமிழ்நாட்டில் இல்லை. காரணம் தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு சீர் குலைவு மற்றும் தீவிரவாதப் பெருக்கம் காரணமாக வெளிநாட்டினர் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய முன்வரவில்லை. அதிலும் எங்களுடைய திருநெல்வேலி மாவட்டத்தில் யாரும் வருவதே இல்லை. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அங்கே

தாமிரபரணி ஆற்றில் சுட்டுக்கொன்றார்கள். அதனால் எந்தத் தொழில் முனைவோரும் வரவில்லை. அதனால் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்திற்கு ஒரு பெரிய தொழிற்சாலையை நிறுவித் தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீண்டும் முதலமைச்சராக பொறுப்பேற்ற பின்பு வாரந்தோறும் வெளிநாட்டினர் மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சந்தித்து தமிழ்நாட்டில் தொழில் துறையில் முதலீடு செய்ய ஆர்வம் கொண்டு, படையெடுத்து வருவதை இந்தியத் திருநாடே அறியும்.

பிற்பகல் 12-45

ராஜபாண்டி, தாயார் தோப்பு நடுவே உள்ள சிற்றாற்றின் குறுக்கே பாலம் கட்டித் தர மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆற்றைக் கடந்து படிக்கச் செல்லும் மாணவ, மாணவிகள் மேலும் இரண்டு சீருடைகளை எடுத்துச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. வசதியில்லாத மாணவ, மாணவிகள் ஆற்றைக் கடக்கும்போது, நனைந்த சீருடை காய்ந்த பிறகுதான் பள்ளிக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது.

எங்கள் பகுதியில் மானூர் பெரியகுளம் இதுவரை சரியாகப் பராமரிப்பு இல்லாமல் உள்ளது. தாமிரபரணி ஆற்றிலிருந்து மதிகெட்டான் கால்வாய் மூலம் தண்ணீர் பெறுவதற்கான— மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களால்தான் இந்தத் திட்டம், நினைத்ததை முடிப்பவர் என்பதை மானூர் பகுதி மக்கள் உறுதியாக நம்புகிறார்கள்—இந்தத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைவேற்றித் தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், சண்முகாபுரம், மருக்காலங்குளம் நெடுஞ்சாலை மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்த கால ஆட்சியில்தான் போடப்பட்டது. அதற்குப் பின் வந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சரியானபடி செப்பனிடப்படவில்லை. ஆகவே இந்தச் சாலையைச் சீரமைத்து உதவிட மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவன்புடன்



கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, ஆலங்குளம்—காசியாபுரம் சாலை, குறிப்பன்குளம்—சோலைசேரி சாலை, சண்முகாபுரம்—கல்லத்திகுளம்—சங்கரன்கோவில் சாலை, மேலப்பிள்ளையார்குளம்—கீழப்பிள்ளையார்குளம் சாலை, பலபத்திராபுரம்—அண்ணாமலைபுதூர் சாலை ஆகியவற்றைச் செப்பனிட்டுத் தருமாறு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜோதிட சாஸ்திரம் என்றால் அது ஒரு விஞ்ஞானக் கருத்தை உணர்த்துவதாகும். சூரனை சம்ஹாரம் செய்ய அன்று திருச்செந்தூரில் உள்ள செந்தில் வேலனுக்கு 6-ல் தீக்கோளை அமர்த்தி, சூரனை சம்ஹாரம் செய்ய ஆணையிட்டான் ஈசனே. ஏனென்றால், அசுரர்கள், தேவர்களைத் துன்புறுத்தி, கொடுமைப்படுத்தி வந்தார்கள். தேவர்கள் எல்லாம் பரமனை நோக்கி வணங்கி, சூரனின் கொடுமைகளைக் கூறினார்கள். உடனடியாக செந்தில் வேலனுக்கு 6-ல் தீக்கோளாகிய செவ்வாயை வைத்து போரிடச் செய்து வெற்றி பெறச் செய்தார்கள். அதன்பின் திருச்செந்தூரில் அமர்ந்து இன்று மக்களுக்கு அருள்பாலித்து வருகிறார். அதேபோல், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் 6-க்குடைய செவ்வாய் 3-ல் அமர்ந்து தேர்தல் என்னும் களத்தில், தி.மு.க. என்னும் அசுரர்களை வதம் செய்து (மேசையைத் தட்டும் ஒலி) இன்று ஆட்சிப் பொறுப்பேற்று தமிழக மக்களின் குறைகளைத் தீர்த்து வருகிறார் என்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பிறந்த குழந்தை ஆண்பாலா அல்லது பெண்பாலா என்று தெரிந்த பிறகு அதற்குக் கொடுக்க வேண்டியது தாய்ப்பாலா அல்லது கள்ளிப்பாலா என்ற நிலையை மாற்றி, ஆக்கப்பட்டவனால் காக்கப்படாவிட்டால், காக்கும் என்னுடைய அரசு என்று அநாதைக் குழந்தைக்கு அரசுத் தொட்டில் வழங்கிய அன்னையே, இரவும் பகலும் கண் துஞ்சாமல் தமிழக மக்களுக்காகப் பாடுபடும் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, இன்னும் கூடிய விரைவில் நீங்கள் பாரதம் போற்றும் பாரத மாதாவாகத் திகழ்வீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட அம்மா அவர்களை இந்தத் தமிழகம் பெறுவதற்கு என்ன தவம் செய்ததோ என்றுகூறி, மின்சாரம் மற்றும்

தொழில் துறை மானியக் கோரிக்கைமீது பேச வாய்ப்பளித்த அன்னைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜேந்திரன் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களிடம் தென் மாவட்டத்திற்குத் தொழிற்சாலைகள் வேண்டுமென்றுக் கேட்டிருந்தார்கள். ஏற்கெனவே அம்மா அவர்கள் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்ட மக்கள் பயன்பெறுகிற வகையில் Titanium Dioxide என்கின்ற தொழிற்சாலையை 2,000 கோடி ரூபாய் செலவில் தந்திருக்கின்றார்கள். இன்னும் தொடர்ந்து நிச்சயமாக திருநெல்வேலி மாவட்டத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் பெரிய தொழிற்சாலைகளைத் தருவார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருநெல்வேலி மாவட்டத்திற்கு தொழில் துறை அமைச்சர் பொறுப்பையே கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரிசக்தி மற்றும் தொழில் துறையின் சார்பிலே, தொழில் துறை மானியக் கோரிக்கையிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மூன்றாவது முறையாக இம்மாமன்றத்திலே மானியக் கோரிக்கையிலே பேசுகிற வாய்ப்பு அளித்த எங்களுடைய கட்சியினுடைய நிறுவனர் தலைவர், தமிழினப் போராளி, டாக்டர் ஐயா அவர்களுக்கும், பசுமைத் தாயகத்தினுடைய தலைவர் டாக்டர் சின்ன ஐயா அவர்களுக்கும், கட்சியினுடைய தலைவர் அண்ணன் ஜி.கே. மணி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அந்த வகையிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பிற்பகல் 12-50

**திரு. கோ. இரவிராஜ்:** சரி. இந்தக் மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பு இல்லாத நிலையிலே இன்று பேசவிருந்த எங்களுடைய கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. வேல் முருகன் அவர்கள், அவர் பேசவிருந்த அந்த வாய்ப்பைத் தந்தமையால் அவருக்கும் என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் ஏற்கெனவே பேசிவிட்டாரே, பக்கத்திலே இருப்பதனாலேயா!

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உற்பத்தித் துறை 1996 முதல் 2001 வரை மிக மோசமான நிலையிலே இருந்துள்ளது என நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டுள்ளது. தொழில் வளர்ச்சி விகிதம் குறைவாக இருந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது மிகவும் வருத்தத்திற்குரிய ஒன்றுதான் என்பதை நாங்களும் உணர்கிறோம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 25-4-2003-ல் அவையில் மகிழ்ச்சியான தகவல் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தார்கள். அதாவது ஜனவரி 2003 முடிய 43,492 கோடி ரூபாய் உற்பத்தித் துறையில் முதலீடு செய்யப்பட்டுள்ளதாக இங்கே தெரிவித்தார்கள். தமிழ்நாடு எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் பெற்ற முதல் மாநிலமாக அந்தஸ்து பெற இது ஒரு நல்ல அறிகுறி எனக் கூறினார்கள். இதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலும் நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் தொழில் வளர்ச்சிக்காக அரசு கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் பல்வேறு நல்ல முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் இந்த ஆண்டு இத்துறையின் வளர்ச்சி 0.86%, அதாவது ஒரு சதவிகிதத்திற்கும் குறைவாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட மகளிர் தொழில் முனைவோருக்கான தொழிற்பேட்டை கோவையிலே இன்னும் அமைக்கப்படவில்லை. அதை இவ்வாண்டு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தொழில் துறையில் வளர்ச்சிபெற வேண்டுமெனில், தொழில் வளர்ச்சியில் தனியார் துறையினர் பங்கீட்டை ஊக்குவிக்கும் வகையில் நடைமுறைகள் எளிதாக்கப்படவேண்டும். தொழில்

கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும். தொழிலாளர் துறையில் புதிய சீர்திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும். அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில், பொதுத் துறை மற்றும் தனியார் துறை கூட்டாக இணைந்து செயல்படும் வகையில் சட்டம் ஒன்றை இயற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்களைத் தனியார்மயமாக்குவது; அந்த நிறுவனங்களின் பங்கினை தனியாருக்குத் தாரை வார்ப்பது அல்லது அந்த நிறுவனங்களை மூடிவிட முடிவெடுப்பது என்ற முறையில் செயல்பட்டால் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி பின்னோக்கி சரிந்துவிடும் என்பதை அரசு உணர வேண்டும் என பட்டாளி மக்கள் கட்சி கேட்டுக்கொள்கிறது.

தமிழகத்தில் மூடப்பட்டுக் கிடக்கும் பஞ்சாலைகள் உட்பட பல்வேறு தொழிற்சாலைகள் இந்த இரண்டு ஆண்டுகால ஆட்சியிலே இதுவரையிலே ஒன்றுகூடத் திறக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். நமது தமிழகத்தில் புதிய தொழிற்சாலைகள் தொடங்கிட ஏதுவாக, இந்தியர் அல்லாத வெளிநாட்டினரிடமிருந்து, முதலீடு பெற்றிட தனி வாரியம் ஒன்றை ஏற்படுத்திட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் 2-ல் பொருளாதாரத்தில் 8% வளர்ச்சி, சிறந்த கல்வியும், பயிற்சியும் பெற்ற மனிதவளம், பன்முனைப்படுத்தப்பட்ட வேலைவாய்ப்பு அதிகரிப்பு, போன்ற உன்னத இலக்குகளை அடைய அரசு திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த இலட்சியங்களை அடைய அரசு என்ன செயல் திட்டங்கள் வகுத்திருக்கிறது என்று தெரியவில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளில் உற்பத்தித் துறையில் எத்தனை புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன, எத்தனை நபர்களுக்கு மாநிலம் முழுவதும் புதிய வேலைவாய்ப்புகளை அரசு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி போன்ற இடங்களிலும், தமிழகத்தின் பல மாவட்டங்களிலும் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது. இதற்கு வறுமைதான் காரணம். வறுமையைப் போக்கிட இந்த இரண்டு ஆண்டுகாலத்தில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?



பெரும்பாலான குடும்பங்களுக்கு உணவுக்கு உத்தரவாதம் இல்லாத காரணத்தால்தான், தான் பெற்ற குழந்தைகள் உட்பட குடும்பமே கூலி வேலைக்குச் சென்றால்தான் சமுதாயத்திலே சாப்பிட முடியும், மனிதர்களாக வாழ முடியும் என்கின்ற ஒரு நிலைமை இப்போது தமிழகத்தில் நிலவிக் கொண்டு இருக்கிறது. அதனால்தான் பள்ளிக்குச் செல்லக்கூடிய குழந்தைகளை வேலைக்கு அனுப்பக்கூடிய ஒரு அவல நிலை இருக்கிறது.

பிற்பகல் *12-55*

வறுமை இப்போது தமிழகத்திலே எவரையும் விட்டு வைக்கவில்லை. இன்று மக்களின் பிரதிநிதிகளாக இம்மாமன்றத்திலே அமர்ந்திருக்கின்ற ஆளும் கட்சி உறுப்பினர்கள் உட்பட எவ்வளவு பேர் தாம் பெற்ற கடனைக் கூடத் திருப்பிச் செலுத்த முடியாத அவல நிலையிலே, வறுமை நிலையிலே வாடிக்கொண்டிருக்கிறார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். ஆக, ஒட்டுமொத்தமாகத் தமிழகத்தை வறுமை வாட்டிக்கொண்டிருக்கிற நிலையைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக, தருமபுரி மாவட்டத்திலே வேலையில்லாத, வறுமையின் காரணமாக, படித்த இளைஞர்கள் நக்சலைட்டுகளாக தீவிரவாதப் பாதையைத் தேர்ந்தெடுக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்த தருமபுரி மாவட்டத்திற்குச் சிறப்புத் திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். அதை பாட்டாளி மக்கள் கட்சி வரவேற்கிறது. நோய் வந்த பின்பு குணப்படுத்துவதைவிட நோய்த் தடுப்பு நடவடிக்கை எடுப்பது போல, தமிழக இளைஞர்களுக்கு நம்பிக்கை தரும் வகையில் வேலைக்கு உத்தரவாதமான திட்டங்களைப் படிப்படியாகக் கொண்டுவர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே சிறுதொழில்கள் முப்பது முதல் முப்பத்தைந்து சதவீதம் வரை நலிவடைந்துவிட்டன. சிறுதொழில்கள் இந்த அளவு நலிவடைந்துவிட்டதற்கான காரணங்களை ஆராய்ந்து, சிறு தொழில்களுக்கு மறுவாழ்வு தர அரசு முன்வர வேண்டும் என இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சிக்கு அரசு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும். நசிந்து வருகிற சிறுதொழில்களைக் காப்பாற்ற கூடுதல் நிதியினை

அரசு ஒதுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடையிலே எரிசக்தித் துறை கோரிக்கையிலே பேசுவதற்கு முன்பாக என்னுடைய மாவட்டத்திலே இருக்கக்கூடிய, என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய சில பிரச்சினைகளைத் தெரிவித்துவிடுகிறேன். தமிழகத்திலே கடுமையான வறட்சி நிலவுகிறது. அரசும் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, ஏழை மக்களுக்கு முழுவதுமாக உதவ முடியாவிட்டாலும், முடிந்தமட்டும் உதவ வேண்டும், இலவச மதிய உணவுத் திட்டம், அது இப்போது இலவச அரிசி வழங்கக்கூடிய திட்டமாக மாற்றப்பட்டு இதிலே பல இலட்சம் ஏழையெளிய மக்கள் பயனடைந்து வருகிறாாகள். இந்த ஏழைகளின் வயிற்றில் அடிக்கும் விதமாக, அரசுப் பணத்தை முறைகேடாகப் பயன்படுத்தும் ஒருசில அதிகாரிகளால் மக்கள் எப்படிப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதனால் அரசின்மீது வீண்பழி சுமத்த வேண்டும். என்றோ அல்லது அரசுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகளைக் கூற வேண்டும் என்றோ நான் கூறுவதாகத் தயவுசெய்து எடுத்துக்கொள்ள வேண்டாம்.

இப்போது சைதாப்பேட்டை தாலுகா வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஒன்று ரெட்ஹில்ஸ் பகுதியிலே இயங்கி வருகிறது. அந்தக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திலே நடைபெறக்கூடிய பல்வேறு முறைகேடுகளால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். கடந்த 2001 ஆம் ஆண்டு ஒரு கிலோ 9 ரூபாய்க்கு தரமற்ற அரிசியை வாங்கி, விற்க முற்பட்டதால் மக்கள் அதை வாங்க மறுத்துவிட்ட காரணத்தினாலே கிட்டத்தட்ட 400 மூட்டைகள் அங்கே முடங்கிப் போய், இப்போது மிக மோசமான நிலையிலே அந்த அரிசி இருந்து கொண்டிருக்கிறது. அதேபோல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளிலே முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கோ. இரவிராஜ்:** அதேபோல, சுமார் 50 மூட்டைகள் தரமற்ற கோதுமை வாங்கப்பட்டு, பொதுமக்கள் அதை வாங்க முன்வரவில்லை என்கிற காரணத்தினாலே, கடை ஊழியர்களும் அதை விற்க இயலவில்லை என்று எழுத்துபூர்வமாக அந்த அதிகாரிகளுக்கு மூன்று, நான்கு முறைகள் தெரிவித்ததற்குப்



பின்னாலேயும், வீரார்புரம், டி.கோ. பட்டு, கொள்ளுமேடு, கோவில் பதாகை, மேலப்பேடு மற்றும் பல கடைகளில் உளுத்துப்போன கோதுமை இன்றைய அளவிலும் அதிகாரிகளால் அகற்றப்படாமல்...

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த வேளாண்மை விற்பனைக் கூடத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுபோன்ற புகார்கள் இதுவரை எங்களுக்கு வரவில்லை. என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதற்கிணங்க, நாளையதினமே அந்தக் கடைகளிலே அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்குமானால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே நான் சொல்ல வருவது என்னவென்று சொன்னால், இதுகுறித்து Joint Registrar அவர்களிடத்திலே நான் நேரடியாகத் தெரிவித்தேன். அதன் காரணமாக உடனடியாக அதற்குக் காரணமான Special Officer அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இரண்டு நாட்களுக்கு முன்னாலே transfer அவருக்கு வழங்கப்பட்டது. ஆனால் அவர் செய்திருக்கக்கூடிய பல இலட்சம் பெறுமானமுள்ள இழப்பீட்டிற்கு அவரிடத்திலே இருந்து அரசு நிதியைத் திரும்பப்பெற வேண்டும்.

*பிற்பகல் 1-00*

அது மட்டுமல்ல, அவரும், மற்றும் இப்படித் தவறு செய்யக் கூடியவர்கள் யாராக இருந்தாலும்--முழுக்க, முழுக்க பொதுமக்களை அதுவும் வறட்சியால் தமிழகம் தவித்துக் கொண்டிருக்கிற இந்த நிலையிலே இப்படித் தவறு செய்யக்கூடிய ஒன்றிரண்டு அதிகாரிகளை--தேவைப்பட்டால் கைது செய்துகூட அவர்களைச் சிறையிலே அடைக்க வேண்டும். இதைவிடக் கொடுமை என்ன என்று சொன்னால் இதில் ஒருதுளியும் சம்பந்தப்படாத ஊழியர்கள்தான் இதற்குண்டான நஷ்டயீடு வழங்க வேண்டுமென அதிகாரிகளால் மிரட்டப்படுகிறார்கள். கட்ட மறுத்தால் வேலை நீக்கம் செய்வோம் என்று சொல்லி அங்கே அதிகாரிகள் பழிவாங்கக்கூடிய நிலைகள் இருந்து கொண்டிருக்கின்றன.

அதுபோல, தவறு செய்த Special Officer-ஐ transfer போட்டு தப்பிக்க வைத்த அதிகாரி Joint Registrar அவர்கள்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால் transfer போட்டுவிட்டால் மட்டும் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடாது. எனவே அதுகுறித்து அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, ஒரே ஒரு செய்தியை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

என்னுடைய திருவள்ளூர் மாவட்டத்திற்கு மத்திய அரசு நிதி மூலம் வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ள வேண்டும். பணிகள் மேற்கொள்ள வேலைக்கு உணவளிக்கும் திட்டத்தின் மூலம் சுமார் 1 கோடியே 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுவாக வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளும்போது அதிகாரிகள் கடைப்பிடிக்க வேண்டியது, மழையளவு குறைவாகப் பதிவாகியுள்ள இடங்களிலே அதிக வறட்சிப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அப்படிப் பார்த்தால் மாவட்டத்திலேயே மழையளவு குறைவாகப் பதிவானது என்னுடைய திருத்தணிதான். அந்த மாவட்டத்திற்கே ஒதுக்கப்பட்ட நிதி ரூபாய் ஒரு கோடியே 5 இலட்சம். இதிலே ஒரே தொகுதிக்கு மட்டும் 75 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது எந்த வகையிலே நியாயம்? வெறும் 30 இலட்சம் ரூபாய் மட்டும் திருத்தணி, திருவள்ளூர், பூந்தமல்லி, வில்லிவாக்கம், பொன்னேரி, கும்மிடிப்பூண்டி ஆகிய 6 தொகுதிகளுக்குப் பெயரளவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது எந்த விதத்திலேயும் நியாயம் இல்லை. இதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல; பொதுப் பணித் துறையின் மூலம் நடைபெறுகிற அனைத்துப் பணிகளிலும் PMGYS மற்றும் R.R. திட்டங்கள் மூலம் நிறைவேற்றப்படுகிற அனைத்துப் பணிகளிலும் (மணியடிக்கப்பெற்றது) பல்வேறு குளறுபடிகளும், முறைகேடுகளும் நடைபெற்று வருகின்றன. இதற்குத் துணை போகாத சில அதிகாரிகள் பணியிலிருந்து மாற்றம் செய்யப்படுகிறார்கள். வேறு இடங்களுக்கு மாற்றம் செய்யப்படுகிறார்கள். 1 வருடத்திலேயே, 1½ வருடத்திலேயே..

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொத்தாம் பொதுவாகத் தன்னுடைய குற்றச்சாட்டினைக் கூறிக்



கொண்டிருக்கிறார்கள். குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட அலுவலர் தவறு செய்திருந்தால், அதை அவர் ஆதாரத்துடன் கொடுத்தால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நம்முடைய அமைச்சர்மீது என்னுடைய அந்த வருத்தத்தையோ அல்லது குறையையோ குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (மணியடிக்கப்பெற்றது) அமைச்சர் அவர்களை நேரடியாக 2 தினங்களுக்கு–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரும் அவரைச் சொன்னதாகச் சொல்லவில்லை. பொதுவாகச் சொல்லக்கூடாது, குறிப்பிட்டு ஏதாவது இருந்தது என்றால் விளக்கம் சொல்லுங்கள் என்கிற மாதிரி சொல்கிறார். ஒரு மணித்துளியில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. கோ. இரவிராஜ்:** குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் திருத்தணியிலே ஏரிகள் பராமரிப்புப் பிரிவிலே எஸ்.டி.ஓ.-வாக இருந்த ஒருவர் மாற்றப்பட்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரவிராஜ், அதையெல்லாம் எழுத்து மூலமாக நீங்கள் கொடுங்கள். புகாரைக் கொடுங்கள். ஒரு மணித்துளியில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கோ. இரவிராஜ்:** இதுகுறித்து கடந்த வாரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நேரடியாக நான் இதைப் பற்றி இருக்கக்கூடிய நிலையை...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த சில தினங்களுக்கு முன்னால் ஒரு அதிகாரி மாற்றப்பட்டதாகச் சொன்னார். ஆனால் அவர்மீது எந்தக் குற்றச்சாட்டையும் சொல்லி அவர் மாற்றப்பட்டதாக என்னிடம் அவர் தகவல் சொல்லவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கக்கூடிய நிலவரங்களை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலேயும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேயும் நான் எழுத்துபூர்வமாக எழுதிக் ... பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ... திருப்பதி ... சிய



185074
சென்னை-600 009

நெடுஞ்சாலையில் லட்சுமணாபுரம், ஆற்காடு குப்பம் ஆகிய கிராமங்களுக்கு இடையில் உள்ள கொசஸ்தலை ஆற்றுப் பாலம் மிகக் குறுகியதாக இருக்கிற காரணத்தினாலே நாள்தோறும் போகக்கூடிய கார் போன்ற வாகனங்கள் தவறி விழுந்துவிடுகின்றன அந்தப் படுபள்ளத்திலே. அது மட்டுமல்ல; விபத்துகள் ஏற்பட்டு விலைமதிக்க முடியாத பல உயிர்கள் பலியாகின்றன. சமீபத்தில் பள்ளிக்குச் செல்லும் 10 ஆம் வகுப்பு படிக்கும் தேவி, ராஜேஸ்வரி ஆகிய இரண்டு மாணவிகள் அந்தப் பாலத்தின்மீது ஏற்பட்ட விபத்தில் பலியான சம்பவம் அப்பகுதி கிராம மக்களை உலுக்கியது. அதிலே அந்த தேவி என்கிற மாணவி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஒன்றியச் செயலாளருடைய மகள் என்பது குறிப்பிடத்தக்கது. அந்தத் தரைப்பாலத்தை மேம்பாலமாக அமைத்துத் தர வேண்டும்.

அதுபோல நாராயணபுரம் அருகில் உள்ள ஆற்றுப் பாலம், திருவாலங்காடு கூட்டு ரோட்டில் உள்ள ஆற்றுப் பாலம் ஆகிய இந்த 2 பாலங்களையும் தயவுசெய்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் விரிவுபடுத்தி அங்கே விலைமதிக்க முடியாத பல உயிர்கள் பலியாவதைத் தடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-05*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட சென்னையிலே ரூ.4 ஆயிரம் கோடி, தூத்துக்குடியிலே ரூ. 4 ஆயிரம் கோடி செலவிலே ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி நிலையங்கள், மத்திய அரசு கூடங்குளத்தில் ரூ.1,300 கோடி செலவில் அமைக்கும் 2 ஆயிரம் மெகாவாட் அணுசக்தி மின் உற்பத்தி நிலையம் போன்ற அறிவிப்புகள் தமிழக மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கின்றன.

தமிழ்நாட்டிலே தற்போதைய நிலவரப்படி மின்வெட்டே (மணியடிக்கப்பெற்றது) இல்லை என்கிற ஒரு செய்தி, இத்துறையினுடைய திறமையைக் காட்டுகிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களுடைய காலத்திலே எங்கெல்லாம் குடிசைகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் நான் விளக்குகளைப் பார்க்க வேண்டும், மின்னொளி ஏற்ற வேண்டுமென்கிற அற்புதமான திட்டத்தை மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த ஏழை எளிய மக்களுக்காக



வழங்கினார்கள் என்பதை நாம் மறுக்க முடியாது. ஆனால், இப்போது பட்டா வைத்திருக்கக்கூடிய, பட்டா பெற்று வீடு கட்டக்கூடியவர்கள்கூட N.O.C போன்ற சர்டிபிகேட்டுகளை வாங்கினால்தான் அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படும் என்கிற கடுமையான சட்டம் இருக்கின்ற காரணத்தினால், ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள், மின் துறை அலுவலகங்களுக்கு அலைந்து திரிந்து கொண்டிருக்கக்கூடிய அவல நிலை இருக்கிறது. அதை மாற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேட்டுக்கொண்டு, முடித்துவிடுங்கள். திரு. கே.எஸ். பழனிசாமி.

**திரு. கோ. இரவிராஜ்:** தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் சமர்ப்பித்துள்ள 2003-2004 ஆம் ஆண்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்துவிடுங்கள். திரு. கே.எஸ். பழனிசாமி.

**திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**திரு. கோ. இரவிராஜ்:** நன்றி சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றியை ஏற்றுக்கொண்டுவிட்டேன்.

**திரு. கோ. இரவிராஜ்:** இதுவரையிலே வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

•**திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டுமென்று உறுதிபூண்டுள்ள தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இரண்டாம் நிலைத் துறை தொழில் துறையில், இந்திய துணைக் கண்டத்திலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாகக் கொண்டுவர பல முனைப்பான செயல் திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில் 10-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி 8 விழுக்காடு என்ற நிலையை எய்த வேண்டுமானால் இரண்டாவது நிலைத் துறையான தொழில் துறைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முக்கிய பங்களித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாம் நிலை சீர்திருத்த நடவடிக்கையின் வாயிலாக தொழில் உற்பத்திக்கான தடைகளை அகற்றி, தொழில் துறை மேம்பட்டு செயல்பட நடவடிக்கை எடுத்தல், எளிதான நடைமுறைகள், நவீன மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பம், தொழிலாளர் துறை சீர்திருத்தங்கள், முறையான பயிற்சி வாயிலாக தொழிலாளர் உற்பத்தித் திறனை அதிகரித்தல், தரமான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருதல், தேவையான மற்றும் தரமான மின் வழங்கல் மற்றும் வரிச் சீர்திருத்தங்கள் ஆகியவற்றுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முக்கிய முன்னுரிமைகள் தந்து கொண்டிருப்பதால் நாட்டிலேயே தொழில் துறையில் முதன்மை மாநிலமாக உருவாக பெரிதும் உதவியாக இருக்கிறது.

தமிழகத்தை ஒரு அமைதிப் பூங்காவாக உருவாக்கிக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இப்போது அந்நிய முதலீடுகளைப் பெறுவதிலே தமிழகம் முதல் நிலையில் உள்ளது என்பதை மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு குறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தொடர உத்தரவாதம் அளித்துள்ள மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இரண்டாவது நிலைத் துறையான தொழில் துறைக்கு சீரான மின்சாரம் கிடைத்திட வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, கூடங்குளம் அணு மின் நிலையத்தில் மேலும் இரண்டு மின் உற்பத்திப் பிரிவுகளை அமைக்க நிதியுதவி செய்து அங்கே உற்பத்தி ஆகக்கூடிய மின்சாரம் முழுவதையும் மற்றும் 3, 4 பிரிவுகளில் உற்பத்தியாகின்ற மின்சாரம் முழுவதையும் தமிழகம் வாங்கிக்கொள்ளும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்ததை இந்திய அணு மின் கழகத்தினுடைய தலைவர் உயர்திரு சதுர்வேதி அவர்கள் பாராட்டியுள்ளதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நேரத்தில், கருணாநிதி, விவசாயிகளுடைய நண்பனாக எப்படிக் காட்டிக்கொள்ள முயற்சித்தாலும், தமிழக விவசாயிகள் அவரை நம்பத் தயாரா இல்லை. அவருடைய ஆட்சிக் காலத்திலே விவசாயிகளுக்கு மின் கட்டணத்தை உயர்த்தியபோது உழவர் பெருமக்கள் தெய்வமாக மதித்து வணங்குகின்ற பசு மாடுகளைப்



பூட்டிய, மாட்டு வண்டிப் போராட்டத்தை, பெருமாநல்லூரில் நடத்தியபோது, அன்று கொடுங்கோல் ஆட்சி செய்த கருணாநிதி அவர்களைச் சுட்டுக் கொன்ற நிகழ்ச்சி தமிழக உழவர் பெருமக்களுடைய நெஞ்சங்களிலே அழியாத வடுவாக இன்னும் உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணாநிதியினுடைய ஆட்சிக் காலத்திலே 40 சதவீத மின்வெட்டு இருந்தது. அப்போது மாணவர்கள் தேர்வுக் காலங்களிலேகூட படிக்க முடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால், இன்றைய சூழ்நிலையில் கடுமையான வறட்சி இருந்தால்கூட, புனல் மின் நிலையங்கள் பாதிக்கப்பட்டிருந்தால்கூட, புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீரிய முயற்சியின் காரணமாக அனல் மின் நிலையங்களின் வாயிலாக மின்வெட்டே இல்லாத ஒரு மாநிலமாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தொழிலை உருவாக்குகின்ற அதே நேரத்திலே விவசாய விளைபொருட்களின் மூலம் வருவாய் ஈட்டக்கூடிய அளவில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை ஏற்படுந்தி அதனுடைய அடிப்படையில் வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள், மலர்ச்செடி வளர்ப்புப் பூங்காக்கள், ஆயத்த ஆடைப் பூங்காக்கள், உணவு பூங்கா மற்றும் இயற்கையோடு அமைந்த தொழில் பூங்காக்களை அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முனைப்போடு நடவடிக்கை எடுத்து வருகிற இந்த நல்ல சூழ்நிலையில் மகளிர் தொழில் முனைவோரும் ஈடுபட வாய்ப்பு ஏற்படுத்தியுள்ளது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த தொய்வு இல்லாத நல்ல நிதிச் சீர்திருத்த நடவடிக்கைகளின் காரணமாக ரூபாய் 5,750 கோடி திட்ட அளவில் இருந்த திட்டச் செலவை 2003-2004 ஆம் ஆண்டில் ரூபாய் 7 ஆயிரம் கோடி அளவிற்கு உயர்த்த முடிந்தது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியினுடைய ஆட்சிக் காலத்தில் தமிழகம் உலக வங்கியினுடைய கறுப்புப் பட்டியலில் அதாவது Black List-ல் இடம் பெற்று இருண்ட தமிழகமாக இருந்த நிலைமையை மாற்றி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அறிவார்ந்த சிந்தனையாலும் கடினமான உழைப்பினாலும் தமிழகத்தில் கடந்த 2 ஆண்டுகளில் நிதிச் சீர்திருத்தங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு உள்ளன. மிகவும் கடினமான இந்தப் பணியை கஷ்டப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு சாதித்து உள்ளது என்று தமிழகம் வந்துள்ள உலக வங்கியினுடைய இயக்குநர் மைக்கேல் கார்ட்டர் அவர்கள் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் மீது நம்பிக்கை வைத்துள்ள உலக வங்கி, நிருவாகச் சீர்திருத்தங்கள் காரணமாக தமிழகத்தின் நிதி நிருவாகம் சீர்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.2,016 கோடியும், மழை நீர் சேகரிப்பு, நீர் நிருவாகம், சுகாதாரம், கிராமக் குடிநீர் விநியோகம் மற்றும் பல்வேறு முக்கிய திட்டங்களுக்கு ரூ.4105 கோடியும் இந்த ஜூன் மாதம் இறுதியில் கடன் வழங்குவதற்கு நம்முடைய உலக வங்கி இந்த நேரத்தில் ஒப்புதல் அளித்துள்ளது, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய முயற்சிக்கு எடுத்துக்காட்டு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய தகவல் தொழில்நுட்பப் பூங்கா, டைசல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா, உணவுப் பூங்கா மற்றும் இயற்கையோடு ஒன்றிய தொழில் நுட்பப் பூங்கா அமைத்து இன்றைய படித்த இளைஞர்களையும், எதிர்காலத் தமிழகத்தையும், இந்தியாவில் முதன்மை நிலைக்கு உயர்த்த மாண்புமிகு அம்மா அவர்கள் அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வரும் இந்த வேளையிலே தி.மு.க. தலைவர் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் இந்தத் தள்ளாத வயதில் தொல்காப்பிய பூங்கா விற்று, ஆசியாவிலேயே மிகப் பெரிய தனது பணக்காரக் குடும்பத்தை உலகத்திலேயே முதன்மையான நிலைக்கு கொண்டு வர பாடுபட்டுக் கொண்டிருக்கிறார். புல்காப்பிய பூங்காவாக விளங்கிக் கொண்டிருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களுடைய சாதனைகளையும், தொல்காப்பிய பூங்கா வியாபாரியின்



மோசடிகளையும் மக்கள் அறிந்ததால்தான் நடைபெற்ற அத்தனை சட்டமன்ற இடைத் தேர்தல்களிலும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மிகப் பெரிய வெற்றி தேடித் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, ஈரோடு மாவட்டத்தில் காரமடை, ஊத்துக்குளி, பெருந்துறை, அவினாசி, அன்னூர், திருப்பூர், நம்பியூர், காங்கேயம், சென்னிமலை போன்ற ஒன்றியங்களையும் எனது பெருந்துறை உட்பட 7 சட்டமன்றத் தொகுதிகளையும் உள்ளடக்கிய இந்தப் பகுதிகளில் மழைக் காலங்களில் பவானி ஆற்றில் உபரியாகச் செல்லுகின்ற நீரை இப்பகுதிகளில் உள்ள குளம், குட்டைகளில் நிரப்பி, இப்பகுதி குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட அத்திக்கடவு-அவினாசி திட்டத்தை, இந்த ஆண்டிலேயே அதன் பணிகளைத் தொடங்கி நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கிக் கேட்டுக்கொண்டு இந்தத் தொழில் துறை மற்றும் எரிசக்தித் துறை மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்களுடைய பாதம் தொட்டு வணங்கி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியம் அதாவது மின் துறையும் தொழில் துறையும் இணைந்த இரண்டு மிக முக்கியமான துறைகளைப் பற்றிக் கருத்துச் சொல்ல வேண்டிய நிலையிலே இருந்துகொண்டிருக்கிறோம். அதற்குப் போதிய நேரத்தைத் தரவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகச் சொல்லிவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் சுருக்கமாகச் சொல்கிறேன். நான் பெரிய அளவு காரணங்களுக்குப் போகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இராமாயணத்தையே 4 வரிகளில் சொல்லிவிடலாம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் அந்த அளவுக்கு திறமை உள்ளவன் அல்ல. மின்சாரத் துறையைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில் மிக முக்கியமான ஒரு பிரச்சினை என்ற முறையிலே இன்று நின்று கொண்டிருப்பது, சமீபத்தில் மத்திய அரசு நிறைவேற்றி இருக்கிற electricity சட்டம் 2001. இது சம்பந்தமாக ஒருசில நாட்களுக்கு முன்னாலே இதே அவையிலே நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் எதிர்கட்சி வரிசையிலே இருக்கிற சில கட்சிகளைப் பார்த்து ஒரு கருத்தைக் கேட்டார்கள். இதிலே நீங்கள் ஆதரிக்கப் போகிறீர்களா, என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டார்கள். இப்போது அந்தச் சட்டம் நிறைவேறியிருக்கிறது. நீங்களும் ஆதரித்தீர்கள். பல கட்சிகளும் ஆதரித்தன. இதனுடைய விளைவாக ஒரு கடுமையான நிலை இந்த நாட்டிற்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். அதாவது, மாநில அரசுகளிடம் இந்தத் துறை சம்பந்தமாக இருந்த அதிகாரங்கள் எல்லாம் போகின்றன. சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக இருந்தால்கூட, எந்தக் கருத்தும் இதுசம்பந்தமாக நாம் சொல்ல முடியாது.

பிற்பகல் 1-15

நம்முடைய மின்சார வாரியத்தை, மின்சாரத் துறையைச் சீரமைப்பதற்கு ஒரு குழுவை நியமனம் செய்வதாகவும், அவர்களிடமிருந்துதான் சில ஆலோசனைகளை எல்லாம் பெற்றதாகவும் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலேகூடச் சொல்லப்பட்டிருக்கிறது. 'நீங்கள் அதிலே தலையிடக் கூடாது, Regulatory Commission நியமனம் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே, Regulatory Commission-க்குத்தான் இதுசம்பந்தமாகக் கருத்து சொல்வதற்கும், முடிவு எடுப்பதற்கும் அதிகாரம் உள்ளது' என்று உச்சநீதிமன்றம் சொல்லியிருக்கிறது. அப்படியென்றால், இப்போது இந்த மாநில அரசால், மாநிலத்திலே இருக்கிற மக்களுக்கு மின்சாரம் கொடுப்பது சம்பந்தமாக எந்தக் கொள்கையை உருவாக்க முடியும்?

இப்போது இந்த electricity சட்டம் குறித்து எங்களுடைய கருத்திலே, அது பிரதானமாக யாருக்காக வேண்டி உருவாக்கப்பட்டிருக்கிறது என்றால், Power Sector என்ற தனியார்த் துறையைச் சார்ந்த அல்லது தனியாரையும், வெளிநாட்டிலே இருக்கிற



மிகப் பெரிய கம்பெனிகளையும் attract பண்ணுவதற்காக உருவாக்கப்பட்டிருக்கிற சட்டம் இது என்று நாங்கள் கருதுகிறோம். அப்படியென்றால், மின்சாரத் துறையைப் பொறுத்த அளவிலே, அது வெளிநாட்டு முதலாளிகளுடைய, பெருமுதலாளிகளுடைய கையிலே அமருகிற ஒரு நிலை வருகிற நேரத்திலே, ஏற்கெனவே இங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னது போல், நம்முடைய அரசினுடைய கஜானாவிலேயிருந்து நிதியுதவி கொடுத்து, இலவச மின்சாரம் பெறுகிற ஆட்கள் பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது ஒன்று. ஆனால், மின்சாரம் என்பது, ஏழை எளிய மக்களுக்கு, அது சென்ற காலத்திலே கிடைத்திருந்தது போல் சுலபமாகக் கிடைக்க முடியாத நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது.

இந்த Regulatory Commission-னுடைய நடவடிக்கைகளை நாம் பார்க்கிற நேரத்தில், மின்சாரத்தைப் பொறுத்த அளவிலே, தனியார் துறையை ஊக்குவிக்கக்கூடிய முறையிலே உள்ள நடவடிக்கைகளை எடுப்பதும், மின்சாரத்தினுடைய விலையைக் கூட்டுவதும் என்ற இடத்திற்கு விஷயங்கள் போகின்றன.

எனக்குக் கிடைக்கப்பெற்றிருக்கிற தகவல் சரியாக இருந்தால், கர்நாடக மாநிலத்தில் இப்போது ஒரு யூனிட் 11 காசுக்குக் கொடுக்கப்படுகிறது. ஆனால், நாம் அப்படிக் கொடுக்க முடியுமா? காரணம் என்ன என்றால், நாம் இந்த 2001 என்ற மின்சாரச் சட்டத்தை.......

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே, தனியார் துறையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதாகச் சொல்லியிருக்கின்றார்கள். ஆனால், மத்திய அரசால் போடப்பட்ட சட்டத்தின்படி, அவர்கள் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, தனியார்களாக இருந்தாலும் சரி, மின்சாரம் தயார் பண்ணுவதாக இருந்தாலும், நமக்கு இப்போது அவர்களிடமிருந்து வாங்க வேண்டிய அவசியம், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்படவில்லை. ஏற்கெனவே தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 2003-2004-க்கும், அடுத்த பத்து ஆண்டு திட்டத்திற்கும் நமக்குத் தேவையான மின்சாரம் இருக்கிறது. ஆகவே, நாம் அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டாம் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், கர்நாடக மாநிலத்தைப் பற்றிச் சொன்னீர்களே, அது என்ன? எந்த ஆதாரத்திலே சொன்னீர்கள்?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது, எனக்குக் கிடைத்த தகவல்களிலேயிருந்து சொன்னேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்தில் 11 காசுக்கு மின்சாரம் கிடைப்பதாகச் சொல்வது உண்மைக்கு மாறான தகவல். சாதாரணமாக இப்போது நமது மின்சார வாரியத்திற்கு உற்பத்தியும் அடக்க விலையும் சேர்ந்து 3 ரூபாய் 7 காசு ஆகிறது. இப்போது மத்திய அரசிடமிருந்தே 2 ரூபாய் 37 காசுக்கு நாம் வாங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் சொல்வது உண்மைக்கு மாறான தகவல். இந்த மாதிரி தகவலை அவர் தரவேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஹேமா அவர்கள் அவைக்கு (சிரிப்பு) உண்மைக்கு மாறான குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார். தவறான தகவலைத் தந்திருக்கிறார்.

கர்நாடக மாநிலத்தைப் பொறுத்தவரைக்கும் Tariff 1A that is for industries 4 ரூபாய் 59 காசு. Tariff 3 Commercial 5 ரூபாய் 51 காசு. Domestic 3 ரூபாய் 42 காசு என்ற நிலைதான் அங்கு இருக்கிறது.

பிற்பகல் 1-20

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, உண்மைக்கு மாறான தகவலை வேண்டும் என்றே சொல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் நான் சொல்லவில்லை. எனக்குக் கிடைத்த தகவல் என்று சொன்னால் நான் மீண்டும் verify பண்ணி அது என்ன என்று நிரூபிக்கிறேன். (குறுக்கீடு) இருக்கலாம். தகவல் என்று சொல்லிவிட்டேனே. சரி, நான் இப்போது என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் அமைச்சர் அவர்கள் கூட என்ன சொல்கிறார்கள், 10 வருடத்திற்குப் பிரச்சினை இல்லை. ஆனால் நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால் 10 வருடத்திற்குப் பிறகும் தமிழ்நாடு இருக்கும், மக்கள் இருப்பார்கள். அன்றைக்கு மின்சாரத்தின் நிலை என்ன? ஆகவே, இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவிலே, இன்று தமிழகத்திற்கு மட்டுமல்ல பல மாநிலங்களுக்கும்



பாதிப்பான ஒரு நடவடிக்கை இது. காலையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களைப் பாதிக்கிற மற்றும் பல மாநில மக்களைப் பாதிக்கிற பிரச்சினையிலே நான் மற்ற மாநிலங்களுடைய உதவியோடு அதை fight பண்ணப் போகிறேன் என்று சொன்னார்கள். அந்தக் கொள்கை இப்படிப்பட்ட விஷயங்களிலேயும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்பொழுது ஏன் வெளிநடப்புச் செய்தீர்கள்?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நேரம் கொடுத்தால் அதற்கு விளக்கம் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம், வேண்டாம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது எங்களுடைய கருத்து என்னவென்றால் இப்படிப்பட்ட விஷயங்களில் எங்களை எல்லாம் சேர்த்துக்கொண்டு போராடுங்கள். நீங்கள் மற்ற மாநிலங்களிலே உள்ள ஆட்களைக் கூப்பிடுவதற்கு முன்னாலே you take into confidence the opposition parties here. You are not doing it. நாங்கள் என்ன சொல்கிறோம், இந்தமாதிரி D.M.K. செய்ததனால் அது சரி என்கிற விஷயத்திற்கு நாங்கள் வரவில்லை. தமிழக மக்களுக்குப் பாதிப்பான ஒரு விஷயம் என்றால் எங்களையும் கூப்பிட்டு வைத்துப் பேசி, சர்வ கட்சிக் கூட்டத்தை அல்லது எதிர்க் கட்சிகளைக் கூப்பிட்டு வைத்து, நமக்கு இப்படி எல்லாம் பாதிப்பு இருக்கிறது என்று சொன்னால் இந்த அவையிலே ஒரு தீர்மானத்தைப் போட்டு நாம் fight பண்ணி இருக்கலாம். அந்தக் கண்ணோட்டத்திலேதான் நான் சொன்னேன். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. இன்னும் 3 மணித்துளிகள்தான் இருக்கின்றன. (குறுக்கீடு) ** என்று சொன்னது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஆகவே, நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால் தமிழக அரசு distribution-ஐப் பொறுத்த அளவிலே தனியாருக்குத் தாரை வார்க்கும் முறையிலே ஒரு சட்டம் கொண்டு வருவதற்கு யோசிக்கிறதாகத் தகவல்கள் வருகின்றன. அதைப் பரிசீலிக்க வேண்டும். அது தமிழகத்திலே இருக்கிற மக்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கற்பனைகளுக்கும், யூகங்களுக்கும் பதில் சொல்வது கடினம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கற்பனை அல்ல. According to the Electricity Act, 2001 நீங்கள் மின் வாரியக் கட்டமைப்பை மின்சார உற்பத்தி, மின் விநியோகம் என்ற முறையிலே, தனித் தனியாகப் பிரித்து அந்தச் சட்டப்படி அதற்குத் தேவையான சட்ட திட்டங்களை உருவாக்குவதற்குக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்; ஆகவே, அந்த முறையிலே உள்ள சட்டத்தை உருவாக்குவதற்கான முயற்சி நடந்து வருகிறதாகத் தகவல். நாங்கள் ஒன்றும் அதிலே பார்ட்டிகள் அல்ல. நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமசந்திரன், அதாவது எல்லோருக்கும் 10 மணித்துளிகள்தான். நீங்கள் தலைவர் என்கிறதாலே 15 மணித்துளிகள் கொடுக்கிறேன். இன்னும் நீங்கள் தொழில் துறைக்கே போகவில்லையே!

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இரண்டு மூன்று விஷயங்கள் சொல்லிவிட வேண்டும். அதாவது இன்றைக்கு மின்சார வாரியத்தைப் பொறுத்த அளவிலே 1400 கோடி ரூபாய் அளவுக்கு உங்களால் அந்தச் சுமை ஏற்றப்பட்டு இருக்கிறது. மேலும், இந்த மின்சாரக் கட்டணத்தை ஏற்றப் போகிறார்கள். அதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகிறதாகத் தகவல். நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், ஏற்கெனவே 23 சதவீதம் மின்சாரக் கட்டண உயர்வினை அனைத்து மக்களுக்கும் இந்த மின்சார வாரியம் ஏற்றி இருக்கிறது. அதற்கு மேலும் ஏற்றுகிற ஆபத்து இந்த distribution தனியாருக்கு போவதன் வழியாக அல்லது தனியாரை ஊக்கி வைக்கப் போகிற முறையிலே ஒரு ஏற்பாடாக போனால் வரும். நான் இந்த நேரத்திலே ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏற்கெனவே மின்சார வாரியத்தில் 30 ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளிகள் ஒப்பந்தத் தொழிலாளிகளாக பல ஆண்டுகளாக முறைப்படுத்தப்படாமல் வைக்கப்பட்டிருக்கிறார்கள். 1998-வது வருடத்திலே ஓர் ஒப்பந்தம் அந்தத் துறையிலே இருக்கிற சங்கங்களுக்கும்...



பிற்பகல் 1-25

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தில் தற்போது எந்த ஒப்பந்தப் பணியாளர்களும் கிடையாது. ஒப்பந்ததாரரிடம் பணியாற்றுகின்ற பணியாளர்கள்தான் இருப்பார்களே தவிர மின்சார வாரியத்தில் ஒப்பந்தப் பணியாளர்கள் இல்லை. இதற்கு முன்பு காலித் கமிஷனுடைய தீர்ப்புப்படி 18 ஆயிரம் ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட வேண்டும். அதன்படி 13 ஆயிரம் பேரும், பிறகு அனல் மின் நிலையங்களில் கிட்டத்தட்ட 8 ஆயிரம் பேரும், நீர் மின் நிலையங்களில் 500 பேரும் ஏற்கெனவே பணியமர்த்தப்பட்டுவிட்டார்கள். இருந்தாலும்கூட 30-8-2001 அன்று உச்ச நீதிமன்றத்தில் இரும்பு ஆலைகளால் தொடரப்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர் வழக்குப்படி அதிலே தீர்ப்பு வந்திருக்கிறது. அந்தத் தீர்ப்பின்படி எந்த ஒப்பந்தத் தொழிலாளர்களையும் இனி பணி அமர்த்தக்கூடாது என்று உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வந்திருக்கிறது. அதே தீர்ப்பு மின்சார வாரியத்திற்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள்கூட கடந்த காலத்தில் அன்றைக்கு இருந்த முன்னாள் அமைச்சர் ஆற்காடு வீராசாமி அவர்களிடம் இந்த அவையில் கேட்கும்போது ஒப்பந்தத் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 40 ஆயிரம் பேர் இருப்பதாகச் சொல்லுகிறார்கள், அவர்கள் புறவாசல் வழியாக வேலைக்கு அமர வேண்டும் என்ற நோக்கத்தோடு முயற்சி செய்வதாகத் தெரிகிறது, ஆகவே அரசாங்கம் அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். ஏனென்றால் ஏற்கெனவே மின்சார வாரியத்தில் 90 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள், இவர்களும் வந்தால்--மின்சார வாரியம் ஏற்கெனவே நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது--40 ஆயிரம் பேரை இன்னும் நியமனம் செய்தால் இன்னும் தொடர்ந்து பெரு நஷ்டத்திற்கு ஆளாக நேரிடும். ஆகவே இதையெல்லாம் தடைசெய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் இந்த அவையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே இப்போது ஒப்பந்தத் தொழிலாளர்கள் யாரும் மின்சார வாரியத்தில் கிடையாது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரோடு விவாதத்திற்கு நான் வரவில்லை. 30 ஆயிரம் என்பதை ஒருவேளை அவர் dispute பண்ணலாம். ஆனால் கொஞ்சம் தொழிலாளிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்கெனவே 1998-லே ஓர் அக்ரிமெண்ட் போடப்பட்டிருக்கிறது. P.W.D.Scheduled Rate-படி சம்பளம் கொடுக்கலாம். ஆனால் P.W.D. Scheduled Rate 90 ரூபாய். ஆனால் அவர்களுக்குக் கொடுக்கப்படுவது இப்போது 34 ரூபாய்தான். ஆகவே, அக்ரிமென்டையாவது நடைமுறைப்படுத்த வேண்டிய அந்த நிலைமைக்கு மின்சார வாரியம் வரவில்லையென்றால் Regulatory Commission-னுடைய ஆட்சியிலே வரும்போது அவர்கள் பெரிய பாதிப்புக்கு ஆளாக்கப்படுவார்கள்.

இன்னும் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன், அந்த வாரியத்திலே பணியாற்றுகிற ஊழியர்களுடைய Wage settlement முடிந்து 29 மாத காலம் ஆகிவிட்டது. அதை மீண்டும் பேசி அவர்களுக்கு நாட்டிலே ஏற்பட்டிருக்கிற விலைவாசிக்கு ஏற்ற முறையிலே உள்ள ஊதிய revision ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்போது மின்சார வாரியத்தினுடைய இந்த விஷயங்களைப் பற்றி, வேறு பல விஷயங்களைச் சொல்ல வேண்டியிருந்தாலும் நேரம் இல்லாத காரணத்தால் நான் அந்த விஷயத்திற்கு வரவில்லை.

இன்று தொழிலைப் பொறுத்த அளவிலே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கைக் குறிப்பிலே அவர் என்ன சொல்லுகிறார் என்றால் Tenth Plan Period-லே 8 சதவிகிதம் வளர்ச்சி that is growth ஏற்படுத்துவதற்கான ஏற்பாடு அவருடைய பார்வையில் உள்ளது. ஆனால் அது முடியுமா என்பதைப் பொறுத்த அளவிலே நான் ஒரு சில சந்தேகங்களைக் கிளப்புவதற்கு விரும்புகிறேன்.

இன்று இந்தத் தொழில் துறையைப் பொறுத்த அளவிலே, ஒரு Progressive and Comprehensive Policy என்பது இப்போது தேவை. அது வருகிற நேரத்திலே பிரதானமான பரம்பரையான traditional industries-ஐப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை தேவை. புதுத் தொழில்கள் தேவை. அதைப் பொறுத்த அளவிலே dispute இல்லை. அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். அதை நாங்களும் ஆதரிக்கிறோம். ஆனால் traditional



industries-ஐப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையை இப்போது தமிழக அரசு போதுமான அளவுக்கு எடுக்கவில்லை என்ற ஆதங்கம் எங்களுக்கு இருந்து கொண்டிருக்கிறது.

நான் இதைச் சொல்லுகிற நேரத்திலே ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேற்கு வங்காளத்திலே அவர்களுடைய traditional industries ஆன Jute Industry-ஐப் பாதுகாத்துக்கொள்வதற்கு அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை, 5 நிமிடங்கள் வேண்டும். அதேபோன்று நம்முடைய traditional industries-ஆன பஞ்சாலை, கை நெசவு, அதேபோன்று உள்ள தொழில்களான பீடி, தீப்பெட்டி, பனியன், தோட்டங்கள் இதையெல்லாம் பாதுகாத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் போதுமான அளவுக்கு இந்தத் துறையில் எடுக்கப்படவில்லை என்ற வருத்தம் எங்களுக்கு இருக்கிறது. அந்த முறையில் உள்ள கருத்துகளை இதிலே காணவில்லை.

அதேபோல மேலும் அதிகமாக privatisation; தனியார்மயத்தைப் பார்க்கப் போகிற ஒரு trend-தான் இதிலே காணப்படுகிறது. இன்றைக்குக் காலையிலே கொடுக்கப்பட்டிருக்கிற அந்தக் கொள்கைக் குறிப்பிலேகூட.......

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு வங்கத்தை உதாரணத்திற்கு எடுக்காதீர்கள். தமிழகத்தின் நிலையை மட்டும் பேசுங்கள் என்று இதுகாறும் சொல்லி வந்திருந்த சி.பி.எம். அமைப்பு (மணியடிக்கப்பெற்றது)

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மேற்கு வங்கத்தையே உதாரணத்திற்கு எடுப்பது சற்று விந்தையாக இருக்கிறது. Jute Industry-ஐப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால்

அவர்களுடைய நிதிநிலை அறிக்கையிலே மேற்கு வங்கத்தின் நிதியமைச்சர் அவர்கள் Jute Industry மேற்கு வங்கத்திலே மிகவும் நலிந்த நிலைக்குச் சென்றுவிட்டது, மைய அரசு உதவி தர வேண்டும் என்று கேட்டிருக்கிறார். இதை உங்கள் கவனத்திற்குத் தருகிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் பருத்தித் தொழிலை நீங்கள் சொல்கிறீர்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்தான் நெசவுத் தொழிலில் இருக்கிற அதுவும் குறிப்பாக விசைத்தறி நெசவாளர்கள் நலன் கருதி பவர் செக்டாருக்குக் குறைந்த விலையிலே மின்சாரத்தைத் தர வேண்டும் என்ற ஆணையிட்டு, அந்தத் தொழிலைப் பாதுகாத்து வருகிறார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து மைய அரசு excise duty என்ற முறையிலே இந்த CENVAT *10* சதவீதம் போட்டு அந்தத் தொழிலை நசுக்கக்கூடிய அளவிற்கு ஒரு முடிவினை எடுத்தபோது அது கூடாது, அந்தத் தொழில் நசுங்கிவிடும் என்று மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு அஞ்சல் எழுதி அதன் பாதகத்தை நீக்கி வெற்றியும் இன்று பெற்றிருப்பது புரட்சித் தலைவி அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு வங்காளத்தை மேற்கோள் காட்டக் கூடாது என்ற கருத்து எனக்குக் கிடையாது. நான் என்ன சொல்கிறேன் என்றால் நீங்கள் சொல்கிற நேரத்திலே அதற்குப் போதுமான விளக்கம் சொல்வதற்கு எங்களுக்கு நீங்கள் நேரம் தருவதில்லை. அதுபற்றிப் பல நேரங்களிலே வெளியே பத்திரிகைகளில் எல்லாம் படிக்கக்கூடிய ஆட்கள் என்ன கருதுவார்கள், முதலமைச்சர் பல விஷயங்கள் சொல்கிறார்கள், எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் ஒன்றும் பதில் சொல்லவில்லை என்று தவறான எண்ணம்கூட வருகிறது. நான்.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஒன்றும் தவறான எண்ணம் இல்லை. சரியான எண்ணம்தான்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் என்ன சொல்கிறேன் என்றால் எந்த நாட்டிலேயானாலும் நல்லதை நாம் ஏற்றுக்கொள்ளலாம். அதற்கான ஏற்பாடுகளை நாங்கள் வரவேற்கிறோம். இப்போது Jute-ஐ பொறுத்த அளவிலே ஒன்றைச் சொன்னார். நலிந்து வருகிறது,



அதைப் பாதுகாத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுக்கிறோம். அதற்கு மத்திய அரசு உதவி செய்ய வேண்டும். இதே கொள்கையைத்தான் நாங்கள் தமிழகத்திலேயும் சொல்கிறோம். இன்று இந்த நலிந்து வருகிற தொழில்களைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு உண்டு. மத்திய அரசு அதற்கான நிதி உதவியைச் செய்ய வேண்டும். அதைப் பெறுவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். அதற்கு இந்தத் தமிழகத்திலே இருக்கிற மக்கள் நிச்சயமாக ஆதரவு கொடுப்பார்கள். அந்த முறையிலே உள்ள நடவடிக்கைகளை நீங்கள் எடுக்கவில்லை என்பதுதான் எங்களுடைய கருத்து. நீங்கள் பல நேரங்களிலே அந்த முயற்சிக்குப் பதிலாக போக்குவரத்து, மின்சாரம் அதேபோன்ற பல துறைகளை இலாபகரமாக நடத்திக்கொள்ள முடியும் என்கிற தொழில்களை நீங்கள் தனியாருக்குத் தாரை வார்க்கக்கூடிய முறையிலே உங்கள் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். அது தவிர்க்கப்பட வேண்டும் என்பதுதான் எங்கள் நிலை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட இப்போது எங்கள்......

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விந்தையாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். போக்குவரத்துக் கழகம் தமிழகத்தில் இலாபத்திலா ஓடுகிறது? ஒட்டுமொத்த accumulated loss is about Rs.2000 crores now. அதேபோல மின் துறை இலாபத்திலா ஓடிக்கொண்டிருக்கிறது? ஆண்டிற்கு சுமார் *5000* கோடி ரூபாய் இழப்பு என்ற நிலையிலே ஓடிக்கொண்டிருக்கிறது. இப்படி இருக்கிறபோது இலாபத்தில் இயங்கும் தொழில்களைத் தனியார்மயம் ஆக்குகிறோம் என்று சொல்கிறார்கள். தனியார்மயம் ஆக்கக்கூடிய கொள்கையே தற்போது எங்களிடம் இல்லை, நாங்கள் சொல்லாத ஒன்றைச் சொன்னதாகக் கூறிக் கொண்டிருப்பது தவறான ஒன்று என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையை இலாபகரமாக நடத்திக்கொள்ள முடியும் என்பதற்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நேரம் ஒதுக்கித் தருவார்களேயானால் நாங்கள் அவரோடு அதைப் பற்றி வாதிட்டு அதை அவருக்கு நிரூபித்துக்காட்டுவதற்குத் தயாராக இருக்கிறோம். காரணம் இப்போது பல்வேறு முறையிலே ஏற்படுகின்ற இழப்புகளைத் தவிர்த்து அவர்களுக்குக் கொடுக்கப்பட

வேண்டிய உதவிகளைக் கொடுத்து இலாபகரமாக நடத்திக்கொள்ள முடியும் என்ற புள்ளிவிவரங்களோடு நாங்களும் தயாராக இருக்கிறோம். அதனால் தான் இதைச் சொல்கிறேன். இன்று தமிழக அரசு ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று நான் சொல்லவில்லை. எடுத்திருக்கிற நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை. மேலும் நீங்கள் எடுக்க வேண்டும் என்றுதான் நாங்கள் சொல்கிறோம். தனியாருக்குத் தாரை வார்ப்பதைத் தவிர்க்க முடியும் என்றுதான் சொல்கிறோம். 2 நாட்களுக்கு முன்னால் உள்ளாட்சித் துறையிலே அறிவிப்புகள் செய்யப்படுகின்ற நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் சார்பிலே நம்முடைய அமைச்சர் அவர்கள் ஓர் அறிவிப்பைக் கொடுத்தார்கள். எங்களுடைய மாவட்டத்திலே இருக்கிற இரப்பருக்கு மார்க்கெட் இல்லாத ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, இன்று இரப்பரைஸ்ட் ரோடுகள் போட முடியும்; அதற்கான தார்கள் உருவாக்கிக்கொள்ள முடியும். இரப்பர் போர்டு என்ன சொல்லியிருக்கிறது என்றால், இன்று மற்ற தார்களைப் பயன்படுத்திப் போடுகிற சாலைகளைவிட 100 per cent utility அதிகமாக இந்த ரோடுகளால் கிடைக்கும். அதேபோன்று, செலவுகூட 15 சதவீதத்திலிருந்து 20 சதவீதம்தான் அதிகமாக வரும். நான் அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஒரு கோரிக்கையாகக் கொடுத்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று அதை ஒரு experimental அடிப்படையிலே செய்வதற்கு directions கொடுத்திருக்கிறார்கள். அதற்கு நான் என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த முறையிலே (மணியடிக்கப்பெற்றது) நான் சொல்கிற நேரத்திலே நான் என்ன சொல்கிறேன் என்றால்.....

*பிற்பகல் 1-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், அப்போது எதிர்க் கட்சிகள் வைக்கிற கோரிக்கைகள் எல்லாம் முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்றுதானே அர்த்தம்?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஆமாம். பல கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன; பல கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. (சிரிப்பு) கோரிக்கைகள் ஒன்றும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று நான் சொல்லவில்லையே? எனக்கொன்றும் அப்படி முதலமைச்சர் மேலே காழ்ப்புணர்ச்சி இல்லை.



நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இது ஒரு experimental என்ற முறையில் அல்லாமல் இதை ஒரு பூர்ணமான தொழில் என்ற முறையிலே மாற்றிக்கொள்வதற்குள்ள வாய்ப்பு இருக்கிறது.

இப்போது இரப்பர் போர்டுக்கு அங்கே இரப்பர் பார்க் என்ற ஒன்றை அமைப்பதற்கு அவர்கள் 7 கோடி ரூபாய் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டிருப்பதாக இரப்பர் போர்டு சேர்மன் என்னிடம் சொன்னார். (மணியடிக்கப்பெற்றது) நான் என்ன சொல்கிறேன் என்றால்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அப்படி இரப்பரைப் பயன்படுத்தி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, பேச்சை இரப்பராக ஆக்கக் கூடாது. இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இரப்பரைப் பயன்படுத்தி அதற்கான தொழில்களை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

அதேபோல, நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காலையிலே ஒரு கேள்விக்குப் பதில் சொல்கிற நேரத்திலே டைட்டானியம் டை-ஆக்ஸைடு பிளான்ட் என்பது, தூத்துக்குடிக்கும் திருநெல்வேலிக்கும் என்று சொன்னார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், கன்னியாகுமரி மாவட்டத்திலே தரமான மினரல்ஸ் உற்பத்தி செய்யப்படுகிறது. அவர்களால் ஏற்கெனவே டைட்டானியம் டை-ஆக்ஸைடு பிளான்டுக்காக வேண்டி மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதையும் இதோடு இணைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, இன்னொன்று; நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், மினரல்ஸ் மைனிங்குக்கு இன்று தனியாருக்கு கன்னியாகுமரி மாவட்டத்திலே லைசென்ஸ் கொடுப்பது என்பதை avoid பண்ணி, பொதுத் துறை ஸ்தாபனமான இன்டியன் ரெயர் எர்த்ஸ் லிட்.-க்கு கொடுக்கப்பட வேண்டும். அதன் வழியாகத்தான் ஒரு முன்னேற்றத்தை அங்கே ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

நான் கடைசியாக ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குளச்சல் துறைமுகம், இன்று அந்த மாவட்டத்திலே தொழில் வளர்ச்சிக்கு ஒரு இன்றியமையாத தேவையாக இருப்பது; அந்த மாவட்டத்துக்கு மட்டும் என்றல்ல, தென் மாவட்டங்களுக்குக்கூட குளச்சல் துறைமுகத்தை ஏற்படுத்துவதுதான் ஒட்டுமொத்தமான தேவையாக இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகள் அதிகமாக எடுக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று நான் இன்னொன்றை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது என்னவென்றால் சிமெண்டு ஆலைகள். இப்போது சிமெண்ட் ஆலைகளைப் பொறுத்த அளவிலே, டால்மியாவினுடைய சிமெண்ட் ஆலைகளிலே மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தவறான சில நடவடிக்கைகளை எடுத்து மக்களுக்குப் பாதிப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் குடியிருக்கிற பகுதிகளிலே எடுப்பதற்குப் பதிலாக, மக்கள் இல்லாத பகுதிகள் இருக்கின்றன, அங்கே போய் அவர்கள் அந்தக் கல்லை உடைக்கலாம். ஆனால், அவர்கள் அதைச் செய்வதில்லை. அரியலூரிலே எல்லாம் இது ஒரு மிக முக்கியமான பிரச்சினையாக இருந்துகொண்டிருக்கிறது. அதை நம்முடைய துறையினுடைய அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சிவகங்கையில் இன்று Coco-Cola கம்பெனியினர் சக்தி சுகர்சுக்குக் கிடைக்கப்பெற்ற உரிமத்தை அவர்கள் தவறாகப் பயன்படுத்தி, அவர்களுக்கு அதைப் பயன்படுத்துவதற்கு உரிமை இல்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதற்குப் பிறகும்கூட, அதை ஏற்றுக்கொள்ளாமல், Coco-Cola கம்பெனிக்காரர்கள் அங்கேயிருந்து தண்ணீரை எடுத்து, அங்கே விவசாயத்திற்குத் தண்ணீர் பாதிப்பு ஏற்படுகிற ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதுவும் தவிர்க்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று நம்முடைய பல தொழில்களுக்குக் கச்சாப் பொருள்கள் கிடைக்காத ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதிலே ஒரு பிரதானமான தொழில்தான் எங்களுடைய மாவட்டத்திலே இருக்கிற முந்திரி தொழிற்சாலைகள். ஒரு இலட்சம் தொழிலாளிகளும், குடும்பங்களும் இப்போது இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.



இன்னும் நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், நம்முடைய கூட்டுறவு நூற்பாலைகளைப் பொறுத்த அளவிலே இப்போது அவை மூடப்பட வேண்டும் அல்லது தனியாருக்கு விற்கப்படவேண்டும் என்ற முறையிலே சில ஆலோசனைகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பது ஏற்கெனவே இந்த அவையிலேயேத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இன்று அரசு மக்களுக்கு விநியோகிப்பதற்காக வாங்குகிற அந்தத் துணிகள், சேலைகள் அதேமாதிரியுள்ள மற்ற வகைப் பொருள்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான நூல் இந்தக் கூட்டுறவு நூற்பாலைகளாலேயே supply செய்யப்பட வேண்டுமென்ற ஒரு நிலையை அரசு உருவாக்கினாலே அந்த ஆலைகள் ஓரளவுக்குப் பிழைத்துப் போகும். (மணியடிக்கப்பெற்றது) ஆனால், அரசு அந்த மாதிரி நிலையை எடுக்கவில்லை. இன்று அரசினுடைய தேவைக்குப் பயன்படுத்தப்படுகிற துணி வகைகளுக்குத் தேவையான நூலை கூட்டுறவு நூற்பாலைகள் உற்பத்தி செய்யக்கூடிய முறையில் உள்ள ஒரு நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் *1-40*

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இயங்கிக் கொண்டு இருக்கக்கூடிய அத்தனை கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நம்முடைய கூட்டுறவு ஆலையிலிருந்து தான் நூல் வழங்கப்படுகிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தகவலுக்கு நன்றி. என்னிடம் தகவல் கொடுத்தவர்களிடம் அதைப் பற்றிச் சுட்டிக்காட்டி அதை correct பண்ணுவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏன் இப்படித் தப்பாகவே தகவல் கொடுக்கிறார்கள் உங்களுக்கு? தப்பாகவே தகவல் கொடுக்கிறார்களே?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது பாதிக்கப்பட்ட தொழிலாளிகள் தான் சொன்னார்கள். பாதிக்கப்பட்ட தொழிலாளிகள்தான் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். நான் இன்று காலையிலேதான் வந்தேன். அதனாலே துறையினுடைய அதிகாரிகளுடன் contact பண்ணி உண்மை என்ன என்பதைத் தெரிந்துகொள்வதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் ஒன்றைக் கூட சொல்லி முடித்துக் கொள்கிறேன். இன்று சர்க்கரை ஆலைகளைப் பொறுத்த அளவிலே நாம் மூட வேண்டிய கட்டாயத்திற்கு வந்திருக்கிறோம் என்ற முறையிலே தகவல் சொல்லப்பட்டது. ஆனால், உத்தரப்பிரதேசத்திலே முதலமைச்சர் மாயாவதி அவர்கள் மத்திய அரசை அணுகி, வற்புறுத்தியதினுடைய விளைவாக அங்கு கரும்பு விவசாயிகளுக்கு அதிகமான விலை கொடுக்கக் கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நான் என்ன சொல்கிறேன் என்றால், உத்தரப்பிரதேச அரசுக்கு ஒரு கொள்கையும், தமிழகத்திற்கு ஒரு கொள்கையும் என்பது சரியல்ல. ஆகவே, மத்திய அரசு கரும்பு விவசாயிகளுக்கு என்னென்ன சலுகைகள் அல்லது உதவிகள் அறிவித்து இருக்கிறதோ அதைத் தமிழகத்திற்கும் ஏற்படுத்த வேண்டும் என்ற குரலை நாம் எழுப்ப வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

அதேபோல, நெய்வேலி தொழில் ஸ்தாபனத்தை பொறுத்த அளவிலே ஆயிரம் கோடி ரூபாய் இப்போது இலாபம் ஏற்படுத்திக் கொண்டு இருக்கிற ஒரு ஸ்தாபனம். அந்த ஸ்தாபனம்கூட இப்போது தனியாருக்கு விற்பதற்கான பட்டியலிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. இலாபம் ஈட்டிக் கொண்டு இருக்கிற பல தொழில்களையும் இப்போது தனியாருக்கு விற்பதற்குள்ள நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. அதிலே தமிழகத்திலே இருக்கிற, ஏற்கெனவே Salem Steel Plant--சம்பந்தமான விஷயங்கள் நமக்குத் தெரியும்--Hindustan Photo Films அந்த மாதிரி உள்ள ஸ்தாபனங்கள் எல்லாம் மத்திய அரசினுடைய முதலீட்டில் உள்ள ஸ்தாபனங்கள் இன்று இப்படித் தனியாருக்குப் போகக்கூடிய ஏற்பாட்டை நாம் அனுமதிக்கக் கூடாது. அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். அதேபோன்று, நான் என்ன சொல்கிறேன் என்றால், சென்ற 20...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் உருக்காலையைத் தனியாருக்கு மத்திய அரசு கொடுக்க உத்தேசித்துள்ளதை இந்த அரசு கடுமையாக எதிர்த்திருக்கிறது. அதனை ஏற்கெனவே இந்த அவையிலேயே தெரிவித்திருக்கிறேன். அதேபோலவே நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனையும் தனியாரிடம் ஒப்படைக்க மத்திய அரசு



யோசித்துக் கொண்டிருக்கிறது என்ற தகவல் வந்தவுடனேயே அதனை இந்த மாநில அரசு கடுமையாக எதிர்த்து இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுகுறித்து பிரதமர் அவர்களுக்கும் நான் எதிர்ப்புத் தெரிவித்து கடிதம் அனுப்பி இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால்--(குறுக்கீடு) முதலமைச்சர் அவர்கள் அரசினுடைய நிலையை விளக்கியிருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்--ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் சேலம் சம்பந்தமாகவும், நெய்வேலி சம்பந்தமாகவும் இந்தக் கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், தேவைப்பட்டால் இந்த அவையிலேயே தீர்மானத்தைப் போட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி, நாம் நம்முடைய நிலையை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துக்கொள்ளுங்கள், இன்னும் 2 உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** முடித்துவிடுகிறேன். இன்று நாம் ஒரு விஷயத்தை பார்க்கிற நேரத்திலே, மத்திய அரசினுடைய பட்ஜெட் எந்தத் திசையிலே போகிறதோ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. வேண்டாம், வேண்டாம். திரு. ஏ.எஸ். கண்ணன். (குறுக்கீடு) முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதே திசையில், அதே வழியிலேதான் இந்த அரசும் போகிறது, அது இன்று மந்த நிலையிலே போய்க் கொண்டு இருக்கிற தொழிலுக்கு வளர்ச்சி ஏற்படுத்தக்கூடிய நிலையிலும் இல்லை. அதேபோன்று வறட்சியிலே பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயத்திற்கும் இன்று நன்மை செய்யக்கூடிய நிலையிலே இல்லை. எப்படி மத்திய அரசினுடைய பட்ஜெட் இருக்கிறதோ, அவர்களுடைய கொள்கை இருக்கிறதோ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அவர்களுடைய கொள்கையை ஆதரிக்கக் கூடிய நிலையிலே இந்த மாநில அரசு போகக் கூடாது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன்.

***திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு எரிசக்தித் துறை மற்றும் தொழில் துறை மானியங்கள் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நெஞ்சார்ந்த வணக்கத்தைக் கூறிக்கொள்கிறேன்.

எரிசக்தி சிக்கனம் பற்றிய நடவடிக்கை அமெரிக்கா போன்ற நாடுகளில் 1884 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டுவிட்டது. ஆனால் நம்மைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் TEDA என்ற அமைப்பு, 1985 ஆம் ஆண்டு தொடங்கி 18 ஆண்டு காலமாக எரிசக்தி ஆய்வுக்கான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளோம். ஆய்வின் முடிவுகளைப் பற்றி, மின்சாரத்தைச் சிக்கனமாக எப்படிப் பயன்படுத்துவது என்பது பற்றிய முடிவினை மக்களுக்கு முறையாக, சரியாக நாம் தெரியப்படுத்தவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சூரியக் காற்றாலை மின்சாரங்களினால், குறைந்த விலையில் மின்சாரம் கிடைக்கிறது என்ற ஆராய்ச்சி முடிவை சட்டமாக அமல்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார உற்பத்திக்கான முயற்சிகள் பல்வேறு வகைகளில் மேற்கொள்ளப்படுகின்றன. உதாரணத்திற்கு, தூத்துக்குடி, வடசென்னை இரண்டு இடங்களிலும் 2,000 மெகாவாட் மின் உற்பத்திக்கு 8,000 கோடி ரூபாய் திட்டமிடப்பட்டுள்ளதை எங்களுடைய வட சென்னை பகுதிவாழ் மக்கள் சார்பாக வரவேற்கின்ற அதேநேரத்தில், வட சென்னை மின் உற்பத்தி, துறைமுகம் போன்ற திட்டங்களுக்கு அரசுக்கு நிலம் வழங்கிய பகுதி மக்களுக்கு, 504 பேர்களுக்கு வேலைவாய்ப்புத் தருவோம் என்று மாவட்ட ஆட்சியர் மூலம் அரசு உறுதிக் கடிதம் தந்துள்ளது. இதுவரையிலும் வேலை வழங்கப்படவில்லை. வேலையை வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மின் கட்டண உயர்வு, இலவச மின்சார இரத்து போன்ற நடவடிக்கைகளால், விவசாயிகள், தொழில் முனைவோர், குடிசைவாழ் மக்கள் ஆகியோர் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். இப்படி நாங்கள் கூறுகின்றபோது எங்களுக்கு இருக்கின்ற உண்மையான அச்சம் எல்லாம் இப்போது நீங்கள்



வழங்குகின்ற அந்த மானியத்தை—ஏற்கெனவே இலவச மின்சாரம் இரத்து செய்யப்பட்டு இருப்பதற்குக் காரணம் உலக வங்கிதான் என்று கூறுகிறீர்கள். அதே உலக வங்கி, நீங்கள் தருகின்ற அந்த மானியத்தையும்— தரக் கூடாது என்ற நிபந்தனையை விதிக்குமேயானால், எங்கள் நிலைமை என்ன என்பதற்கான சந்தேகங்கள் அனைத்துத் தரப்பிலும் இருக்கிறது. இதை அரசு நிவர்த்தி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 ஆம் தேதியன்றுதான், உலக வங்கியின் Country Director, Thiru Michel Carter மற்றும் அவரது குழுவினருடன் விரிவான பேச்சுவார்த்தைகளை நான் இங்கே தலைமைச் செயலகத்தில் நடத்தினேன். அப்போது விவசாயிகளுக்கு, சிறு, குறு விவாசாயிகளுக்கு இந்த அரசு, அவர்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தை அரசே வழங்குகிறது என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்லி, அதை ஏன் வழங்குகிறோம் என்று, வழங்க வேண்டிய கட்டாயத்தை விளக்கிச் சொல்லி, தொடர்ந்து இந்த அரசு அந்தக் கட்டணத்தை விவசாயிகளுக்குச் செலுத்தும் என்பதை அவரிடமே தெளிவுபடத் தெரிவித்துவிட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு முதலமைச்சருடையை பதிலுரைக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். மேற்காணும் மின் கட்டண உயர்வு, இலவச மின்சார இரத்து போன்றவற்றிற்குக் காரணம் தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம்தான் என்று கூறுகின்றீர்கள். ஆனால் அதனுடைய தலைவர் மரியாதைக்குரிய பால்ராஜ், ஐ.ஏ.எஸ். அவர்கள் மின்சார வாரியத்தின்மீது நேரடியாக குற்றச்சாட்டுகளைச் சொல்கிறார்கள். மின் துறையின் அனைத்துப் பிரிவு நிருவாகங்களும் சரியாக இயங்கவில்லை என்று கூறியதோடு காரணங்களையும் கூறுகிறார். மின் இழப்பு 18 சதவீதம் எப்படி ஏற்படுகிறது, காரணம் இன்று வரையிலும் நிருவாகம் சரியாக நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என....

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, line loss 18 சதவீதம் என்று குறிப்பிட்டது தவறான தகவல், நமது மின்சார வாரியத்தில் line loss 16.25 சதவீதம்தான் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** அமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்கு நன்றி. மேலும் தனியாரிடமிருந்து மின்சாரம் யூனிட்டிற்கு ரூ.4.80 என்று வாங்கப்படுகிறது. சென்னை மாநகரைப் பொறுத்தவரையிலும் ஏறக்குறைய குறைந்தபட்சம் 5 கோடி ரூபாய் அதன் மூலம் நமக்கு வீணாகிறது. அது மட்டுமல்லாமல் தமிழகம் முழுவதும்...

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழ்நாட்டில் தனியாரிடமிருந்து 1,050 மெகாவாட் மின்சாரம் வாங்கப்படுகிறது. அந்த மின்சாரம் வாங்கப்படுவதற்கு Power Purchase Agreement கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக அரசுக் காலத்தில் போடப்பட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-50

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்திலே ஒரு agreement போட்டு நஷ்டத்தை ஏற்படுத்தினால், அதே நஷ்டம் வரும்படி நாமும் செய்துகொண்டிருக்க வேண்டுமா? பல குற்றச்சாட்டுகளைச் சொல்லுகிறபோது, சென்னை மாநகராட்சியிலேயே ஒரு ஆண்டுக்கு அந்த மாநகராட்சியோ அல்லது மின்சார வாரியமோ 5 கோடி ரூபாய் என்ற விதத்திலே நஷ்டத்திலே நாம் மின்சாரத்தை வாங்கிக் கொண்டிருக்கிறோம். அப்போது இதற்கு ஒரு மாற்று வேண்டுமா, வேண்டாமா? அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Power Purchase Agreement திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் போடப்பட்டாலும்கூட, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வந்ததற்குப் பிறகு அதை மறுபரிசீலனை செய்வதற்கு, தனியார் மின் உற்பத்தி நிலையங்களுடன் நாம் பேச்சுவார்த்தை நடத்துவது என்பது ஆய்வில் இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** அமைச்சர் பதிலுரைக்கு நன்றி, அதுமட்டுமல்லாமல், தமிழகம் முழுவதும் வாங்குகின்ற மின்சாரம், அந்த தனியாரிடம் வாங்குவதன் மூலம் குறைந்தபட்சம் நமக்கு 500 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்று சொன்னால், நெய்வேலி போன்ற 3 பிளாண்ட்களிலேயிருந்து வரும் உற்பத்தியை 2 ரூபாய் 80 காசு கொடுத்து நாம் வாங்குகின்ற நிலைமையை



ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சராசரியாகப் பார்க்கிறபோது, 2 ரூபாய் 50 காசுக்குத்தான் அரசுத் துறை தயாரிக்கிறோம். ஆனால் தனியார் துறைக்கு ஏறக்குறைய 5 ரூபாய் நாம் கொடுக்கின்ற ஒரு நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைகளை, குற்றச்சாட்டை மரியாதைக்குரிய ஆணையத்தினுடைய தலைவர் அவர்கள் சொல்கிறார்கள். ஐ.எஸ்.ஓ.9000 சான்றிதழ் உடனடியாகப் பெறவேண்டுமென்று திட்டவட்டமாக நிர்வாகத்திற்கு அறிவுறுத்திச் சொல்லியிருக்கிறார். நிர்வாகம் நடவடிக்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மின்சார வாரியத்திற்கு சப்ளை செய்கின்ற Contractors மின் கடத்திகளை சப்ளை செய்கின்ற சிறு தொழில் முனைவோர்களுக்கு TIIC-ன் மூலம் bill discount 10 கோடி ரூபாய் collateral இல்லாமல் தருகின்ற நிலை இப்போது உருவாகியிருக்கிறது என்று அறிகிறேன். அதற்காகத் தொழில் முனைவோர் சார்பில் அந்த நிலையை வரவேற்பதுடன், மேற்காணும் நிலையை குறுந்தொழில் முனைவோர்களுக்கும் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***பெருந்தொழில்கள்;*** ஏறக்குறைய 14 வகையான அரசு பெருந்தொழில்களைப்பற்றிச் சுட்டிக்காட்டி நிறுவனங்களிலுள்ள பெருந்தொழில்களைப்பற்றிச் சுட்டிக்காட்டி இருக்கின்றீர்கள் அதில் அரசுத் துறைகள் கூட்டுறவு மற்றும் பிற தனியார் துறைகள் அதிகமான துறைகள் நஷ்டத்தில் இயங்குகின்றன என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் புதிய பொருளாதாரம் அறிவிக்கப்பட்ட பின்னால், தமிழகத்தில் கடுமையான தொழில் நெருக்கடி உள்ளது எனப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. தொழில் நெருக்கடி நிலவுகிறது என்று நாங்கள் சொன்னால், மானியம் கேட்பதற்காகப் பேசுகிறார்கள் என்றுகூட நீங்கள் சொல்லலாம். ஆனால், தமிழகத்திலே சிறு, குறு தொழில்கள் வளர்ச்சிக்காக ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் இப்போது நிதி நெருக்கடியில் இருக்கிறது என்று பத்திரிகையில் தகவல் வருகிறது. அதுமட்டுமல்லாமல் உண்மை நிலை, தொழில் தேக்கம்தான் இதற்குக் காரணம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

***சர்க்கரை ஆலைகள்;*** மாநில அரசுத் துறைகளில் இயங்குகின்ற சர்க்கரை ஆலைகளைத் தனியார் துறைக்குக் கொடுக்கின்ற பல்வேறு முயற்சிகள் ஆய்வில் உள்ளதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். மேற்காணும் முயற்சியைக் கைவிட வேண்டுமென்று உங்களை நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம், இலாபகரமாக சர்க்கரை ஆலைகளை இயக்க முடியும் என்பது எங்களுடைய கருத்து. காப்பாற்றுவதற்காக மத்திய அரசு கொண்டு வந்துள்ள கூட்டுறவு மாதிரி சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று தமிழக அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். மேற்படி சர்க்கரை ஆலைகள், அதிகாரிகளினுடைய தவறான கட்டளைப்படி ஆட வேண்டி உள்ளதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் பங்குதாரர்கள், நிர்வாகிகள் அடங்கிய போர்டு காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இருந்தது. பின் வந்த ஆட்சியாளர்கள் அதை நீக்கிவிட்டார்கள். அப்படிப்பட்ட போர்டு மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், அதிகாரிகளினுடைய அக்கறையின்மையான நடவடிக்கைகளினால் மேலும் கூட்டுறவு ஆலைகள் நலிவிற்கு வழிகாட்டப்படுகிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விரிவாக்கத் திட்டங்களைச் செய்கின்றபோது, குறிப்பிட்ட நாட்களில், அந்த விரிவாக்கத் திட்டத்தை முடித்திடல் வேண்டும். அதேபோல விரிவாக்கத் திட்டத்திற்குக் கடன் வாங்குகிற போது, கூட்டுறவு வங்கிகளில் கடன் வாங்குவதைத் தவிர்த்துவிட்டு, பொதுத் துறை வங்கிகளிலும், நபார்டு போன்ற வங்கிகளிலும் அந்தக் கடன்களை வாங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சர்க்கரை ஆலைகள் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மத்திய அரசு நிதி நிறுவனமான U.T.I., I.F.C.I., NABARD போன்ற நிதி நிறுவனங்கள் புனரமைப்புகளுக்கு 60 ஆயிரம் கோடி ரூபாயில் ஒரு திட்டத்தை இப்போது கொண்டுவந்திருக்கின்றன. தமிழக அரசு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2 மணித்துளிகளில் உரையை முடித்து விடுங்கள்.*

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** கொஞ்சம் நேரம் வேண்டும் எனக்கு. 60 ஆயிரம் கோடி ரூபாயில் புனரமைப்புத் திட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்திருக்கிறது. தமிழக அரசு குறைந்தபட்சம் ஆயிரம் கோடி ரூபாய் கடனைப் பெற்று சர்க்கரை ஆலைகளைப் புனரமைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



**பெருந்தொழில்கள்;** கடந்த காலத்தில் மாநில அரசுகள் மத்திய அரசுக்குக் கோரிக்கை விடுக்கின்றபோது, மத்திய அரசு மிகப் பெரிய கம்பெனிகளையெல்லாம் தமிழகத்தில் ஏற்படுத்துவதற்கான உதவிக் கரத்தை நீட்டியது. உதாரணத்திற்கு கடந்த காலத்தில் HEF, ICF, OCF, CARD, BHEL, சேலம் உருக்காலை, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் போன்ற பொதுத் துறை நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன.

*பிற்பகல் 1-55*

தனியார் தொழில்கள், T.V.S., T.I. Group, Metal Box, English Electricals, India Airnet Carborundum Universal, Indian Valves, Rane (Madras) போன்ற தனியார் துறைகளில் உள்ள மிகப் பெரிய கம்பெனிகளும் ஏற்பட்டன. அதனால் ஆயிரக்கணக்கான சிறு, குறு தொழில்களும் job order பெற்றன. இலட்சக்கணக்கான தொழில் முனைவோருக்கும் தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்புக் கிடைத்தது. ஆனால், துரதிருஷ்டவசமாக மத்திய, மாநில அரசுகள் நஷ்டம் என்ற காரணத்தைக்காட்டி, பெருந் தொழில்களைத் தனியார் துறைக்கு விடுகின்ற அல்லது மூடி விடவேண்டும் என்ற முடிவினை எடுக்கின்றீர்கள். அரசுகளைப் பின்பற்றித் தனியார் துறையும், இப்போது அதைச் செயல்படுத்த முனைகிறார்கள். உதாரணத்திற்கு, டி.வி.எஸ். கம்பெனி இப்போது இலங்கையிலும், சீனாவிலும் தன்னுடைய கம்பெனிகளை தொடங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாநில அரசின் பல்வேறு நடவடிக்கைகளுக்குக் காரணம் புதிய பொருளாதாரக் கொள்கைதான் என்பது திட்டவட்டமாகத் தெரியும். புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்த்து வழக்கை உச்ச நீதிமன்றத்திலே தொடர்ந்தவர் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள். மேற்காணும் வழக்கு இப்போதும் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ளது. அதுதொடர்பான வழக்கில் தமிழக அரசு என்ன நிலை எடுக்கப் போகிறது என்பது தெரியவில்லை.

**மூடிக் கிடக்கும் தொழிற்சாலைகள்;** தமிழகத்தில் பல்வேறு மிகப் பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் மூடிக் கிடக்கின்றன. மாருதி நிறுவனம் வளரவேண்டும் என்பதற்காக ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலையை மூடும் நிலையை உருவாக்கினார்கள் என்று பேசப்படுகிறது. ஆனால், தான் பெற்ற குழந்தையைப் பட்டினியால் சாகடித்துக் கொன்றுவிட்டு, அந்நிய குழந்தைகளுக்குச் சத்துணவு

கொடுத்து வளர்ப்பதால் யாருக்கு என்ன இலாபம்? அநாதைகளாக உள்ள ஸ்டாண்டர்டு மோட்டார், டன்லெப், மெட்டல் பாக்ஸ் போன்ற கம்பெனிகளைத் திறப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேரடியாகத் தலையிட்டு, பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம்.

அதேபோல, அரசுத் துறையிலே இருக்கின்ற அரக்கோணம் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் மாநில அரசால் 1972-ல் தொடங்கப்பட்டது. கடந்த சட்டமன்றக் கூட்டத்திலேகூட, கடந்த வருடம் நான் பேசினேன். இலாபகரமாக இயங்கிவந்த அந்தத் தொழிற்சாலை அரசியல் காரணங்களுக்காக வி.ஆர்.எஸ். என்ற போர்வையால் 1997-ல் மூடப்பட்டது, 792 தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டார்கள். கம்பெனியினுடைய சொத்து குறைந்தபட்சம் இன்றைக்கும் 500 கோடி ரூபாய் அளவிற்கு உள்ளது. ஆனால், அந்தக் கம்பெனியை மத்திய அரசின் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் கடன் பெற்று, முதலீடு செய்து தொழிற்சாலையைத் திறக்கவேண்டுமென்று கேட்கின்ற அதேநேரத்தில் தொழிலாளர்களுக்குக் கிடைக்கவேண்டிய சம்பள பாக்கி, D.A., கருணைத் தொகை ரூ.50 ஆயிரம் கிடைப்பதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்நிய நாட்டுக் கம்பெனிகள் தமிழகத்தில் இப்போதும் பெருமைப்படக்கூடிய அளவிற்கு, Hyundai, FORD, LANCER போன்ற கம்பெனிகள் எல்லாம் தொடங்கப்பட்டிருக்கின்றன. அந்நிய கம்பெனிகள் தொடங்கப்பட்டு, அவற்றுக்குப் பல்வேறு சலுகைகளைத் தருவதால், நம்முடைய பொருளாதாரத்தை அந்நிய நாடுகள் எடுத்துச் செல்கின்ற விதத்திலே நாமே வழிவகுத்துள்ளோம். 5 இலட்சம் அளவிற்கு நவீன கார்களை ஏற்றுமதி செய்துள்ளோம் என்று விளம்பரப்படுத்திக்கொள்ளலாம். இதனால் தமிழக மக்களுக்கு என்ன இலாபம்? 5000 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்தது; 500 பேர்களுக்கு சிறு, குறு தொழில்களுக்கான Job order கிடைத்தது என்று, இந்தத் தொழில்களால் நமக்கு ஆதாயம் கிடைத்தது என்று சொல்ல முடியுமா? மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்கூட அடிக்கடி சொல்வார்கள்; அந்நிய நாட்டு கம்பெனிகளால் நமக்கு மிகப் பெரிய இலாபம் இல்லை. Corporate வரி என்ற ஒன்றை மட்டும் அவர்கள் செலுத்துகிறார்கள் என்றுகூட நம்முடைய நிதியமைச்சர் அடிக்கடி சுட்டிக்காட்டியுள்ளார்.



மாநில அரசு Hyundai போன்ற கம்பெனிகளுக்குக் குறைந்த விலையில் மின்சாரம், நிலம், வரிச் சலுகை, ஏற்றுமதி இறக்குமதிக்கான சலுகையை கோடிக்கணக்கிலே நாம் தருகிறோம். ஆனால், அவர்களால் இந்தத் தமிழக மக்களுக்கு என்ன இலாபம்? தமிழகத்திற்கு என்ன பொருளாதாரம் கிடைக்கிறது என்பதை நாம் பார்க்கவேண்டுமென்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளியில் பேசி, முடித்து விடுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** புவியியல் சுரங்கத் துறை; இந்தத் துறையில் மிக உயர்ந்த கற்களை, பிற வகைக் கற்களை எல்லாம் அந்நிய நாட்டுக்கு ஏற்றுமதி செய்கின்றோம். தற்போது செய்யப்படுவது வெட்டி எடுக்கப்படுகின்ற அந்தப் பொருள்களை அப்படியே அனுப்புகிறோம். அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன்; சம்பந்தப்பட்ட பகுதியில், வெட்டி எடுக்கின்ற கற்களை அனுப்பாமல், அதை பாலிஷ் செய்வது அல்லது தேவைப்பட்ட பொருட்களைச் செய்வது என்ற நிலையை உருவாக்கினால், தமிழகத்திற்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும், சம்பந்தப்பட்ட கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டுகிறேன்.

கடைசியாக, மாண்புமிகு முதலைமைச்சர் அவர்கள் கவனத்திற்கு; மூலிகை சக்தியைப் பிரித்து எடுப்பதற்கான தொழில்களில் நாம் கவனம் செலுத்தவேண்டும். தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், சிறப்பாக, வெற்றிகரமாக செயல்படவேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நினைக்கின்றார்கள் என்பது நம் அனைவருக்கும் புரியும். பதப்படுத்தப்பட்ட மூலிகை சக்திகளைப் பிரித்தெடுப்பதற்கான தொழில்களை உருவாக்குவதற்கு சிறப்புத் திட்டம் ஒன்றை அவர்கள் கொண்டுவர வேண்டும். காரணம் சக்தி வாய்ந்த மூலிகை சக்திகளைப் பிரித்தெடுக்கும் நிறுவனங்கள் இந்திய நாட்டில் தனியார் துறையில் 6 தான் இருக்கின்றன. அதுவும் 50 கோடி மூலதனத்திற்குள்தான், வருட வியாபாரம் உலகச் சந்தையில் ஒரு இலட்சம் கோடி ரூபாய் விற்பனையாகிறது. தற்போது இந்தியா...

*பிற்பகல் 2-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத்துடன் பேச்சை முடித்துவிடுங்கள் கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** 527 கோடி ரூபாய்க்குத்தான் அனுப்பிக் கொண்டிருக்கிறோம். ஆனால் மூலிகை வளர்வதில்-பணத்தில்-உலகத்தில் இரண்டாவது இடத்தைத்தான் நாம், இந்தியா பெற்றிருக்கிறோம். உலக விற்பனையில் ஏழாவது இடத்தைத்தான் நாம் பெற்றிருக்கிறோம். மூலிகை சக்தியைப் பிரித்தெடுக்கத் தேவையான நவீன தொழில்நுட்பம் சித்தா, ஆயுர்வேத பட்டதாரிகள், ஆராய்ச்சியாளர்கள், திறமை வாய்ந்த தொழிலாளர்கள், குறு, சிறு விவசாயிகள்--தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தேவையான நிலமும் நமக்கு நிச்சயமாக இருக்கிறது—மேற்காணும் தகவலை ஆய்வுத் தொகுப்பாக வெளியிட்டுள்ளவர்கள், இந்திய அரசின் ஏற்றுமதி, இறக்குமதி வங்கி 'எக்சிம்' என்ற பொதுத் துறை வங்கிதான்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கண்ணன், மற்ற கருத்துகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள், இத்துடன் பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** வெளியிட்டிருக்கிறது என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, என்னுடைய தொகுதிப் பிரச்சினை, கடந்த ஆண்டு-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொகுதிப் பிரச்சினைகளை எழுதிக் கொடுத்துவிடலாம்.

## 8. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 6-5-2003 ஆம் நாளன்று வினாக்கள்-விடைகள் நேரம் ஒத்திவைப்பு குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 6-5-2003 அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

*6-5-2003* அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை, செவ்வாய்க்கிழமை *(6-5-2003)* காலை *10-00* மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 2-02 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

87. 2002 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிக் கட்டடம் (நீர் பாதுகாப்பு) விதிகள் இயற்றியது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 11-10-2002-ஆம் நாளிட்ட 140 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

88. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்)

89. 2001-2002 ஆம் ஆண்டிற்கான திருவள்ளூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

[2003 மே 5

*90. 2001-2002* ஆம் ஆண்டிற்கான நாமக்கல் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [*1994* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *21/1994) 165 (2)* பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

*91. 2001-2002* ஆம் ஆண்டிற்கான தஞ்சாவூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [*1994* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *21/1994) 165 (2)* பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

*92. 2001-2002* ஆம் ஆண்டிற்கான நாகப்பட்டினம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [*1994* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *21/1994) 165 (2)* பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

*93. 2001-2002* ஆம் ஆண்டிற்கான இராமநாதபுரம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [*1994* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *21/1994) 165 (2)* பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

*94. 2001-2002* ஆம் ஆண்டிற்கான கன்னியாகுமரி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [*1994* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *21/1994) 165 (2)* பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்.**

*314.* நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2003-2004.* (தமிழ், ஆங்கிலம்)

*315.* ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2003-2004.* (தமிழ், ஆங்கிலம்)



2003 மே 5]

*316.* வணிக வரித் துறை - வணிக வரிகள் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2003-2004.* (தமிழ், ஆங்கிலம்)

*317.* மானியக் கோரிக்கை எண் *13* - தமிழ்நாடு மின்சார வாரியம், மின்சார ஆய்வுத் துறை, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு *2003-2004.* (தமிழ், ஆங்கிலம்)

*318.* மானியக் கோரிக்கை எண் *26* - தொழில் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2003-2004.* (தமிழ், ஆங்கிலம்)

*319.* தொழில் துறை பற்றிய செயல்பாட்டு ஆய்வுரை, *2002-2003.* (தமிழ், ஆங்கிலம்)

*320.* தொழில்கள் பற்றிய செயலாக்கத் திட்டம், *2003-2004.* (தமிழ், ஆங்கிலம்)

*321.* புவியியல் மற்றும் சுரங்கத் துறை பற்றிய செயலாக்கத் திட்டம் *2003-2004.* (தமிழ், ஆங்கிலம்)

*322.* சர்க்கரைத் தொழில் பற்றிய செயலாக்கத் திட்டம், *2003-2004.*(தமிழ், ஆங்கிலம்)

*323.* மனுக்கள் குழுவின் முப்பத்து ஒன்றாவது அறிக்கை *(2001-2003)*

*324.* மனுக்கள் குழுவின் முப்பத்து இரண்டாவது அறிக்கை *(2001-2003)*

# இணைப்பு-I

(76 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 13—எரிசக்தித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2003-2004

## தமிழ்நாடு மின்சார வாரியம்

### I. முன்னுரை

தமிழ்நாடு மின்சார வாரியம் 1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டு, 1957 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் நாளன்று நிறுவப்பட்ட ஒரு அமைப்பாகும். தமிழ்நாடு மின்சார வாரியத்தின் முக்கிய குறிக்கோள் மின் உற்பத்தி, அனுப்புகை மற்றும் பகிர்மானம் ஆகியவற்றை சீரிய முறையில் மேற்கொண்டு மின் பயனீட்டாளர்களுக்கு தரமான மின்சாரத்தை வழங்குவதாகும்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மொத்த மின் உற்பத்தி நிறுவு திறன் 31-3-2003 அன்றுள்ளபடி, 8,249 மெகாவாட்டாகும். இதில் வாரிய மின் உற்பத்தி நிலையங்கள் 5,288 மெகாவாட், தனியார் மின் உற்பத்தி நிலையங்கள் 1,058 மெகாவாட் மற்றும் மத்திய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து பங்கு 1,903 மெகாவாட் ஆகியவை அடங்கும். இவை தவிர தனியார் காற்றாலைகளிலிருந்து 971 மெகாவாட்டும் வாரியத்தின் காற்றாலைகளிலிருந்து 19 மெகாவாட்டும் கிடைக்கப் பெறுகிறது.

தற்போதைய நிலையில் உச்ச மின் தேவை 6,960 மெகாவாட் அளவை 21-2-2003 அன்று எட்டியுள்ளது. மின் பயனீட்டு அளவின் வளர்ச்சி 5 முதல் 6 விழுக்காடாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 2002-2003 நிதியாண்டில் மின் பயனீடு 4,613 கோடி யூனிட்டுகள் ஆகியுள்ளன.

31-3-2003 நிலவரப்படி மொத்தம் 990 துணை மின் நிலையங்களும் 1.45 இலட்சம் கி.மீ. மிக உயரழுத்த/உயரழுத்த மின் கம்பிகளும், 4.55 இலட்சம் கி.மீ. தாழ்வழுத்த மின் கம்பிகளும் உள்ளன. மேலும் 1.48 இலட்சம் மின் மாற்றிகள் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டில் 31-3-2003 முடிய மொத்தம் 160 இலட்சம் மின் பயனீட்டாளர்கள் உள்ளனர்.

அதிகரிக்கும் மின் தேவையை நிறைவேற்ற தமிழ்நாடு மின்சார வாரியம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் (2003-2007) அதனுடைய மின் உற்பத்தித் திறனை 2,058 மெகாவாட் அளவிற்கு உயர்த்தவும் மின் அனுப்புகை மற்றும் மின் பகிர்மானத்தை விரிவாக்கவும் திட்டமிட்டுள்ளது.

2002-2003 ஆம் ஆண்டில் மின் வாரியத்தால் ரூ.352 கோடி செலவில் எரிவாயுவை எரிபொருளாகக் கொண்ட 95 மெகாவாட் திறனுடைய மின் உற்பத்தித் திட்டம் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வழுதூரில் 13-3-2003 அன்று இயக்கி வைக்கப்பட்டது. பழுப்பு நிலக்கரியை எரிபொருளாகக் கொண்ட 250 மெகாவாட் திறனுடைய மின் திட்டம் தனியார் துறையில் 16-12-2002 அன்று இயக்கி வைக்கப்பட்டது.

2003-2004 ஆம் ஆண்டில் 748 மெகாவாட் கூடுதல் நிறுவுதிறன் (வாரியம் - 251 மெகாவாட் மற்றும் மத்திய துறை பங்கு - 497 மெகாவாட்). மின் வாரியத்தின் 150 மெகாவாட் திறன் கொண்ட பைக்காரா இறுதி நிலை புனல் மின் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் ரூ.383 கோடி செலவில் இயக்கி வைக்கப்படும். எரிவாயுவை எரிபொருளாகக் கொண்ட 101 மெகாவாட் திறனுடைய மின்திட்டம் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள குத்தாலத்தில் ரூ.352 கோடி செலவில் 2003-2004-ல் இயக்கி வைக்கப்படும்.

2003-2004 ஆம் ஆண்டில் மத்திய தொகுப்பிலிருந்து கடலூர் மாவட்டத்தில் ரூ.3,000 கோடி செலவில் (சுரங்கம்-I விரிவாக்கம் உட்பட) நெய்வேலி அனல் மின் நிலையம்-I விரிவாக்கத்திட்டத்தின் கீழ், ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறன்கொண்ட இரண்டு பிரிவுகளிலிருந்து தமிழ்நாட்டிற்கு 227 மெகாவாட் பங்காக கிடைக்கும். மேலும் தேசிய அனல் மின் கழகத்தின் தால்ச்சர் நிலை-II திட்டத்தின் கீழ் ஒவ்வொன்றும் 500 மெகாவாட் திறன் கொண்ட முதல் இரண்டு பிரிவுகள் 2003-2004-ல் இயக்கி வைக்கப்படவுள்ளது. இந்த திட்டத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு 270 மெகாவாட் மின்சாரம் பங்காக கிடைக்கும்.

தமிழ்நாடு மின்சார வாரியத்திலுள்ள அனல் மின் நிலையங்கள் தொடர்ந்து நன்றாக செயல்பட்டு வருகின்றன. மேட்டூர், தூத்துக்குடி மற்றும் வட சென்னை ஆகிய அனல் மின் நிலையங்கள் 2001—2002 மற்றும் 2002-2003 ஆம் ஆண்டுகளில் சிறப்பாகச் செயல்பட்டமைக்காக இந்திய அரசின் தங்கப்பதக்கத்தை பெறத் தகுதிபெற்றுள்ளன.



தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தரமான அமைப்பை அங்கீகரிக்கும் வகையில் இந்தியத் தரச் செயலக நிறுவனம் வடசென்னை, தூத்துக்குடி மற்றும் மேட்டூர் அனல் மின் நிலையங்களுக்கு ஐஎஸ்ஓ. (ISO) 9002 தரச் சான்றிதழை வழங்கியுள்ளது.

## II. 2003-2004-ல் மின் விநியோக நிலைமை

எதிர்வரும் 2003-04 ஆம் ஆண்டில் மின் தேவை 7,600 மெகாவாட்டாகவும், சராசரி மின் பயனீட்டளவு நாளொன்றுக்கு 13.3 கோடி யூனிட்டுகளாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதுள்ள நிறுவுதிறன் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள கூடுதல் நிறுவுதிறன் ஆகியவற்றைக் கொண்டு இம்மின் தேவையை நிறைவேற்ற முடியும்.

மின் தொடர் மற்றும் மின் பகிர்மான தேவைகளை எதிர்கொள்ளும் வகையில் 2003-2004 ஆம் ஆண்டில் பல்வேறு மின் அழுத்த இனங்களில் 60 புதிய துணை மின் நிலையங்களும் சுமார் 800 சுற்று கிலோமீட்டர் மிக உயரழுத்த/உயரழுத்த மின் கம்பிகளும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. பத்தாவது திட்டக் காலத்தில் 315 புதிய துணை மின் நிலையங்களை அமைக்கவும், 4,000 சுற்று கிலோமீட்டர் மிக உயரழுத்த/உயரழுத்த மின்கம்பிகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியம் மின் தொடர் மற்றும் மின் பகிர்மான இழப்பை ஐந்து வருட காலத்தில் குறைக்க துணை மின் தொடர் மற்றும் மின் பகிர்மான மேம்பாட்டுத் திட்டங்களை ரூ.4,165 கோடி மதிப்பீட்டில் தயாரித்துள்ளது. இவை விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டத்தின் மூலம் நிதி உதவி பெற்றும் மேலும் பிற நிதி நிறுவனங்களான ஊரக வளர்ச்சிக்கான தேசிய விவசாய வங்கி (NABARD), ஊரக மின் மயமாக்கல் கழகம் (REC) மற்றும் மின் நிதி கழகம் (PFC) ஆகிய நிறுவனங்களிலிருந்து நிதி உதவி பெற்றும் செயல்படுத்தப்படும்.

பத்தாவது திட்டக் காலத்தின் (2002-2007) திட்ட மதிப்பீடு ரூ.8,000 கோடியாகும். 2003-2004 ஆம் ஆண்டிற்கான மூலதன திட்ட மதிப்பீடு ரூ. 1,287 கோடியாக உத்தேசிக்கப்பட்டுள்ளது. வெவ்வேறு பிரிவுகளில் இப்பணிகளுக்கு ஒதுக்கப்படவுள்ள திட்ட மதிப்பீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

[2003 மே 5

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | விவரம் | பத்தாவது திட்ட மதிப்பீடு (2002-07) | 2003-04 ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 1. | மின் உற்பத்தி | 1212 | 418 |
| 2. | புதுப்பித்தலும், நவினமயமாக்குதலும் | 364 | 75 |
| 3. | மின் அனுப்புகை மற்றும் மின் பகிர்மானம் | 5914 | 692 |
| 4. | ஊரக மின்மயமாக்குதல் | 490 | 93 |
| 5. | நில அளவை மற்றும் ஆய்வுகள் | 20 | 9 |
| | மொத்தம் | 8000 | 1287 |

**III. துணை மின் தொடர் மற்றும் மின் பகிர்மான மேம்பாட்டுத் திட்டங்கள்**

1. விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்பு திட்டம் (APDRP)

சென்னை பெருநகரிலுள்ள நான்கு மின் பகிர்மான வட்டங்கள், இதர ஐந்து மின் பகிர்மான வட்டங்கள், மேலும் ஒன்பது மின் பகிர்மான வட்டங்களிலுள்ள நகரப் பகுதிகள் கொண்ட மொத்தம் 25 துணை மின் தொடர் மற்றும் மின் பகிர்மான மேம்பாட்டுத் திட்டங்கள் ரூ.977 கோடி செலவில் விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டத்தின் (APDRP) கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் செயல்படுத்துவதற்கான கால அளவு இரண்டு வருடங்களாகும்.

இத்திட்டத்தின் கீழ் சென்னை நகரின் மின் பகிர்மான கட்டமைப்பு ரூ. 441 கோடி செலவில் வலுப்படுத்தப்படும்.



2003 மே 5]

மேலும் கீழ்க்கண்ட நகரப்பகுதிகளிலும் மேம்பாட்டுத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும்:

| | | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் பெருநகரம் | 23.0 |
| 2. | சேலம் பெருநகரம் | 31.1 |
| 3. | ஈரோடு நகரம் | 13.9 |
| 4. | திருநெல்வேலி பெருநகரம் | 12.1 |
| 5. | திருச்சி பெருநகரம் | 19.2 |
| 6. | மதுரை பெருநகரம் | 17.2 |
| 7. | காஞ்சிபுரம் | 8.6 |
| 8. | திருவள்ளூர் மற்றும் திருத்தணி | 3.3 |
| 9. | நாமக்கல் | 2.8 |
| 10. | சங்கரி | 9.8 |
| 11. | திருச்செங்கோடு | 2.7 |
| 12. | எடப்பாடி | 0.8 |
| 13. | குமாரபாளையம் | 1.5 |
| 14. | கடலூர் | 2.8 |
| 15. | சிதம்பரம் | 1.5 |
| 16. | விருத்தாசலம் | 3.2 |
| 17. | பண்ருட்டி | 1.7 |
| 18. | நெல்லிக்குப்பம் | 0.8 |
| 19. | குறிஞ்சிப்பாடி | 1.4 |

இவைதவிர, கீழ்க்கண்ட மின் பகிர்மான வட்டங்களில் மின் தொடர் மற்றும் மின் பகிர்மான மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:—

| | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1. கோயம்புத்தூர் | 113.6 |
| 2. புதுக்கோட்டை | 62.5 |
| 3. விழுப்புரம் | 81.9 |
| 4. உடுமலைப்பேட்டை | 68.3 |
| 5. செங்கல்பட்டு | 52.3 |

**2. ஊரக வளர்ச்சிக்கான தேசிய விவசாய வங்கித் திட்டங்கள் (NABARD)**

ஊரக வளர்ச்சிக்கான தேசிய விவசாய வங்கி, ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டத்திலிருந்து ஊரக மின்மயமாக்கல் பணிகளுக்காக கடனுதவி அளிக்கிறது. முதற்கட்டத்தில், கீழ்க்கண்ட நான்கு மாவட்டங்களுக்கான மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன:—

| | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1. இராமநாதபுரம் | 5.2 |
| 2. தூத்துக்குடி | 5.6 |
| 3. தஞ்சாவூர் | 16.2 |
| 4. தருமபுரி | 11.2 |
| **மொத்தம்** .. | **38.2** |

இரண்டாவதுகட்டத்தில் கீழ்க்கண்ட மேலும் நான்கு மாவட்டங்களிலுள்ள திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது:

| | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1. கரூர் | 7.0 |
| 2. சிவகங்கை | 5.1 |
| 3. திருவண்ணாமலை | 21.4 |
| 4. விருதுநகர் | 6.5 |
| **மொத்தம்** .. | **40.0** |



மூன்றாவதுகட்டத்தில் கீழ்க்கண்ட மேலும் ஐந்து மாவட்டங்களிலுள்ள திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது:—

| | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1. ஈரோடு (கோபிச்செட்டிப்பாளையம்) | 9.0 |
| 2. தேனி | 6.8 |
| 3. கன்னியாகுமரி | 3.9 |
| 4. வேலூர் (திருப்பத்தூர்) | 11.3 |
| 5. இராமநாதபுரத்தில் இரண்டாவதுகட்டம் | 2.2 |
| **மொத்தம்** .. | **33.2** |

ஆக மொத்தம் ரூ.111.4 கோடி செலவில் மேற்குறிப்பிட்டுள்ள அனைத்துத் திட்டங்களும் இரண்டு வருடக் கால அளவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**3. மின் நிதிக் கழகம் உதவும் திட்டங்கள்**

மின் நிதிக் கழகம் மின் தொடர் இழப்பைக் குறைப்பதற்காக ஐந்து வருடக் கால அளவில் நிறைவேற்றத்தக்கத் திட்டங்களுக்கு நிதி உதவி வழங்கி வருகிறது. கீழ்க்கண்ட மாவட்டங்களில் மின் தொடர் இழப்பைக் குறைக்கும் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது:—

| | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1. திண்டுக்கல் | 151.9 |
| 2. மதுரை | 109.9 |

**4. பிரதம மந்திரியின் கிராமப்புற வளர்ச்சித் திட்டங்கள் (PMGY)**

பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்கவும், மின்சாரக் கட்டமைப்பை மேம்படுத்தவும் வேலூர் (ரூ.20 கோடி), நீலகிரி (ரூ.8 கோடி) மற்றும் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள கொடைக்கானல் பகுதிகள் (ரூ.14 கோடி) ஆகியவற்றில், திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**IV. மின் கட்டண விகிதம்**

மின்சார ஒழுங்குமுறை ஆணையச் சட்டம், 1998 (மத்தியச் சட்டம் 14/1998) இயற்றப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தை 17-3-1999 அன்று

தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு வகையான மின் நுகர்வோர்களுக்கு மின்கட்டண விகிதங்களை நிர்ணயிப்பதற்காக நிறுவியது.

சென்னை உயர் நீதிமன்றம், அதன் 14-6-2002 தேதியிட்ட ஆணையில் வருங்காலங்களில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மட்டுமே மின் கட்டணங்களை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று ஆணையிட்டுள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியம் பெரும் வருவாய் பற்றாக்குறையில் இருந்ததால் மேற்கண்ட சென்னை உயர் நீதிமன்றத்தின் ஆணையைக் கருத்தில்கொண்டு மின் கட்டண திருத்த விண்ணப்பத்தை 25-9-2002 அன்று ஆணையத்திடம் சமர்ப்பித்தது. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் பொது மக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்த பின்னர் திருத்திய மின் கட்டண விகிதங்களை 16-3-2003 முதல் நடைமுறைக்குக் கொண்டுவர ஆணையிட்டுள்ளது.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், விவசாய மின் பயனீட்டாளர்களுக்கு மின் அளவி பொருத்தப்படும் வரை ஒரு குதிரைத் திறனுக்கு ஒரு வருடத்திற்கு ரூ.250 வீதமும், மின் அளவி பொருத்தப்பட்டிருந்தால் ஒரு யூனிட்டுக்கு 20 காசுகள் வீதமும் மின் கட்டணம் நிர்ணயித்துள்ளது. தமிழ்நாடு அரசு ஏற்கெனவே இலவச மின்சாரம் பெற்றுவரும் சிறு மற்றும் குறு விவசாயிகளை இந்தச் சுமையிலிருந்து காப்பாற்றுவதற்காக ஒரு ஆண்டிற்கு ரூ.1,000 என்ற வீதத்திலும் ஐந்து குதிரைத் திறன் பம்பு செட் வைத்திருந்தால் ஒரு ஆண்டிற்கு ரூ.1,250 என்ற வீதத்திலும் நேரடி உதவித் தொகை வழங்க அறிவித்துள்ளது. இதனால் 9.41 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்கள் பம்புசெட்டுகளுக்கு இலவச மின்சாரத்தைத் தொடர்ந்து பெறுவர்.

மேலும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ஊரகப் பகுதிகளிலுள்ள குடிசை மின் இணைப்புகளுக்கு, மின் அளவி பொருத்தப்படும் வரை மாதம் ஒன்றிற்கு ரூ.10 என்ற வீதத்திலும் மின் அளவி பொருத்தப்பட்டிருந்தால் ஒரு யூனிட்டுக்கு 50 காசுகள் என்ற வீதத்திலும் மின் கட்டணம் நிர்ணயித்துள்ளது. தமிழ்நாடு அரசு இந்த ஒவ்வொரு குடிசை இணைப்புக்கும் ஆண்டொன்றிற்கு ரூபாய் 100 நேரடி உதவித் தொகையாக அளிக்க முன் வந்துள்ளது. இதன்மூலம் கிராமப் பகுதிகளிலுள்ள 14 இலட்சம் குடிசைகளுக்கான மின் இணைப்புகளும் இலவச மின்சாரத்தைத் தொடர்ந்து பெறும்.





## மின்சார ஆய்வுத் துறை

### I. முன்னுரை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மின்சாரம் பொதுப் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. ஆகவே, இந்திய மின்சாரச் சட்டம், 1910, மின்சார (வழங்கல்) சட்டம், 1948, மற்றும் மின்சார ஒழுங்குபடுத்துதல் ஆணையச் சட்டம், 1998 ஆகியவை பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டு அவற்றிற்கான திருத்தங்களும் பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்படுகிறது. மின்சார ஆய்வுத் துறை இந்திய மின்சாரச் சட்டம், 1910-ன்படி சட்டப்படியாக உருவாக்கப்பட்டது. மின்சார சக்தி சம்பந்தமாக இயற்றப்பட்ட முதல் சட்டம், 1910 ஆம் ஆண்டு இந்திய மின்சாரச் சட்டமாகும். 2-10-1939-க்கும் முன்னர் இந்திய மின்சாரச் சட்டம், 1910-இன்கீழ் நியமிக்கப்பட்ட மின்சார ஆய்வாளர்கள் அந்நாளைய மின்சார இலாகா தலைமைப் பொறியாளரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வந்தனர். 2-10-1939 முதல் மின் ஆய்வாளர் தன்னிச்சை பொறுப்பு அளிக்கப்பட்டு அப்போதைய சென்னை மாநிலத்தில் மின்சாரத் துறையால் மின் வழங்கல் செய்யப்பட்ட பகுதிகள் தவிர பிற பகுதிகளுக்கு மின்சார ஆய்வாளராக நியமிக்கப்பட்டார். அரசு மின்சாரத் துறையால் மின்சக்தி வழங்கியப் பகுதிகளுக்கு அரசு மின்சார துறையைச் சார்ந்த தலைமை மின்சார இயக்கப் பொறியாளர் மற்றும் தலைமை மின்சார பகிர்மானப் பொறியாளர் ஆகியோர் 1910 ஆம் ஆண்டு இந்திய மின்சாரச் சட்டத்தின்கீழ் மின்சார ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

1-7-1957 முதல் தமிழ்நாடு மின்சார வாரியம் உருவாக்கப்பட்ட பின்னர் 7-9-1961 வரை தலைமை மின்சார ஆய்வாளருக்கு மின்சார வாரியத்திற்கு உட்பட்ட பகுதிகள் தவிர பிற பகுதிகளுக்கு சட்டரீதி மின்சார ஆய்வாளராக தன்னிச்சை பொறுப்பு அளிக்கப்பட்டது.

7-9-1961 வரை தமிழ்நாடு மின்சார வாரியத்தைச் சேர்ந்த தலைமை இயக்கப் பொறியாளர் மற்றும் தலைமை பகிர்மானப் பொறியாளர் ஆகியோர் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் மின்சாரம் வழங்கப்பட்ட பகுதிகளுக்கு இந்திய மின்சாரச் சட்டம், 1910-ன்கீழ் மின்சார ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

[2003 மே 5

மின்சார ஆய்வுத் துறை திருத்தி அமைக்கப்பட்டு, 7-9-1961 முதல், அரசு தலைமை மின்சார ஆய்வாளர், இந்திய மின் சட்டம், 1910-ன்கீழ் சட்டரீதியாக, தமிழ்நாடு மாநிலம் முழுமைக்கும் தமிழ்நாடு மின்வாரிய பகுதிகள் உள்ளடக்கி மின்சார ஆய்வாளராக நியமிக்கப்பட்டார்.

## II. நிர்வாகம்

அரசு தலைமை மின் ஆய்வாளரை துறைத் தலைவராக கொண்டு செப்டம்பர் 1961-லிருந்து இயங்கி வரும் மின்சார ஆய்வுத் துறை 31-7-1993 முடிய அரசின் பொதுப் பணித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இயங்கியது. பின்னர், 1-8-1993 முதல் எரிசக்தித் துறை தனியாக உருவாக்கப்பட்டபோது அத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது.

பல வகையான மின்சார சட்டங்கள் மற்றும் விதிகளின் நிர்வாகம் மற்றும் அமலாக்கம் அரசுத் தலைமை மின் ஆய்வாளரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன.

## III. சட்டரீதியான செயல்பாடுகள்

இந்திய மின்சாரச் சட்டம், 1910 இந்திய மின்சார விதிகள், 1956 ஆகியவை மின்சார உரிமைதாரர், மின்சார உரிமம் பெறாதவர், மின்சக்தி வழங்கும் நிறுவனங்கள் மின்சார நுகர்வோர் ஆகியோர் பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள் அவர்களால் கடைபிடிக்கப்படுகின்றனவா என்பதை உறுதி செய்வது இத்துறையின் முக்கிய பணிப் பொறுப்பாகும்.

மின்சார ஆய்வுத் துறைக்கு இந்திய மின்சார சட்டம், 1910, இந்திய மின்சார (வழங்கல்) சட்டம், 1948 மற்றும் இந்திய மின்சார விதிகள், 1956 ஆகியவற்றை அமல்படுத்துவதோடு கீழ்க்கண்ட சட்டரீதியான செயல்பாடுகளையும் கடமைகளையும் நிறைவேற்றும் பொறுப்புகளும் உள்ளது:

1. இந்திய மின்சார சட்டம், 1910 மற்றும் மின்சார (வழங்கல்) சட்டம் 1948.



2003 மே 5]

2. தமிழ்நாடு மின் தீர்வை சட்டம், 1939 மற்றும் தமிழ்நாடு மின் தீர்வை விதிகள், 1939.
3. தமிழ்நாடு மின்சார (நுகர்வு வரி) சட்டம், 1962 மற்றும் விதிகள் 1964.
4. தமிழ்நாடு மின்சார வழங்கும் நிறுவனங்களைக் கையகப்படுத்தும் சட்டம், 1954 மற்றும் அதன் விதிகள்.
5. தமிழ்நாடு மின்தூக்கி சட்டம், 1997 (Tamil Nadu Lift Act, 1997) மற்றும் தமிழ்நாடு மின்தூக்கி விதிகள், 1997 (Tamil Nadu Lift Rules, 1997).
6. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிச் சட்டம், 1920-ன்படி மின்சாரப் பணியாளர்கள் சம்பந்தப்பட்ட சட்டரீதியான நடவடிக்கைகள்.
7. தமிழ்நாடு திரையரங்க (ஒழுங்குமுறை) சட்டம், 1955 மற்றும் தமிழ்நாடு திரையரங்க (ஒழுங்குமுறை) விதிகள், 1957 ஆகியவற்றின் கீழ் மின்சார ஆய்வுத் துறைக்கு வரையறுக்கப்பட்ட கடமைகள்.
8. இந்திய மின்சார சட்டம், 1910-ன்கீழ் உருவாக்கப்பட்ட மத்திய மின்சார வாரியத்தில் 1956 ஆம் ஆண்டு இந்திய மின்சார விதிகளின் சட்டபூர்வ பணிகளுக்கு தமிழக அரசின் சார்பில் நியமிக்கப்பட்ட உறுப்பினராகச் செயல்படுதல்.
9. அரசு தலைமை மின் ஆய்வாளரிடம் மின்சாரம் சம்பந்தமாக அரசு கோரும் இனங்களில் கருத்து அளித்தல்.
10. மின்சார தொழில் நுட்பம் தொடர்புடைய இந்திய தர நிர்ணயங்களை உருவாக்கும் இந்திய தர நிர்ணய குழுமத்தில் உறுப்பினராகப் பணிபுரிதல்.
11. அரசு தர நிர்ணய ஆய்வுக்கூடத்தில் மின்சார அளவை கருவிகளுக்கான எச்சிலான்-II மின்சார (மண்டலரீதியான தரம்) தரம் அளவைக் கருவிகளை நிர்மாணித்தல் மற்றும் அரசுத் தலைமை மின் ஆய்வாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள மின்சார தர நிர்ணய ஆய்வுக்கூடத்தில் தமிழ்நாடு மின்சார வாரியம் உட்பட இந்தியாவில் உள்ள ஏனைய மாநில மின்சார வாரியங்களிலிருந்தும் வரும் துணை நிலை தரம் கொண்ட மீட்டர்கள் மற்றும் மின் அளவைக் கருவிகளின் அளவைக் குறியீடுகளை ஒப்பீடு செய்தல். தொழிற்சாலைகள், வணிக நிறுவன

[2003 மே 5

கட்டடங்கள், குடியிருப்புக் கட்டடங்கள் ஆகியவற்றில் உள்ள மின் இணைப்புகளில் சோதனைகள் மேற்கொள்ளக்கூடிய சோதனைக் கருவிகளை நிறுவுதல்.

12. அரசு தலைமை மின் ஆய்வாளர் இந்திய மின்சார விதிகள், 1956-ன் விதி எண் 45-ன்கீழ் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு மின்சார உரிமம் வழங்கும் வாரியத்தின் தலைவராக பணிபுரிதல்.

13. அரசுத் தலைமை மின் ஆய்வாளர் தமிழ்நாடு திரையரங்க (ஒழுங்குமுறை) விதிகள், 1957-ன்படி, உருவாக்கப்பட்ட திரைப்பட கருவி இயக்குனர்களுக்கான தேர்வாணையத்தின் தலைவராக பணிபுரிதல்.

14. மின்சக்தி சேமிப்பை ஊக்குவிப்பதற்காக செயல்படும் வல்லுநர் கண்காணிப்புக் குழுவில் உறுப்பினராகச் செயல்படுதல்.

15. மின்சாரம் மற்றும் தொலைதொடர்பு ஒருங்கிணைப்புக் குழுவில் உறுப்பினராகச் செயல்படுதல்.

16. சென்னை மாநகராட்சி உயர்மட்டக் குழுவில் உறுப்பினராக இருந்து மின்சாரம் தொடர்பான விபத்துக்களை தடுக்கும் வழிமுறைகளைக் கூறுதல்.

**இந்திய மின்சாரச் சட்டம், 1910–ன்கீழ் வரும் சட்ட ரீதியான செயல்பாடுகள்**

இந்திய மின்சாரச் சட்டம், 1910, தொழில் மற்றும் மின்சக்தி பயன்பாடு குறித்த உயர் தொழில்நுட்ப சட்டமாகும். மின்சக்தி உற்பத்தி, மின்சக்தி கொண்டு செல்லுதல், மின்சக்தி வழங்கல் மற்றும் பயன்பாடு ஆகியவற்றில் பயன்படுத்தும் கருவிகளில் ஏற்படும் பழுதுகள் மற்றும் அபாயகரமான நிலைகளின் தொடர்பால் ஏற்படும் சேதங்களில் இருந்து நபர்கள் மற்றும் உடைமைகளின் பாதுகாப்பை உறுதி செய்கிறது.

நுகர்வோர்களுக்கு மின்வழங்கும் நிறுவனங்கள் மின்சார சக்தியை முறையாகவும், போதுமான அளவிலும் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்தல், மின்சக்தி உற்பத்தி, மின்சக்தி கொண்டு செல்லுதல், மின்சக்தி விநியோகம் மற்றும் மின்சக்தி நுகர்வு ஆகியவற்றினால் தொலை தொடர்பு பாதைகள் மற்றும் மின்காந்த ஆய்வுக்கூடங்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்.



2003 மே 5]

மின்சக்தி உற்பத்தி, மின்சக்தி கொண்டு செல்லுதல், மின் சக்தி விநியோகம் மற்றும் மின்சக்தி நுகர்வு சம்பந்தமான இனங்களில் மின்சார ஆய்வாளர்கள் காலமுறை ஆய்வு மற்றும் சோதனைகள் செய்வதுடன் நுகர்வோர்களும் மின் வழங்கும் நிறுவனங்களும் மேற்கொண்ட மின்சார சோதனை சம்பந்தமான பதிவுறுக்களை பரிசீலித்தல் ஆகிய முறைப்படுத்தும் பணிகளைச் செய்தல்.

இந்திய மின்சாரச் சட்டம், 1910 இந்திய மின்சார விதிகள், 1956-ன்கீழ் கீழ்க்கண்ட ஆய்வு மற்றும் ஒப்புதல் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1. உயர் மின்னழுத்த மின் அமைப்புகள், காற்றாலை மின் உற்பத்தி நிலையங்கள் தனியார் மின் உற்பத்தி நிலையங்கள், சுய மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் தமிழ்நாடு மின்வாரிய மின் உற்பத்தி நிலையங்கள், துணை மின் நிலையங்கள், பகிர்வு மின் மாற்றிகள், மின் சக்தி கொண்டு செல்லும் மற்றும் விநியோகிக்கும் மேல்நிலை கம்பிகள் ஆகியவற்றிற்கான ஒப்புதல் அளித்தல்.

(i) உயர் மின்னழுத்த நிறுவனங்கள் மற்றும் மின் வணிக நிறுவனங்கள் ஆகியவற்றை இந்திய மின்சார விதிகள், 1956-ன் விதி எண் 46-ன்கீழ் காலமுறை ஆய்வு செய்தல்.

(ii) தமிழ்நாடு மின்வாரியத்திற்குச் சொந்தமான அதிஉயர்/உயர் மின்னழுத்த துணை மின்நிலையங்கள் மற்றும் பகிர்வு மின் மாற்றிகள் ஆகியவற்றையும், இந்திய மின்சார விதிகள், 1956-ன் விதி எண்46-ன்கீழ் காலமுறை ஆய்வு செய்தல்.

2. மின் உற்பத்தி, மின் விநியோகம் மற்றும் மின் உபயோகம் ஆகியவற்றில் ஏற்படும் மின் விபத்துக்கள் இந்தத் துறைக்கு தெரிவிக்கப்பட்டு பொதுமக்களின் பாதுகாப்பிற்கு பாதிப்பு ஏற்படுத்தும் காரணங்களைக் கண்டறிந்து புலனாய்வு செய்வது.

3. குறைந்த மின்னழுத்த மின் நுகர்வோர் மின்னமைப்புகள் இந்திய மின்சார விதிகள், 1956-ன் விதி எண் 46-ன்கீழ் மின்சார வாரியம் மேற்கொள்ளும் காலமுறை ஆய்வுகளை உறுதிப்படுத்துதல்.

[2003 மே 5

## 4. மின் பாதுகாப்பு

தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்கள், பொதுமக்கள் மற்றும் மின் சாதனங்கள் ஆகியவற்றிக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் மின் இணைப்புகள் மற்றும் சாதனங்களை தரமாக்குதல் மற்றும் தொழிலாளர்களுக்குப் பயிற்சியளித்தல்.

(அ) ஆண்டுதோறும் விளம்பரம் மூலமாகவும், கருத்தரங்கு மூலமாகவும் மின்சாரப் பாதுகாப்பு முறைகள் பொதுமக்களுக்கு பிரச்சாரம் செய்யப்படுகிறது. மேலும் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் முதல் வாரம் மின் பாதுகாப்பு வாரமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு வணிக வளாகங்கள் மற்றும் குடியிருப்பு வளாகங்களில் உள்ள மின்தூக்கிகள் மின்சார ஆய்வுத் துறை ஆய்வாளர்களால் பாதுகாப்பு குறித்த ஆய்வு செய்யப்பட்டு உரிமங்கள் குறிப்பிட்ட காலங்களுக்கு வழங்கப்பட்டு காலமுறை தோறும் புதுப்பிக்கப்படுகிறது.

(இ) திரையரங்குகளில் திரைப்படக் காட்சி காணவரும் பொதுமக்களின் பாதுகாப்பினை முன்னிட்டு திரையரங்க மின்சார சாதனங்களின் அமைப்புகளின் பாதுகாப்பு மற்றும் தீ தடுப்பு சாதனங்கள் பராமரிப்பு, அவசரக் காலங்களில் இயங்கும் நிலை ஆகியவை ஆண்டு முறை ஆய்வின் போது சரி பார்க்கப்பட்டு மின்சார சான்றிதழ்கள் குறிப்பிட்ட காலங்களுக்கு வழங்கப்பட்டும் புதுப்பிக்கப்பட்டும் வருகிறது.

### தமிழ்நாடு மின் தீர்வை சட்டம், 1939 மற்றும் விதிகள்

மின் தீர்வை என்பது மின்சாரம் வழங்கும் உரிமதாரர்களால் விற்கப்படும் மின்சார சக்திக்கு வசூலிக்கப்படும் தொகையாகும். இந்த மின் தீர்வை ஒரு யூனிட்டிற்கு மூன்று பைசா வீதம், விற்கப்படும் மின் சக்திக்கு வசூலிக்கப்படுகிறது.

இந்த மின் தீர்வை அரசுக்கு செலுத்தப்படுவதை கண்காணிப்பது மின்சார ஆய்வுத்துறையின் பணியாகும்.

தங்கள் சுய தேவைகளுக்காக மின் உற்பத்தி செய்ய அனுமதிக்கப்பட்ட தொழில் நிறுவனங்கள், உபரியாக உள்ள மின் சக்தியை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் அவற்றின் துணை நிறுவனங்களுக்கும் விற்கும்போது அதற்குண்டான மின் தீர்வையை இந்நிறுவனங்கள் செலுத்தும் பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



2003 மே 5]

தமிழ்நாடு மின்வாரியத்திற்கு மட்டும் மின்சாரம் வழங்கும் தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களும் மின் வழங்கு உரிமதாரர்களாகக் கருதி அவர்களுக்கும் மின் தீர்வை விதிப்பது குறித்து பரிசீலனையில் உள்ளது.

### தமிழ்நாடு மின்சார (நுகர்வு) வரிச் சட்டம்,1962 மற்றும் விதிகள் 1964

இந்திய அரசின் மின் நுகர்வு நிறுவனங்கள் தவிர ஏனைய மின் நுகர்வோர்களால் பயன்படுத்தப்படும் மின்சார சக்திக்கு மின்சார விலையின் சதவிகித அடிப்படையில் மின் உபயோக வரி, பிரிவு 3-ன்கீழ் விதிக்கப்படுகிறது. இந்த வரியானது தமிழ்நாடு மின்சார வாரியத்தாலும் மற்றும் மின் வழங்கல் உரிமதாரராலும் வழங்கப்படும் மின்சாரத்திற்கும் மற்றும் சுய மின் திறன் மின்னாக்கிகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கும் பொருந்தும்.

இந்தச் சட்டத்தில் பிரிவு 3-ன்கீழ் வரையறுக்கப்பட்ட மின்சார வரியானது 1-5-1979 முதல் தமிழ்நாடு மின் வாரியத்தால் வழங்கப்படும் மின்சாரத்தை உபயோகப்படுத்துவதற்கான மின் கட்டண விகிதத்துடன் சேர்க்கப்பட்டதால் அரசுக்கு மின் வரி மூலம் வருவாய் இல்லை. 01.09.1991 முதல் அரசுக்கு வருவாய் வழிவகை செய்ய பிரிவு 3அ-ன்கீழ் விதிக்கப்பட்ட 4 சதவிகிதக் கூடுதல் மின்நுகர்வு வரி 1-4-1994 முதல் 5 சதவிகிதமாக உயர்த்தப்பட்டு உள்ளது.

1992-ல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தொழில் கொள்கையின்படி புதிதாகத் தொடங்கப்படும் தொழில் நிறுவனங்களில் முதன்மைப் பொருட்கள் உற்பத்தி துவங்கும் நாளிலிருந்து மூன்று வருடங்களுக்கு மின்சார நுகர்வு வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

கீழ்க்கண்டவற்றைத் தவிர, சுய உற்பத்தி செய்து நுகர்தலுக்கு ஏற்கெனவே உள்ள மின்சார வரி நடைமுறையில் உள்ளது:

1. டீசல் எண்ணெய் மற்றும் எல்எஸ்எச்எஸ். வகை எண்ணெயை எரிபொருளாகக் கொண்டு மின்சக்தி உற்பத்தி செய்யும் மின்னாக்கிகள்.

2. மரபு வழி சாரா எரிபொருள் (கரும்பு சக்கை, உமி போன்ற எரிபொருள் மூலம் மின்சக்தி உற்பத்தி செய்யும் மின்னாக்கிகள், காற்றாலை மின்னாக்கிகள், சூரிய வெப்ப சக்தி மின்னாக்கிகள் போன்றவை.)

[2003 மே 5

3. காகித உற்பத்தி ஆலைகள், துணிநூல் ஆலைகள், சர்க்கரை ஆலைகள் மற்றும் இரசாயன ஆலைகளில் நிறுவப்பட்டுள்ள எந்த வகையான எரிபொருளாலும் இயங்கும் சுய உற்பத்தி மின்னாக்கிகள்.

**புதிய சட்டம் அறிமுகப்படுத்துதல்**

மின்சாரத்தின் மீது விதிக்கப்படும் தீர்வை மற்றும் வரி ஆகியவற்றிற்கான சட்டங்களை முழுமையாக மறு பரிசீலனை செய்து, மின்சாரத்தின் விற்பனை அல்லது பயன்பாட்டின் மீது வரி பற்றிய புதியதொரு சட்டமியற்ற சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இப்புதியச் சட்டம், சுய தேவைக்கு மின் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் உள்ளிட்ட உரிமம் பெற்றுள்ள அனைவருக்கும் அவர்கள் விற்பனை செய்யும் எரிசக்தியின் நிகர மதிப்பின் மீது குறைந்தபட்சம் 5 சதவீதமும், அதிகபட்சம் 10 சதவீதமும் வரிவிதிக்க வழி வகை செய்யும். சுய தேவைக்கு மின் உற்பத்தி செய்யும் உரிமதாரர்களைப் பொறுத்தவரை, இந்தச் சட்டத்தின்கீழ் அவ்வாறு சுய பயன்பாட்டிற்கு நுகர்ந்த மின்சாரத்தின் மீது யூனிட் ஒன்றுக்கு குறைந்தபட்சமாக 10 பைசாக்களும், அதிகபட்சமாக 20 பைசாக்களும் வரி விதிக்க வழிவகை செய்யப்படும், விவசாயப் பயன்பாடு மற்றும் குடிசைகளுக்கான மின்சாரத்தின் மீது எந்த வரியும் விதிக்கப்படமாட்டாது. மின்சார விற்பனை அல்லது நுகர்வு மீதான வரி தற்போது நடைமுறையில் உள்ள 5 சதவீத அளவிலேயே தொடரும். சுய தேவைக்கு மின்சாரம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் சுய தேவைக்கும் பயன்படுத்திக்கொள்ளப்படும். ஒவ்வொரு யூனிட் மின்சாரத்திற்கும் 10 பைசா விகிதத்தில் இவ்வரி விதிப்பு அமையும்.

**IV. தர நிர்ணய சோதனைக்கூடம் மற்றும் நடமாடும் ஆய்வுக்கூடங்கள்**

அரசு தர நிர்ணய ஆய்வுக்கூடம் சென்னையிலுள்ள அரசு தலைமை மின் ஆய்வாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக்கூடம் நமது தேசத்திலுள்ள பல்வேறு மாநில மின்சார வாரியங்களின் துணை நிலை மின் அளவை மீட்டர்களை தர நிர்ணயம் செய்யும் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. சென்னை, திருநெல்வேலி, சேலம் ஆகிய மூன்று இடங்களில் நடமாடும் தர நிர்ணய ஆய்வுக்கூடங்களை மேம்படுத்துவதற்கென 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.25.07 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



2003 மே 5]

# தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்

**முன்னுரை**

தமிழ்நாட்டில் புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்களை மேம்படுத்தவும் அவற்றின் பயன்பாட்டை அதிகரிக்கவும் தமிழ்நாடு அரசு 1985 ஆம் ஆண்டில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தை அமைத்தது. இதன் மூலம் மாற்று எரிசக்தி ஆதாரங்களை பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதன் விளைவாக தமிழ்நாட்டில் பல்வேறு புதுப்பிக்கவல்ல எரிசக்தியின் பயன்பாடுகள் பெருமளவில் அதிகரித்துள்ளது. புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்கள் மூலம் மின் உற்பத்தித்திறன் சுமார் 1200 மெகாவாட் அளவில் உள்ளது. இது தமிழ்நாட்டின் மொத்த மின் உற்பத்தித் திறனில் 13 சதவீதமாகும். இந்திய அளவில் புதுப்பிக்கவல்ல எரிசக்தியின் அளவு 3 சதவீதம் மட்டுமே. இதனால் புதுப்பிக்கவல்ல எரிசக்தி உற்பத்தியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதல் மாநிலமாகத் திகழ்கிறது.

**புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்கள்**

புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்களில் முக்கியமானவை பின்வருமாறு:

(1) காற்று சக்தி

(2) சூரிய சக்தி

(3) தாவர மற்றும் பிற உயிர்சக்திகள்

(4) கடல் அலை-மின்சக்தி

(5) எரிபொருள் கலன்

(6) கடல் வெப்ப மின்சக்தி

இவற்றில் தமிழ்நாட்டில் முதல் மூன்று வகை புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்களின் உற்பத்தி மற்றும் பயன்பாடு பெருமளவில் உள்ளது.

## மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டம் மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்திக்கு ஊக்கமளிக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள்

### பொருள் 15 (vii) உறைவிடப் பாதுகாப்பு

*சூரிய சக்தி பயன்பாட்டில் அனைவரும் பங்கேற்கும் வகையில், வீடுகளுக்கான பயன்பாட்டுப் பணிகளை மேம்படுத்துதல்:*

### பொருள் 15 (ix) எரிசக்தி பாதுகாப்பு

*புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்களான காற்று சக்தி, சூரிய சக்தி, சாண எரிவாயு மற்றும் உயிரினக் கழிவுகளைக் கொண்டு எப்பொழுதும் நிலைத்திருக்கும் எரிசக்தி வளங்களை உருவாக்கி வேளாண்மை, தொழில் மற்றும் வீட்டுத் தேவைகளுக்கு தன்னிறைவை எய்துதல்.*

*மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்சத் திட்டத்தின் குறிக்கோள்களை அடையும் வகையில் புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்களை மேம்படுத்த எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் பின்வருமாறு விவரிக்கப்படுகின்றன:—*

### காற்று சக்தி

### 1. காற்றாலை மூலம் மின் உற்பத்தி

*தமிழ்நாட்டில் காற்றின் வேகம் மணிக்கு 18 கி.மீக்கு மேலுள்ள பகுதிகளைக் கண்டறிய காற்று ஆய்வு மையங்கள் அமைத்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் அடிப்படையில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் முதல் முறையாக 19 மெகாவாட் திறன் கொண்ட செயல்விளக்கக் காற்றாலைப் பண்ணைகள் நிறுவப்பட்டன. இதன் விளைவாக, 1990 ஆம் ஆண்டில், தமிழ் நாட்டில் முதல் தனியார் காற்றாலைப் பண்ணை நிறுவப்பட்டது. மேலும், ஆய்வு அறிக்கையின்படி தகுதியான 40 இடங்கள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றில் 17 இடங்களில் பெரும்பாலும் தனியார் முதலீட்டின் மூலம் 31-3-2003 வரை 990 மெகாவாட் அளவிற்கு மின் உற்பத்தித் திறன் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் சுமார் 180 மெகாவாட் அளவிற்கு தமிழ்நாட்டில் காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன. ஆனால் முந்தைய ஐந்து ஆண்டுகளில் மொத்தம் 256 மெகாவாட் திறன் மட்டுமே அதிகரித்தது.*





*காற்றாலைப் பண்ணைகள் அமைத்து மின் உற்பத்தி செய்வோர் அவ்வாறு உற்பத்தியாகும் மின்சாரத்தை தமிழ்நாடு மின்வாரியத்திற்கு விற்று ஒரு யூனிட்டுக்கு ரூ.2.70 வீதம் கட்டணமாகப் பெற்றுக் கொள்ளலாம் அல்லது அந்த மின்சாரத்தைத் தங்களுடைய தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்திக்கொள்ள முடியும்; இதற்கான மின் இழப்பிற்காக 5 சதவீதம் மட்டும் தமிழ்நாடு மின்சார வாரியம் பிடித்தம் செய்கிறது.*

### 2. காற்றாலை நீர் இறைப்பான்

*காற்றின் வேகம் மணிக்கு 18 கி.மீ.க்குக் குறைவாக இருக்கும் இடங்களில் சிறிய காற்றாலைகளை அமைத்து திறந்த கிணறு மற்றும் ஆழ்குழாய் கிணறு போன்றவற்றிலிருந்து நீரிறைக்க பயன்படுத்த முடியும். இதுவரை இத்தகைய சிறு காற்றாலைகள் மாநில மற்றும் மைய அரசு மானிய உதவியுடன் 875 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. புதிய காற்றாலைகள் அமைப்பவர்களுக்கு ஒரு குதிரை சக்தி பம்பு அமைப்பிற்கு ஆகும் செலவில் மைய அரசிடமிருந்து 30% வரை மானியமாக வழங்கப்படுகிறது.*

### 3. காற்றாலை மின்னாக்கி

*சிறிய காற்றாலைகள் மூலம் மிகச் சிறிய அளவில் மின்சாரம் தயாரித்து மின் கலனில் சேமித்து தேவைப்படும் போது விளக்கு எரிக்கவும் பிற மின் தேவைகளுக்கும் பயன்படுத்தலாம். இவை பரிட்சார்த்தமாக காஞ்சிபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில், 3 இடங்களில் மட்டும் மைய அரசு மானிய உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளன. புதிதாக அமைக்க முன் வருபவர்களுக்கு தகுதிக்குட்பட்டு மைய அரசிடமிருந்து 50 முதல் 75 சதவீதம் மானிய உதவி கிடைக்கிறது.*

### சூரிய சக்தி

*சூரிய சக்தியினை இரு முறைகளில் பயன்படுத்தலாம். முதலாவதாக மின்சாரம் தயாரித்து விளக்கு மற்றும் பிற மின் தேவைகளுக்குப் பயன்படுத்தல், இரண்டாவதாக வெப்ப சக்தியை சுடுநீர் தயாரிப்பதற்கும் வேளாண் பொருட்களை உலர்த்தவும் பயன்படுத்தலாம்.*

[2003 மே 5

## சூரிய ஒளி மின்சக்தி

### 1. சூரிய ஒளி விளக்குகள்

சூரிய ஒளி விளக்குகள் பல்வேறு விதங்களில் உருவாக்கப்பட்டு வீட்டு விளக்கு, தெரு விளக்கு மற்றும் அலுவலக மின் விளக்கு தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. 31-3-2003 வரை தமிழ்நாட்டில் மொத்தம் 12,398 சூரிய லாந்தர் விளக்குகளும், 1,470 வீட்டு விளக்குகளும் 1,578 தெரு விளக்குகளும் மைய மற்றும் தமிழ்நாடு அரசு மானிய உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளன. இதில், கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 4,500 சூரிய லாந்தர் விளக்குகளும், 1,400 வீட்டு விளக்குகளும் மற்றும் 350 தெரு விளக்குகளும் நிறுவப்பட்டுள்ளன. மைய அரசு, இந்த விளக்குகளுக்கு அவற்றின் அளவு மற்றும் வடிவத்திற்கேற்ப 50 சதவீதம் வரை மானியமாக ரூ.3,000 முதல் ரூ.11,000 வரை வழங்குகிறது. உள்ளாட்சிகளில் சூரிய சக்தியில் இயங்கும் தெருவிளக்கு அமைப்பதற்கும் அதன் மூலமாக மின் செலவைக் குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 2. தொலைதூர குக்கிராமங்களுக்கு மின் வசதி

மின் வசதி இல்லாத தொலைதூர குக்கிராமங்களுக்கு விளக்கு வசதி ஏற்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு முதல் கட்டமாக 20 குக்கிராமங்களைத் தெரிவு செய்து ரூ.2 கோடி செலவில் சூரிய ஒளி விளக்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்க திட்டமிட்டுள்ளது. இதற்கு மைய அரசு தரும் மானிய உதவியுடன் மாநில அரசும் ரூ. 100 கோடி நிதியுதவி செய்ய முடிவு செய்துள்ளது.

### 3. சூரிய ஒளி மின் பம்புகள்

சூரிய சக்தியால் மின்சாரம் தயாரித்து அதனை மின் மோட்டார்களை இயக்குவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் இதுவரை தமிழ்நாடு மற்றும் மைய அரசுகளின் மானிய உதவியுடன் 195 பம்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர தனிப்பட்ட முறையிலும் பம்புகள் அமைக்கப்பட்டு தமிழ்நாட்டில் மொத்தம் 750 சூரியசக்தி பம்புகள் உள்ளன. இத்தகைய பம்புகள் அமைப்பததற்கு ஒரு குதிரை சக்திக்கு ரூ.2.24 இலட்சம் செலவாகிறது. இதில் மைய அரசிடமிருந்து 44 சதவீதம் வரை மானியம் பெற்றுத் தரப்படும். தமிழ்நாடு அரசு கூடுதல் மானியம் வழங்குவதற்காக 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.1.95 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இதன் மூலம் பயனாளிகள் மைய அரசிடமிருந்து அதிக மானியம் பெறவும் முடியும்.



2003 மே 5]

## சூரிய வெப்ப சக்தி

### 1. சூரிய சுடுநீர் கலன்கள்

சூரிய வெப்ப சக்தியைப் பயன்படுத்தி வீடுகள், விடுதிகள் மற்றும் மருத்துவமனைகள் போன்ற நிறுவனங்களில் குளிக்கவும், கருவிகளைச் சுத்தப்படுத்தவும் சுடுநீர் தயாரிக்கும் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு இதுவரை வீடுகளில் 3,522 சுடுநீர் கலன்களும், விடுதிகள் மற்றும் நிறுவனங்களில் 345 சுடுநீர் கலன்களும் அரசுக் கட்டடங்களில் 26 சுடுநீர் கலன்களும் அமைக்கப்பட்டுள்ளன. அரசுக் கட்டடங்கள் மற்றும் தனியார் தொழிற்சாலைகள்/நிறுவனங்களுக்குப் பெரிய அளவில் சுடுநீர் கலன்கள் அமைப்பதற்காகத் தமிழ்நாடு அரசு மானியம் வழங்க முடிவு செய்துள்ளது. இதற்காக 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.11.94 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், சென்ற ஆண்டின் கொள்கை விளக்கக் குறிப்பில் அறிவித்தவாறு தமிழ்நாடு அரசு சில வகையான புதிய கட்டடங்களில் சூரிய சக்தி சுடுநீர் கலன்கள் கட்டாயம் அமைக்கப்பட வேண்டும் என ஆணைகள் வெளியிட்டுள்ளது. இதன்மூலம் சூரிய சக்தியின் பயன்பாடு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 2. சூரிய சுடுகாற்று அமைப்புகள்

சூரிய வெப்ப சக்தியினைப் பயன்படுத்தி தானியங்கள், பழங்கள், தேயிலை, தோல் ஆகியவற்றை உலர்த்துவதற்குத் தேவையான புதிய தொழில்நுட்பம் முதல் முறையாகத் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் பயன்பாட்டினை மேலும் ஊக்கப்படுத்துவதற்காக, தமிழ்நாடு அரசு மானியம் வழங்க முடிவு செய்து 2003-2004 ஆம் ஆண்டிற்கு ரூ.4.61 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது.

### 3. சூரிய வெப்ப சமைப்பான்

சூரிய வெப்ப சக்தி மூலம் பெட்டி மற்றும் தட்டை வடிவிலான சமைப்பான்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதுவரை மொத்தம் 402 சமைப்பான்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், பெரிய அளவில் சமைப்பதற்கு சூரிய வெப்பத்தின் மூலம் நீராவி உற்பத்தி செய்து சமைப்பான்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றைத் பயன்படுத்தும் முறையும் தமிழ்நாட்டில் விரிவுபடுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

[2003 மே 5

**தாவர மற்றும் பிற உயிர் சக்திகள்**

தாவர மற்றும் பிற உயிர் சக்திக் கழிவுகளைக் கொண்டு மின்சாரம் மற்றும் எரிவாயு தயாரித்து எரி சக்தியாகப் பயன்படுத்தும் முறை சமீப காலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் விபரம் பின்வருமாறு:

**1. இணை மின் திட்டம்**

தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளில் கிடைக்கும் கரும்புச் சக்கையினை எரித்து நீராவி உற்பத்தி செய்து அதன் மூலம் மின்சாரம் தயாரித்து உபரி மின்சாரத்தைத் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு விற்கும் திட்டம் நல்ல வெற்றி பெற்றுள்ளது. இதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. 31-3-2003 வரை உருவாக்கப்பட்டுள்ள மின் உற்பத்தித் திறன் 222.6 மெகாவாட். அதன் விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. இது இந்தியாவின் மொத்தத் திறனில் சுமார் 40 சதவீதமாகும். முந்தைய ஐந்து ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட 74 மெகாவாட் திறனுடன் ஒப்பிடுகையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 80.5 மெகாவாட் அளவிற்கு உற்பத்தித் திறன் அதிகரித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

**2. தாவரப் பொருள் மூலம் மின் உற்பத்தி**

விறகுகள் மற்றும் பிற வேளாண் கழிவுப் பொருள்களைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஊக்கம் அளித்து வருகிறது. தமிழ்நாட்டில் 12 மெகாவாட் திறன் கொண்ட ஒரு மின் நிலையம் காஞ்சிபுரம் மாவட்டம் பழையசீவரம் என்ற இடத்தில் செயல்பட்டு வருகிறது. மேலும் 64.5 மெகாவாட் திறனில் ஆறு புதிய ஆலைகள் அமைப்பதற்குத் தமிழ்நாடு மின் வாரியம் இசைவு அளித்துள்ளது.

மேலும், இந்நிறுவனம் மேற்கொண்ட ஆய்வின்பேரில் புதிய மின் உற்பத்தி நிலையங்கள் அமைப்பதை ஊக்குவிக்க அரசு முடிவு செய்துள்ளது. இதன் அடிப்படையில் தனியார் நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவை பரிசீலனையில் உள்ளன. தகுதியான நிறுவனங்களுக்குப் புதிய மின் உற்பத்தி நிலையம் அமைக்க நடப்பு ஆண்டில் தமிழ்நாடு மின் வாரியம் மூலம் அனுமதி வழங்க நடவடிக்கை



2003 மே 5]

எடுக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் அடுத்த இரு ஆண்டுகளில் மின் உற்பத்தியை 300 மெகாவாட் அதிகரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**3. தாவர சக்தி வாயு கலன்கள்**

தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் வெப்ப சக்தி மற்றும் மின் சக்தியைத் தயாரிக்க உதவும் எரிவாயுக் கலன்களை அமைக்கும் திட்டத்தை மைய அரசு அறிமுகப்படுத்தி உள்ளது. இத்திட்டத்தினைப் பயன்படுத்தி புதிய வாயுக் கலன்கள் அமைக்க தொழிற்சாலைகளை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மைய அரசு அனுமதித்துள்ள 7 வாயுக் கலன்களைத் தவிர இன்னும் புதிதாகத் திட்ட முன்மொழிவுகளைப் பெற்று நடப்பு ஆண்டில் இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும். எரிவாயுக் கலன்களுக்கு அவற்றின் அமைப்பிற்கேற்ப 10 முதல் 50 சதவீதம் வரை மைய அரசு · மானியம் வழங்குகிறது.

**4. மனிதக் கழிவு வாயுக் கலன்கள்**

தமிழ்நாட்டில் சாண எரிவாயுக் கலன்கள் பெருமளவில் அமைக்கப்பட்டுள்ளதுடன், பல்வேறு மாவட்டங்களிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டுகளில் கொளத்தூர் (சேலம்), பெருந்துறை (ஈரோடு), பெரியகுளம் (தேனி) ஆகிய இடங்களில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் அடிப்படையில் நடப்பு ஆண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மனிதக் கழிவு வாயுக் கலன் அமைக்க அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு உதவும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்கு மானியம் வழங்குவதற்காக தமிழ்நாடு அரசு ரூ.43.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இவ்வாறு உற்பத்தியாகும் எரிவாயுவினை சிற்றுண்டிச் சாலைகளிலும் விடுதிகளிலும் அடுப்பு எரிக்கவும், நீராவி உற்பத்தி செய்யவும் பயன்படுத்தலாம்.

[2003 மே 5

## பிற திட்டங்கள்

### 1. கழிவுப் பொருள்களிலிருந்து மின்சாரம் தயாரித்தல்

சவ்வரிசிக் கழிவுநீர், கோழி எச்சம், காய்கறிக் கழிவு ஆகியவற்றைக் கொண்டு எரிவாயு மற்றும் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சவ்வரிசிக் கழிவு நீரிலிருந்து எரிவாயு மற்றும் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் பாப்பிரெட்டிபட்டியில் (தருமபுரி மாவட்டம்) முடிவடைந்து சோதனை ஓட்டத்தில் உள்ளது. நாமக்கல் மாவட்டத்தில் கோழி எச்சத்திலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் தொடங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், கோயம்பேடு காய்கறி மொத்த விற்பனை வளாகத்தில் கிடைக்கும் காய்கறிக் கழிவுகளைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரித்திட மைய அரசு நிதியுதவி அளிக்க முன்வந்துள்ள இத்திட்டம் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்படும். தவிர, சிறிய சவ்வரிசித் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகளிலிருந்து எரிவாயு தயாரிக்கும் திட்டத்தை மைய அரசு உதவியுடன் செயல்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 2. மின் கலத்தால் இயங்கும் வாகனங்கள்

பெட்ரோல் மற்றும் டீசல் ஆகிய எரிபொருட்களைக் கொண்டு இயங்கும் வாகனங்கள் வெளியேற்றும் நச்சுப் புகை சுற்றுப்புறத்தை மாசுபடுத்துவதைத் தவிர்க்கும் வகையில் மின் கலத்தால் இயங்கும் வாகனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்தகைய புதிய வாகனங்களைப் பயன்படுத்தும் தகுதியான நிறுவனங்களுக்கும் அமைப்புகளுக்கும் மைய அரசு, வாகன விலையில் 33 சதவீதம் வரை மானிய உதவி வழங்குகிறது. இவற்றை வன விலங்குச் சரணாலயங்கள், சுற்றுலா முக்கியத்துவம் மிக்க பகுதிகள், மருத்துவமனைகள் ஆகிய இடங்களில் பயன்படுத்திச் சுற்றுப்புறச்சூழலைப் பாதுகாத்துக்கொள்ளலாம்.



2003 மே 5]

### 3. எத்தனால் - வாகன எரிபொருள்

சர்க்கரை ஆலைகளிலிருந்து கிடைக்கும் மொலாசசிலிருந்து தயாரிக்கப்படும் எரிசாராயத்தை எத்தனாலாக மாற்றி, பெட்ரோலுடன் 5 சதவீத அளவிற்குக் கலந்து வாகனங்களில் எரிபொருளாகப் பயன்படுத்தலாம். தமிழ்நாடு உட்பட 9 மாநிலங்களில் இதனைச் செயல்படுத்த மைய அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தைத் தமிழ்நாட்டிலும் செயல்படுத்தி சுற்றுப்புறச்சூழல் மாசுபடுவதைக் கட்டுப்படுத்தவும் சர்க்கரை ஆலைகளின் நிதிநிலையை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 4. ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு திட்டங்கள்

புதுப்பிக்கவல்ல எரிசக்திக்கான கருவிகள் மற்றும் திறனை மேம்படுத்தவும், வெப்ப சக்தியினைச் சேமித்து வைக்கும் முறையைக் கண்டறியவும் மாநில மற்றும் மைய அரசிடம் நிதியுதவி பெற்று அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஐந்து வகையான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

### 5. விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு

புதுப்பிக்கவல்ல எரிசக்தியின் பயன்பாட்டினை விரிவுபடுத்தவும் எரிசக்தி சிக்கனத்தைத் தொழிற்சாலைகள் மற்றும் பிற நிறுவனங்களில் செயல்படுத்தவும் இந்நிறுவனம் கருத்தரங்குகள், கண்காட்சிகளை நடத்துவதுடன் பிற அமைப்புகள் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்கிறது. மேலும், பல்வேறு மாவட்டங்களிலும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி தொடர்பான கருத்தரங்கு நடத்தி உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தொழிலதிபர்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை 10 மாவட்டங்களில் இக்கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் பிற மாவட்டங்களிலும் இக்கருத்தரங்குகள் விழிப்புணர்வை அதிகரிக்க நடத்தப்படும்.

[2003 மே 5

## 2003-2004 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| எண் திட்டப் பணியின் விவரம் | இறுதிச் செலவு | | 2003-04 ஆம் ஆண்டுக்கான செலவு | |
|---|---|---|---|---|
| | தொடராச் செலவு | மொத்தம் | வருவாய் கணக்கில் | மொத்தம் |
| தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் | | | | |
| 1. சூரிய சுடுநீர் அமைப்பு | | | | |
| அ) தொழிற்சாலைகள்/ நிறுவனங்களுக்கு நாளொன்றுக்கு 1,000 லிட்டர் | 2.20 | 2.20 | 2.20 | 2.20 |
| ஆ) அரசு விடுதிகள்/ நிறுவனங்கள் | 9.74 | 9.74 | 9.74 | 9.74 |
| 2 சூரிய வெப்ப சுடுகாற்று அமைப்பு | 4.61 | 4.61 | 4.61 | 4.61 |
| 3 தொலைதூர வசிப் பிடங்களுக்கு மின் வசதி அளித்தல் | 100.00 | 100.00 | 100.00 | 100.00 |
| 4 காற்றுத் திறன் நுண் ஆய்வு | 5.00 | 5.00 | 5.00 | 5.00 |
| 5. மனிதக் கழிவுகளிலிருந்து எரிவாயு தயாரித்தல் | 43.50 | 43.50 | 43.50 | 43.50 |
| 6 சூரிய ஒளி நீரிறைப்பான்கள் | 1.95 | 1.95 | 1.95 | 1.95 |
| **மொத்தம்** | **167.00** | **167.00** | **167.00** | **167.00** |

குறிப்பு:

மேற்கூறிய திட்டங்களைத்தவிர, மத்திய அரசின் மரபுசாரா அமைச்சகத்தின் நிதியுதவி பெற தனியார் நிறுவனங்கள் விரிவான திட்ட அறிக்கைகள் அனுப்பி ஒப்புதல் பெறும் திட்டங்களும் மாநில அரசு அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்கும் திட்டங்களும் தமிழ் நாட்டில் செயல்படுத்தப்படும்.



2003 மே 5]

## தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், 27-6-1991 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது. இந்நிறுவனம் பாரத ரிசர்வ் வங்கியில் வங்கி சாரா நிதி நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டு, தமிழ்நாடு மின் வாரியத்தின் மின் உற்பத்திக்கு, குறிப்பாக மின் உற்பத்தி, மின் பங்கீடு மற்றும் மின் விநியோகத் திட்டங்களுக்குத் தேவையான தொகையைத் திரட்டி வருகிறது.

2. 1991-1992 ஆம் ஆண்டில் ரூ.2.09 கோடியாக இருந்த வைப்பீட்டுத் தொகை, 31-3-2003 அன்று ரூ.1,158.82 கோடியாகக் கணிசமான அளவிற்கு உயர்ந்துள்ளது. மேலும் 1991-92 ஆம் ஆண்டில் 816 ஆக இருந்த வைப்பீட்டாளர்களின் எண்ணிக்கையும், 31-3-2003 அன்று 88,230 ஆக உயர்ந்துள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு ரூ.518.60 கோடியைத் தவணைக் கொள்முதல் கடன் மற்றும் நீண்ட காலக் கடனாக அளித்துள்ளது. தமிழ்நாடு மின் வாரியத்திற்கு அளிக்கப்பட்ட மொத்தக் கடன் தொகையான ரூ.3,058.22 கோடியில், 31-3-2003 அன்று நிலுவையில் உள்ள கடன் தொகை ரூ.1,550.89 கோடியாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இந்நிறுவனம் ரூ.12.48 கோடியை வைப்பீட்டுத் தொகையாக 8,118 பெண் குழந்தைகளுக்காகப் பெற்றுள்ளது.

3. இந்நிறுவனம் தொடக்கத்திலிருந்தே தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. மேலும், இந்நிறுவனம் செலுத்தப்பட்ட மூலதனத்தில் 20 சதவிகிதத்தை ஈவுத் தொகையாக 1995-96 முதல் எட்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து வழங்கி வருகிறது. இந்நிறுவனம் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.24 கோடி (வரிக்குப் பின்பாக) இலாபம் ஈட்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

[2003 மே 5

## தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகளில் உள்ள இணை மின் உற்பத்தி நிலையங்கள்

| வ. எண் | சர்க்கரை ஆலைகளின் பெயர் | நிலை | நிறுவப்பட்ட திறன் மெகாவாட் |
|---|---|---|---|
| | **காஞ்சிபுரம் மாவட்டம்** | | |
| 1 | எஸ்.வி. சுகர் மில்ஸ் லிமிட் பழையசீவரம் | தனியார் | 6.00 |
| | **திருவண்ணாமலை மாவட்டம்** | | |
| 2 | செய்யாறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, அனக்காவூர் | கூட்டுறவு | 7.50 |
| 3 | தரணி சுகர் மில்ஸ், போளூர், | தனியார் | 15.00 |
| 4 | அருணாச்சலம் சுகர் மில்ஸ், மலப்பம்பாடி | தனியார் | 19.00 |
| | **கடலூர் மாவட்டம்** | | |
| 5 | எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி சுகர் மில்ஸ், சேத்தியாதோப்பு | கூட்டுறவு | 7.50 |
| 6 | இஐடி பாரி லிமிட், நெல்லிக்குப்பம் | தனியார் | 30.00 |
| 7 | சுப்ரீம் ரெனிவபுள் எனர்ஜி லிமிட், பெண்ணாடம் | தனியார் | 20.00 |
| 8 | திரு. ஆரூரான் சுகர்ஸ் லிமிட், எ. சித்தூர் நல்லூர் அஞ்சல், விருத்தாசலம் | தனியார் | 18.68 |
| | **திருச்சி மாவட்டம்** | | |
| 9 | கோத்தாரி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிட், காட்டூர் | தனியார் | 12.00 |
| | **தருமபுரி மாவட்டம்** | | |
| 10 | சுப்ரமணிய சிவா கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, ஆரூர் | கூட்டுறவு | 5.00 |



2003 மே 5]

| வ. எண் | சர்க்கரை ஆலைகளின் பெயர் | நிலை | நிறுவப்பட்ட திறன் மெகாவாட் |
|---|---|---|---|
| | **தஞ்சாவூர் மாவட்டம்** | | |
| 11 | திரு. ஆரூரான் சுகர்ஸ் லிமிட், திருமண்டங்குடி | தனியார் | 28.42 |
| 12 | ஆரோ எனர்ஜி லிமிட், கோட்டூர், துகிளி | தனியார் | 16.00 |
| | **தேனி மாவட்டம்** | | |
| 13. | ராஜஸ்ரீ சுகர் மில்ஸ், வைகை அணை | தனியார் | 12.00 |
| | **சிவகங்கை மாவட்டம்** | | |
| 13 | சக்தி சுகர்ஸ் லிமிட், சிவகங்கை | தனியார் | 5.50 |
| | **ஈரோடு மாவட்டம்** | | |
| 15 | பண்ணாரி அம்மன் சுகர்ஸ், சத்தியமங்கலம் | தனியார் | 20.00 |
| | **மொத்தம்** | | **222.60** |

[2003 மே 5

## இணைப்பு-II

*(76 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

### கோரிக்கை எண் 26—தொழில் துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு 2003-2004

**முன்னுரை**

தமிழ்நாட்டின் பன்முக தொழில் வளர்ச்சி தமிழக பொருளாதாரத்திற்கு பெரும் வலிமையாக இருந்து வருகிறது. வலிமையான, நிலையான அரசினை தமிழ்நாடு கொண்டுள்ளதாலும், இது, தொழில் வளர்ச்சி முன்னேற்ற கொள்கைகளினாலும் இதுகாறும் வலுவான பன்முனைப்படுத்தப்பட்ட தொழில் உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக வழிவகுத்துள்ளன. இம்மாநிலம் தொழிற்சாலைகளுக்கு போதுமான ஆற்றலை வழங்கியும், தேர்ச்சி பெற்ற மனித ஆற்றல் வளம் நிரம்பியும், தொழில் உறவுகளில் இணக்கமான சூழ்நிலை நிலவியும் விளங்குவதோடு தொழிலாளர் வேலை நிறுத்தம் இன்மை இங்கு வாழ்வோரிடையே நல்ல தரமான பணிச்சூழலையும் அமைதியான வாழ்க்கை முறையினையும் வழங்கி வருகிறது. இவை அனைத்திற்கும் மேலாக, தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்ல வேண்டுமென்று உறுதி பூண்டுள்ள ஒரு தலைமையை இம்மாநிலம் பெற்றுள்ளது. இம்மாநிலத்தில் உள்ள வலிமையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனித வளம் ஆகியவற்றின் பயனாக, தயாரிப்புத் தொழில்களில் முதலீடு செய்வதற்கு வாய்ப்பளிக்கக்கூடிய சூழ்நிலை இங்கு உருவாக்கப்பட்டுள்ளது. புதிய மற்றும் முன்னோடித் தொழில்களான தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் தொழில்களை தமிழ்நாடு ஈர்த்துள்ளதால் அடுத்த சில ஆண்டுகளில் இத்தொழில்கள் அபரிமிதமான வளர்ச்சியைக் காண உள்ளது.

2. பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், மாநிலத்தின் பொருளாதாரத்தில் 8 விழுக்காடு வளர்ச்சியை எட்ட தமிழ்நாடு அரசு இலக்கு நிர்ணயம் செய்துள்ள நிலையில் இதைச் சாத்தியமாக்க இரண்டாம் நிலைத் துறைக்கு முக்கியமான பங்கு உள்ளது. தொழில்



2003 மே 5]

வளர்ச்சி காண வேண்டுமாயின் பணியில் ஆற்றல் வாய்ந்த அதிக பயிற்சித் திறமையும், கல்வியறிவும் பெற்ற நமது மாநிலத்தைச் சேர்ந்த மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதுடன் சேவைப்பகுதிகள் வளர்வதற்கும் ஆதார வலுவை அளிக்க வேண்டியது மிகவும் அவசியம். மேலும், 65 விழுக்காடு மக்கள் தொகை கொண்ட மிகப்பெரிய சுமையினைப் பெற்றுள்ள ஆதாரப்பகுதியில் பன்முனைப்படுத்தப்பட்ட வேலைவாய்ப்பை அதிகரிக்கச் செய்து, சிறந்து விளங்கச் செய்வதும் முக்கியத் தேவையாகும்.

3. உலகமயமாக்கலின் சவால்களையும் புதிய தொழில் வளர்ச்சிப் பகுதிகளின் தேவைகளையும் எதிர்கொள்ளும் வகையில், தமிழ்நாட்டின் தொழில் கொள்கை தற்போது மறுவடிவமைக்கப்பட்டு வருகிறது. உலகம் முழுவதிலும் உள்ள தயாரிப்பு நிறுவனங்கள், தங்களுடைய வணிகத் தளத்தை, அதிக போட்டி நிலவுகின்ற, ஆசிய பசிபிக் பகுதியில் உருவாகி வரும் புதிய அங்காடிகளுக்கு அருகில் மாற்றி வருகின்றன. எனவே, அதற்கிணங்க, இவ்வாண்டு தொழில் முன்னேற்ற நடவடிக்கைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு இவ்வரசு பின்வரும் பகுதிகளில் அதிக கவனம் செலுத்தி வருகிறது:—

(அ) சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள், மலர்ச்செடி வளர்ப்புப் பூங்காக்கள், ஆயத்த ஆடைப் பூங்காக்கள், ஆகியவற்றை ஏற்படுத்த ஊக்கமளிப்பதன் மூலம் அயல்நாட்டினர் நேரடியாக மூலதனமிட்டு தொழில் தொடங்கச் செய்தல். இதற்கென மாநிலத்திலுள்ள அனைத்து சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்கும் பொருந்தும் வகையில் சிறப்பு பொருளாதார மண்டலக் கொள்கை ஒன்றினை இம்மாநில அரசு வெளியிட்டுள்ளது. இந்தச் சிறப்பு பொருளாதார மண்டலக் கொள்கை இன்று அவைமுன் வைக்கப்படுகிறது;

(ஆ) புதிய தொழிற் கொள்கைகளை வகுப்பதன் மூலமும் நிருவாகச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதன் மூலமும் மாநிலத்தில் தேக்கி வைக்கப்பட்ட தொழில் வளர்ச்சிக்குத் தேவையான ஆற்றலை பயன்பாட்டிற்காக விடுவித்து ஊக்கம் அளித்தல்.

[2003 மே 5

(இ) தயாரிப்புத் துறையில் தாக்கத்தை ஏற்படுத்தும் மிக முக்கியமான அம்சங்களை இனங்கண்டறிந்து, அவற்றின் வளர்ச்சிக்குத் தேவையான ஆதரவு அளிப்பது;

(ஈ) தொழிற்பேட்டைகளை மேம்படுத்துவதுடன் பொதுவான வசதி, தரமான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்கான முக்கிய பங்களிப்பை உருவாக்கித் தருவது;

(உ) நிருவாகத்தில் தனியார் துறை மற்றும் பொதுத் துறைகள் இணைந்து செயல்படுவதுடன் எங்கெல்லாம் அடிப்படைக் கட்டமைப்பு மற்றும் சேவை தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் சாத்தியப்படும் வகையில் அவற்றை உருவாக்கித் தருதல்.

4. மருந்துப் பொருட்கள், தோல் பொருட்கள், தளவாடக் கருவிகள் மற்றும் மோட்டார் வண்டிகள் தயாரிப்பு, மோட்டார் வண்டி துணை பாகங்கள் தயாரிப்பு, மின்சக்தி, நீரேற்றுச் சாதனங்கள் தயாரிப்பு, பொறியியல் போன்ற பராம்பரியத் தொழில்களில் தமிழ்நாடு அதிக வலிமை பெற்று விளங்குகிறது. உலகச் சந்தையின் தேவைகளை எதிர்கொள்ள, இந்தத் துறைகள் அனைத்திலும் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் உற்பத்திப் பெருக்கம் ஆகியவற்றிற்கான முயற்சிகள் மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். இந்த வகையில், பராம்பரியத் தொழில்களில் நமது மாநிலம் பெற்றுள்ள முதல் இடத்தைத் தக்க வைத்து நிலை நிறுத்திக் கொள்ளவும், சந்தைப் பங்கு வாய்ப்பை விரிவுபடுத்தவும் பல நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அத்தொழிலுக்கு ஊக்கம் அளிப்பதாக நமது தொழில் கொள்கை விளங்கும்.

5. அரசு நிறுவனங்களின் செயல்பாடுகள் பின்வரும் பக்கங்களில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.



2003 மே 5]

## தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) நிறுமங்கள் சட்டத்தின்கீழ் 1965 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனம் துவங்கப்பட்ட காலத்திலிருந்து முக்கியமாக கூட்டு முயற்சியில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தி வந்துள்ளது. இந்நிறுவனம், புகழ்பெற்ற தொழில் நிறுவனங்கள் மற்றும் தனிநபர் தொழில் முனைவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் பலதிறப்பட்ட உற்பத்திப் பொருட்களைத் தயாரிக்கும் கூட்டு முயற்சி நிறுவனங்களை நிறுவியுள்ளது. இதுவரை டிட்கோ நிறுவனம் நூற்றுக்கும் மேற்பட்ட கூட்டு முயற்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வந்துள்ளது. 31-3-2003 அன்றுள்ள நிலவரப்படி, 22 நிறுவனங்களில் இந்நிறுவனம் செய்த முதலீடுகளை திரும்பப் பெற்றுள்ளது.

2003-2004 ஆம் ஆண்டில், முக்கிய தொழில் வளர்ச்சிப் பகுதிகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் உயிரியல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் அமைந்துள்ளன. இவற்றில் முக்கியமானவை, சென்னையில் புதிய தகவல் தொழில்நுட்பப் பூங்கா மற்றும் டைசல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா ஆகியவை ஆகும்.

சிங்கப்பூர் நிறுவனமான அசென்டாஸ் (Ascendas) என்ற நிறுவனத்திற்கு முழுமையும் சொந்தமான துணை நிறுவனமான அசென்டாஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்துடன் இணைந்து கூட்டு முயற்சியில் செயல்படுத்தவுள்ள புதிய தகவல் தொழில்நுட்பப் பூங்கா மூன்று கட்டங்களாக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு கட்டமும், அரை மில்லியன் சதுர அடி இடவசதி கொண்டதாக இருக்கும். ஒவ்வொரு கட்டப்பணிக்கும் திட்டத்தட்ட ரூபாய் 150 கோடி செலவு ஆகும். இது குத்தகைதாரர் தரப்பில் முதலீடுகளை உருவாக்குவதோடு கணிசமான அளவிற்கு வேலைவாய்ப்பையும் அளிக்கும். கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ள டைசல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா, தொழில் முனைவர்களுக்கு வாடகை அடிப்படையில் தரமான இடவசதிகளையும், சோதனைக்கூட ஆய்வுப் பணிகளையும் நல்கும். இதற்கான செலவு ரூபாய் 62.5 கோடி ஆகும். டிட்கோ நிறுவனம் சுமார் ரூபாய் 24.8 கோடி செலவில், ஓசூர் அருகே டான்ஃப்ளோரா உள்கட்டமைப்பு வசதிப் பூங்காவைத் தொடங்கும். இதற்கான நிலம் வாங்கப்பட்டு சிப்பம் செய்யும் பகுதி உட்பட ஓரிடத்திலேயே வசதிகள் அளிக்கும் பணிகள் தொடங்கப்பட்டு இன்னும் ஒருசில மாதங்களில்

தயாராகிவிடும். இவ்வசதிகள், இப்பூங்காவில் மலர்ச் செடி வளர்க்கும் 50 நபர்களுக்குப் பலன் அளிக்கும். இவர்கள் ஒவ்வொருவரும் சுமார் ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்பூங்கா சுமார் 67 மில்லியன் தண்டுகளுடன் கூடிய ரோஜா மலர்களை உற்பத்தி செய்து ஆசியாவிலேயே மிகப்பெரிய பூங்காவாக விளங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

டிட்கோ நிறுவனமும், இந்திய வர்த்தக அபிவிருத்தி அமைப்பும் இணைந்து அமைத்துள்ள கூட்டு முயற்சி நிறுவனம், சென்னை வர்த்தக மையத்தில் உலகத்தரம் வாய்ந்த கருத்தரங்கு மையம் ஒன்றினை ஏற்படுத்தும். இந்தக் கருத்தரங்கு மையத்தினைக் கட்ட சுமார் ரூபாய் 26 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இக் கருத்தரங்கு மையம் சென்னை வர்த்தக மையத்தில் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள உயர்தரமான வசதிகளுக்கு துணை சேர்ப்பதாக அமையும்.

டிட்கோ நிறுவனமும், உள்கட்டமைப்பு குத்தகை நிதி நிறுவனமும் (ஐ.எல். & எப்.எஸ்.) சேர்ந்து கூட்டு முயற்சியில் அமைத்துள்ள தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் கிழக்குக் கடற்கரைச் சாலையை பன்னாட்டுத் தரத்தில் மேம்படுத்தியுள்ளது. தகவல் தொழில்நுட்பவியல் தொழிலுக்கு உதவும் வகையில் பழைய மகாபலிபுரம் சாலையை மேம்படுத்தும் பணிகளை இந்நிறுவனம் மேற்கொள்ளும்.

தயாரிப்பு மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை அளித்திடும் டிட்கோ நிறுவனத்தின் முயற்சிகளுக்கு போதிய அளவு ஊக்கம் அளிக்கப்படும். கடல்சார் உயிரியல் பூங்கா, மதுபானம் தயாரிப்புத் தொழிற்சாலை, மாங்கனிகளுக்கான வேளாண் ஏற்றுமதி மண்டலம் ஆகிய திட்டங்களுக்கான தொழில் முனைவர்கள் கண்டறியப்பட்டு பணிகள் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. உருளைக்கிழங்கு வறுவல் மற்றும் பதப்படுத்தப்பட்ட கோழிக்கறி ஆகியவற்றைத் தயாரிக்கும் ஏற்றுமதிக்கான தொழிற்பிரிவுகள் சோதனை உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. இவ்வாண்டில் இவை உற்பத்தியை நிலை நிறுத்தும். 2002 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தொடங்கி





வைக்கப்பட்ட மகேந்திரா தொழிற்பூங்கா, ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட தொழில் பிரிவுகள் அமைவதற்கு முக்கிய இடவசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. நாங்குநேரி உயர் தொழில்நுட்ப நகரத்தை சிறப்புப் பொருளாதார மண்டலமாக கருத இந்திய அரசு உத்தேசித்துள்ளது. இது தேவையான மாற்றத்துடன் தூத்துக்குடி சிறப்புப் பொருளாதார மையத்துடன் இணைக்கப்படும்.

எண்ணூரில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைப்பதற்கு இந்திய அரசின் கொள்கை அளவிலான ஒப்புதல் பெறப்பட்ட உடன் திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் தொழில் முனைவரைக் கண்டறிதல் ஆகிய பணிகளை டிட்கோ நிறுவனம் தொடங்கும்.

டிட்கோ நிறுவனத்தின் வங்கி சாரா நிதிவகைச் செயல்பாடுகள் சேவை மனப்பான்மையுடன் உயர்தரத்தில் செய்யப்பட்டு வருகின்றன. 31-03-2003 அன்றுள்ளபடி, டிட்கோ நிறுவனம் கூட்டுத் தொழில் முனைவராக உள்ள இரண்டு தொழில் முயற்சி மூலதன நிதி அமைப்புகளின் மூலம் 12 செயற்குறிப்புகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. தொழில் முயற்சி மூலதன நிதிகளின் விவரம் கீழ்வருமாறு:—

(1) ஐ.எல். & எப்.எஸ். நிறுவனம், டிட்கோ நிறுவனம், மகேந்திரா ஹோல்டிங்ஸ் & நிதி நிறுவனம், பேங்க் ஆப் இந்தியா, பன்னாட்டு நிதி நிறுவனம், டிஇஜி நிறுவனம், ஆட்டோ ஆன்சிலரி நிதி, எல்.எல்.சி. நிறுவனம் ஆகியவற்றின் மூலம் அளிக்கப்பட்ட மொத்தம் ரூபாய் 65.01 கோடியை மூலதனமாகக் கொண்டு இந்தியா ஆட்டோ ஆன்சிலரி நிதி (India Auto ancillary Fund) செயல்பட்டு வருகிறது.

(2) டிட்கோ நிறுவனம், இந்திய சிறுதொழில் மேம்பாட்டு வங்கி ஐ.எல். & எப்.எஸ். நிறுவனம் ஆகியவை அளித்துள்ள ரூபாய் 25 கோடியை முதலீடாகக் கொண்டு எமர்ஜிங் டெக்னாலஜிஸ் நிதி (Emerging Technologies Fund) செயல்படுத்தப்படுகிறது.

மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப, டிட்கோ நிறுவனம் அதனுடைய அமைப்பு மற்றும் நிதி வகையிலான செயல்பாட்டு முயற்சிகளை மாற்றி அமைத்துக் கொள்ளத் தேவையான அனைத்து உதவிகளையும் அரசு அளிக்கும்.

[2003 மே 5

**தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற நிறுவனம்**

தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) 1971 ஆம் ஆண்டில் நிறுமங்கள் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் தமிழ்நாட்டில் நடுத்தர மற்றும் பெரிய தொழில் நிறுவனங்களை கீழ்க்கண்ட வகைகளில் மேம்படுத்துவதாகும்:

(அ) தொழில் வளாகங்களை/பூங்காக்களை/வளர்ச்சி மையங்களை உருவாக்கி அவற்றை மேம்படுத்தி, பராமரித்து தொழில் மனைகளை விற்பனை செய்தல்;

(ஆ) உட்கட்டமைப்பு வசதி மேம்பாடு திட்டங்களை செயல்படுத்துதல்; மற்றும்

(இ) ஏற்கெனவே வழங்கப்பட்ட தவணைக் கடன்களை வசூலித்தல்.

2002-2003 ஆம் ஆண்டு முடிய கையகப்படுத்திய நிலங்கள், மேம்படுத்தப்பட்ட மற்றும் தொழிற்சாலைகளுக்கு விற்கப்பட்ட நிலங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | (ஏக்கரில்) |
|---|---|
| கையகப்படுத்தப்பட்ட மொத்த நிலப்பரப்பு | 21,214.31 |
| மேம்படுத்தப்பட்ட மொத்த நிலபரப்பு | 16,012.39 |
| ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலப்பரப்பு | 6428.01 |
| ஒதுக்கீடு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | 1087 |
| வளர்ச்சிப் பணிக்காக இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ.31,249.00 இலட்சம் | |



2003 மே 5]

**2003-2004 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்**

1. கையகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள பரப்பளவு : 3,021.03 ஏக்கர்
2. மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள பரப்பளவு : 1,001.95 ஏக்கர்
3. விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ள பரப்பளவு : 1,090.00 ஏக்கர்
4. வளர்ச்சிப் பணிக்கான செலவு : ரூ.2,509.00 இலட்சம்

**1. சிப்காட் தொழில் வளாகங்கள்/பூங்காக்கள்/வளர்ச்சி மையங்கள்**

(அ) சிப்காட் நிறுவனம் பின்வரும் இடங்களில் மொத்தம் 8,047.80 ஏக்கர் நிலப்பரப்பில் ஏழு தொழில் வளாகங்களை ஏற்படுத்தியுள்ளது:—

| | (ஏக்கரில்) |
|---|---|
| 1. இராணிப்பேட்டை (கட்டம் 1, கட்டம் 2 மற்றும் கட்டம் 3) | 1663.97 |
| 2. ஓசூர் (கட்டம் 1 மற்றும் கட்டம் 2) | 2399.39 |
| 3. புதுக்கோட்டை | 421.10 |
| 4. மானாமதுரை | 492.07 |
| 5. கும்மிடிப்பூண்டி (கட்டம் 1 மற்றும் கட்டம் 2) | 1,275.41 |
| 6. தூத்துக்குடி | 1,083.59 |
| 7. கடலூர் (கட்டம் 1 மற்றும் கட்டம் 2) | 712.27 |
| மொத்தம் | 8,047.80 |

(ஆ) சிப்காட் நிறுவனம், 224.00 ஏக்கர் பரப்பளவில் ஓர் ஏற்றுமதி தொழில் மேம்பாட்டுப் பூங்காவினை கும்மிடிப்பூண்டியில் நிறுவியுள்ளதோடு உலகத் தரம் வாய்ந்த அளவில் மூன்று, தொழிற் பூங்காக்களை உள்கட்டமைப்பு வசதிகளுடன் கீழ்க்கண்ட இடங்களில் அமைத்துள்ளது:

1. இருங்காட்டுக்கோட்டை 1844 ஏக்கர்
2. திருப்பெரும்புதூர் 2469 ஏக்கர்
3. சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்கா 980 ஏக்கர்

[2003 மே 5

(இ) சிப்காட் நிறுவனத்துடன் தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (டாசிட்) இணைந்ததால் டாசிட் நிறுவனம் முன்பு உருவாக்கி இருந்த கீழ்க்கண்ட தொழில் வளாகங்கள்/பூங்காக்கள் மற்றும் தொழில் வளர்ச்சி மையங்கள் தற்போது சிப்காட்டின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன:

**தொழில் வளாகங்கள்/பூங்காக்கள்**

1. நிலக்கோட்டை — 380 ஏக்கர் (திண்டுக்கல் மாவட்டம்)
2. பர்கூர் — 1,348 ஏக்கர் (தருமபுரி மாவட்டம்)
3. கடலூர் — 1,266 ஏக்கர் (கடலூர் மாவட்டம்)

**தொழில் வளர்ச்சி மையங்கள்**

பெருந்துறை — 2,458 ஏக்கர் (ஈரோடு மாவட்டம்)

கங்கைகொண்டான் — 2,035 ஏக்கர் (திருநெல்வேலி மாவட்டம்)

ஓரகடம் — 2,043 ஏக்கர் (காஞ்சிபுரம் மாவட்டம்)

2003-2004 ஆம் ஆண்டில் நிலம் கையகப்படுத்துதல்/அபிவிருத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்வதற்கான இலக்கு போன்ற விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(பரப்பளவு ஏக்கரில்)

| வ. எண் | தொழில் வளாகம்/பூங்கா/ வளர்ச்சி மையம் பெயர் | திட்டம் | மீதமுள்ள ஒதுக்கப்பட வேண்டிய பரப்பளவு | கையகப் படுத்தப்பட வேண்டிய பரப்பளவு | மேம்படுத்தப் படும் பரப்பளவு | ஒதுக்கப் படும் பரப்பளவு இலக்கு |
|---|---|---|---|---|---|---|
| 1 | இராணிப்பேட்டை | விரிவு III | 347.00 | .. | .. | 25.00 |
| 2 | ஓசூர் | கட்டம்-II | | | | |
| | | (விரிவு-I) | 21.53 | .. | .. | 20.00 |
| | | (விரிவு-II) | .. | 235.13 | 176.00 | 50.00 |
| 3 | புதுக்கோட்டை | | 105.97 | .. | .. | 10.00 |
| 4 | மானாமதுரை | | 216.76 | .. | .. | 10.00 |



2003 மே 5]

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | கும்மிடிப்பூண்டி | கட்டம் I | 21.99 | .. | .. | 10.00 |
| | | கட்டம் II | 70.01 | .. | .. | 10.00 |
| 6 | ஏற்றுமதி தொழில் நுட்ப பூங்கா, கும்மிடிப்பூண்டி | | 159.35 | .. | .. | 15.00 |
| 7 | தூத்துக்குடி | கட்டம் I | 189.00 | .. | .. | 150.00 |
| | | கட்டம் II | .. | 1503.95 | .. | 25.00 |
| 8. | (அ) கடலூர் | கட்டம் I | 1.23 | .. | .. | .. |
| | | கட்டம் II | 122.31 | 39.98 | .. | 25.00 |
| | (ஆ) கடலூர் .தொழில் பூங்கா | | 682.00 | 75.95 | 75.95 | 5.00 |
| 9 | பெருந்துறை வளர்ச்சி மையம் | | 1343.24 | 248.67 | .. | 150.00 |
| 10 | கங்கை கொண்டான் வளர்ச்சி மையம் | | 1550.00 | .. | .. | 25.00 |
| 11 | நிலக்கோட்டை | | 284.98 | .. | .. | 100.00 |
| 12 | பர்கூர் | | 949.67 | .. | .. | 10.00 |
| 13 | இருங்காட்டுக் கோட்டை தொழில் பூங்கா | | 522.90 | .. | .. | 100.00 |
| 14 | திருப்பெரும்புதூர் தொழில் பூங்கா | | 1181.94 | 209.57 | 200.00 | 100.00 |
| 15 | ஓரகடம் வளர்ச்சி மையம் | | 1020.60 | 527.94 | 400.00 | 150.00 |
| 16 | சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்கா | | 616.48 | 179.84 | 150.00 | 100.00 |
| | மொத்தம் | | 9406.96 | 3021.03 | 1001.95 | 1090.00 |

[2003 மே 5

II. சிறப்பு நோக்கங்கள்

**1. ஏற்றுமதிக்கான உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக மாநிலங்களுக்கு உதவித் திட்டத்தின் (Aside) கீழ் சேலத்தில் துணிச்சாயம் ஏற்றும் சிறிய தொழிற்சாலைகளுக்குப் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்:**

சேலத்தில் துணிச்சாயம் ஏற்றும் சிறிய தொழிற்சாலைகளுக்காக பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை அமைத்திட 'சிப்காட் நிறுவனம்' தமிழ்நாடு தொழில் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை (இட்காட்) நிறுவனத்தின் மூலமாக ஒரு செயலாக்கத் திட்டத்தைத் தயாரித்து, அதை சேலத்தில் உள்ள எருமைப்பாளையம் சிறுதொழில் ாயம் ஏற்றும் தொழிற்சாலைகள் கூட்டமைப்பிற்கு உள்கட்டமைப்பு வசதி நிலுவைத் திட்டத்தின்கீழ் (சி.ஐ.பி.) செயல்படுத்த கொடுத்தது. இத்திட்டத்திற்கான மொத்த திட்ட மதிப்பீடு ரூபாய் 190 இலட்சம் ஆகும். இந்நிறுவனம் 50 விழுக்காடு திட்டச் செலவினை ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டுள்ளதால் இந்திய அரசின் அசைட் திட்டத்தின்கீழ் (தற்போது சி.ஐ.பி. திட்டம் அசைட் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது) மீதமுள்ள 50 விழுக்காடு நிதியுதவி பெறுவதற்கு 'சிப்காட்' நிறுவனம் இந்திய அரசிற்கு விண்ணப்பித்தது. இந்திய அரசு ரூ.50/- இலட்சம் நிதியுதவியை ஒப்பளிப்பு செய்து இவ்வரசிற்கு அளித்துள்ளது. இவ்வரசு டிட்கோ நிறுவனம் மூலம் சிப்காட் நிறுவனத்திற்கு முதல் தவணையான ரூ.50/- இலட்சத்தை அளித்துள்ளது.

**2. நிலக்கோட்டையில் உணவுப் பூங்கா அமைத்தல்**

சிப்காட் நிறுவனத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட முன்னாள் டாசிட் நிறுவனம் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் சுமார் 380 ஏக்கர் நிலப்பரப்பில் வேளாண் சார்ந்த தொழில் வளாகம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலக்கோட்டை தொழில் பூங்கா வளாகத்தில் சுமார் 100 ஏக்கர் நிலப்பரப்பளவில் ஓர் உணவுப் பூங்காவை தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்துடன் இணைந்து செயல்படுத்த சிப்காட் நிறுவனம் முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தின் தோராயத் திட்ட மதிப்பீடு கிட்டத்தட்ட ரூபாய் 13.00 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் சிப்காட் நிறுவனத்தின் பங்கு ரூபாய் 5 கோடியும், தமிழ்நாடு மாநில



2003 மே 5]

வேளாண்மை விற்பனை வாரியத்தின் பங்கு ரூபாய் 4 கோடியும் மற்றும் இந்திய அரசின் பங்கு மானியமாக ரூபாய் 4 கோடியும் இருக்கும்.

**3. ஆயத்த ஆடை தொழிற்பூங்கா அமைத்தல்**

2002-2003 ஆம் ஆண்டில் ஆயத்த ஆடை தயாரிக்கும் நிறுவனங்களுக்கான தொழில் பூங்கா இருங்காட்டுக்கோட்டை, பெருந்துறை மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் அமைக்க உத்தேசிக்கப்பட்டது. இருங்காட்டுக்கோட்டையில் ஆயத்த ஆடை தயாரிக்கும் நிறுவனங்களுக்கான தொழிற்பூங்காவை அமைக்க சிப்காட் 'இணைப்பு முகமையாக' (Nodal Agency) நியமனம் செய்யப்பட்டது. இருங்காட்டுக்கோட்டையைப் பொறுத்தமட்டில் சிப்காட் இணைப்பு முகமையாக இருப்பதோடு மட்டும் அல்லாமல் மேற்படி திட்டத்தைச் செயல்படுத்தும் முகமையாகவும் இருக்கும். ரூபாய் 24 கோடி திட்ட மதிப்பீட்டில் இருங்காட்டுக்கோட்டையில் ஆயத்த ஆடை தொழிற்பூங்கா அமைக்க செயற்குறிப்பு ஒன்றை சிப்காட் நிறுவனம் ஏற்கெனவே அனுப்பியது. சிப்காட் நிறுவனம் அனுப்பிய செயற்குறிப்பில் கோரியவாறு மத்திய அரசின் உதவி ரூ.17 கோடியை அனுமதிக்க கொள்கையளவில் இந்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. சிப்காட் நிறுவனம் தற்பொழுது விரிவான திட்டத்தைத் தயாரித்து இருங்காட்டுக்கோட்டையில் ஆயத்த ஆடை தொழிற்பூங்காவினைத் தொடங்க நடவடிக்கை எடுத்து வருகிறது. திருப்பூரில் ஆயத்த ஆடை தொழிற்பூங்கா அமைக்க அரசின் கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர்த் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. மதுரையில் ஆயத்த ஆடை தொழிற்பூங்கா அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**4. இயற்கையோடு ஒன்றிய தொழிற்பூங்கா அமைத்தல்**

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் இயற்கையோடு ஒன்றிய தொழிற்பூங்கா அமைக்க சிப்காட் நிறுவனம் உத்தேசித்துள்ளது. இதன் மூலம் கீழ்க்காணும் தொழில்நுட்பத் திட்டங்களில் மகளிர் தொழில் முனைவோர்கள் ஈடுபட வாய்ப்புகள் ஏற்படும்:—

(அ) மூலிகை தழுவிய தொழில்

(ஆ) தோட்டக்கலை தொழில்நுட்பம்

[2003 மே 5

(இ) மறுபயன்பாடு எரிசக்தி தொழில்நுட்பம்

(ஈ) இயற்கை வளங்கள் பாதுகாப்புத் தொழில்கள்

இதற்கான நடைமுறை சாத்திய அறிக்கையினை தமிழ்நாடு தொழில் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை நிறுவனம் (இட்காட்) தயாரித்து வருகிறது.

**5. ஒருங்கிணைந்த அறிவு சார்ந்த தொழில் நகரியத்தை சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் அமைத்தல்**

சிப்காட் நிறுவனம், சென்னை மாநகரிலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சிறுசேரியில் தகவல் தொழில்நுட்பப் பூங்காவை உருவாக்கி வருகிறது. இந்தத் தொழில்நுட்ப பூங்காவின் மொத்த பரப்பளவு 980 ஏக்கர் ஆகும். இதில் ஒதுக்கீடு செய்யப்படவுள்ள பரப்பளவு 689 ஏக்கர் ஆகும். இதுவரை 139.99 ஏக்கர் நிலம் மென்பொருள் தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாசு அற்ற, அறிவு அடிப்படையிலான தொழிற்சாலைகள் மட்டும் இப்பூங்காவில் அனுமதிக்கப்படுகின்றன.

பெரிய மென்பொருள் தொழிற்சாலைகளாகிய பென்டபோர், இன்போசிஸ் ஆகியவை சிப்காட் சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்காவின் அருகில் அமைந்துள்ளன. டி.சி.எஸ்., சான்சா, போலாரிஸ் ஆகிய நிறுவனங்களுக்கு இந்தத் தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் 111.21 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பகுதியில் ஒருங்கிணைந்த அறிவு சார்ந்த ஒரு தொழில் நகரியத்தை வளர்ச்சி பெற அமைப்பது, இப்பகுதியில் தற்போதுள்ள தகவல் தொழில் நுட்பத் தொழிற்சாலைகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைவதுடன், சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் தங்களுடைய திட்டங்களை அமைப்பதற்கு மேலும் சில தகவல் தொழில்நுட்பத் தொழிற்சாலைகள் ஈர்க்கும். சுருங்கச் சொன்னால் இத்திட்டத்தின்படி வீட்டுவசதி மட்டுமல்லாமல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களின் தேவைக்கேற்ப குறைந்த செலவிலான நிர்வாகக் கட்டடம் மற்றும் வணிக வளாகம், பள்ளிகள், சமூகக் கூடம் போன்றவையும் ஒருங்கிணைந்த அறிவு சார்ந்த தொழில் நகரியத்தில் அமைக்கப்படும். இக்குறிக்கோளை நோக்கி சிப்காட் நிறுவனம் செயல்பட்டு வருகிறது.



2003 மே 5]

**தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்**

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (டிக்) நிறுமங்கள் சட்டத்தின் கீழ் 1949 ஆம் ஆண்டில் ஒரு நிறுமமாக உருவாக்கப்பட்டது. இது நாட்டில் உள்ள பழமையான நிதி நிறுவனங்களில் ஒன்றாகும். இக்கழகம் தொடக்க காலத்திலிருந்தே தொழில்களை மேம்படுத்தவும், வளர்ச்சியடையவும் செய்து வருவதோடு, குறிப்பாக தமிழ்நாட்டிலுள்ள சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்கள் வளர்ச்சியடைய மிக முக்கியப் பங்காற்றி வருகிறது.

இக்கழகம் தற்பொழுது புதிய தொழில்கள் நிறுவ நிலம் வாங்குதல், கட்டடம் கட்டுதல், தளவாடம் மற்றும் இயந்திரம் வாங்குதல் போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்கு ரூ.800 இலட்சம் வரை காலக் கடன் உதவி வழங்குகிறது. இக்கழகம் புதிய தொழில் பிரிவுகளை நிறுவுவதற்கு மட்டுமின்றி, தமிழ்நாட்டில் எப்பகுதியிலும் ஏற்கெனவேயுள்ள தொழில் பிரிவுகளை விரிவுபடுத்துவதற்கும், நவீனமயமாக்குவதற்கும், முக்கியமாக நிதி உதவி அளிக்கிறது.

இக்கழகத்தின் செயல்பாடுகளில் வழங்கப்படும் பெரும்பான்மையான நிதியுதவியான காலக் கடன்களை, தகுதிவாய்ந்த சிறுதொழில்/நடுத்தரத் தொழிற்பிரிவுகளுக்கும் போக்குவரத்துப் பிரிவுகளுக்கும் இக்கழகம் வழங்கி வருகிறது. மேலும், முதல் சந்ததி தொழில் முனைவோருக்கு சுய வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்குடன் தேசிய சமபங்கு நிதி (NEF), முன்னாள் இராணுவ வீரர்களுக்கு சுய வேலைவாய்ப்பு நிதியுதவித்திட்டம் (SEMFEX), மகளிர் தொழில்முனைவோருக்கு மகிளா உதய நிதித் திட்டத்தின்கீழ் நிதியுதவி மற்றும் தாழ்த்தப்பட்ட/பழங்குடி மக்களுக்கு "தாட்கோ" திட்டத்தின்கீழ் நிதியுதவி ஆகிய திட்டங்களின்கீழ் இக்கழகம் நிதியுதவி அளித்து வருகிறது. தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் நவீனமயமாக்கலுக்கு மறு நிதியுதவித் திட்டத்தின்கீழும் இக்கழகம் நிதியுதவி அளித்து வருகிறது. தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் நவீனமயமாக்கல் நிதி திட்டத்தில் அனைத்து சிறுதொழில் பிரிவுகளுக்கும் சலுகை வட்டி 12.25 விழுக்காடு/12.5 விழுக்காடு என்ற முறையில் வசூலிக்கப்பட்டு வருகிறது. துணித் தொழில் பிரிவுகளுக்கு மட்டும் கிடைக்கக்கூடிய தொழில்நுட்ப மேம்பாட்டு

நிதித் திட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் பிரிவுகளுக்கு 5 விழுக்காடு வட்டி மானியத்திற்குப்பின் 10 விழுக்காடு/10.25 விழுக்காடு/ 11 விழுக்காடு என்ற சலுகை வீதத்தில் உதவி அளிக்கப்படுகிறது. கணினிப் பயிற்சி நிலையங்கள் மற்றும் இதர தகவல் தொழில்நுட்பத் திட்டங்களுக்கு நிதியுதவியளிப்பது மட்டுமின்றி சேமிப்புக் கிடங்குகள், மருத்துவ இல்லங்கள், சமுதாயக் கூடங்கள், வணிக வளாகங்கள், உணவு விடுதிகள் ஆகிய சேவைப் பிரிவுகளுக்கும் உதவியளிக்கப்படுகிறது.

சிறு தொழில்கள் பயனடைவதற்காக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கீழ்க்கண்ட சலுகைகளை அறிமுகப்படுத்தியுள்ளது:—

(i) ரூபாய் 30.00 இலட்சம் வரை கடன் வழங்கவும் மற்றும் எல்லா கடன் தொகைகளையும் அளிக்கவும் மாவட்ட அளவிலான கிளை அலுவலகங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(ii) தவறாமல் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் கடன்தாரர்களுக்கு ஏற்கெனவே உள்ள 1 விழுக்காடு வட்டித் தள்ளுபடியுடன் கூடுதலாக மேலும் 1 விழுக்காடு வட்டித் தள்ளுபடி வழங்கப்படுகிறது. இச்சலுகை ரூபாய் 2 இலட்சத்திலிருந்து ரூபாய் 25 இலட்சம் வரை கடன் பெறும் சிறு தொழில் பிரிவுகளுக்கு 13 விழுக்காடு நிகர வட்டி வீதமாகவும், ரூபாய் 25 இலட்சத்திற்கு மேல் கடன் பெறுபவர்களுக்கு 13.25 விழுக்காடும், நடுத்தரத் தொழில் பிரிவுகளுக்கு 14 விழுக்காடுமாக வழங்கப்படுகிறது.

(iii) குத்தகை/தவணைக் கொள்முதல் திட்டத்தின் மாற்றுத் திட்டமாக பொருள்கள் வாங்க நிதி உதவித் திட்டம் என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் குறைந்தபட்சத் தொழில்முனைவோர் பங்கு 15 விழுக்காடு மற்றும் மாதாந்திர திருப்பிச் செலுத்தும் முறைகள் அடங்கியுள்ளன. தற்போது இயங்கி வரும் தொழிலகங்கள் கருவிகள் வாங்கிப் பயனடைவதற்காக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.





(iv) சிறுதொழில் பிரிவுகளின் தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக, கடன் இணைந்த மூலதன மானியத் திட்டத்தினை (CLCSS) செயல்படுத்தும் முகவர்களில் ஒன்றாக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் திகழ்கிறது. இத்திட்டத்தினுள் 21 பிரிவுகள் அடங்கும். இதன்படி தொழில் பிரிவுகளுக்கு கடன் தொகைக்கு உயரளவாக ரூ.4.80 இலட்சம் என்ற வரையறைக்கு உட்பட்டு 12 விழுக்காடு மூலதன உதவித் தொகை அளிக்கப்படுகிறது. மாற்றியமைக்கப்பட்ட சிறு துணி ஆலைகள் மற்றும் சணல் ஆலைகளுக்கான தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியின் கீழ் (CLCSSTUFS) சிறு துணித் தொழில் மற்றும் சணல் தொழில்களுக்கு மூலதன மானியம் வழங்க செயல் முகமையாக இருந்து வருகிறது. இதன்படி தகுதியுள்ள முதலீட்டில் 12 விழுக்காடு மூலதன மானியம் அல்லது 5 விழுக்காடு வட்டி மானியம் இவற்றில் எது பயனுள்ளதாய் உள்ளதோ அது வழங்கப்படுகிறது.

(v) வேளாண் அடிப்படையிலான தொழில்களுக்கு புதுவேகம் அளிக்கவும் இம்மாநிலத்தில் ஊரக வேலை வாய்ப்பு வசதிகளை உருவாக்கவும் தமிழ்நாடு அரசு "புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" என்ற திட்டத்தை அறிவித்துள்ளது. இத்திட்டத்தைப் பொறுத்தமட்டில் இக்கழகம் ஒருங்கிணைப்பு நிதி முகமையாக செயல்படுகிறது. இந்த நிறுவனம் 2002-2003 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட சாதனைகளை புரிந்துள்ளது:

(ரூபாய் கோடியில்)

| | |
|---|---|
| அனுமதித்த கடன் | 151.39 |
| வழங்கிய கடன் | 126.44 |
| வசூலிக்கப்பட்ட கடன் (தணிக்கையிடப்படாதது) | 313.00 |

## தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்

பொதுத் துறை நிறுவனமான தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம், நிறுமங்கள் சட்டத்தின்கீழ் 1979 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனம் கரும்புச் சக்கையை முக்கிய மூலப்பொருளாகக் கொண்டு ஆண்டொன்றுக்கு 50,000 டன் செய்தித்தாள் காகிதமும் 40,000 டன் அச்சு மற்றும் எழுது காகிதமும் தயாரிப்பதற்காக கரூர் மாவட்டம் புகளூரில் ஒருங்கிணைந்த காகித ஆலை ஒன்றை ரூ.239 கோடி முதலீட்டில் 1979 ஆம் ஆண்டு நிறுவியுள்ளது. இந்தக் காகித ஆலை 1985 ஆம் ஆண்டில் வணிக உற்பத்தியைத் தொடங்கியது.

**விரிவாக்கத் திட்டம்**

கடந்த ஆண்டுகளில் இந்நிறுவனம் ரூ.600 கோடி மூலதனச் செலவில் 90,000 டன்னாக இருந்த உற்பத்தியை 1,80,000 டன்னாக அதாவது இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. இந்த விரிவாக்கத் திட்டம் 1996 ஆம் ஆண்டு ஜனவரியில் செயல்படத் தொடங்கியது. இந்நிறுவனம் முதல்முதலாக 1995 நவம்பரில் மூலதனப் பங்குகளைப் பொதுமக்களின் விற்பனைக்குக் கொண்டுவந்து விரிவாக்கத் திட்டத்திற்கு ஒரு பகுதியாக ரூபாய் 216 கோடியைத் திரட்டியுள்ளது. இத்திட்டச் செலவுக்கான எஞ்சிய தொகை இந்திய தொழில் வளர்ச்சி வங்கி, உலக வங்கி ஆகியவற்றிடமிருந்து பெற்ற தவணைக் கடன் மூலமும் நிறுவன நிதியைக் கொண்டும் ஈடு செய்யப்பட்டுள்ளது. இந்த விரிவாக்கத் திட்டத்திற்கு உலக வங்கி 75 மில்லியன் அமெரிக்க டாலரை நேரடி வெளிநாட்டுக் கடனாக வழங்கியுள்ளது.

இந்நிறுவனம் 2002-2003 ஆம் ஆண்டில் 93.27 விழுக்காடு உற்பத்தித் திறனைப் பயன்படுத்தி 1,67,878 மெட்ரிக் டன் செய்தித்தாள் மற்றும் எழுது அச்சு காகிதத்தை உற்பத்தி செய்துள்ளது. இந்நிறுவனம் 2002-2003 ஆம் ஆண்டில் வரிக்கு முந்தைய நிகர இலாபமாக ரூபாய் 67.00 கோடி (தற்காலிகமானது) ஈட்டியதுடன், 2001-2002 ஆம் ஆண்டிற்கு 25 விழுக்காடு ஆதாயப்பங்கு அரசுக்கு அளித்துள்ளது.

1994-95 ஆம் ஆண்டில் ஏற்றுமதியைத் தொடங்கிய இந்நிறுவனம் பல்வேறு நாடுகளுக்கும் காகிதத்தை ஏற்றுமதி செய்து தொடர்ந்து ஏற்றுமதி விற்பனையில் சாதனை புரிந்து வருகிறது. ஏற்றுமதியைத் தொடங்கிய காலம் முதல் 31-3-2003 வரை இந்நிறுவனம் மொத்தம் 1,28,868 மெட்ரிக் டன் மரம்சாரா அச்சு மற்றும் எழுதுத்தாள்களையும் செய்தி அச்சுத்தாள்களையும் ஏற்றுமதி செய்து ரூ.340.67 கோடி அந்நியச் செலவாணியை ஈட்டியுள்ளது.





இந்நிறுவனம் திருநெல்வேலி மாவட்டத்தில் தேவர்குளம், பெருங்குடி ஆகிய இடங்களில் காற்று சக்தியால் மரபுசாரா மின்சாரம் உற்பத்தி செய்ய 1993-94 ஆம் ஆண்டில் ரூ.47.69 கோடி செலவில் 15 மெகாவாட் திறன் கொண்ட ஒரு காற்றாலை பண்ணையை நிறுவியுள்ளது. இக்காற்றாலையின் திறன் 31-3-2001 முதல் 15 மெகாவாட்டிலிருந்து 18 மெகாவாட்டாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் 267.03 இலட்சம் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் தொகுப்புக்கு வழங்கியுள்ளது.

இந்நிறுவனத்திற்கு கரும்புச்சக்கை (கரும்பின் கழிவுப் பொருள்) பிரதான மூலப் பொருளாக இருக்கிறது. சுற்றுச்சூழல் நேயமிகு கரும்புச் சக்கையை மூலப் பொருளாக புதுவகையில் பயன்படுத்துவதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் 30,000 ஏக்கர் பரப்பிலுள்ள காடுகளைப் பாதுகாக்க முடிகிறது. இந்நிறுவனம் நிலக்கரி/கச்சா பழுப்பு நிலக்கரியை எரிபொருளாகக் கொண்ட கொதிகலன்களை ஆறு சர்க்கரை ஆலைகளில் நிறுவி அதன்மூலம் கரும்புச் சக்கைக்குப் பதிலாக நீராவியை வழங்குகின்றது. மேலும் இந்நிறுவனம் கூடுதலாகத் தேவைப்படும் கரும்புச் சக்கையை வெளிச் சந்தையில் கொள்முதல் செய்கிறது.

***இந்நிறுவனம் 2002-2003 ஆம் ஆண்டு புரிந்துள்ள சாதனைகள்:***

(i) ரூபாய் 50 கோடி செலவில் காகிதம் தயாரிக்கும் இயந்திரம் I-ஐ மறுசீரமைத்தல்:

இந்த சீரமைப்பினால் இயந்திரத்தின் வேகம் முடுக்கி விடப்பட்டு ஆண்டுக்கு மேலும் 25,000 மெட்ரிக் டன் காகிதம் உற்பத்தி செய்யப்படும். மேலும் ஸ்டேட்-ஆப்-ஆர்ட் ஷூ பிரஸ் உடன் உள்ள இந்த இயந்திரம் காகிதத்தின் தரத்தை மேம்படுத்தும். மறு சீரமைப்பு தற்போது முடிவடைந்துள்ளது. கூடுதல் உற்பத்தி இதனால் விரைவில் கிடைக்கும். தற்போதுள்ள படில் பிரஸ்க்குப் பதிலாக ரூ.25 கோடி செலவில் காகித ஆலை-I-ல் ஸ்டேட்-ஆப்-ஆர்ட் ஷூ மாற்று நவீன 'மீட்டர்டு சைஸ் பிரஸ்' நிறுவப்பட்டு வருகிறது. இதனால் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் உயர் தரமுள்ள சர்பேஸ் சைஸ் காகிதத்தை தயாரிக்க முடியும். இந்த அச்சு இயந்திரம் விரைவில் உற்பத்தியை தொடங்கும்.

[2003 மே 5

(ii) ரூ.30 கோடி செலவில் அதிவேகத்தில் இயங்கும் வகையில் காகித இயந்திரம்-II-ஐ நிலை உயர்த்துவது செயல்படுத்தப்பட்டுள்ளது. விரைவில் இதனால் ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக 25,000 மெட்ரிக் டன் காகிதம் தயாரிக்க முடியும்.

(iii) 100 TPD காகிதங்களுக்கான அங்காடி தேவையை நிறைவு செய்ய ரூ.10 கோடி செலவில் நாள் ஒன்றுக்கு கூடுதலாக 100 மெட்ரிக் டன் அளவுக்கு தானியங்கி கட்பேக் லைன் 2003 பிப்ரவரியில் நிறுவப்பட்டுள்ளது. இதனால் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் காப்பியர் காகித உற்பத்தி இரட்டிப்பாகும்.

(iv) கூடுதலாக மரக்கூழ் தேவையை நிறைவு செய்ய, மரக்கூழ் ஆலைகளும் காகிதம் தயாரிக்கும் ஆலைகளும் ரூ.15 கோடி மூலதன செலவில் நிலை உயர்த்தப்பட்டு வருகின்றன. இப்பணி 2003-2004 இல் முடியும்.

(v) உலை எண்ணெய்க்குப் பதிலாக சுண்ணாம்புக் காளவாயில் உற்பத்தியாகும் மீதேன் வாயுவைப் பயன்படுத்தி, மாசு படிவதை பெருமளவில் குறைக்கும் வகையில் ரூ.4 கோடி மூலதனத்தில் நவீன பையோ மெதனேசன் ஆலை ஒன்று நிறுவப்பட்டு வருகிறது. இவ்வாலை விரைவில் செயல்பட துவங்கும்.

(vi) கரும்புச் சக்கை தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் திருவாளர்கள் சக்தி சுகர்ஸ் நிறுவனத்துடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. அதன்படி, ஆப்பக்கூடலில் சக்தி சுகர்ஸ் ஆலையில் 85 TPH உயர் அழுத்த கொதிகலன்கள் இரண்டை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் நிறுவி வருகிறது. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சக்தி சுகர்ஸ் நிறுவனத்திற்கு நீராவியை வழங்கும். அதற்குப் பதிலாக கரும்புச் சக்கையை பெற்றுக் கொள்ளும். இந்தத் திட்டம் நிறைவுப் பெற்ற பின்னர் சக்தி சுகர்ஸ் நிறுவனத்திடமிருந்து 3 இலட்சம் டன் கரும்பு சக்கையை இந்நிறுவனம் கொள்முதல் செய்ய முடியும். ரூ.35 கோடி மூலதன முதலீட்டில் 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இது முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிறுவனம் 1788 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும் சுமார் 5000 நபர்களுக்கு பிற வகையில் வேலைவாய்ப்பும் அளித்துள்ளது.



2003 மே 5]

## தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம்

1976 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ஆம் நாள் நிறுமங்கள் சட்டத்தின் கீழ் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (டிட்கோ) முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனமாக தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் (டான்செம்) நிறுவப்பட்டது. ஆலங்குளத்தில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் 1970-இல் சிமெண்ட் தொழிற்சாலை நிறுவப்பட்டது. பின்னர் அதன் நிர்வாகத்தை தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் (டான்செம்) ஏற்றுக்கொண்டது. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் அரியலூரில் மேலும் ஒரு சிமெண்ட் தொழிற்சாலையை ஏற்படுத்தியது. அத்தொழிற்சாலை 1979-ஆம் ஆண்டு முதல் சிமெண்ட் உற்பத்தியைத் தொடங்கியது. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் 1981-ஆம் ஆண்டில் விருதுநகர் மாவட்டத்திலுள்ள ஆலங்குளத்தில் கல்நார் சிமெண்ட் தகடு (ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்) தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றையும், 1984-ஆம் ஆண்டில் மாயனூரில் கல்நார் சிமெண்ட் அழுத்தக் குழாய் தயாரிப்புத் தொழிற்சாலை (ஆஸ்பெஸ்டாஸ் பிரஷர் பைப்ஸ்) ஒன்றையும் தொடங்கியது. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், 1989-இல் கடலூர் மாவட்டத்திலுள்ள விருத்தாசலத்தில், இயங்காமலிருந்த கற்குழாய்த் தயாரிப்பு தொழிற்சாலையை தமிழ்நாடு பீங்கான் தயாரிப்பு நிறுவனத்திடமிருந்து எடுத்துக் கொண்டது. தனது பங்குகளை (Shares) டிட்கோ நிறுவனம் அரசுக்கு மாற்றி அளித்ததால், 31-12-1994 முதல் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் அரசு நிறுவனமாக ஆக்கப்பட்டது.

டான்செம் 1998-99 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்கி வருகிறது. 2001-2002-ல் ரூபாய் 11 கோடி நட்டம் அடைந்த இந்நிறுவனம் 2002-2003 ஆம் நிதியாண்டில் ரூ.1.65 கோடியாக (தணிக்கை செய்யப்படாதது) நட்டத்தைக் குறைத்துள்ளது. டான்செம் நிறுவனத்தின் உற்பத்தித் திறன் பயன்பாட்டில் ஏற்படுத்தப்பட்ட முன்னேற்றம், ஆலை இயக்கங்களின் உயரிய திறப்பாடு மற்றும் ஆண்டொன்றுக்கு ரூ.22 கோடி அளவில் ஏற்படுத்தப்பட்ட செலவினக் குறைப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றின் பயனாக நட்ட அளவு கணிசமாக குறைந்துள்ளது.

இரண்டு வயர்சா இயந்திரங்கள், ஆறு ஹைட்ராலிக் இயந்திரங்கள் மற்றும் மூன்று டாரஸ் வாகனங்கள் போன்றவற்றை உள்நாட்டில் வாங்கியுள்ளது. மேற்சொன்ன இனங்களுக்காக டாமின் ரூபாய் 420.13 இலட்சம் செலவு செய்துள்ளது. இதன் விவரம் கீழ்வருமாறு:

| வ. எண் | பெயர் | எண்ணிக்கை | மதிப்பு ரூ. இலட்சத்தில் | உபயோகிக்கும் குவாரியின் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | டைமண்ட் வயர்சா | 2 | 8.08 | தோகைமலை |
| | ஜென்செட் | 2 | 12.56 | |
| | துளைபோடும் கருவி | 2 | 4.82 | |
| 2 | ஹைட்ராலிக் எக்ஸ்வேடர்ஸ் | 6 | 190.92 | தோகைமலை 1<br>பொன்னேரிமலை 1<br>பைதூர் 1<br>சிவகங்கை 1<br>எல்லிக்கரடு 1<br>சாம்பல்லி 1 |
| 3 | தானாக துளையிடும் இயந்திரம் (இறக்குமதி செய்யப்பட்டது) | 1 | 50.00 | தோகைமலை |
| 4 | டாரஸ் (பெரிய லாரி) | 3 | 36.75 | கீளையூர் 2<br>கீளவளவு 1 |
| 5 | டாடா டிப்பர்ஸ் | 6 | 51.00 | தோகைமலை 2<br>எல்லிக்கரடு2<br>சிவகங்கை 2 |
| | லேலண்ட் டிப்பர்ஸ் | 3 | 24.00 | பைதூர் 2<br>திண்டிவனம் 1 |
| 6 | போர்டபிள் கம்ப்ரஸர்ஸ் | 7 | 42.00 | தோகைமலை 3<br>பைதூர் 1<br>பொன்னேரிமலை 3 |
| | | மொத்தம் | 420.13 | |



நவீன இயந்திரங்களை குவாரிகளில் அறிமுகப்படுத்தியதன் விளைவாக உற்பத்தி அதிகரிப்பு, உற்பத்தி செலவு குறைவு மற்றும் குவாரி பணியின் செயல்பாடுகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்றவற்றில் முன்னேற்றம் ஏற்பட்டது.

**II. மாதேப்பள்ளியிலுள்ள கிரானைட் ஒடுகள் தயாரிக்கும் தொழிற்சாலையை நவீனப்படுத்துதல்**

உலகத்தரம் வாய்ந்த கிரானைட் ஓடுகளை தயாரிக்க டாமின் நிறுவனம் மிகுந்த தொழில்நுட்பம் வாய்ந்த ஒரு பல ரம்ப இயந்திரத்தையும், ஒரு காலிப்ரேஷன் இயந்திரத்தையும் ரூ.180 இலட்சம் செலவில் தருமபுரி மாவட்டம் மாதேபள்ளியில் உள்ள தொழிற்சாலையில் நிறுவி நவீனமயமாக்கியுள்ளது. இந்தக் கூடுதல் இயந்திரங்களின் உதவியால் திங்கள் ஒன்றுக்கு ஆறு கன்டெய்னர்கள் கிரானைட் ஓடுகள் ஏறக்குறைய ரூ.50 இலட்சங்கள் மதிப்பிற்கு உற்பத்தி செய்யப்பட்டு அதில் 90 விழுக்காட்டிற்கு மேல் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அந்நிய செலாவணி ஈட்டப்படும். இந்த நவீனமயமாக்கப்பட்ட தொழிற்சாலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 9-3-2003 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

**III. சேவாத்தூர் வெர்மிகுலைட் சுரங்கத்தை நவீனமயமாக்குதல்**

வெர்மிகுலைட் தாதுவை செழுமைப்படுத்தும் நோக்குடன் ஒரு சல்லடை இயந்திரத்தையும் கனிமத்தை தூள் செய்யும் இயந்திரத்தையும் நிறுவி சேவாத்தூரிலுள்ள வெர்மிகுலைட் சுரங்கத்தை டாமின் நிறுவனம் நவீனமயமாக்கியுள்ளது. டாமின் நிறுவனம் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் வெர்மிகுலைட்டை பயன்படுத்துவதற்கும், வெர்மிகுலைட்டை பயன்படுத்தி நிலத்தின் ஊட்டச்சத்து அதிகரிக்கத் தேவையான புதிய உயிரியல் உரம் உற்பத்தி செய்வது பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ள திட்டங்களை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திடம் கொடுத்துள்ளது.

**IV. சிவகங்கையிலுள்ள செழுமைப்படுத்திய கிராபைட் தொழிற்சாலையில் முன்னேற்றம்**

கிராபைட் தொழிற்சாலையில் கூடுதலாக எந்த செலவும் இல்லாமல் கூடுதல் ப்ளோடேஷன் செல்கள் நிறுவப்பட்டு நவீனமயமாக்கப்பட்டுள்ளது. இதனால் செழுமைப்படுத்திய கிராபைட் உற்பத்தி சீராக்கப்பட்டு உற்பத்தி அளவு 70 விழுக்காட்டிலிருந்து 79 விழுக்காடாக அதிகரித்துள்ளது.

[2003 மே 5

V. சேலத்தில் உள்ள மத்திய பணிமனை

தமிழ்நாடு கனிம நிறுவனம் சேலத்திலுள்ள தமிழ்நாடு வேளாண் தொழில் வளர்ச்சி கழகத்தின் பணிமனையை 26-4-2002 அன்று தன்வசம் முழுவதுமாக எடுத்துக் கொண்டது. டாமின் நிறுவனம் தனது இயந்திரங்கள் மற்றும் வாகனங்களின் பராமரிப்பு வேலையை தானே மேற்கொள்வதால் 50 விழுக்காடு அளவிற்கு பராமரிப்புச் செலவில் சேமிப்பு ஏற்படுகின்றது.

**தமிழ்நாடு கிராபைட் நிறுவனம்**

கிராபைட்டை கொண்டு மதிப்பு கூட்டிய பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை சிவகங்கையில் ஏற்படுத்த நிறுமங்கள் சட்டத்தின்கீழ் ரூபாய் 1 கோடி அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் தமிழ்நாடு கிராபைட் நிறுவனம் (டான்கிராப்) 19-3-1997 அன்று நிறுவப்பட்டது. இதன் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.10 இலட்சம் ஆகும். டான்கிராப் நிறுவனம் விரிவான மேம்பாடு நடவடிக்கைகளை எடுத்தபோதிலும் கிராபைட் சுரங்கங்களுக்கு அருகில் கிராபைட்டை சார்ந்த பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை நிறுவ சாதகமான இட அமைப்பு இல்லை. மேலும் இத்தொழிலில் ஏற்கெனவே நிலைத்துள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வணிகர்கள் இத்தொழிலில் தங்களது ஆதிக்கத்தைச் செலுத்துகின்றனர். மேலும் தமிழ்நாடு கனிம நிறுவனம் கிராபைட்டை உற்பத்தி செய்து விற்று வருவதால் டான்கிராப் நிறுவனத்தின் செயல்பாடுகள் தற்போது ஏதுமில்லை. எனவே டான்கிராப் நிறுவனத்தை தமிழ்நாடு கனிம நிறுவனத்துடன் இணைப்பது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம்**

மேக்னசைட் கனிமத்தை வெட்டியெடுப்பதற்காகவும், அதைக் கொண்டு மதிப்பு கூட்டப்பட்ட மேக்னசைட் பொருட்களை உற்பத்தி செய்யும் நோக்கத்துடனும் நிறுமங்கள் சட்டத்தின்கீழ் 1979 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் பொதுத்துறை நிறுவனமாகிய தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் (டான்மேக்), சேலத்தில் நிறுவப்பட்டது. ஆண்டொன்றுக்கு 30,000 மெட்ரிக் டன்கள் முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் உற்பத்தி செய்வதற்காக ரூ.8.57 கோடி செலவில் சுழற்சூளை ஒன்று 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தொடங்கி



2003 மே 5]

வைக்கப்பட்டது. மற்றொரு பிரிவான நிலைச்சூளை, மிதமாக எரியூட்டப்பட்ட மேக்னசைட் உற்பத்தி செய்கிறது. 2002-2003 ஆம் ஆண்டில் டான்மேக், கச்சா மாக்னசைட் உற்பத்தி குறியீட்டளவான 39,800 மெட்ரிக் டன்னிற்கெதிராக 45,252 மெட்ரிக் டன் உற்பத்தி செய்தும், விற்பனைக் குறியீட்டளவான 56,000 மெட்ரிக் டன்னிற்கெதிராக 50,403 மெட்ரிக் டன் விற்பனையும் செய்துள்ளது. 2003-2004 ஆம் ஆண்டிற்கான உற்பத்தி மற்றும் விற்பனைக் குறியீட்டளவுகள் பின்வருமாறு:

| | உற்பத்தி (மெட்ரிக் டன்கள்) | விற்பனை (மெட்ரிக் டன்கள்) |
|---|---|---|
| கச்சா மேக்னசைட் | 33,500 | 54,300 |
| முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 23,000 | 23,000 |
| மிதமாக எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 10,000 | 10,000 |

2002-2003 ஆம் ஆண்டில் டான்மேக் நிறுவனம் ரூ.21.30 இலட்சம் (தணிக்கை செய்யப்படாதது) இலாபம் ஈட்டியது.

2003-2004 ஆம் ஆண்டில் கச்சா மேக்னசைட் உற்பத்தியின் ஒரு பகுதியை இயந்திரமயமாக்கும் திட்டத்தின் மூலமாக சுரங்க உற்பத்திச் செலவு குறைக்கப்பட்டு டான்மேக் நிறுவனம் தனது செயல்திறனை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தமிழ்நாடு தொழில் வெடி மருந்து நிறுவனம்**

தமிழ்நாடு தொழில் வெடி மருந்து நிறுவனம் (டெல்) வணிக ரீதியான வெடி மருந்துகள், வெடியூக்கிகள் மற்றும் வெடித்திரிகளை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்காக நிறுமங்கள் சட்டத்தின் கீழ் 1983 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இந்நிறுவனம் டிட்கோ நிறுவனத்தின் துணை நிறுவனமாக இருந்தது. பின்னர் டிட்கோ நிறுவனம் வைத்திருந்த டெல் நிறுவனத்தின் அனைத்து பங்குகளையும் 15-11-2002 அன்று அரசுக்கு மாற்றிவிட்டது. நலிவடைந்த இந்த நிறுவனம் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தொழில் மற்றும் நிதி

சீரமைப்புக் குழுமத்தின் (பிஐஎப்ஆர்) ஆய்விற்கு உட்படுத்தப்பட்டது. மொத்த குவிந்த நட்டமான ரூ.47.52 கோடியில் இந்நிறுவனம் ரூ.42.01 கோடியை 2001-2002 ஆம் ஆண்டு வரையிலும், ரூ.5.51 கோடியை 2002-2003 ஆம் ஆண்டிலும் ஈடுசெய்துள்ளது.

இந்நிறுவனம் நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுக்குத் தரவேண்டிய கடன் தொகை முழுவதையும் "ஒரே தவணை முறையில்" செலுத்தி விட்டது. 31-3-2001-இல் இந்நிறுவனத்தின் நிகர மதிப்பீடு நேர்மறையானதால் (positive) இந்நிறுவனம் தற்போது நலிந்த நிறுவனமாக இல்லை. எனவே 2001 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் இந்நிறுவனம் தொழில் மற்றும் நிதிச் சீரமைப்புக் குழுமத்திடமிருந்து விடுபட்டது.

இந்நிறுவனம் 2001 ஆம் ஆண்டில் ஐ.எஸ்.ஓ. 9002 தரச் சான்றிதழையும் பெற்றுள்ளது. 2001-2002 இல் இந்நிறுவனம் ரூ.41 கோடி அளவிற்கு விற்பனை செய்து நிகர இலாபமாக ரூ.6.22 கோடி ஈட்டியுள்ளது. இந்நிறுவனம் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.45 கோடி (தணிக்கை செய்யப்படாதது) அளவிற்கு விற்பனை செய்து ரூபாய் 5.52 கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

இந்நிறுவனம் எமல்சன் வகை வெடிமருந்துகளையும், மின்சாரம் மூலம் இயக்கப்படாத வெடியூக்கிகளையும் உற்பத்தி செய்யும் பல்திறப்படுத்தும் திட்டத்தினைச் செயல்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. இந்நிறுவனத்தின் எமல்சன் வகை உற்பத்திப் பொருட்கள் 2003 ஆம் ஆண்டு மே/ஜூன் திங்களில் விற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம்**

சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம் (எஸ்.எஸ்.எல்) 1956 ஆம் ஆண்டு தனியார் துறையில் சரக்கு இரயில் பெட்டிகள் மற்றும் இரும்பு கட்டுமானங்கள் தயாரிப்பதற்காகத் தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் தொழிலாளர் பிரச்சனையினால் 1969-70-இல் மூடப்பட்டது. இதில் பணிபுரியும் சுமார் 1200 நபர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசு இந்நிறுவனத்தை 1971 ஆம் ஆண்டு தன் பொறுப்பில் ஏற்றுக் கொண்டது.



இந்நிறுவனம், 1988-89 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்துள்ளது. எதிர்மறையான நிகர மதிப்பின் காரணமாக, 1992 ஆம் ஆண்டு மே திங்கள் இந்நிறுவனம் தொழில் மற்றும் நிதி புனரமைப்பு குழுமத்தின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, மேற்படி குழுமத்தின் பரிந்துரையின்பேரில் ஒரு புனரமைப்புத் திட்டம் 1998 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் செயல்படுத்தப்பட்டது. மேற்கண்ட திட்டம் இந்நிறுவனத்திற்கு புத்துயிர் அளிக்கும் முயற்சியில் வெற்றி பெறவில்லை.

திரு. எஸ்.வி.எஸ். இராகவன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட மாநில பொதுத் துறை நிறுவனங்கள் குழு தன்னுடைய அறிக்கையில், சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தை பொறுத்தமட்டில் 31-3-1998 அன்றுள்ளபடி மாநில அரசு இந்நிறுவனத்தைப் பற்றிய ஒரு தெளிவான ஆய்வு செய்து, அரசின் நிதி உதவி இல்லாமல் இந்நிறுவனத்தைத் தொடர்ந்து நடத்த முடியாவிடில் நிறுவனம் மூடப்பட வேண்டும் என்றும், நிறுவனத்தின் நிலையான சொத்துக்கள் சந்தை விலையில் விற்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்தது. நிறுவனத்தின் ஆதாயமற்ற செயல்பாடுகளினாலும், சாதகமற்ற சந்தை நிலவரங்களினாலும் இந்த நிறுவனத்தைப் புனரமைக்கும் திட்டம் வெற்றி பெறவில்லை.

தொழில் மற்றும் நிதி புனரமைப்புக் குழுமம் அறிவுறுத்தியவாறு செயல்முறை முகமையான பாரத ஸ்டேட் வங்கி 6-8-2002 அன்று நிர்வாக மாற்றம் / நிறுவனத்தை எடுத்துக் கொள்ளுதல் / குத்தகைக்கு விடுதல் போன்றவற்றிற்கான விருப்ப அறிவிப்பு கோரி விளம்பரம் செய்து, பெறப்பட்டுள்ள விருப்ப அறிவிப்புகளை தொழில் மற்றும் நிதி புனரமைப்புக் குழுமம் பரிசீலனை செய்து வருகிறது. இதன் தொடர்பான குழுமத்தின் இறுதி ஆணைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

இத்துடன், விருப்பு ஓய்வுத் திட்டமும் இந்நிறுவனத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏற்கெனவே 298 ஊழியர்கள் விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் அனுப்பப்பட்டுள்ளனர். தற்பொழுது 461 ஊழியர்கள் உள்ளனர். இவர்களிலும் 442 பேர் விருப்ப ஓய்வு பெற விருப்பம் தெரிவித்துள்ளனர். தொழில் மற்றும் நிதி புனரமைப்புக் குழுமத்திடம் கலந்து ஆலோசித்து, இதன் தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

[2003 மே 5

## தமிழ்நாடு உப்பு நிறுவனம்

பொதுத் துறை நிறுவனமான, தமிழ்நாடு உப்பு நிறுவனம், உப்பு உற்பத்தி செய்வதோடு உப்பு சார்ந்த இரசாயனப் பொருள்களையும் அதன் துணைப் பொருள்களையும் தயாரிக்கும் நோக்கத்துடன் நிறுமங்கள் சட்டத்தின்கீழ் 1974-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. மிகவும் பின் தங்கிய இராமநாதபுரம் மாவட்டத்தில் கடற்கரையோரப் பகுதிகளில் உப்பு உற்பத்தி செய்து, அதன்மூலம் அதிக வேலைவாய்ப்பு அளித்து பின்தங்கிய பகுதியின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு இந்நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு உப்பு நிறுவனம், தொழிற்சாலைகளுக்குத் தேவையான உப்பு உற்பத்தி செய்வதோடு, இரும்பு ஊட்டசத்து, இரும்பு மற்றும் அயோடின் கலந்த உப்பு மற்றும் அயோடின் கலந்த 'அரசு' உப்பு ஆகியவைகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டு வருகிறது.

இந்நிறுவனம், 1974-75 ஆம் ஆண்டு ரூ.50 இலட்சம் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனத்தைக் கொண்டு பணிகளைத் தொடங்கியது. இதன் தற்பொழுது அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனமும், செலுத்தப்பட்ட பங்கு மூலதனமும் முறையே ரூ.400 இலட்சம் மற்றும் ரூ.317.01 இலட்சமும் ஆகும். மூலதனம் முழுமையாக மாநில அரசின் பங்குத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கத்திலுள்ள மாரியூர் வாலிநோக்கம் உப்பு வளாகத்தில் உள்ள 5,524 ஏக்கர் மொத்தப் பரப்பளவில், 4,825 ஏக்கர் பரப்பளவு உப்பு உற்பத்திக்குப் பயன்படத்தக்க பகுதியாய் உள்ளது. இந்நிறுவனம் இதுவரை 3,210 ஏக்கர் பரப்பளவு பகுதியினை உப்பு உற்பத்தி செய்ய மேம்படுத்தியுள்ளது. இம்மேம்பாட்டினால் ஆண்டு உப்பு உற்பத்தி 2,00,000 மெட்ரிக் டன்னாக இருக்கும்.



2003 மே 5]

2003-2004 ஆம் ஆண்டு தொழிலுக்கு உகந்த உப்பை வழங்க நிர்ணயிக்கப்பட்டுள்ள உற்பத்தி இலக்கு கீழ்வருமாறு:

| | (டன்னில்) |
|---|---|
| I. தொழிற்சாலைக்குகந்த உப்பு: | |
| (அ) உற்பத்தி | 150000 |
| (ஆ) விற்பனை | 132000 |
| II. இரும்புச் சத்து உப்பு: | |
| (அ) உற்பத்தி | 750 |
| (ஆ) விற்பனை | 750 |
| III. அயோடின் கலந்த 'அரசு' உப்பு: | |
| (அ) உற்பத்தி | 34400 |
| (ஆ) விற்பனை | 33150 |

அயோடின் கலந்த அரசு உப்பை மலிவு விலையில் கிலோ ஒன்றுக்கு ரூ.2.50-க்கு பொது விநியோகத் திட்டத்தின் மூலம் பொருளாதாரத்தில் பின்னடைந்த ஏழை மக்களுக்கு வழங்கியதில் விளைந்த வெற்றியைத் தொடர்ந்து நடுத்தர மக்கள் பயன்பெறும் வகையில் சுத்திகரிக்கப்பட்ட உதிரி உப்பு கிலோ ஒன்றுக்கு ரூ.4.00/-க்கு பொது விநியோகத் திட்டத்தின் மூலம் விற்பனை செய்ய தமிழ்நாடு உப்பு நிறுவனம் திட்டமிட்டுள்ளது. மேலும், கர்நாடகா மாநிலத்திலுள்ள மதிய உணவுத் திட்டத்திற்கு அயோடின் கலந்த உப்பை வழங்கி வருகிறது. இது தவிர, ஆந்திரப் பிரதேசத்தில் "கிரகமித்ரா" திட்டத்திற்கு பொது விநியோகத் திட்டத்தின் மூலம் அயோடின் கலந்த உப்பு வழங்குவதற்கு ஆந்திரப் பிரதேச அரசை அணுகி வருகிறது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் உற்பத்திச் செய்யும் உப்பினை விற்பனை செய்வதற்கு குஜோர் அல்காலி தொழிற்சாலைகளைச் சார்ந்திருக்கிறது. பொதுவாக நாடு முழுவதும் இரசாயனத் தொழிலில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இருப்பினும் இப்பின்னடைவினால் ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பை சரிகட்ட தமிழ்நாடு உப்பு நிறுவனம் அயோடின் கலந்த அரசு உப்பின் விற்பனையை உயர்த்தி, வியாபாரத்தினைப் பெருக்க சீரிய உத்திகளைக் கையாண்டுள்ளது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் எடுத்த இந்த முயற்சிகளின் காரணங்களினால் எதிர்பார்த்த பலன் கிட்டியுள்ளது.

[2003 மே 5

அயோடின் கலந்த உப்பினை அனைவரும் பயன்படுத்தும் இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசின் கொள்கையின் அடிப்படையில் தமிழ்நாட்டில் பொது விநியோக திட்டத்தின் மூலம் அயோடின் கலந்த அரசு உப்பு தற்பொழுது வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் ஏழை எளிய மக்கள் அயோடின் கலந்த அரசு உப்பினை அதிகம் பயன்படுத்துவதற்கு ஏதுவாக உள்ளது. இத்திட்டத்தில் தமிழ்நாடு உப்பு நிறுவனம் சாதனை அடைந்துள்ளதைக் கண்டு உலக நாடுகளின் அமைப்பான கனடாவிலுள்ள மைக்ரோ நியூட்ரியட் இனிஷியேட்டிவ் பன்னாட்டு நிறுவனம் வாலிநோக்கத்திலுள்ள அயோடின் கலந்த அரசு உப்பு தயாரிக்கும் தொழிற்சாலையின் உற்பத்தி வசதிகளை மேம்படுத்தவும், அந்நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் அயோடின் மற்றும் இரும்புச் சத்துக் கலந்த, செறிவூட்டப்பட்ட உப்பினைத் தயாரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தவும் சுமார் ரூ.90 இலட்சம் மதிப்புள்ள இயந்திரங்கள் மற்றும் சாதனங்களை அளிக்க முன்வந்துள்ளது.

மேலும், வாலிநோக்கத்தில் உப்புக் கழிவு நீரிலிருந்து வரும் பிட்டனை பயன்படுத்தி புரோமின் உற்பத்தி செய்வதற்குரிய தொழிற்சாலையைத் தனியார் துறையில் உருவாக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுபோன்று வாலிநோக்கத்தில் பயன்படுத்தப்படாமல் இருக்கும் தரிசு நிலத்தில் இறால் பண்ணை உருவாக்கும் திட்டமும் இந்நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு, இந்தப் புதிய திட்டங்களினால் கூடுதல் வருவாயை ஈட்டுதலும் மற்றும் குளோர் அல்காலி தொழிற்சாலைகளை முழுவதுமாகச் சார்ந்திருப்பதைத் தவிர்ப்பதும் இந்நிறுவனத்தின் நோக்கமாக உள்ளது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1990-91 ஆம் ஆண்டு முதல் இலாபம் ஈட்டி வருகின்றது. 2002-2003 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் ரூ.34.13 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

இலாபத்தில் பங்கு அறிவிப்பாக இந்நிறுவனம் 2001-2002 இல் ரூ.3.17 இலட்சம் ஈவுப்பங்குத் தொகையாகவும் மற்றும் ரூ.7.46 இலட்சம் குத்தகைத் தொகையாகவும் அரசிற்கு வழங்கியுள்ளது. மேலும் 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.164.30 இலட்சம் கூடுதல் ராயல்டியாக அரசுக்குச் செலுத்தியுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.161.08 இலட்சம் கூடுதல் ராயல்டியாக அரசுக்குச் செலுத்தியுள்ளது.



2003 மே 5]

**புவியியல் மற்றும் சுரங்கத் துறை**

மாநிலத்தின் கனிம நிர்வாகம் மற்றும் கனிம அகழ் ஆய்வுகள் ஆகியவை புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் இரு தலையாய பணிகளாகும். கனிம நிர்வாக நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் பெருங்கனிமங்கள் மற்றும் சிறுகனிமங்கள் சலுகைகள் சட்டங்கள் மற்றும் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய வழிமுறைகளை கடைபிடித்து வழங்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் கனிம மேம்பாடு மற்றும் கனிமப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது. அனுமதி இல்லாமல் கனிமங்களை வெட்டி எடுத்தல் மற்றும் சட்டத்திற்குப் புறம்பாக கனிமங்கள் எடுத்து செல்லுதல் ஆகியவற்றைத் தடுத்து அரசுக்கு கனிம வருவாய் இழப்பினைத் தவிர்த்தல் ஆகியனவும் கனிம நிர்வாக நடவடிக்கைகளாகும்.

நவீன தொழில்நுட்ப ஆய்வுமுறை மற்றும் நடைமுறை ஆய்வின் மூலம் கனிமப் படிவங்களை கண்டறிதல் மற்றும் மாநிலத்தில் உள்ள பல்வகை கனிமப் படிவங்களை மதிப்பிடும் பணி தொடர்ந்து ஆற்றப்படுகிறது. நீலகிரி மாவட்டம் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல் ஆகிய இடங்களில் உள்ள மலைப் பகுதிகளில் புவி தொழில்நுட்ப ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இப்பகுதிகளில் நிலச்சரிவு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து தக்க அறிவுரை வழங்கப்படுகின்றன.

**கனிமங்களின் மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை**

ரயத்துவாரி நிலங்களில் அனைத்து பெருங்கனிமங்களுக்கும் சுரங்கக் குத்தகை வழங்கும் அதிகாரம் புவியியல் மற்றும் சுரங்கத் துறை இயக்குநரிடமே தொடர்ந்து இருந்து வருகிறது. அரசு நிலங்களில் பெருங்கனிமங்களுக்கு முன்னோட்ட ஆய்வு அனுமதி, கனிம ஆய்வு உரிமம் மற்றும் கிரானைட்டிற்கு பட்டா மற்றும் அரசு நிலங்களில் குத்தகை வழங்கும் அதிகாரம் மாநில அரசிடம் உள்ளது. கிரானைட், ஆற்று மணல், கல், கிராவல் போன்றவற்றில் மேல்முறையீட்டு மனுக்களில் ஆணை வெளியிடுவது கள்ளத்தனமாகக் குவாரிப் பணி செய்தல் மற்றும் சட்ட விரோதமாக கனிமங்களை எடுத்துச் செல்லுதல் ஆகியவற்றினைத் தடுத்து, அரசுக்கு கனிம வருவாய் இழப்பு ஏற்படுதலை தவிர்த்தல் ஆகியனவும் இத்துறையின் பணிகளாகும்.

சுரங்கக் குத்தகை மற்றும் குவாரிக் குத்தகை உரிமம் வழங்குவதை முறைப்படுத்தவும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் கீழ்க்கண்ட சட்டங்கள் மற்றும் விதிகள் நடைமுறையில் உள்ளன:

(1) சுரங்கச் சட்டம், 1952.

(2) கனிமங்களும் சுரங்கங்களும் (மேம்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1957.

(3) வனப்பகுதி (பாதுகாப்பு) சட்டம், 1980.

(4) சுரங்க விதிகள், 1955.

(5) தமிழ்நாடு சிறுகனிமச் சலுகை விதிகள், 1959.

(6) கனிமச் சலுகை விதிகள், 1960.

(7) உலோக சுரங்க ஒழுங்குப்படுத்துதல் விதிகள், 1961.

(8) வனப்பகுதி (பாதுகாப்பு) விதிகள், 1981.

(9) கனிமப் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு விதிகள், 1988.

(10) கிரானைட் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு விதிகள், 1999.

**கனிம ஆய்வு**

புவியியல் மற்றும் சுரங்கத் துறை, மாநிலத்தில் புதியதாக கனிமப் பகுதிகளைக் கண்டறிவதற்காக பல்வேறு புவியியல் ஆய்வுகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. பெரம்பலூர் மாவட்டத்தின் சில பகுதிகளில் சுண்ணாம்புக்கல் இருப்பு பற்றிய ஆய்வு, மாநிலத்தின் சில பகுதிகளில் சுண்ணாம்புக்கல் மற்றும் மேக்னசைட் சுரங்க கனிமக் கழிவுகளில் கனிம இருப்புப்பற்றிய ஆய்வு, தருமபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் வெளிநாட்டு ஏற்றுமதிக்குத் தகுதி வாய்ந்த கிரானைட் பற்றி ஆய்வு, கொடைக்கானல் மற்றும் நீலகிரி மலைப் பகுதியில் புவி தொழில்நுட்ப ஆய்வுப் பணிகள் நடப்பு ஆண்டில் தொடர்ந்து நடைபெறும். 2003-2004 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படும்:

(i) ரூபாய் 34.27 இலட்சம் செலவில் தமிழ்நாட்டில் தெற்கு மற்றும் மேற்கு மாவட்டங்களில் சுண்ணாம்புக்கல் படிவம் இருப்பை பற்றி மறுமதிப்பீடு செய்யும் ஆய்வு மேற்கொள்ளுதல்;



(ii) ரூபாய் 20.40 இலட்சம் செலவில் புவியியல் மற்றும் சுரங்கத் துறையில் பூகோளத் தகவல் மையம் நிறுவுதல்

இத்துறையின் வேதியியல் பகுப்பாய்வாளர்கள், நவீன மற்றும் உயர்தர தொழில்நுட்ப முறைகளைக் கையாண்டு கனிமங்களிலுள்ள பலவிதமான கூறுகளை மில்லியன் மற்றும் பில்லியன் அளவு கண்டுபிடிக்கும் ஆய்வுகளை இத்துறையில் உள்ள நுண் பகுப்பாய்வு ஆய்வுக்கூடம் மற்றும் மரபு வழி வேதியியல் ஆய்வுக்கூடங்களில் மேற்கொண்டு வருகின்றனர்.

**கனிம வருவாய்**

புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் சீரிய கனிம நிர்வாகம் அரசுக்கு கணிசமான அளவு வருவாயை ஈட்டித் தருகிறது. இத்துறை குறைந்த அளவே உள் கட்டமைப்பு கொண்டிருப்பினும் ஆண்டுதோறும் நல்ல முன்னேற்றத்தினைக் காண தொடர்ந்து சீரிய முயற்சியினை மேற்கொண்டு வருகிறது. சிறந்த கனிம நிர்வாகம் மற்றும் சீரிய செயலாக்கம் மூலம் வருவாய் பெருக்கத்தில் இத்துறை ஆற்றியுள்ள சாதனைகளைக் கீழே குறிப்பிட்டுள்ள பட்டியல் மூலம் அறியலாம்:-

| ஆண்டு வருவாய் | பெறப்பட்ட (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1993-1994 | 54.50 |
| 1994-1995 | 64.80 |
| 1995-1996 | 66.90 |
| 1996-1997 | 73.85 |
| 1997-1998 | 89.94 |
| 1998-1999 | 110.37 |
| 1999-2000 | 124.86 |
| 2000-2001 | 163.12* |
| 2001-2002 | 254.26* |
| 2002-2003 | 317.20* |

[2003 மே 5

*(நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் 2000-2001 ஆம் ஆண்டில் பழுப்பு நிலக்கரிக்காக உரிமத் தொகை முன்பணமாக ரூ.250 கோடி செலுத்தியுள்ளது. இத்துறையின் வருவாயாக 2000-2001, 2001-2002 மற்றும் 2002-2003 ஆண்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில், முறையே ரூபாய் 6.05 கோடி, ரூ.91.84 கோடி மற்றும் ரூ.90.19 கோடி மேற்கண்ட முன்பணமான ரூ.250 கோடியில் சரிகட்டப்பட்ட தொகையும் உள்ளடங்கும்.)

செங்கல் தயாரிக்கப் பயன்படும் செம்மண் கனிமத்திற்கு தற்போது வசூலிக்கப்பட்டுவரும் 'சீனியரேஜ்' கட்டணம் செலுத்துவதில் அடைந்த இடையூறுகள் களையப்பட்டு, செங்கல் உற்பத்தியாளர் சங்கங்கள் மற்றும் விவசாயிகள் சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 1959 ஆம் ஆண்டைய தமிழ்நாடு சிறு கனிமங்கள் சலுகை விதிகளில் ஆண்டுக் கட்டணம் வசூலிக்க புதிய விதிமுறைகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

சட்டத்திற்குப் புறம்பாக கனிமங்கள் எடுத்தல் மற்றும் அனுமதியின்றி கனிமங்களை எடுத்துச் செல்லுதல் ஆகிய குற்றங்களைக் கண்டுபிடித்தல் மூலமும், புதிய கனிம இருப்பிடங்களைக் கண்டுபிடிப்பதின் மூலமும், அரசுக்கு வருவாயினை பெருக்குவதற்கும், சமுதாயத்தின் பல்வேறு பிரிவினருக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் இத்துறை இனி வருங்காலத்தில் தனது அயராத முயற்சியினை தொடர்ந்து மேற்கொள்ளும்.

**சர்க்கரைத் தொழில்**

தமிழ்நாட்டில் சர்க்கரைத் தொழில் ஒரு முக்கியமான வேளாண்மை சார்ந்த தொழிலாக உள்ளது. இத்தொழில் இம் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில், குறிப்பாக கிராமப்புறப் பொருளாதார மேம்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கிறது. சர்க்கரைத் தொழில், பல்லாயிரக்கணக்கான கிராமப்புற மக்களுக்கு நேரடி வேலைவாய்ப்பையும், கரும்பு சாகுபடி, அறுவடை, போக்குவரத்து மற்றும் இதர பணிகள் மூலம் பல இலட்சக்கணக்கான விவசாயிகளுக்கும், வேளாண் தொழிலாளர்களுக்கும் மறைமுக வேலை வாய்ப்பையும் அளிக்கிறது. தமிழ்நாட்டில் 38 சர்க்கரை ஆலைகள் உள்ளன. அவற்றில் 16 ஆலைகள் கூட்டுறவு துறையிலும், 19 ஆலைகள் தனியார் துறையிலும் உள்ளன. இது தவிர நிறுமங்கள் சட்டத்தின் கீழ்



2003 மே 5]

1974 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பொதுத் துறை நிறுவனமான தமிழ்நாடு சர்க்கரைக் கழகம், தஞ்சாவூர் மாவட்டம் குருங்குளத்தில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை மற்றும் மதுரை மாவட்டம் பாண்டிய இராஜபுரத்தில் அமைந்துள்ள மதுரா சர்க்கரை ஆலை ஆகிய இரு ஆலைகளையும் இயக்கி வருகிறது. இதன் துணை நிறுவனமான பெரம்பலூர் சர்க்கரை ஆலை பெரம்பலூர் மாவட்டத்தில் எறையூரில் அமைந்துள்ள ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலையை நிர்வாகம் செய்து வருகிறது. இவ்வனைத்து 38 ஆலைகளின் மொத்த அரவைத் திறன் நாளொன்றுக்கு 1,04,550 டன்னும் ஆண்டுக்கு சுமார் 180 இலட்சம் டன்னும் ஆகும். 2001-2002 ஆம் அரவைப் பருவத்தில் 191.42 இலட்சம் டன் கரும்பு அரைக்கப்பட்டு 18.39 இலட்சம் டன் சர்க்கரையை 9.61 விழுக்காடு சராசரி கட்டுமானத்தில் இவ்வாலைகள் உற்பத்தி செய்துள்ளன. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆலைகளும் 2002-2003 ஆம் அரவைப் பருவத்தில் (அக்டோபர் முதல் செப்டம்பர் வரை) சுமார் 158.56 இலட்சம் டன் கரும்பு அரவை செய்து 9.56 விழுக்காடு சராசரி சர்க்கரை கட்டுமானத்துடன் 15.16 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நாளொன்றுக்கு 37,400 டன் அரவைத் திறன் கொண்ட 16 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் மற்றும் நாளொன்றுக்கு 6750 டன் அரவைத் திறன் கொண்ட 3 பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் 2001-2002-ஆம் ஆண்டில் 64.22 இலட்சம் டன் கரும்பை அரைத்து 6.09 இலட்சம் டன் சர்க்கரையை உற்பத்தி செய்துள்ளன.

2002-2003-ஆம் அரவைப் பருவத்தில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறையிலுள்ள 19 சர்க்கரை ஆலைகளில், 16 சர்க்கரை ஆலைகள் மட்டும் அரவையை மேற்கொண்டுள்ளன. இவ்வாலைகள் சுமார் 57.17 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பினை அரவை செய்து, சுமார் 5.60 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரையை 9.79 விழுக்காடு சராசரி கட்டுமானத்தில் உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மதுரா சர்க்கரை ஆலை மற்றும் மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆகியவை நடப்புப் பருவத்தில் (2002-2003 பருவத்தில்) போதிய கரும்பு இன்மையின் காரணமாக அரவையை மேற்கொள்ளவில்லை.

[2003 மே 5

16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில், 12 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும் மற்றும் பொதுத் துறையில் உள்ள அனைத்து மூன்று சர்க்கரை ஆலைகளும், அதிக சர்க்கரை இருப்பு, அதிக கரும்பு விலை ஏற்றம், சர்க்கரை விலைச் சரிவு, உற்பத்திச் செலவு அதிகரிப்பு மற்றும் சர்க்கரை கட்டுமானக் குறைவு போன்ற காரணங்களினால் நிதி இழப்பு ஏற்பட்டு நலிவடைந்துள்ளன. ஆலைகளுக்கு ஏற்பட்டுள்ள பெருமளவிலான திரண்ட நட்டத்தை கருத்தில் கொண்டு, இவ்வாலைகளை புனரமைப்புத் திட்டத்தின்கீழ் உயிர்ப்பிக்கும் பொருட்டு, அரசு பங்குகளை விற்பனை செய்தல், தனியார் மயமாக்குதல் போன்ற வழிகளை அரசு ஆராயந்து வருகிறது.

கூட்டுறவுத் துறையில் மூன்று சர்க்கரை ஆலைகள் அதாவது, எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை (சேத்தியாதோப்பு), செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை (அனக்காவூர்) மற்றும் சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை (அரூர்) ஆகியவை இணை மின் உற்பத்தி நிலையங்களை அமைத்து வெற்றிகரமாக செயல்படுத்தி வருகின்றன. இந்த ஆலைகளில் உற்பத்தியாகும் உபரியான மின்சாரம், தமிழ்நாடு மின்சார வாரிய மின் தொகுப்பிற்கு அளிக்கப்படுகிறது. 12 தனியார் சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி செய்யப்படுகின்றது.

19 தனியார் சர்க்கரை ஆலைகள் 6,08,185 மெட்ரிக் டன் கருப்பஞ்சாறு கசண்டு 2001-2002-ஆம் அரவைப் பருவத்தில் உற்பத்தி செய்துள்ளன. கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் 2,75,322 மெட்ரிக் டன் கருப்பஞ்சாறு கசண்டு 2001-2002 ஆம் அரவைப் பருவத்திலும், 1,66,095 மெட்ரிக் டன் கருப்பஞ்சாறு கசண்டு 2002-2003 ஆம் அரவைப் பருவத்திலும் உற்பத்தி செய்துள்ளன. (31-3-2003 வரை).

தமிழ்நாட்டிலுள்ள 13 தனியார் வடிப்பகங்கள் 1,18,868 கிலோ லிட்டர் எரிசாராயம் 2001-2002-ஆம் அரவைப் பருவத்தில் உற்பத்தி செய்துள்ளன. இரண்டு வடிப்பகங்கள் தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையில் இயங்குகின்றன. அவைகள் 12,114 கிலோ லிட்டர் எரிசாராயம் 2001-2002-ஆம் அரவைப் பருவத்திலும், 10,058 கிலோ லிட்டர் 2002-2003-ஆம் அரவைப் பருவத்திலும் உற்பத்தி செய்துள்ளன (28-2-2003 வரை).

சென்னை-600 008
நூலகம்

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.